2889

T.N.L.A. Debates

Official Report

VOL XIV NO. 3

19th July 1985

C

V211, 1 N85
N85·14·3
136428

306/86

2884

வெளியீடு 19–2–1986

Issued 19—2-1986

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஜூலை 19, 1985 - தொகுதி XIV எண் 3

Friday the 19th July 1985 - Volume XIV No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly, Secretariat, Fort St. George.
Madras - 600 009

விலை: ரூ. 3-00 காசுகள்] [Price Rs. 3-00 paise

136428

## உள்ளடக்கம்

**19-7-1985.**


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள்: | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 373—419 |
| 2. | மாஸ்கோ, உலக இளைஞர்கள் மாநாட்டிற்குச் செல்லும் உறுப்பினர்களுக்கு வாழ்த்துக்கள். | 414 |
| 3. | ''வணிக ஒற்றுமை'' ஆசிரியர் தொடர்ந்த வழக்கில் உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பு. | 419—425 |
| 4. | தகவல் கோரல்: | |
| | உறுப்பினர்கள் கொடுத்த அறிவிக்கைகள்.. | 425—426 |
| 5. | கவன ஈர்ப்புகள்: | |
| | (அ) திண்டிவனம் நகராட்சி, திரௌபதியம்மன் கோவில் திடலிலுள்ள குப்பைகளை அகற்றுதல் .. | 426—427 |
| | (ஆ) பாடநூல் நிறுவனம் வெளியிடும் பாட நோட்டுப்புத்தகங்கள் அரசாங்கம் தீர்மானித்த விலைக்கு கிடைக்கச் செய்வது .. | 428—429 |
| | (இ) கைத்தறித் துணி விற்பனைக்கு ரிபேட் அளிக்கும் நாட்களை அதிகப்படுத்துதல் | 429—434 |
| | (ஈ) பதில் வரப் பெற்றவை: | |
| | (i) சென்னை இராயபுரம் மன்னார்சாமி கோயில் தெரு மேம்பாலத்தை அகலப்படுத்துதல் .. | 492 |
| | (ii) மதுரை மாநகராட்சி மின் கட்டண உயர்வு .. | 493—496 |
| | (iii) உதகமண்டலம் இந்திரா அரசு பூங்காவின் முன்பு தனியார் பல மாடி ஹோட்டல் நடத்த அனுமதித்துள்ளது .. | 496—497 |
| | (iv) கோவை மாநகராட்சியில் சிறுவியாபாரிகள் நடைபாதைகளை ஆக்கிரமித்துக் கொண்டு கடைகள் நடத்துவது .. | 497 |
| | (v) சென்னை நகரில் கொசுத் தொல்லை.. | 498—500 |

பக்கங்கள்

(vi) உரிமம் இன்றி பதநீர் இறக்க அனுமதி கோரல் .. 501—502

(vii) அரசு தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைப் பணியில் அமர்த்துதல் .. 502—03

(viii) நாமக்கல்லிலிருந்து கர்நாடக மாநிலத்திற்கு கோழிகள், இறைச்சி, முட்டைகள் கொண்டு செல்லத் தடை .. 503—504

(ix) திருப்பூர் பனியன் தொழிற்சாலைகளில் ஏற்பட்டுள்ள மந்த நிலை .. 504—505

(x) தாழையூத்திலுள்ள இந்தியா சிமின்ட்ஸ் தொழிலாளர்களின் கோரிக்கைகள் .. 505—506

(xi) வேதாரண்யத்தில் உள்ள உப்பளப் பகுதிகளை வனத்துறைக்கு அளிக்காதிருக்க விலக்களித்தல் .. 507—507

(xii) தற்காலிக அடிப்படையில் பணியாற்றும் ஆசிரியர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்ற கோரிக்கை .. 557—508

(xiii) தனியார் பள்ளி ஆசிரியர்கள் சங்கத்தின் கோரிக்கைகள் .. 508—559

(xiv) குடந்தை அரசினர் ஆடவர் கலைக் கல்லூரியில் கணிதவியல் பாடத்திற்கு மாணவர்களைச் சேர்த்தல் .. 509—510

(xv) ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் சில பணிகள் முடிவுறாத நிலை .. 510—512

(xvi) திண்டுக்கல் நகரில் குடிநீர்த் தட்டுப்பாடு 512—513

(xvii) தஞ்சாவூர் மாவட்டம் வடபாதி மங்கலம் கரும்புப் பண்ணைக் கழகத்தில் நட்டம் .. 513—514

(xviii) திண்டுக்கல் தாலுகா வீரக்கல் கிராமத்தில் தண்ணீர்த் தொட்டி இடிந்ததால் சேதம் .. 514—515

(xix) பரமக்குடி எமனேஸ்வரம் பகுதியிலுள்ள நெசவாளர் சங்கங்களில் சரக்கு தேக்கம் .. 515—516





பக்கங்கள்

(xx) சென்னை கடலோரப் பகுதிகளில் கட்டப்பட்ட குடிசைமாற்று வாரிய வீடுகளுக்கு உப்புக்காற்றினால் ஏற்பட்டுள்ள பாதகம் .. 517—518

(xxi) தேயிலை ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள தேக்கம் .. 518—520

(xxii) பிற்பட்டோருக்கு இடஒதுக்கீடு சம்பந்தமாக உச்ச நீதிமன்ற ஆணை .. 520—534

(xxiii) ஏரி, குளம் போன்ற நீர்நிலைகளில் மீன் பிடிக்கும் உரிமை .. 524—526

(xxiv) சென்னை விமானப் பயிற்சி சங்கத்திற்கு அரசு உதவி .. 526—528

(xxv) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் புதிய பேருந்துகளைப் பயன்படுத்தாமை .. 528

(xxvi) கன்னியாகுமரியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற சில மீனவர்கள் திரும்பியுள்ளது .. 529

(xxvii) சென்னை நகரில் முதியோர், ஊனமுற்றோர், விதவைகள் ஆகியவர்களுக்கு உதவித் தொகை வழங்க நடவடிக்கை .. 530

(xxviii) ஈரோடு சிந்தாமணி ஊழியர்கள் கோரிக்கைகள் மீது நடவடிக்கை .. 530—532

(xxix) பழனி வட்டம் கீரனூரில் கட்டப்பட்டுள்ள குருசாமி நாயுடு மருத்துவ விடுதி திறக்கப்படாமை .. 532—533

(xxx) இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் ஆப்பரேஷன் தியேட்டர்களைப் பழுது பார்த்தல் .. 533—534

(xxxi) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ள உபகரணங்கள் .. 535

(xxxii) உசிலம்பட்டி பேரூராட்சி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை வசதி .. 536

(xxxiii) திருச்சி தலைமை மருத்துவமனையில் வெறி நாய்க்கடி தடுப்பூசி மருந்து இருப்பு 537

பக்கங்கள்

(xxxiv) பவானியாற்றில் விஸ்கோஸ் ஆலை கழிவு நீர் கலப்பதால் ஏற்பட்டுள்ள நிலை .. 537—538

(xxxv) வட ஆற்காடு மாவட்ட தோல் தொழிற் சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரினால் பாதிப்பு .. 538—540

(xxxvi) கரூர் சாயப்பட்டறைகளிலிருந்து வெளி யேறும் கழிவு நீரினால் பாதிப்பு .. 540—541

(xxxvii) பெரியகுளத்திலுள்ள இலவம் பஞ்சு தொழிற்சாலையிலிருந்து வெளி யேறும் கழிவுப் பஞ்சினால் பொதுச் சுகாதாரம் பாதிப்பு .. 541—542

(xxxviii) தொட்டியம் தொகுதியிலுள்ள நீலியாப் பட்டி கிராமத்தில் ஏரி கட்டுதல் .. 542—543

(xxxix) பவானிசாகர் அணையிலிருந்து கீழ் பவானி கால்வாய் மூலம் பாசனத் திற்கு நீர் விடுதல் .. 543—544

6. அறிக்கைகள் அளித்தல்:

பொது நிறுவனங்கள் குழு 435

7. அறிவிப்புகள்:

(அ) சட்டமன்ற அரசியல் கட்சிகளுக்கு திரும்ப அலுவல் அறைகள் ஒதுக்கித் தருவது .. 435

(ஆ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரங்கள் .. 554—549

8. அரசினர் சட்ட முன்வடிவு:

மருந்துப் பொருட்கள், ஏனைய பண்டகப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத் திருத்தல்) சட்டமுன்வடிவு, 1985 .. 431—444

9. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1985–86 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, 1984–85 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கை ஆகியவை மீது விவாதம்—தொடர்ச்சி .. 444—497

திரு. துரை அன்பரசன் .. 444—447

திரு. ஆ. நடராசன் .. 447—453



பக்கங்கள்

திரு. ஆர். தியாகராசன் .. 454—457

டாக்டர் அ. பொன்னுசாமி .. 458—460

திரு. ஆ. கா. அ. அப்துல்சமத் .. 460—464

திரு. செ. செம்மலை .. 464—467

திரு. குமரி அனந்தன் .. 467—470

திரு. கு. ரமணி .. 470—475

திரு. ந. சிவஞானம் .. 475—477

திரு. டி. ஆர். வேங்கடரமணன் .. 477—480

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் .. 480—497

10. அரசினர் தீர்மானம்:

பேரவை ஒத்திவைக்கப் பெறுதல் .. 548

11. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 548—549

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1985 ஜூலை 19, வெள்ளிக்கிழமை

ஆடி 4, குரோதன-திருவள்ளுவர் ஆண்டு 2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.''

எப்பொருள் எத்தன்மையதாய்த் தோன்றினாலும் அத்தோற்றத்தை மட்டும் கண்டு மயங்காமல், அப் பொருளின் உண்மையான இயல்பை அறிவதே மெய்யுணர்வாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சண்முகா பொறியியல் கல்லூரிக்கு நில ஒதுக்கீடு.

734—(*வினா எண் 2165)—திரு. துரை கோவிந்தராசன் மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சண்முகா பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரிக்கு அரசு நிலம் ஒதுக்கித் தந்து இருக்கின்றதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற சண்முகா பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரி என்ற அந்த இடத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான 100 ஏக்கர் நிலம் இருக்கின்றது. அதைப் பாலிடெக்னிக் அமைத்திருக்கின்ற அதன் சொந்தக்காரர்கள் வேலியிட்டு அடைத்து ஆக்கிரமிப்பு செய்திருப்பதாக

அந்தப் பகுதி மக்கள் சொல்கிறார்கள். எனவே அதைத் தயவு செய்து அரசினுடைய நிலமாகவே ஒதுக்கி வைத்து, அரசு செய்கிற திட்டத்திற்கு அந்த நிலத்தை எடுத்துக்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சண்முகா பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரி நிர்வாகத்தினர் தஞ்சாவூர் வட்டம் பெருமலை சமுத்திரம் கிராமத்தில் புல எண் 140, 145 மற்றும் 148-ல் உள்ள புறம் போக்கு நிலங்களில் 50 எக்கர் நிலத்தை அந்த நிறுவனத்திற்காகக் கையகப்படுத்தித் தரவேண்டும் என்று ஏற்கெனவே கேட்டுக் கொண்டார்கள். ஆனால் நிலம் ஏற்கெனவே திறந்தவெளிச் சிறைச்சாலைக்காக நிலமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதால் மனுதாரர்களின் கோரிக்கையை ஏற்க இயலாது என்று தெரிவிக்கப்பட்டது.

மீண்டும் சிறைச்சாலைத் துறை அதிகாரியின் ஒப்புதல் தந்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டு, ஆகவே 68 ஏக்கர் நிலம் தரவேண்டும் என்று மீண்டும் ஒரு கோரிக்கை வைத்து மனு தந்தார்கள். திறந்த வெளிச் சிறைச்சாலையைப் பொறுத்த வரையில் அந்த நிலத்தைத் தவிர வேறு பொருத்தமான நிலம் அங்கே இல்லாததன் காரணத்தால் அது திறந்தவெளிச் சிறைச் சாலைக்குத்தான் ஒதுக்கப்படும் என்று கூறி மறுபடியும் மனுதாரருடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டு இருக்கின்றது

திரு. துரை கோவிந்தராசன் ; பேரவைத் தலைவர் அவர்களே, திறந்தவெளிச் சிறைச்சாலையை அங்கே அமைக்கவேண்டும் என்று அரசினுடைய குறிப்பு இருந்தும் அந்த சிறைச்சாலைத் துறையினர் அந்த நிலம் தனக்குத் தேவையில்லை என்றும் வேறு தனியாருக்குக் கொடுத்துவிடலாம் என்றும் சொல்கின்ற வகையில் குறிப்பு அனுப்பப்பட்டிருப்பதாக இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால் அரசுக்குத் தெரியாமல் நேரடியாக அது தேவையில்லை என்பதுபோல் ஒரு துறை அரசினுடைய நிலத்தைப் பற்றிக் கூறியிருப்பதன் காரணத்தால் இடர்பாடு ஏற்படுகின்ற நிலைமை இருப்பதை உணர்ந்து அந்தத் துறையின் மேல் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சொல்லப்பட்டிருப்பது நில உரிமை மாற்றம் செய்ய சிறைச்சாலைத் தலைவர் ஒப்புதல் கொடுத்துள்ளதாகக் குறிப்பிட்டு 68 ஏக்கர் நிலத்தை நில உரிமை மாற்றம் செய்ய வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அந்த நிலத்தை கொடுப்பதும் கொடுக்காததும் அரசைப் பொறுத்ததாகும். அந்த நிலம் வேண்டுமா, வேண்டாமா என்பது சிறைச்சாலையைப் பொறுத்து இருந்தாலும் அவர்களே ஒப்புதல் சொல்வதற்கு எந்த வகையிலும் அவர்களுக்கு உரிமை இல்லை.



ஆனால் என்ன நடந்தது என்பது தெரியவில்லை. சிறைச்சாலைத் தலைவர் தானாகவே அவ்வாறு ஒப்புதல் அளிக்கக்கூடாது. ஒப்புதல் அளிப்பதாக இருந்தாலும் மறுப்பதாக இருந்தாலும் அது அரசு செய்யவேண்டிய பணிதானே தவிர வேறு இல்லை. திறந்த வெளிச் சிறைச்சாலையைப் பொறுத்தவரையில் அந்த இடத்தைத் தவிர வேறு உகந்த இடம் இல்லை என்ற நிலையில் அந்த இடத்தைத்தான் ஒதுக்க வேண்டும் என்று அரசு எண்ணிக் கொண்டிருக்கின்றது. அரசின் எண்ணத்திற்கு மாறாகவோ, முரணாகவோ, மாறுபாடாகவோ சிறைச்சாலைத் துறைத் தலைவர்கள் யாரும் ஈடுபடக்கூடாது. அவ்வாறு ஈடுபட முயற்சித்தால் அதுபற்றிய நிலைமை என்ன என்பதைக் கண்டறிந்து அதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திரு. ந. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அங்கே ஆரம்பிக்கப்பட்டுள்ள பொறியியல் கல்லூரியைப் பொறுத்த வரையில் புறம்போக்கு நிலத்தில் கட்டடத்தை அனுமதியில்லாமல் கட்டி இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. சமீபத்தில் கூட திருச்சியில் பாரதிதாசன் யுனிவர்சிட்டியின் சிண்டிகேட் கூட ஆட்சேபணை தெரிவித்து இருக்கிறார்கள். எனவே இவ்வாறு அரசினுடைய புறம்போக்கு நிலத்தில் கட்டுவதற்கான அனுமதியைக் கேட்டு அரசுக்கு அந்தப் பொறியியல் கல்லூரியிலிருந்து தாக்கீது ஏதேனும் வந்துருக்கிறதா? அல்லது முன் அனுமதி வாங்காமல் கட்டியிருக்கிறார்களா, இது பற்றி அரசு அறியுமா? அதற்கான அனுமதி பின்னர் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்து அவர்கள் கட்டியிருக்கிறார்களா என்ற விவர குறிப்பு என்னிடத்தில் இல்லை. ஆனாலும் அரசாங்கத்தினுடைய அனுமதி இல்லாமல், இப்படிப்பட்ட புறம்போக்கு நிலங்களில் யாரும் எந்த கட்டடமும் கட்ட அனுமதி கிடையாது, கட்டக்கூடாது, அப்படி கட்டியிருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடுவார்களேயானால், அதனுடைய நிலைமைகளை ஆராய்ந்து என்ன நடவடிக்கையை மேற்கொள்ளப்பட்டது என்று எடுத்துச்சொல்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஷண்முகா பாலிடெக்னிக்கிற்கு அரசாங்கத்தினுடைய புறம்போக்கு நிலத்தை, அங்கே இருக்கக்கூடிய சிறை அதிகாரிகள் அரசை கேட்டுத்தான் அனுமதி வழங்கியிருக்க வேண்டுமே தவிர, கேட்காமலேயே கொடுத்திருக்கக்கூடாது. முதலிலே ஒரு அனுமதி வழங்குமாறு கேட்கப்பட்டு, அரசு மறுத்திருக்கிறது. மீண்டும் அந்தப் பாலிடெக்னிக்கிற்கு உரியவர்கள் சிறையதிகாரிகளிடம் சென்று கேட்டு, பிறகு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசு அனுமதி இல்லாமல் கொடுக்கக்கூடாது

என்பது அவர்களுக்குத் தெரியும் அல்லவா? எனவே நிலத்தை ஆக்கிரமித்து பாலிடெக்னிக் நடத்தும் அந்த உரிமையாளர்களின் மீது நடவடிக்கை எடுப்பதை விட, அரசு உத்திரவு இல்லாமல் நிலத்தை வழங்கியிருக்கக்கூடிய அந்த அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, அவர்கள் கேட்டிருக்கிற 68 ஏக்கர் நிலம், அல்லது 50 ஏக்கர் நிலம் என்பதை அவர்கள் ஆக்கிரமித்து உள்ளார்களா என்ற விவர குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. நான் முதலிலேயே சொன்னேன் திறந்த வெளிச் சிறைச் சாலைக்காக ஒதுக்கப்பட்டது அந்த இடம். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திறந்தவெளிச் சிறைச்சாலையை அமைக்க அதைத் தவிர ஏற்ற இடம் இல்லை, சிறைச்சாலைத் துறையினுடைய அனுமதி பெற்று அவர்களுக்கு தந்திருப்பதாக குறிப்பிட்டு கிறார்கள். தர முடியாது. தரவும் கூடாது. அப்படி யாராவது தந்திருப்பார்களேயனால், அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டி வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டி. கொக்குளம் அரசுப் பணியாளர்களுக்கு ஈட்டுப்படி.

735—(*வினா எண் 2810)—திரு. என். எஸ். வி. சித்தன், மற்றும் திரு. எ. தெய்வநாயகம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் தொகுதியில் கூடக்கோவில் அருகில் உள்ள டி. கொக்குளத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் அரசு அலுவலர்களுக்கும் நகர ஈட்டுப்படியும் வீட்டு வாடகையும் வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே' இல்லை.

திரு என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க தலைவர் அவர்களே, இந்த நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி வழங்குவதில் ஒரு நகரத்திலிருந்து எத்தனைக் கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தால் அந்த ஊரிலே பணிபுரிகிறவர்களுக்கு அவை வழங்கப் படுகின்றன. அப்படி எந்த முறையிலே அந்த தூரத்தைக் கணக்கெடுக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப் படி இவைகளை மாற்றியமைத்து நிதித்துறை 8-2-1971 நாளிட்ட



அரசாணையை பிறப்பித்தது. இதன்படி. மதுரை நகரிலிருந்து 16 கிலோ மீட்டர் எல்லைக்குள் அடங்கியுள்ள பகுதிகளில் பணியாற்றும் அரசு பணியாளர்களுக்கு 2-10-1970 ஆம் நாளிலிருந்து மதுரை நகருக்கு ஈடான வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி பெறுவதற்கு தகுதியுடையவராவர். இச்சலுகை ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை 12-2-1971 நாளிட்ட அரசாணையின் மூலம் நகராட்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் நீடிக்கப்பட்டுள்ளது. இச்சலுகை கல்வித்துறை அரசு ஆணையின் வாயிலாக ஆசிரியர்களுக்கும் நீடிக்கப்பட்டுள்ளது. ஆக 16 கிலோ மீட்டர் என்று வைத்திருக்கிறோம்.

ஆனால் திருமங்கலம் வட்டத்தில் கூடக் கோயில் அருகில் உள்ள டி. கொக்கிகுளம் மதுரை மாநகராட்சியிலிருந்து 24 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது என்றும் அங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அரசு பணியாளர்களும் மதுரை நகருக்கீடான வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப் படி தற்போதுள்ள ஆணைகளின்படி பெறுவதற்கு தகுதியில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவ்விடத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு கிராமப்பணி ஊக்கப்படியான ரூ. 10 மாதத்திற்கு வழங்கப்படுகிறது. அத்தொகை தற்போது 20 ரூபாயாக மாற்றப்பட்டிருக்கிறது. 20 ரூபாய் அங்கே கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க தலைவர் அவர்களே, 16 கிலோ மீட்டர் தொலைவு என்று கணக்கு இருப்பதாக சொல்லுகிறார்கள். சாலை வழியாகப் பார்ப்போமேயானால் சுற்றி வருவதாகச் சொல்லுகிறார்கள். மதுரை நகரிலிருந்து டி. கொக்கிகுளம் நேராக கணக்கெடுத்தால், ஒரு வட்டம் போடுவோமேயானால் 16 கிலோ மீட்டர் தூரத்திற்கு உள்ளேயே இருக்கிறது என்ற காரணத்தினால்தான் நான் இந்த வினாவையே கேட்டேன். அதற்கு சற்றுத் தூரத்தில் உள்ள பணியாளர்களுக்கு எல்லாம் அந்த நகர ஈட்டுப்படியும், வாடகைப் படியும் கிடைக்கிற போது, டி. கொக்கிகுளத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு கிடைப்பதில்லை. ஆகவே மதுரையிலிருந்து நேரிடையாக கணக்கிட்டால் 16 கிலோ மீட்டர் தூரத்திற்கு உள்ளாகவே வருவதால், இந்த டி. கொக்கிகுளம் ஊரில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் மற்றவர்களுக்கு வழங்கப்படுவதுபோல், நகர ஈட்டுப் படி, வீட்டு வாடகைப்படி வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்,

(முற்பகல் 9-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்று மதுரை மாநகராட்சி எல்லையிலிருந்து 16 கிலோ மீட்டர் அப்படி அளந்து வருகிற அளவிலே இந்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்

றனவா அல்லது வேறுவகையில் வருகின்றதா என்பதை தனியாகத் தான் ஆராய வேண்டும். ஆனால் 'குரோ ப்ளையிங்' என்ற முறையில் வைத்து பார்ப்போமானால் அப்படி போகவும் மாட்டார்கள், வரவும் மாட்டார்கள். ஆனால் அதற்கிடையில் வருகின்றவை எல்லையிலிருந்து 16 கிலோ மீட்டர் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அந்த விளக்கத்தின் அடிப்படையில் ஆராய்ந்து பார்த்தால் எந்த வகையில் வருகிறது என்பதை தனியாகத்தான் ஆராய வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தனியாக அதுபற்றி தகவல் கேட்டு நல்லதொரு நிலை ஏற்படுமா என்பதை ஆராயலாம்.

குடகிப்பட்டி ஊராட்சி மன்றக் கட்டிடம்.

736—(*வினா எண் 1101)—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம் குடகிப்பட்டி ஊராட்சி மன்றக் கட்டிடம் கட்டி முடிக்கப்பெறாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டி முடிக்கப்பெறும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கட்டிடத்தை கட்டி முடிப்பதற்கான நடவடிக்கைகளை ஒன்றிய ஆணையர் மேற்கொண்டுள்ளார்.

திருவாரூர் நகராட்சிச் சந்தை.

737—(*வினா எண் 3418)—திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான வாரச் சந்தை பல ஆண்டுகளாக ஏலம் விடப்படாததற்கான காரணம் என்ன?

(ஆ) அதன் மீது, அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே,

(அ) இது தொடர்பான வழக்கு உயர்நீதி மன்றத்தின் முன் இருக்கிறது.

(ஆ) விசாரணையை துரிதப்படுத்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



திரு. பாப்பா சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இந்த திருவாரூர் நகராட்சிக்குச் சொந்தமான சந்தை சுமார் 5 ஆண்டு காலத்திற்கு முன்பு ஏலம் விடப்பட்டு அதிலே பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றாக கூடி ஸ்டே ஒன்று வாங்கி, பொதுமக்களுக்கு ஏலம் விடப்படாத அளவிற்கு தடை செய்துள்ளார்கள், அன்றைய தினம் கிட்டத்தட்ட ஒரு ஆண்டிற்கு 40 ஆயிரம், 50 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் போயிருக்கிறது. ஆனால் அதே சந்தை இந்த ஆண்டு ஏலம் விடப்படுமானால் கிட்டத்தட்ட 2½ லட்சம் ரூபாய்க்கு மேலே ஏலம் போகும். எனவே உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தனிக்கவனம் செலுத்தி தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, 1978-79ம் ஆண்டு ஏலத்தில் விடப்பட்டது. 61 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் எம். சுப்பிரமணியன் என்பவர் எடுத்திருக்கிறார்கள். பிறகு மீண்டும் தனக்கே கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள். அரசு மறுத்தது. அதன்மீது உயர் நீதிமன்றத்திற்குப் போய் தடை வாங்கியிருக்கிறார்கள். அந்தத் தடையுத்தரவை வெகுசீக்கிரத்தில் விடுவிக்க வேண்டுமென்று அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. தடையுத்தரவு நீக்கப்பட்ட உடனே ஏலம் விடப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இந்தத் தடையுத்தரவு நீக்கப்படுவதிலே அரசு அதிகாரிகள் துரிதமான நடவடிக்கை எடுக்காமல், அந்த பழைய ஏலதாரர் சுப்பிரமணியன் என்பவருக்கு ஆதரவாக இருந்து வருவதாக அறிகிறேன். அப்படி அந்த ஏலதாரருக்கு துணையாக இருக்கிற அதிகாரிகள் யார் என்பதை அறிந்து அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இந்த வழக்கு வெகுநாட்களாக நிலுவையில் உள்ளது. ஆகவே பொது ஏலம் விட முடியாமல் இருக்கிறது. வெகுசீக்கிரத்தில் வழக்கை முடிக்க வேண்டுமென்று நாம் வழக்குமன்றத்தில் மனு தாக்கல் செய்திருக்கிறோம். சீக்கிரத்தில் எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறோம். யார் மீதும் குற்றச்சாட்டு எங்களுக்கு அதிகாரப்பூர்வமான வகையில் இல்லை. அப்படி தகவல் இருந்து அங்கத்தினர் தருவார்களானால் அரசு அதைப் பரிசீலிக்கும்.

திரு. கோ. வீரய்யன்: தலைவர் அவர்களே, திருவாரூர் நகராட்சிக்குச் சொந்தமான சந்தை ஆண்டுகாலமாக ஏலம் விடப்படாமல் இருக்கிறதால் அந்த நகராட்சிக்கு பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே வழக்கை துரிதமாக முடிப்பதோடு,

அந்த தடையாணையை யார் ஏற்படுத்தினார்களோ அவர்களிட மிருந்து அந்தத் தொகையை மீண்டும் நகராட்சிக்குப் பெற்றுத் தருவதற்கு அரசு நடவடிக்கையெடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நீதி மன்றங்களில் இப்படி தடை விதித்து விடுகிறார்கள். ஆகவே, பொது ஏலம் விடுவது தடைப்பட்டிருக்கிறது. நீதிமன்றங்கள் பல நேரங்களில் தடையுத்தரவைக் கொடுத்து விடுகிறார்கள் என்ற காரணத்தால் நமக்கு சங்கடம் இருக்கிறது. இந்த நேரத்தைப் பயன்படுத்தி நான் ஒன்றைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். அதேபோலத்தான் மதுரையில் ஒரு கடையை அரசாங்கம் ஏலமும் மற்றும் டெண்டரும் கோரியது. இரண்டும் கேட்க கூடாது. ஏதேனும் ஒன்றுதான் கேட்க வேண்டுமென்று நீதிமன்றத்திற்குப் போனார்கள். நீதிமன்றம் ஏதாவது ஒரு முறையை கையாளுங்கள். ஏலம், டெண்டர் இரண்டும் கேட்காதீர்கள் என்று சொன்னார்கள். சரி, ஏலம் விடு கிறோம் என்ற சொன்னவுடன் இன்னொருவர் நீதிமன்றத்திற்கு போய் ஏலம் விடக்கூடாது என்று தடை வாங்கினார். சரி, ஏலமும் விடவில்லை, டெண்டரும் விடவில்லை, அரசே ஏற்று நடத்தலாம், மாநகராட்சி ஏற்று நடத்தலாம் என்று முடிவு செய்து வசூலிக்கப் போனால் மாநகராட்சி வசூலிக்கக் கூடா தென்று இன்னொருவர் ஸ்டே வாங்கிவிட்டார். இப்படி பல ஸ்டேக்கள் வாங்குகிற காரணத்தால் இடைஞ்சல் ஏற்படுகிறது. இதையெல்லாம் வெகுசீக்கிரத்தில் அரசு வழக்குரைஞர் எடுத்து வாதாடி இந்தத் தடையுத்தரவை நீக்குவார்கள் என்று நம்பு கிறேன்.

### உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள்.

738—(*வினா எண் 199)—திரு. மா. சின்னராசு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட சிறப்புத் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இதற்கென தேவைப்படும் நிதி எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, (அ) மற்றும், (ஆ) அரசு நிதிநிலை இடந்தருவதற்கேற்ப, ஆண்டுதோறும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்ட நிதியொதுக்கம் செய்யப்பட்டு வருகிறது.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசால் நடத்தப்படுகிற உயர்நிலைப் பள்ளி களுக்கு இந்த ஆண்டு கட்டிடம் கட்டுவதற்கு, 1 கோடி ரூபாய்



ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஒரு மாவட்டத்திற்குத் தேவையான கட்டிடங்கள் கட்டுவதற்கு கூட இந்த 1 கோடி ரூபாய் போது மானதாக இல்லை என்கிற அளவில், கட்டிடங்களுடைய தேவை அதிகமாக இருக்கிற காரணத்தால், தன்னிறைவுத் திட்டம் கொண்டு வந்து ஆரம்பப்பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டியதைப் போல, உயர்நிலைப் பள்ளிகளுக்கும் சிறப்பான ஒரு திட்டத்தை, தன்னிறைவு திட்டம் போல் கொண்டு வந்து அனைத்துப் பள்ளிக் கட்டிடத்தினுடைய தேவையை நிறைவேற்றுவதற்கான ஒரு சிறப்புத் திட்டம் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருப்பதைப் போல இந்தக் குறிக்கோளை எய்துகிற அளவிற்கு, கொண்டு வரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1 கோடி ரூபாய் இந்த ஆண்டு பட்ஜெட்டிலே ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதை மேலும் அதிகரிக்க அரசு உத்தேசித்துள்ளது. அதுபற்றி ஆராய்ந்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல யோசனையை தெரிவித்து இருக்கிறார்கள். அது குறித்து அரசு பரிசீலித்து, தக்க முடிவை எடுக்கும்.

திரு. மா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையின் மூலம் வசூலிக்கப்படுகிற வீட்டுவரியில் சாதாரணமாக லைப்ரரி வரி, நூல் நிலைய வரி என்று ஒன்று வசூலிக்கப்படுகிறது. அதுபோல், மிக அத்தியாவசிய தேவை யான கல்விக்காகக் கூட கல்வி வரி என்று இத்தோடு சேர்த்து வசூலிப்பது தவறாக இருக்காது என்று நான் கருதுகிறேன். காரணம் இதுதொடர்ந்து நமக்கு ஏற்பட்டு வருகிற செலவு. ஆகவே அதை ஈடுகட்டுகிற வகையில், நூல் நிலைய வரியோடு, கல்வி வரி ஒன்றை குறைந்த அளவில் சேர்த்தால், அந்தந்தப் பள்ளிக் கூடங்களுக்கு ஆண்டுக்கு ஒரு வகுப்பு அறையையாவது கட்ட முடியும். எனவே இதுபோன்ற ஒரு ஆலோசனையை அரசு பரிசீலிக்குமா? அதன் மூலம் இந்தத் தேவையை நிறைவேற்ற முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி வரி என்பது ஏற்கனவே ஒரு குறைந்த அளவு சதவீதத்தை வைத்து, நாம் சொத்து வரியிலே வசூலித்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஆகவே ஸ்தலஸ்தாபனங்கள் தங்களுடைய கல்விச் செலவிற்காக அதைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள், ஆனால் கட்டிடத்திற்காக அந்த வரியை உயர்த்தி அல்லது அதற்காக ஒரு புதிய வரியைப் போடுவது என்கிற ஒரு கருத்துரு இப்போது அரசின் பரிசீல னையில் இல்லை. புதிய வரி போடுகின்றபோது பொதுவாக எதிர்க்கின்ற நிலைமை நாட்டிலே இருந்து வருகிற காரணத்தால் புது வரியைப் போடுவதைப் பற்றி, அரசு ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. தி. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களைத் தன்னிறைவுத் திட்டம் மூலம் கட்டிய தமிழக அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களையும், உலக வங்கி நிதி உதவியுடன் கட்டி முடிப்பதற்கான ஒரு திட்டம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அது தற்போது எந்த அளவில் இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நாம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் 100 கோடி ரூபாய் கடனாகப் பெற ஒரு முயற்சியை மேற்கொண்டோம். ஆனால் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிதி அனைத்தும், அந்தக் கழகத்தின் மூலம் நிதி உதவி பெற வாய்ப்புள்ள துறைகளுக்கு ஏற்கனவே பகிர்ந்து அளிக்கப்பட்டு விட்டதால், அங்கே நிதி உதவி கிடைக்கக்கூடிய வாய்ப்பு நமக்கு இல்லாமல் போய் விட்டது. இதை மத்திய அரசு 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் தெரிவித்தது; மறுபடியும் இப்போது ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு எழுதலாம் என்கிற முடிவை எடுத்து இருக்கிறோம். அதேநேரத்தில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடம் இருந்தும் கடனாகப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. ஆனால் மத்திய அரசு ஒரு மாநிலத்தின் நிதியிலிருந்து, இத்தகைய பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று சொல்லி, அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை.

சரஸ்வதி மகால் நூல் நிலையம்.

739—(*வினா எண் 1056)—திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூல் நிலையத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவரே நூலக இயக்குனராக இருப்பதை மாற்றி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, (அ) ஆம், (ஆ) தஞ்சை மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகம், சங்கமாக பதிவு செய்யப்பட்ட பின்னர் இயக்குநர் நியமிக்கப்படுவார்.

திரு. கோ. வீரய்யன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சங்கமானது பதிவு செய்ததற்குப் பிறகு, தனி இயக்குநர் அவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதுவரையிலும், இடைக்கால ஏற்பாடாக ஒரு மாற்று ஏற்பாடாகச் செய்வதற்கு அரசு முன் வருமா? ஏன் என்றால், மாவட்ட ஆட்சித் தலைவர், இயக்குநராக இருந்து கொண்டு, பல்வேறு வேலைகளுக்கு இடையில் இதைப் பார்ப்பது



என்பது — அமைச்சர் அவர்களுக்கு தெரிந்து இருக்கும்— கஷ்டமாக இருப்பதன் காரணமாக, அங்கே பல்வேறு தவறுகளும் குறைபாடுகளும் ஏற்படுகின்றன. புராதன நூல் நிலையமாக இருக்கிற அங்கே, ஓலைச் சுவடிகள் மிகுந்து இருக்கிற இடமாக இருப்பதாலே, அதை முறையாக பாதுகாப்பதற்கு ஒரு இயக்குநர் நியமிப்பதற்கு இடையிலே, இடைக்கால ஏற்பாடாக வேறு ஒரு அதிகாரியை வைத்து, அதைக் கவனிப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் என்பவர் மாவட்டத்திலேயே அதிகமான அதிகாரம் உடைய ஒரு பதவியில் இருப்பவர். அவருடைய தலைமையின் கீழ், பாதுகாப்பின் கீழ் இந்த நூலகம் இருப்பது சிறந்தது என்று கருதி நாம் இதை விட்டு வைத்து இருக்கிறோம், அது மட்டும் அல்ல, ஏற்கனவே இருந்து வந்த விதிமுறைகளிலும் அந்த மாதிரி குறிப்பிடப்பட்டு இருக்கிற காரணத்தால் அவர் தொடர்ந்து இருக்கிறார். அதை மாற்றவேண்டும் என்று முடிவு எடுத்து சங்கமாக பதிவு செய்ய முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம். இதிலே மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் கொஞ்சம் கருத்து வேறுபாடு இருக்கிற காரணத்தால் தாமதம் ஆகிக்கொண்டு வருகிறது. விரைவில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கண்டுபதிவு செய்யப்பட்டு உரிய முறையில் சங்கத்தின் கீழ் இந்த நூலகம் இயங்கும்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இது மத்திய அரசும், மாநில அரசும், பழைய மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் சேர்ந்து நடத்தக்கூடிய ஒரு அமைப்பு இது. அதனால் சில சிக்கல்கள் இருக்கின்றன என்பதை உணர்கிறேன். அதேபோல் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகமான அதிகாரம் அந்த மாவட்டத்திலே இருக்கிறது என்பதையும் நான் ஒத்துக்கொள்கிறேன். இன்றைக்கு இருக்கக் கூடிய சங்கடங்களை, குறைகளைப் போக்குவதற்கு துரிதமாக சங்கம் பதிவு செய்து அதை நிறைவேற்றுவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது இருக்கிற முறையிலே குறைபாடுகள் சொன்னதை அரசும் ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டு அதன் காரணமாக அந்த சங்கம் பதிவு செய்கிற ஒரு யோசனையை மேற்கொண்டு இப்போது அந்த முயற்சியிலே ஈடுபட்டு இருக்கிறோம். அண்மையில் நான் தஞ்சாவூருக்கு சென்று இருந்தபோது அந்த

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் என்னை வந்து சந்தித்தார்கள். அவர்கள் இடத்தில் இந்த நூலகம் பற்றி பேசினேன். அதை நல்ல முறையில் பார்க்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் இப்போது அவருக்கு இருக்கிற முக்கியமான பொறுப்பு நல்ல முறையில் பாதுகாக்க வேண்டும் என்பது தான். சங்கம் பதிவு செய்த பிறகு அதனுடைய பொறுப்புக்கு வந்த பிறகு மத்திய அரசினுடைய உதவி அதிகமாக கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். அப்போது அதனுடைய வளர்ச்சி கொஞ்சம் அதிகமாகும்.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையில் உள்ள சரஸ்வதி மகால் நூல் நிலையம் மிகவும் தொன்மை வாய்ந்தது. பழங்கால ஏட்டுச் சுவடிகளைக் கொண்ட ஒன்று. அதற்கு ஈடாக தமிழ்நாட்டில் மட்டும் அல்ல இந்தியாவிலே வேறு எதுவும் இருப்பதாக தெரியவில்லை. ஆகவே அதை முழு நேரமும் கவனிக்கக்கூடிய ஒரு இயக்குநர் அவர்களை ஏற்படுத்த வேண்டும். ஏற்கனவே, அரசாலே திட்டமிடப்பட்டு இருக்கிற அருமையான சுவடிகளைப் பிரதி எடுப்பதற்கு பதிலாக மைக்ரோ பிலிம் எடுப்பதாக ஒரு திட்டம் இருந்தது, அது என்ன ஆயிற்று? அதுபோன்ற காரியங்கள் செய்து அந்த பழமையான சுவடிகளைப் பாதுகாப்பதற்கு தனி இயக்குநரை நியமிப்பது அவசியம் என்று கருதி அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான கருவிகள் வாங்கி அது இன்னும் நல்ல முறையில் மேம்பாடு அடைய செய்வதற்காகத் தான் இந்த முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். ஆனால் இப்போது இருக்கிற பிரச்சினை நாம் மத்திய அரசின் உதவியை பெற வேண்டும் என்பதற்காக ஒரு முயற்சியை மேற்கொள்ளும் போது அந்த நிர்வாகத்தில் அவர்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்ற ஒரு கருத்தை அவர்கள் சொன்னார்கள். அதாவது அவர்களுக்கு அதிக பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கேட்கிறார்கள். மாநில அரசை விட அதிகமான பிரதிநிதித்துவம் வேண்டும் என்று அவர்கள் கேட்கும் நேரத்தில் நாம் மாநில அரசுக்கு அதிகமான பிரதிநிதித்துவம் வேண்டும் என்று சொல்லி இப்போது அதுதான் தீர்க்கப்படாமல் இருக்கிறது. ஆகவே மத்திய மாநில அரசுகளுக்குள் அதிகாரம் பற்றிய ஒரு பிரச்சினையாக கொண்டு வந்து விட்டிருக்கிறார்கள். இது மாநில அரசுகளுடைய அதிக பிரதிநிதிகளின் கீழ் விடவேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணம் மத்திய அரசுக்கு வருமானால் இப் பிரச்சினை நாளைக்கே தீர்ந்து விடும்.



சேரம்பாடி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கும் செயற் குறிப்பு.

740—(*வினா எண் 3611)—திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுகா, சேரம்பாடி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இப்பள்ளி உயர்நிலைப் பள்ளியாக மாற்றப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, (அ) மற்றும், (ஆ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுகா, சேரம்பாடி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தக்கோரும் கருத்துரு நீலகிரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரால் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளது. பள்ளிக்குழு உயர்நிலைப் பள்ளி துவக்கக் கட்ட வேண்டிய பொதுமக்கள் பங்குத்தொகை ரூ. 10,000 மட்டுமே கட்டியுள்ளதாகவும், கட்டிட பங்கு தொகை ரூ. 12,500 கட்டவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இப்பள்ளியை உயர் நிலைப் பள்ளியாக்கும் கருத்துருவை ஏற்பதற்கில்லை.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே உள்ள மக்கள் சாதாரண ஏழை எளியவர்கள், தோட்டத் தொழிலாளர்கள். ஆகவே, அவர்கள் கட்ட வேண்டிய மீதித் தொகையை ஒரு கால கெடு கொடுத்து வாங்கி அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அங்கே உள்ள பல பேரிடமிருந்து கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அந்த அடிப்படையிலே பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, கூடலூர் பகுதியைச் சேர்ந்த மற்ற கையூண்ணி, சிறுமுள்ளி ஆகிய கிராமங்களிலுள்ள மக்கள், அந்தப் பள்ளிகளையும் உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். அவர்கள் மக்களால் கட்டப்படவேண்டிய பங்குத் தொகையையும் கட்டி விட்டார்கள். அந்தப் பள்ளிகளையாவது, உயர்நிலைப் பள்ளி ஆக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்குத் தனியாகக் கேள்வி போடவும்.

[1985 ஜூலை 19

## மண்ணியாற்றின் குறுக்கே பாலம்.

741—(*வினா எண் 723)—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) பாபநாசம் ஊராட்சி ஒன்றியம், வாழ்க்கை கிராமத்தில் மண்ணியாற்றின் குறுக்கே சுமார் ரூ. 7 இலட்சம் செலவில் பாலம் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அம்மாதிரியான திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

## சோளூர்-தெங்குமரஹடா சாலை அமைக்கும் திட்டம்.

(742—*வினா எண் 1028)—திரு. எம். சிவக்குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கோத்தகிரி சோளூர் மட்டத்திலிருந்து தெங்குமரஹடாவிற்கு சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இல்லை.

திரு. எம். சிவக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தெங்குமரஹடா பகுதி என்பது சரித்திர புகழ் பெற்ற பகுதியாக இருப்பதாலும், கோத்தகிரி வழியாக தெங்குமரஹடா செல்வதற்கு ஏறத்தாழ 67 கிலோ மீட்டர் பக்கம் செல்ல வேண்டியது இருப்பதாலும், சோளூர் மட்டத்திலிருந்து தெங்குமரஹடா செல்வதற்கு வழி இருந்தால் ஏறத்தாழ 10 கிலோ மீட்டர் தூரம் மக்களுக்கு அது நன்மை பயக்கும் முறையில் இருக்கின்ற காரணத்தினால் அதை இந்த ஆண்டே நடைமுறைக்கு கொண்டு வர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இதிலே ஃபாரஸ்ட் ஏரியா இருக்கின்ற காரணத்தினாலே, வனத்துறையினுடைய அனுமதி தேவையாக இருக்கிறது. அதுவும் மத்திய அரசிலிருந்து தேவை என்று இருக்கிற காரணத்தால், இதிலே காலதாமதம் ஏற்படுகிறது. அதோடு ஏற்கனவே, பாலம் அதிலே கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. அதிலே அந்த



1985 ஜூலை 19]

பாலம் கட்டி முடிக்கிறபோது, மற்ற வேலைகளை துவக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்தின் அடிப்படையில் மிகக் குறுகிய தூரம் உள்ள அந்தப் பாதையை அமைத்தால், வசதியாக இருக்கும் என்று சொல்லி இருக்கிறார்கள். எனவே, அந்த இடையூறுகள் எல்லாம் இருக்கின்ற காரணத்தினால்தான் தற்போது அதை ஆய்விலே எடுத்துக்கொள்ளாமல் இருக்கிறார்கள். எதிர்காலத்தில் அதைப்பற்றி ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, பவானிசாகரிலிருந்து ஏற்கனவே 7 கிலோ மீட்டர் தூரம் அந்த வன இலாகாவினால் புதிய சாலைகள் போடப்பட்டுள்ளன. மீதி 8 கிலோ மீட்டரைச் சேர்த்தால் ஆனைகட்டி பகுதியை இணைக்கமுடியும். ஆகவே, அதற்கென்று தனியாக ஒரு உத்தரவு வாங்கியாவது அந்த சாலையை முடிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஒவ்வொன்றுக்கும் தனியாகத்தான் உத்தரவு வாங்கப்படுகிறது. எனவே அந்த அடிப்படையில்தான் இதையும் எழுதவேண்டும். இதிலே இருக்கின்ற சிரமமே, இந்த ஃபாரஸ்ட் ஏரியாக்களிலே பாதை அமைப்பதோ, அல்லது எந்த வேலை செய்வதாக இருந்தாலும், மத்திய அரசின் அனுமதி இல்லாமல் செய்ய முடியாது என்ற நிலையில் காலதாமதம் ஏற்படுகிறது. எதிர்காலத்தில் அதைப் பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும்.

## வடாற்காடு பாகாயத்திலிருந்து வெடி மருந்து தொழிற்சாலைக்கு நகரப் பேருந்து விடல்.

743—(*வினா எண் 1767)—திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், பாகாயம் வெடி மருந்து தொழிற்சாலை (வழி வேலூர், காட்பாடி) நகர பேருந்து விட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது விடப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, (அ) இதைப் பற்றிய செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாகாயத்திலிருந்து வெடி மருந்துத் தொழிற்சாலைக்கு பஸ் விடவேண்டும் என்ற கோரிக்கை பொது மக்களாலும், என்னாலும் மனு செய்யப்பட்டு இருக்கின்றது.

[1985 ஜூலை 19

அங்கே வெடி மருந்து தொழிற்சாலையில் சுமார் 1000 பேர் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கே போக்குவரத்து வசதி இல்லாமல் அந்தத் தொழிலாளர்கள் அவதிப்படுகிறார்கள். அதனால்தான் இந்தக் கோரிக்கை. ஆகவே, அதை விரைவில் தொழிலாளர், தொழிற்சாலை நலன்களைச் கருதி, அங்கே பஸ் விடுவதற்கு உடனடியாக அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தற்சமயம் அதன் சமீபம் 2-ஏ என்ற பேருந்து 14 முறை போவதாக இங்கே குறிப்பு கொடுத்து இருக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொல்வதற்கேற்ப, அங்கே அவசியமிருக்குமானால் சம்பந்தப்பட்ட நிர்வாக இயக்குநருக்கு அறிவுறுத்தி நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலை ஆகஸ்டு மாதம் திறக்க இருப்பதாகத் தெரிய வருகிறது. அதோடு மட்டுமல்லாமல் அந்தக் கட்டுமானத் தொழிலில் சுமார் 1,000 பேர் வேலை செய்கிறார்கள். அவர்கள் நடந்து வருகிற நிலையை, காட்சியைப் பார்த்து இருக்கிறேன். உடனடியாக டி.பி. என்ற டெம்பரவரி பெர்மிட்-ஐ போட்டு, இன்னும் இரண்டு பஸ்களை விட மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அன்போடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அன்போடு என்று கேட்கின்ற காரணத்தினால் நிச்சயமாக செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் ஏற்கனவே சொன்னபடி, அங்கே இருக்கின்ற நிலைமைகளை முதலிலே ஆய்வு செய்துவிட்டு, அதற்கு பின்னாலே செய்யப்படும்.

## எரணாவூரில் இரயில்வே லெவல் கிராசிங்குக்குப் பதிலாக சுரங்கப் பாதை அமைக்கும் திட்டம்.

744—*வினா எண் 2290)—திரு. கே. பி. கே. சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையை அடுத்த திருவெற்றியூர்-எண்ணூர் இடையில் உள்ள எரணாவூர் இரயில்வே லெவல் கிராசிங் Lift gate-க்குப் பதிலாக ''மேம்பாலம்'' அல்லது 'சுரங்கப் பாதை'' அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1985 ஜூலை 19]

(ஆ) இதற்கு மைய அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், பணிகள் எப்போது தொடங்கப்பட உள்ளன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ): இப்பணி 1985-86-ம் ஆண்டு இரயில்வே வேலைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. இரயில்வே அமைச்சகம் மற்றும் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டதும் 1985-86 ஆம் ஆண்டு இப்பணி செய்வதாக இரயில்வே துறையிலிருந்து சொல்லியிருக்கிறார்கள்.

(முற்பகல் 9—30)

திரு. கே. பி. கே. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தின் வழியாகச் சுமார் 25,000 தொழிலாளர்கள் பணி புரியும் தொழிற்சாலைகளுக்குச் செல்லவேண்டியிருப்பதால் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்த மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் தொழிலாளர்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில், இந்தத் திட்டத்தில் மத்திய அரசின் பங்கு எவ்வளவு, மாநில அரசின் பங்கு எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இதனுடைய மதிப்பீட்டுத் தொகை 150 இலட்சம் ரூபாய். இதில் பாதி மாநில அரசையும், பாதி மைய அரசையும் சேர்ந்தது. இதிலே, சென்னை உரத் தொழிற்சாலை நிறுவனம் இதற்கு உதவி செய்ய முன் வந்திருக்கிறது. அவர்கள் செய்திருக்கிறார்கள்.

## தாம்பரம்—விழுப்புரம் நெடுஞ்சாலை.

745—(*வினா எண் 2734)—திரு. எல். இராசமாணிக்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் முதல் விழுப்புரம் வரை தேசிய நெடுஞ்சாலையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[1985 ஜுலை 19

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தாம்பரம் முதல் புக்கத்துறை வரை சுமார் 39.2 கிலோ மீட்டர் நீளத்திற்கு இருவழித்தடத்தை வலுப்படுத்தி பக்கத்தில் மற்றும் ஒரு இரு வழித்தடத்தை புதிதாக அமைத்தல் மற்றும் புக்கத்துறை முதல் விழுப்புரம் வரையில் சுமார் 93 கிலோ மீட்டர் நீளத்திற்கு தற்போதுள்ள இருவழித்தடத்தை மேலும் வலுப்படுத்துதல் ஆகிய பணிகளை உலக வங்கி உதவியுடன் மேற்கொள்ள மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இப்பணிக்கு ரூ. 52.279 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இதற்கிடையில் நில ஆர்ஜிதம் செய்ய முன் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது விழுப்புரத்திலிருந்து மதுரை வரையிலும் இரண்டாவது கட்டமாகவும், மதுரையிலிருந்து கன்னியாகுமரி வரையிலும் மூன்றாவது கட்டமாகவும், இதேபோன்ற வீதிகளை அகலப்படுத்தவும், மேம்பாடு செய்யவும் அரசிடம் பரிசீலனையில் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இதைச் செய்துவிட்டுத்தான் மற்றவைகளைப்பற்றி யோசிக்க வேண்டும். காரணம், இதுவே பெரிய பரிசீலனைக்குப்பிறகு இந்த வேலை ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறது. உலக வங்கியின் ஒப்புதலைப் பெறவேண்டும்; உலக வங்கியிடம் கடன் கேட்க வேண்டும். அதற்கு மத்திய அரசு அனுமதி செய்ய வேண்டியிருக்கிறது. தோடர்ந்து செய்ய வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய அவா.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசீய நெடுஞ்சாலையில் உள்ள ஆக்கிரமங்கள் அனைத்தையும் இரண்டு மாதங்களுக்கு முன்னால் அகற்றினார்கள். ஆனால், என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, மறுபடியும் ஆங்காங்கே குடிசைகள் போட்டு உள்ளே சுவர் கட்டிக்கொண்டு வருவது அரசுக்குத் தெரியுமா? இதுபோன்று தீவிர நடவடிக்கை எடுத்து பிரித்த பின்புகூட அதேயிடத்தில் குடிசைகளையும், கடைகளையும் கட்டுவதற்கு முயற்சிக்கின்ற ஒரு கும்பலின்மீது தனியான நடவடிக்கை ஏதேனும் எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, ஏற்கனவே ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுகின்றன. அப்படி அகற்றப்பட்டதற்குப் பின்பு மீண்டும் அங்கே வந்தால் மீண்டும் அகற்றப்படும் என்றுதான் சொல்லமுடியும். தனிப்பட்ட முறையில் எப்படி நடவடிக்கை எடுப்பது என்பதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், ஆக்கிரமிப்புகளை யார் செய்தாலும் தொடர்ந்து அகற்றப்படும் என்பதை மட்டும் தெரிவிக்க முடியும்.



பெசண்ட் நகரில் பேருந்து நிலையம்.

746. (*வினா எண் 2824)—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் பெசண்ட் நகரில் புதிதாக பேருந்து நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் ஏதாவது உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பேருந்து நிலைய தரையை மேம்படுத்தல் வேலை முடிவடைந்துள்ளது. இதர கட்டுமான வேலைகள் தொடங்க இருக்கின்றன.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கான மதிப்பீடு எவ்வளவு? இந்தப் பேருந்து நிலையத்தை நவீன முறையில், மேல் நாடுகளில் உள்ளதைப்போல அமைத்து முன்மாதிரியாக அமைப்பதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இதன் மதிப்பீடு 3.71 இலட்சம் ரூபாய். மேல்நாடுகளைப் போல அமைக்கப்படுமா என்று கேட்டார்கள். மேல்நாடுகளைவிடச் சிறந்ததாகச் செய்ய வேண்டும் என்பதுதான் நம்முடைய ஆசையாகும்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது அடையாறு வழியாக திருக்கழுக்குன்றம், கடலூர், மகாபலிபுரம் போன்ற பல பகுதிகளுக்குப் பேருந்துத் தடங்கள் செல்லுகின்றன. எனவே, வெளியூர்களுக்குச் செல்லுகின்ற பேருந்துகள் பெசன்ட் நகர் வழியாகச் செல்வதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கையெடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, குறிப்பிட்ட நேரத்திற்குள் வெளியூர்களுக்கு செல்ல வேண்டுமென்ற காரணத்தால் குறிப்பிட்ட பேருந்து நிலையத்திலிருந்துதான் தொடக்க முடியுமே தவிர, சென்னை மாநகரத்தில் உள்ள எல்லாப் பேருந்து நிலையங்களையும் தொட்டுச் செல்ல வேண்டுமென்றால் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று சேர்வதற்கு இரண்டு நாட்கள் ஆகிவிடும். எனவே, மெயின் பஸ் ஸ்டாண்ட் என்று எங்கே இருக்கிறதோ அதைத்தான் பயன்படுத்த முடியும்.

திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெசன்ட் நகரில் பேருந்துகள் நிறுத்துவதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஏற்கனவே சைதாப்பேட்டை சின்னமலைப் பணிமனைகளை விரிவுபடுத்துகின்ற வகையிலும், புதிய பஸ் நிலையம் அமைப்பது பற்றியும் குறிப்பு இருந்தது. அதன்மீது நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் அதே போல் பெசன்ட் நகரிலிருந்து மகாபலிபுரம் செல்கிற பிரதான சாலையில், சுற்றுலா சாலையில் நெருக்கடியாக குடிசைகளை சாலைகளிலே அமைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இதனால், இடம் குறுகியிருக்கிறது. அந்தச் சாலையை விஸ்தரிக்கவும் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இன்று சட்டமன்றக் கூட்டம் முடிகிற காரணத்தால், மொத்தமாக இருக்கிற கேள்விகளை எல்லாம் கேட்டுவிட்டார்கள் என்று கருதுகிறேன். மூலக்கேள்விக்கும் அவர் கேட்டவைற்றிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் நிச்சயமாக கவனத்தோடு நடவடிக்கை எடுக்க இந்த துறை தயாராக இருக்கிறது.

உதகமண்டல கோத்தகிரி மேட்டுப்பாளையம் சாலை.

747—(*வினா எண் 3607)—திரு. கே. உச்சி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலம்-கோத்தகிரி வழியாக மேட்டுப்பாளையம் சாலை அகலப்படுத்தப்படும் பணி எப்பொழுது துவக்கப்பட்டது?

(ஆ) அப்பணியின் உத்தேச மதிப்பீட்டு தொகை எவ்வளவு?

(இ) அப் பணி எப்பொழுது முடிவடையும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, (அ) ஜனவரி 1983 முதல் அக்டோபர் 1983 வரை இப்பணி பல பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலை துவக்கப்பட்டது.

(ஆ) இப்பணிக்கு ரூ. 235/- இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

(இ) 31-3-86—குள் முதல் பகுதி முடிவடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 2 ஆண்டுகளாக இப்பணி பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு தரப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில இடங்களில் சாலைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. அந்தப் பணிகளை ஒப்பந்தக்காரர்கள் ஆரம்பிக்கவே இல்லை. ஆகவே, அதில் துரித நடவடிக்கை எடுக்க நமது அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்துவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, 31-3-1986—க்குள்ளாக முதல் கட்டத்தை முடிக்க வேண்டுமென்று ஏற்கனவே ஒரு கால வரையறை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உதகமண்டலம்-கோத்தகிரி போல் மலைப் பகுதியாக இருக்கக்கூடியது வால்பாறை பகுதியாகும். பொள்ளாச்சியிலிருந்து வால்பாறை வரையிலும் 70 கிலோ மீட்டர் உள்ளது. இந்த 70 கிலோ மீட்டர் தூரத்தை அகலப் படுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா? அப்படி உள்ளது எனில், எவ்வளவு மதிப்பீட்டுத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மூலக் கேள்வியிலே கேட்டுள்ள பாதைக்கும் மாண்புமிகு உறுப்பினர் கேட்டுள்ள பாதைக்கும் தூரம் அதிகமாக இருக்கிறது. எனவே அதைப் பற்றி தனிக் கேள்வி போட வேண்டும். அல்லது அவர் கேட்ட கேள்வியின் அடிப்படையிலே, அதைப் பார்த்து என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி, தனியாகக் கேட்டால், ஏதாவது சொல்ல முடியும்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்தமைத்தல்.

748—(*வினா எண் 3901)—திரு. ஏ. தங்கராசு திரு. கே. ஆர். கணபதி; மற்றும் திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து, வள்ளலார் பாவட்டத்திற்கென்று வள்ளலார் பெயரில் புதிய போக்குவரத்துக் கழகத்தை துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரே வார்த்தையில் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, வள்ளல் பெருமான் அவர்கள் 'கண் மூடிப் பழக்கம் எல்லாம் மண் மூடிப் போகட்டும்' என்று சொன்னார்கள். 'வாடிய பயிரைக் கண்ட பொழுதெல்லாம் வாடினேன்' என்று சொன்னார்கள். இப்படிப் பல்வேறு கருத்துக்களை அரசாங்கத்திற்கு அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட வள்ளல் பெருமானுடைய பெயரில்—இந்தத் தந்தை பெரியார் போக்குவரத்துக்கழகத்தை இரண்டாகப் பிரித்து—வருகிற காலங்களிலாவது போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இல்லை என்பதை ஒரு வார்த்தையிலேதான் சொல்ல முடியும். அதை எப்படி நிறைய சொல்வது என்று எனக்குத் தெரியாது. அங்கே 564 பேருந்துகள்தான் இப்பொழுது இருக்கின்றன. குறைந்த பட்சம் 600 பேருந்துகளாவது இருந்தால்தான் அதை நாம் பிரிக்க முடியும். 1-1-1985 அன்று வரை கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே 564 பேருந்துகள் இருக்கின்றன. நாம் பெயருக்காக, பேருந்து கழகங்களைப் பிரிக்க முடியாது. ஆனால், எதிர்காலத்திலே பிரிக்கின்றபொழுது, அவைகளை எல்லாம் ஆலோசித்து, உறுப்பினர் சொல்லிய கருத்தையும் மனதிலே வைத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. ஆர். கணபதி: தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதாக தமிழக முதல்வர் அவர்கள் இங்கே குறிப்பிலே தந்திருக்கிறார்கள். அவ்வாறு தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கின்ற பொழுது, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தற்போது இல்லையென்று சொன்னாலும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து, ஒரு போக்குவரத்துக் கழகத்திற்கு வள்ளலார் பெயரை வைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, ஒரு போக்குவரத்துக் கழகத்தைப் பிரிப்பது என்பது, ஏற்கெனவே நான் சொன்னதைப்போல குறைந்தபட்ச எண்ணிக்கையைப் பொறுத்து இருக்கிறது. பிரித்த பின்னால் குறைந்தபட்சம் 300 பேருந்துகளாவது இருக்க வேண்டும். 350 இருக்க வேண்டுமென்று



சொல்லப்பட்டிருக்கிறது. 300 இருந்தால்கூட மூன்று மாதங்களில் 50 பேருந்துகளை அதிகமாகப் பெற்றுவிடும் வாய்ப்பு ஏற்படும். இந்த அளவுக்குக்கூட இல்லை என்றால் பல சங்கடங்கள் ஏற்படும், நஷ்டம் ஏற்படும். மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கா விட்டாலும் அல்லது அதிலே காலதாதம் ஏற்பட்டாலும் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்குமானால், பேருந்துகளைப் பிரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். பிரிக்க வேண்டுமென்பதுதான் அரசின் கொள்கையாக இன்றைக்கு இருக்கிறது. எனவே உரிய காலத்தில் சரியான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரோ. கலிதீர்த்தான்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது 564 பேருந்துகள் தற்போது இருக்கின்றன; அது 600 ஆக உயர்த்தப்பட்டால் 300, 300 ஆக பிரித்து தனி போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கலாம் என்று கூறினார்கள். இந்த ஆண்டிலே கூட அந்த அளவுக்கு எட்டிவிடும் என்று கருதுகிறேன். ஆகவே, இந்த ஆண்டிலே பரீசிலனை செய்து, இரண்டாகப் பிரித்து வள்ளலார் போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, அந்த எண்ணிக்கையை இந்த ஆண்டிலே நிச்சயமாக எட்டிப்பிடிக்க இருக்கிறது. எட்டியவுடனே ஆய்வு செய்யப்படும். அதற்குப் பிறகுதான் பிரிப்பது பற்றி முடிவு செய்ய வேண்டும். பிரித்த பிறகுதான் பெயரைப் பற்றி நான் சொல்ல முடியுமே தவிர, இப்பொழுதே பெயரைச் சொல்லி, பின்னாலே பிரச்சனைகளை உருவாக்க நான் தயாராக இல்லை.

### தருமபுரி மாவட்ட நரிக்குறவர்களுக்கு வீட்டுவசதி.

749—(*வினா எண் 2071)—திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் நரிக்குறவர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) எத்தனை வட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப் படும்?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, (அ) தருமபுரி மாவட்டத்தில் நரிக்குறவர் இனத்தவர்களிடமிருந்து வீடு கட்டித் தரக் கோரும் விண்ணப்பம் ஏதும் வரப்பெறவில்லை, எனவே தற்போது இத்தகைய திட்டங்கள் பரிசீலனையில் இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நரிக்குறவர்களிடமிருந்து விண்ணப்பம் வரவில்லை என்று சொன்னார்கள். தருமபுரி மாவட்டம், அரூரில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நரிக்குறவர்களுக்கு வீடு கட்டுவதற்காக பெரும் பணக்காரர் ஒருவரிடமிருந்து ஒன்றே கால் ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டு, அதற்கான பணம் செக் மூலமாக பிற்பட்டோர் நலத்துறையிலிருந்து அனுப்பப்படுகிற நேரத்தில் அவர் கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்கிவிட்டார். இந்த விவரம் அரசுக்குத் தெரியுமா? அரசு அதுபற்றி நடவடிக்கை எடுத்து ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட விவரம் தற்போது இல்லை. விவரமாக எழுதித் தந்தால் அதுகுறித்து பரிசீலனை செய்து, நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவரவர்களே, தருமபுரி மாவட்டத்தினுடைய பிற்பட்டோர் நல அதிகாரியிடம் அமைச்சர் அவர்கள் கேட்டால் விவரம் தெரியும். நானே முன்னின்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இந்தப் பணியில் முயற்சி செய்திருக்கிறேன். மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அரசு மருந்துவமனை ஒன்றை அங்கே திறந்து வைத்தார்கள். அதிலிருந்து ஒரு பர்லாங் தூரத்தில் இருக்கிற நிலத்தில் ஒன்றேகால் ஏக்கர் ஒரு நிலச்சுவாந்தாரிடமிருந்து எடுக்கப்பட்டது. அதற்கான பணத்தை அரசாங்கம் அனுப்பி வைக்கிறபோது அந்த பெரும் நிலச்சுவாந்தார் ஸ்டே வாங்கி விட்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கவனித்து ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவரவர்களே, அதுகுறித்து பரிசீலனை செய்து, ஆவன செய்யலாம்.

### வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து விடுபட்டோர்.

750—(*வினா எண் 1777)—திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்வது விடுபட்டால் மீண்டும் புதுப்பித்துக் கொள்ள என்னென்ன விதிமுறைகள் கையாளப்படுகின்றன?

(ஆ) அவ்விதிமுறைகளை மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை ஒன்று தனியாக அவைமுன் வைக்கப்படுகிறது.



### விவர அறிக்கை.

(அ) வேலை வாய்ப்பகங்களில் பதிவை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்துக்கொள்ள வேண்டும். எந்த மாதத்தில் பதிவைச் செய்தார்களோ அதே மாதத்தில் ஏதாவது ஒரு வேலை நாளில் புதுப்பித்துக்கொள்ளலாம். குறிப்பிட்ட மாதத்தில் பதிவைப் புதுப்பித்துக்கொள்ள தவறினால் அடுத்து வருகின்ற மாதத்தில் புதுப்பித்துக் கொள்ளலாம். அவ்வாறு புதுப்பிக்காவிட்டால் அவர்கள் பதிவு செல்லாப் பதிவேட்டிற்கு மாற்றப்படுகிறது. புதுப்பித்தலை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ செய்து கொள்ளலாம். தபால்மூலம் புதுப்பிக்கும் போது ஒரு ரிப்ளை கார்டில் மனுதாரரது பெயர், பதிவு எண், என். சி. ஓ. எண், பதிவு மூப்பு ஆகிய விவரங்களைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். அந்தத் தபாலை அஞ்சல் சான்றிதழ் மூலம் அனுப்பும்படி மனுதாரர்களுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது. அவர்கள் கடிதம் வேலைவாய்ப்பகத்தில் கிடைக்கப் பெறாமலிருந்து, அதனால் வேலைவாய்ப்பகத்திலிருந்து பதிவு புதுப்பித்த விவரம் கிடைக்கப்பெறாவிட்டால் மனுதாரர்கள் குறிப்பிட்ட அஞ்சல் சான்றிதழுடன் புதுப்பிக்க வேண்டிய மாதத்தில் இருந்து 3 மாதத்திற்குள் (ஒரு மாதச் சலுகைக் காலம் உட்பட) வேலைவாய்ப்பகத்தில் நேரடியாகச் சென்று விண்ணப்பிக்க வேண்டும். அந்த அஞ்சல் சான்றின் அடிப்படையில் அவர்களது பதிவு புதுப்பிக்கப்பட்டு பழைய பதிவு மூப்பு வழங்கப்படுகிறது.

மேலும் சிலர் நோய்வாய்ப்பட்டு அதன் காரணத்தினால் பதிவை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ புதுப்பிக்க இயலாமற் போகலாம். அம்மாதிரி கடுமையான நோய்வாய்ப்பட்டவர்கள் அரசு மருத்துவரின் சான்றுடன் தங்களுடைய இயலாமையைத் தெரிவித்து தாங்கள் புதுப்பிக்க வேண்டிய மாதத்திலிருந்து நான்கு மாதங்களுக்கு (ஒரு மாதச் சலுகை காலம் உட்பட) வேலைவாய்ப்பு அலுவலரிடம் விண்ணப்பித்துக் கொண்டால், அவர்களுடைய மனு தகுதியின் அடிப்படையில் ஆழ்ந்து பரிசீலிக்கப்பட்டு, பின்பு அவர்களுடைய பதிவு உயிர்ப்பதிவேட்டிற்கு பழைய பதிவு மூப்புடன் கொண்டுவர வகை செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் விதிமுறைகளின்படி பதிவைப் புதுப்பித்துக் கொள்ளாதவர்கள் தங்கள் பதிவு மூப்பை பெற இயலாது. அவர்களது பெயர் மறுபடியும் புதிதாக பதிவு செய்யப்படும்.

(ஆ) இவ்விதிமுறைகள் மத்திய அரசால், மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து இயற்றப்படுகின்றன. இவ்விதிமுறைகளை மாற்றும் முன்மொழிவு எதுவும் மத்திய அரசின் பரிசீலனையில் இருப்பதாக தெரியவில்லை.

[1985 ஜூலை 16

திரு. கோ. இரகுபதி : பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் மேலும் சிலர் நோய்வாய்ப்பட்டு அதன் காரணத்தினால் பதிவை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ புதுப்பிக்க இயலாமற் போகலாம்; அம்மாதிரி கடுமையான நோய் வாய்ப்பட்டவர்கள் அரசு மருத்துவரின் சான்றுடன் தங்களுடைய இயலாமையைத் தெரிவித்து நான்கு மாதங்களுக்கு (ஒருமாதச் சலுகை காலம் உட்பட) வேலைவாய்ப்பு அலுவலரிடம் விண்ணப்பித்துக்கொண்டால், அவர்களுடைய மனு தகுதி அடிப்படையில் ஆழ்ந்து பரிசீலிக்கப்பட்டு, பின்பு அவர்களுடைய பதிவு உயிர்ப் பதிவேட்டிற்கு பழைய பதிவு மூப்புடன் கொண்டுவர வகை செய்யப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதிகாரிகள் ஆழ்ந்த சிந்தனை செய்து அவ்வாறு பதிவு செய்பவர்களைக் கவனிப்பார்களானால் ஆழ்ந்த சிந்தனையோடு புதுப்பிப்பார்கள். அப்படி இல்லை என்றால் ஆழ்ந்த சிந்தனையில் அதைத் தன்னுபடி செய்கின்ற வாய்ப்பு இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. கோ. இரகுபதி : இப்போது மேலும் சிலர் நோய்வாய்ப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலையில் அவ்வாறு பலர் வந்தால் என்ன செய்வார்கள் என்பது விவர அறிக்கையில் இல்லை.

மாண்புமிகு திரு. கு. இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்கின்ற முறையைப் பொறுத்தவரையில் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கவேண்டும் என்ற நியதி இருக்கின்றது. அப்படி மூன்று ஆண்டுகள் தவறிவிட்டால் அடுத்து வருகின்ற ஒரு மாதத்தில் அவர்கள் புதுப்பித்துக்கொள்ளலாம். அவர்கள் தபால் மூலமாக அனுப்புகின்றபோது சில நேரங்களில் வந்து சேரவில்லை என்கிற புகார் வருகின்றபோது அவர்கள் அனுப்பிய சான்றிதழோடு மூன்று மாதத்திற்குள் அவர்களுக்குத் தகவல் வந்து சேரவில்லை என்றால் நேரடியாக முறையான அஞ்சல் சான்றிதழைக் கொண்டு வந்து காட்டினால் நிச்சயமாக அவர்களுடைய சீனியாரிட்டி அடிப்படையில் புதுப்பிக்கின்ற வாய்ப்பு உண்டு. நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு நேரடியாகவும் வரமுடியாமல் அஞ்சல் வழி மூலமாகவும் தெரிவிக்க முடியாமல் போகுமேயானால் அவர்கள் பின்னர் பதிவு செய்துகொள்ள வருகின்றபோது உரிய மருத்துவச் சான்றிதழோடு வந்தால் அலுவலகத்தில் தைச் சரிபார்த்து முறையான மருத்துவச் சான்றிதழ்தானா என்பதை உணர்ந்து அந்த வகையில் தகுந்த முறையில் பரிசீலனை செய்து சீனியாரிட்டி அடிப்படையில் புதுப்பிக்கின்ற வாய்ப்பை நமது வேலைவாய்ப்பலுவலகம் ஏற்படுத்தித் தந்திருக்கின்றது. அதிகாரிகள் அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



1985 ஜூலை 19]

ஆதி திராவிடர்களுக்கு வீட்டு வசதி.

751—(*வினா எண் 1438)—திரு. வி. பி. சிந்தன் மற்றும் திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் ஆதிதிராவிடர்களுக்கென கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள வீடுகள் எவ்வளவு?

(ஆ) அரசு கட்டிக் கொடுத்த வீடுகளில் ஆதி திராவிடர்கள் மட்டுமே தங்குவதற்கு அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, (அ) 1984-85 முடிய ஆதிதிராவிடர்களுக்கென தமிழகம் முழுவதும் 2,53,795 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆதிதிராவிடர்களுக்கென வீடுகள் கட்டுவதற்கு அரசால் கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டபின், அக்கிராமங்களில் சொந்தமாக வீட்டுமனை வைத்துள்ள ஆதிதிராவிடர்களே வீடுகள் கட்டி மான்யம் பெற பயனாளிகளாகத் தேர்வு செய்யப்படுகின்றனர்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை ஒப்படைதாரர்களுக்கு ஒப்படை செய்கையில், அடமானம் அல்லது யாதொரு வகையான மூலமாக யாருக்கேனும் மாற்றல் செய்வதோ, குத்தகை வாடகைக்கு விடுவதோ கூடாது என்று ஆதிதிராவிடப் பயனாளிகளிடம் ஒப்பந்தம் செய்யப்படுகிறது. இந்நிபந்தனை மீறப்படின் அவ்வீட்டினை ஆதிதிராவிடர் வீட்டு வசதிக்கழகம் திரும்ப எடுத்துக்கொள்கிறது.

ஆதிதிராவிடர் அல்லாதார் எவரும் இவ்வீடுகளில் இருப்பதாகத் தெரிய வந்தால் அவர்களை வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் அவ்வீட்டை வீட்டுவசதிக்கழகமே திரும்ப எடுத்துக்கொள்கிறது.

திரு. வி. பி. சிந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே தமிழகத்திலுள்ள ஆதிதிராவிடர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் இப்போது சொல்லிய எண்ணிக்கை மிகவும் கம்மி என்பது மாண்புமிகு தலைவர் அவர்களுக்கும் தெரியும் என்று நான் நினைக்கிறேன். இன்னும் அதிகமான வீடுகளைக் கட்டிக் கொடுக்க இந்த ஆண்டு புதிய திட்டங்கள் போடவேண்டும் என்பதோடு அங்கே ஆதிதிராவிடர் மட்டுமே குடியிருக்கிறார்களா அல்லது மற்றவர்கள் குடியிருக்கிறார்களா என்பதைக் கண்காணிக்க வேண்டும். பல இடங்களில் மற்றவர்கள் குடியிருக்கிறார்கள் என்ற தகவலைத்

தலைவர் அவர்களின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதையும் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகைக் கணக்கீட்டின் மூலமாக மூன்று திட்டங்களின்மூலம் வீடுகட்டிக்கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு கூட சுமார் 10,000 வீடுகள் கட்டுகின்ற வகையில் பரிசீலனையில் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் ஆதிதிராவிடர் அல்லாதவர்கள் அந்த வீட்டில் குடியிருந்தால் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

திரு. எம். செல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆதிதிராவிடர்களுக்கு கொடுக்கப்படக்கூடிய வீடுகள் குறித்து, அனைவருக்கும் வீடுகள் என்று அரசு தரப்பிலே சொல்லப்படுகிற காரணத்தினாலே, அனைவரும் மனு செய்து விட்டு அதிகாரிகளையும் மற்றவர்களையும் சந்திக்க தினமும் அலைந்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு வட்டத்திற்கும், ஒவ்வொரு தாலுக்காவிற்கும் இவ்வளவு வீடுகள் தான் என்று வீடுகளை நிர்ணயம் செய்து கட்டி வருவதால் அனைவருக்கும்கிடைக்கக் கூடிய முறையில் வீடு கட்டிக் கொடுக்க முடியவில்லை என்பதை அரசு அறியுமா என்பதோடு அந்த ஆதித்திராவிடர் வீடுகளில் அவர்களல்லாமல் பலபேர்கள் குடியிருக்கிற நிலைமை இருக்கிறதே, அவர்களையெல்லாம் அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று அனைவருக்கும் வீடு என்று குறிப்பிட்டிருந்தாலும் இந்த இந்த தாலுக்காக்களில் இந்த இந்த இடங்களில் தான் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் திட்டத்தைப் போட்டிருந்தாலும் கூட, திடீர் திடீர் என்று ஒரு இடத்திலே தீ விபத்து ஏற்படுகிறபோது அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக அந்த இடங்களில் கட்டிக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதேபோல வெள்ளம் ஏற்படுகிறபோது, வேறு இடத்திலே அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே அந்தந்த இடத்திலிருந்து, இத் திட்டத்தின்கீழ் மொத்தமாக இவ்வளவு கட்டிக் கொடுக்கப் பட்டிருக்கிறது என்று சொல்ல முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால் அனைவருககும் கொடுக்கவும் இயலவில்லை. அத்தோடு ஆதிதிராவிடர் வீடுகளிலே வேறு யாராவது தங்கியிருந்தால் அவர்களை அப்புறப்படுத்த தயாராக இருக்கிறோம்.



திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஆதி திராவிடர்களுக்கு புதிதாக இப்போது 6
ஆயிரம் ரூபாயில் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த வீடு
களில் சில இடங்களிலே இருக்கிற ஆதித்திராவிட மக்களுக்கு,
அந்த நிலம் உரிமை இல்லாத காரணத்தினாலே, அரசு தருகிற
சில சலுகைகளை அனுபவிக்க முடியவில்லை என்று சொல்லப்
படுகிறது. ஆகவே, நீண்ட நெடுங்காலமாக அந்த இடத்திலே
வாழ்கின்றவர்களுக்கு, அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்துக்
கொடுத்து, அரசு தரும் பயன்களை அனைவரும் அடையத்
தக்க அளவுக்கு நடவடிக்கை எடுக்க முயற்சிப்பார்களா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பட்டா கொடுக்கப்பட்ட இடத்தில் தான்
வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டமே செயல்பட்டுக் கொண்டிருக்
கிறது. நத்தம் புறம்போக்காக இருந்தால் மாவட்ட ஆட்சி
யாளர்கள் மூலமாக அல்லது தாசில்தார்கள் மூலமாக ஊர்
பட்டா வழங்கப்பட்டு, வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை
செயல்படுத்தி வருகிறோம்.

பாப்பாக்குடி ஒன்றியம் ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தல்.

752—(*வினா எண் 1522)— மாண்புமிகு திரு. வேடசந்தூர்
வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):—மாண்பு
மிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் பாப்பாக்குடி ஒன்றியத்
தைச் சார்ந்த கலிதீர்த்தான்பட்டி, புதுப்பட்டி, நந்தன்தட்டை
கொல்லங்குளம் ஆகிய ஊர்களைச் சேர்ந்த அரிசன மக்களிட
மிருந்து வீடு கட்டிக் கொடுக்கக் கோரி மனு ஏதேனும் அரசுக்கு
வந்துள்ளதா?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, (அ)
பாப்பாக்குடி ஒன்றியம், புதுப்பட்டி கிராமத்தில் வாழும் ஆதி
திராவிடர்கள் மட்டும் மனு செய்துள்ளார்கள்.

(ஆ) இம் மனுவை பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றிய ஆணை
யருக்கு ஊராட்சி ஒன்றியத்தில் இலவசமாக வீடுகட்டிக்கொடுக்கும்
திட்டத்தின் கீழ் வீடுகட்டிக் கொடுக்க தேவையான நடவடிக்கை
எடுப்பதற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

[1985 ஜூலை 19

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுப்பட்டி கிராமத்தில் வாழும் பொது மக்களிடமிருந்து வந்துள்ள மனுக்களின் மீது மட்டும் நடவடிக்கை எடுத்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நந்தன்தட்டை, கொல்லங்குளம் ஆகிய பகுதிகளிலே இருந்து வந்த மனுக்களின் மீதும் நடவடிக்கை எடுப்பார்களா? அவர்களுக்கும் இந்த திட்டத்தின் கீழ் வீடு கட்டிக் கொடுக்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பாக மாண்புமிகு பேரவைத் தலைவருடைய தொகுதியாக இருப்பதாகக் கருதுகிறேன். அப்படி என்று நான் நினைக்கிறேன். ஆகவே, அங்கே கொடுக்கப்பட்ட மனுக்கள் மீது ஒவ்வொரு ஊர்களாக எடுத்துக்கொண்டு, பொருளாதார அடிப்படையிலே கட்டிக் கொடுக்க கட்டாயம் ஆவன செய்வோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீபெரும்புதூரில் சமுதாயக் கூடம் கட்டுதல்.

753—(*வினா எண் 2467)—திருமதி டி. யசோதா: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் ஸ்ரீபெரும்புதூரில் ஆதி திராவிடர்களுக்கு சமுதாய நலக்கூடம் கட்ட அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திருவொற்றியூர் கடலோரப் பகுதி மீனவர் குடியிருப்பு.

754—(*வினா எண் 1875)—திரு ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர், எண்ணூர் நெடுஞ்சாலை கடலோரப் பகுதியில் கடலரிப்பால் மீனவ மக்கள் குடியிருக்கும் பகுதி பாதிக்கப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு மாற்று இடமோ, அல்லது குடியிருப்புகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?



1985 ஜூலை 19]

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: தலைவர் அவர்களே

(அ) ஆம்

(ஆ) திருவொற்றியூர்-எண்ணூர் நெடுஞ்சாலை கடலோரப் பகுதிகளில் கடலரிப்பால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மாற்று இடமோ அல்லது குடியிருப்புகளோ கட்டித்தரதக்க நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

திரு ஜி. கே. ஜே. பாரதி: மாண்புமிகு பேரவையின் தலை
நாயகர் அவர்களே, திருவொற்றியூர்-எண்ணூர் நெடுஞ்சாலை
யில் உள்ள குடியிருப்பு பகுதிகளிலே வாழ்கிற மீனவ மக்களுக்கு
குடியிருப்புகள் கட்டி தர இருப்பதாக மாண்புமிகு அமைச்சர்
பெருமான் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் குடி
யிருப்பு எந்த வகையிலே கட்டித் தரப்படும்? கட்டித் தரப்படு
கின்ற குடியிருப்புகளில் மீனவர்கள் தங்கள் மீன்பிடிக் கருவி
களை வைப்பதற்கு தக்கவாறு அதாவது வலைகள் மற்றும் மீன்
பிடிக் கருவிகளை எல்லாம் வைப்பதற்கு வேண்டிய வசதிக
ளோடு கூடிய முறையில் கட்டித் தரப்படுமா? அல்லது புறாக்
கூண்டு மாதிரி கட்டிப் தந்து அவர்களை வேதனைப்படுத்து
வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: தலைவர் அவர்களே,
கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட மீனவர் கிராமங்களில் உள்ள
மக்களை வேறு இடங்களில் குடியமர்த்துவதன் பொருட்டு நட
வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் விவரம்
பின் வருமாறு:—

லட்சுமிபுரம் மற்றும் நல்ல தண்ணீர் ஓடைக்குப்பம்:
லட்சுமிபுரம் மற்றும் நல்ல தண்ணீர் ஓடைக்குப்பம் மீனவர்
கிராமங்கள் கடலரிப்பினால் பாதிக்கப்பட்டு வருவதன் காரணத்
தினால் மேற்படி கிராமங்களிலுள்ள மீனவர்களை புல எண்.
218/1 மற்றும் 139/1 (ஏ) ஆகிய இடங்களுக்குக் குடிபெயர்ப்
பதன் பொருட்டுத் தேவையான நிலம் கையகப்படுத்தி ஆணை
கள் வெளியிடப்பட்டன. ஆயினும், புல எண் 218/1-ல் உள்ள
நிலத்தினை கையகப்படுத்தியதை எதிர்த்து தனியார் நிறுவனம்
ஒன்று நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததின் காரணமாக
தேவையான நிலத்தினைக் கையகப்படுத்தும் பணியில் தடை
யேற்பட்டது. இதற்கிடையில், லட்சுமிபுரம், நல்ல தண்ணீர்
ஓடைக்குப்பம் மீனவர்களது கோரிக்கையின்படி திருவிடந்தை
கிராமம் நித்திய கல்யாணசாமி கோவிலுக்குச் சொந்தமான
புல எண் 94/1—ல் உள்ள 15 ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்து
வதன் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருச்சினாங்குப்பம்: திருச்சினாங்குப்பம் மீனவர் கிராமம்
அடிக்கடி கடலரிப்பினால் பாதிக்கப்பட்டு வந்த காரணத்தினால்
அங்குள்ள மீனவர்களுக்கு பாதுகாப்பான உறைவிட வசதி

வழங்கும் பொருட்டு புல எண் 194/1 மற்றும் 194/1(பி) (2)-ல் 5.98 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு அடுக்குமாடி முறையில் வீடுகள் கட்டுவதற்குத் தேவையான மதிப்பீடுகளும் வரை படங்களும் மீன்துறை இயக்குநரால் தயாரிக்கப்பட்டு வருகின்றது. எர்ணாவூர்— பலகைத் தொட்டிக் குப்பம்: எர்ணாவூர் கிராமம் பலகைத் தொட்டிக் குப்பம் மீனவர் கிராமத்தில் கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட மேற்படி மீனவர்களை குடியமர்த்தும் பொருட்டு எர்ணாவூர் கிராமம் அருள்மிகு காசி விஸ்வநாதன் ஆலயத்திற்குச் சொந்தமான புல எண். 176/3 'ஏ'-ல் உள்ள 4.93 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி கிராமத்தின் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு புல எண். 176/3 'ஏ'-ல் உள்ள நிலத்தினை விற்பனை செய்வது குறித்து அறநிலையத் துறையினருடன் மீன்வள இயக்குநரால் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

வீடுகள் கட்டுவதைப் பொறுத்தவரையில் இதுவரையில் இருந்த முறை மாற்றப்பட்டு நல்லவகையில் மீனவர்கள் தங்குகிற வகையில் புதிய வடிவமைப்பில் வீடுகள் கட்டப்படுகிற நடவடிக்கையில் இந்த அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வீடுகள் கட்டுகிற திட்டத்தைப் பற்றி பல்வேறு குறிப்புகளை சொல்லியிருக்கிறார்கள். மீனவர்கள் கடற்கரை ஓரமாக இருந்தால்தான் தங்களுடைய தொழிலை சிறப்பாகச் செய்ய முடியும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட மீன்பிடிக்கும் தொழிலைக் குறித்து அழகாக ஒரு பாடலில் சொல்லி இருக்கிறார்கள். ''கடல் நீர் நடுவே பயணம் செய்தால குடிநீர் தருவார் யாரோ'' என்று அவர்களுடைய குறையை பரிவோடு சொல்கிறார்கள். ஆகவே கடற்கரை ஓரமாக வீடுகளை கட்டிக் கொடுத்தால் அவர்களுடைய படகையும், கட்டு மரத்தையும் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும். அவர்களுடைய வலையை உலர்த்துவதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே காசிகோவில் குப்பம் போன்ற பகுதிகளில் ஏராளமாக கோவில் நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களை அரசாங்கம் எடுத்து உடனடியாக அழகாக திட்டத்தில் தந்திருக்கிற குடியிருப்புகளை கட்டிக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: தலைவர் அவர்களே சட்டமன்ற உறுப்பினர் பாரதி அவர்களும் நானும் அந்தப் பகுதியை சுற்றிப் பார்த்திருக்கிறோம். பலமுறை இடமில்லை. இப்போது நாம் சொல்கிற இடங்கள் கடலோரத்தில் விரும்புகிற இடங்களாக இருக்கின்றன. ஆகவே அந்த இடங்களில் மீனவர்கள் வீடுகளை கட்டுகிற முயற்சியை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



### திருவில்லிபுத்தூர் தொகுதியில் பனையேற பயிற்சியளிக்கும் பயிற்சி நிலையம் அமைத்தல்.

755(*வினா எண் 858)—திரு. இரா.தாமரைக்கனி : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் பனை ஏற பயிற்சி அளிக்கும் பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில், பனை ஏறப் பயிற்சி அளிக்கும் பயிற்சி நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

சிறிய முதலீட்டுடன் பனை ஏறப் பயிற்சி அளிக்கும் திட்டம் உள்ளிட்ட பனை பொருள் உற்பத்தி மையம் ஒன்றினை நிறுவுவதற்கு தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியமும் மாநிலப் பனை வெல்ல இணையமும் ஆலோசித்து வருகின்றன.

### திருச்சி மாவட்டத்தில் கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் வழங்கப்பட்ட நிதியுதவி.

756 (* வினா எண் 3783)—திரு. க. சோலைராசு : மாண்புமிகு கதர் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-85-ல் திருச்சி மாவட்டத்தில் கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் புதிதாகத் தொழில் தொடங்க எத்தனை பேருக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) எந்த எந்த தொழில் புரிபவர்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, (அ) 1984-85-ல் திருச்சி மாவட்டத்தில் தமிழ்நாடு கதர்-கிராமத்தொழில் வாரியம் மூலம் புதிதாக தொழில் துவங்க 36 நபர்களுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) தச்சுத் தொழில், கொல்லுத் தொழில், சுண்ணாம்புத் தொழில், நார்த் தொழில், மண்பாண்டத் தொழில், தோல் தொழில், ரொட்டித் தொழில் ஆகிய தொழில் செய்பவர்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை தாராளமாகக் கடன் வழங்குவதற்கு திட்டம் வைத்திருந்தாலும் கூட, அது விதிக்கிற கடுமையான நிபந்தனைகளினாலே, ஏழை. எளியவர்கள் கடனை உடனடியாகப் பெற இயலவில்லை. எனவே அந்த நிபந்தனைகளைத் தளர்த்தி அவர்களுக்கு உதவுகிற திட்டத்தை அரசு அறிவிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் தொடங்க வாங்கும் கடன் தொகைகளைக் குறிப்பிட்ட காலத்தில் கடன் வாங்கியவர்கள் திருப்பிச் செலுத்துவதில்லை. அந்த பாக்கியினை நீண்டகால பாக்கியாக வைத்துக்கொண்டு இருக்கிறார்கள், அதனால்தான் அரசு இதுபோன்ற கடுமையான முறைகளை வைத்திருக்கிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை ஏற்று, அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாநிலம் முழுமைக்கும் எத்தனை பேர்களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டு இருக்கிறது என்பதையும், படித்த பட்டதாரிகளுக்கு இந்தக் கடன் வழங்குவதற்கு ஏதாவது சிறப்புத் திட்டம் இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு முதல், 1983 ஆம் ஆண்டு வரை மொத்தம் 30,945 நபர்களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டு இருக்கிறது. 1984-85 ஆம் ஆண்டில் சுமார் 35,124 பேர்களுக்கு கடன் உதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது என்பதையும் மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படித்த பட்டதாரிகளுக்கு இதுபோன்று ஏதாவது சிறப்புத் திட்டம் அரசினிடம் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறதா என்பதைக் கேட்டார்கள். அதற்கு தற்போது என்னிடம் விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், விடை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளார் அணைத் திட்டம்.

757 (* வினா எண்3508-ஏ)—திரு. ஆர்.ஈஸ்வரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உள்ளார் அணைத் திட்டம் அரசு ஆய்வு செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, இல்லை.



திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் உள்ள வாசுதேவநல்லூர் தொகுதியில் உள்ள உள்ளார் நீர்த் தேக்கத் திட்டத்தை அரசு ஆய்வு செய்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, உள்ளார் நீர்த்தேக்கத் திட்டத்தைப் பொறுத்த வரையில் அரசு இந்த திட்டத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் இந்தத் திட்டத்தினால் பலன் அடையக் கூடிய இரண்டு ஆயக்கட்டுதாரர்களிடையே தகராறு ஏற்பட்டது. அந்தத் தகராறு சம்பந்தமாக தற்போது திரு. சுப்பராயன் மற்றும் 5 ஆயக்கட்டுக்காரர்கள், வழக்கை உயர் நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். ஆகவே, நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகுதான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும் என்ற முடிவுக்கு அரசு வந்திருக்கிறது.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த உள்ளார் நீர்த் தேக்கத் திட்டத்தை அரசு ஆய்வு செய்தபோது, நீதிமன்றத்திற்கு போனவர்கள், உள்ளார் நீர்த்தேக்கத் திட்டம் சம்பந்தமாகப் போகவில்லை. அது ரெங்குவார் சம்பந்தமாகத்தான் நீதிமன்றத்திற்குப் போய் இருக்கிறார்கள். அந்த ரெங்குவார் சம்பந்தமாக பான் அவர்கள் கூட நீதிமன்றத்தில் இருந்து வழக்கை வாபஸ் வாங்குவதற்கு இன்றைக்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, இந்த உள்ளார் நீர்த்தேக்கத் திட்டம் வந்தால், அங்கே சுமார் 30 ஆயிரம் ஏக்கரிலிருந்து 40 ஆயிரம் ஏக்கர் வரைக்கும் பாசனம் பெற்று அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் நன்மை பெறுவார்கள். அதோடு மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து வருகிற தண்ணீரை, இந்தத் திட்டத்திற்குப் பயன்படுத்துகிற ஒரு நல்ல திட்டமாக இருக்கிற காரணத்தால், இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, ஒரு திட்டத்தை அரசு தீட்டி செயல்படுத்துகின்றபோது, அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு அந்தத் திட்டத்தால் பலன் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் செயல்படுத்தப் படுகின்றது. ஆனால், அவ்வாறு செயல்படுத்துகின்ற நேரத்தில், கிடைக்கக் கூடிய பயனை, சந்தேகத்திற்கு உட்படக்கூடிய அளவிற்கு அந்த ஆயக்கட்டுதாரர்களுக்கு இடையே தகராறு இருக்கின்ற நேரத்தில் தகராறில் யார் பக்கம் நியாயம் இருக்கிறது என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டுதான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும். மேலும் மேற்குத் தொடர்ச்சி மலைத் தண்ணீரை அந்தப் பகுதியிலே திருப்பி விடுவதைப் பற்றிச் சொன்னார்கள். இந்த உள்ளார் திட்டத்தைப் பொறுத்த வரையிலும், அதிலே கேரள அரசு போன்ற வேறு மாநிலப் பிரச்சனைகள் இல்லா

விட்டால், பணிகள் சுலபமாக இருக்கும். வேறு மாநிலப் பிரச்சனைகள் வந்தால்,—இன்று நாட்டிலே நடக்கக்கூடிய நடவடிக்கைகள் எல்லாம் நம்முடைய உறுப்பினர்களுக்குத் தெரியும்—அந்த முறையிலே தான் அரசு நடவடிக்கை எடுக்கும்.

நெல்லிக்குப்பத்தில் பயணியர் விடுதி.

758. (*வினா எண் 3771)—திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் நகரத்தில் பயணியர் விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. பா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பத்தில் அமைச்சர் பெருமக்களும் அரசு உயர் அதிகாரிகளும் அந்தத் தொகுதியைச் சுற்றிப் பார்க்க வருகின்ற காலங்களில் தங்குவதற்கு சரியான இடவசதி இல்லை என்று நாங்கள் பலமுறை மாவட்ட ஆட்சித் தலைவர் இடத்திலே யும், சம்பந்தப்பட்ட வட்ட ஆட்சியர் இடத்திலேயும் மனுக்கள் செய்தும், 1980 ஆம் ஆண்டு, தாசில்தார் அவர்கள் நெல்லிக்குப்பம் திருக்கண்டேஸ்வரம் என்ற அந்தப் பகுதியிலே இடத்தை பார்வையிட்டார்கள். பயணியர் விடுதி கட்டுவதற்காக, அப்படிப் பார்வையிட்டு இதுநாள் வரையிலும் கட்ட முடியாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பத்தில் ஒரு பயணியர் விடுதி கட்டுவது பொருத்தமட்டில் பொதுப்பணித் துறையின் மூலமோ அல்லது நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறையிலோ எந்தவிதமான செயற்குறிப்பும் இல்லை என்பதை "எனக்கு இங்கே விவரமாகத் தந்து இருக்கிறார்கள். இருந்தாலும் கூட நெல்லிக்குப்பத்திலிருந்து 16 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பண்ருட்டியில் 2-வது வகுப்பு பயணியர் விடுதி ஒன்று ஏற்கனவே இருக்கிறது என்பதையும் அதிலே 2 அறைகளும் அதற்கு தேவையான வசதிகளும் இருக்கின்றன என்றும் தலைமைப் பொறியாளர், ஊரகப் பணித் துறை அவர்கள் இங்கே விவரமாகத் தந்து இருக்கிறார்கள். அந்த முறையில் பக்கத்தில் ஒரு நல்ல பயணியர் விடுதி இருப்பதால் புதிதாகப் பயணியர் விடுதி கட்டத் தேவையில்லை என்ற முடிவுக்கு அரசு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் தொகுதி ஒரு பரந்த தொகுதியாகும். அந்தத் தொகுதியினுடைய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அமைச்சர் பெருமக்கள் வந்து தங்குகின்ற அளவிலும், அரசு உயர் அதிகாரிகள் தங்குகின்ற அளவிலும், அங்கே ஒரு பயணியர் விடுதி கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ? நாங்கள் இந்தப் பக்கம் பண்ருட்டிப் பயணியர் விடுதிக்கு வர வேண்டும். ஏறத்தாழ நெல்லிக்குப்பம் நகரத்திலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு வரவேண்டும். இந்தப் பக்கம் சென்றால், ஏறத்தாழ 15 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற கடலூர் பயணியர் விடுதிக்குச் செல்ல வேண்டிய காரணத்தால், இந்தத் தொகுதியின் நலன் கருதி நெல்லிக்குப்பம் நகரத்தில் ஒரு பயணியர் விடுதி கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு நகரங்களில் ஒரு நகரத்திற்கும் பக்கத்தில் உள்ள சிறு நகரத்திற்கும் இடையில் இடைவெளி மிகவும் அதிகமாக இருக்கிறது. இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய நெல்லிக்குப்பம் கடலூருக்கும் மற்றும் பண்ருட்டிக்கும் இடையில் அவர்கள் சுட்டிக்காட்டியது போல 15,16 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்து இருக்கிறது. அவர் உண்மையிலேயே மிகவும் வசதியான இடத்தில் தான் இருக்கிறார்கள். அவரை விட வசதி குறைவான இடத்தில் இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினருடைய தேவைக்கு ஏற்ப அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைக்கப் பெற்ற வினாக்கள் இப்போது எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

வலம்புரிச் சங்கு.

329-(* வினா எண் 718)-திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1983-84, 1984-85ஆம் ஆண்டுகளில் வலம்புரிச் சங்கு கண்டுபிடிக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், வலம்புரிச் சங்கு எடுப்பதற்குத் தனியாக ஊக்கத்தொகை ஏதேனும் வழங்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, (அ) தமிழகத்தில் 1983-84-ல் இராமநாதபுரம் திருப்பாலைக்குடியில் பட்டி வகை குறையளவு சங்கு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. 1984-85-ல் வலம்புரிச் சங்கு ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை.

(ஆ) சங்கு குளித்தெடுத்தவர் மற்றும் உடன் சென்றவர்கள் ஆகியோருக்கு மொத்தம் ரூ. 1,700 சன்மானத் தொகை வழங்கப்பட்டது.

## இரால் ஏற்றுமதி.

350.-(* வினா எண் 736)—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இரால் ஏற்றுமதி செய்ய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

(ஆ) அதன் மூலம் 1983-84, 1984-85-ல் ஈட்டிய வருவாய் எவ்வளவு ?

(இ) கழகத்தின் உறைவிப்பு நிலையங்களில் பதப்படுத்துவதற்கு போதுமான வசதி இல்லாமல் இருப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ) விவர அறிக்கை ஒன்று, அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

## விவர அறிக்கை.

(அ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், 1978 ஆம் ஆண்டு மெக்ஸிகோ நாட்டிலிருந்து, இரண்டு 23 மீட்டர் கலன்களை இறக்குமதி செய்தது. இறக்குமதி பாலிஸியில் உள்ள ஷரத்தின் படி, கழகம் இவ்விரு கலன்களின் பதிப்பான ரூ. 79,34,490-க்கு சமமான அன்னிய செலாவணியை மீன்கள் மற்றும் இரால்களை ஏற்றுமதி செய்வதின் மூலம் பெற்றுத்தர வேண்டும். இக்கலன்கள் 1978 ஆம் வருடம், மே மாதம் முதல் முறையாக மீன்பிடிப்பு தொழிலில் ஈடுபட்டன. இக்கலன்களின் மூலம் பிப்ரவரி 1983 முதல் பிப்ரவரி 1984 வரை பிடிபட்ட இரால்களை பதப்படுத்தி ஜப்பான் நாட்டுக்கு ஏற்றுமதி செய்து ரூ. 86.57 லட்சத்திற்கு அன்னிய செலாவணி ஈட்டப்பட்டுள்ளது. ஏற்றுமதிக் கொள்கையில் குறிப்பிட்ட ஷரத்தின்படி, இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு கலன்களின் மதிப்பான ரூ. 79.34 லட்சத்திற்கு சமமான இரால்களை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ஏற்றுமதி செய்து அன்னிய செலாவணியையும் பெற்று விட்டதாலும் இத்தனை ரூபாய்க்கு இங்கே கரையிலேயே விற்பதில் மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு சற்று அதிக லாபமென்பதாலும் 1984-ம் ஆண்டு பிப்ரவரி



மாதத்திற்குப் பிறகு இரால்களை ஏற்றுமதி செய்வதை நிறுத்தி விட்டது. அதன்பின் ஒவ்வொரு பயணத்திலும் (Voyage) பிடிக்கும் இரால்களை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் மூலம் (Sealed Tender) அதிகபட்சமான விலை கோரும் கம்பெனிக்கு விற்கப்பட்டு வரப்படுகிறது.

(ஆ) தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளில் தான், இரால்களை ஏற்றுமதி செய்தது. அதன்மூலம் ஈட்டிய வருமானம் கீழ்க்கண்டவாறு:—

| வருடம். | ஏற்றுமதி செய்யப்பட்ட இரால்களின் எடை. | அவற்றின் மதிப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | கிலோ. | ரூ. பை. |
| 1982–83 | 13,180 | 13,88,960.63 |
| 1983–84 | 75,460 | 72,68,064.96 |
| | | 86,57,025.59 |

(இ) தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் உறைய வைப்பு நிலையங்களில் பதப்படுத்துவதற்குப் போதுமான வசதிகள் உள்ளன.

## சங்கு விற்பனை.

388-(* வினா எண் 1483)—திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ரூபாய் ஒரு கோடிக்கும் மேல் மதிப்புள்ள சங்குகள் விற்பனை செய்யப்படாமல் தேங்கியிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) தேங்கி இருப்பதன் காரணம் என்ன ?

(இ) விற்பனை செய்வதற்காக அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(ஈ) எந்த மாநிலத்தில், எந்த அடிப்படையில் விற்பனை செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மேற்கு வங்க கைத்திறன் தொழில் வளர்ச்சிக் கழகம் தரம் 1 மற்றும் தரம் 2 சங்குகளை வழங்கக் கோரும் விகிதத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால், 1984-ல் சங்குகள் விற்பனை இல்லை.

(இ) கை இருப்பிலுள்ள சங்குகளிலிருந்து மேற்கு வங்கக் கைத்திறன் தொழில் வளர்ச்சிக் கழகத்துக்கு, சுமார் 20 இலட்சம் சங்குகள் விற்பனை செய்ய ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஈ) இதுவரை சங்குகளின் பெரும்பகுதி மேற்கு வங்க கைத்திறன் தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு விற்பனை செய்யப் பட்டு வருகிறது.

(முற்பகல் 10-10)

திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சங்கு விற்பனையில் அரசுக்கு ஆண்டு வருமானம் எவ்வளவு? இப்படி மூலதனம் இல்லாமல் கடல் செல்வங்கள் வாயிலாக வருகின்ற அந்தச் சங்கு விற்பனைக்கென்று ஒரு தனி வாரியம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? ஏனெனில், இந்தச் சங்கை கடத்துவதாகவும், அதிலே பல தவறுகள் நடப்ப தாகவும் சொல்லப்படுகிறது. எனவே, இந்தச் சங்கின் வாயிலாக அரசுக்கு வருவாயை ஈட்டவும், மேலும் வருவாயைப் பெருக்கவும் தனிவாரியம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சங்குகள் பெருமளவில் கடத்தப்படுவது என்கின்ற தகவல்கள் அடிக்கடி நமக்கு வந்து கொண்டிருக்கின்றன. பல மாதிரியாக கடத்தல்காரர்கள் சங்குகளைக் கடத்திக் கொண்டிருக் கிறார்கள். அது எந்தவகையிலேயும் கடத்தப்படாமல் தடுப் பதற்காகத் தான் சமீபத்திலே 8 சங்கு வளையல்கள் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகளை அரசு அவர்களுடைய லைசென்சை ரத்துச் செய்து இருக்கிறது. தற்போது சங்குடைய மதிப்பு—ஏறத்தாழ 1½ கோடி மதிப்புள்ள சங்குகள் இருக்கின்றன. சமீபத்திலே மேற்கு வங்கத்தோடு 20 இலட்சம் சங்குகளை விற்கிற ஒரு ஏற்பாட்டை செய்து இருக்கிறோம். மொத்தமாக சங்கு கடத்தலைத் தடுப்பதற்கு அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, வலம்புரிச் சங்கு இதுவரையிலும் எத்தனை சங்குகள் மீன் வளத் துறை கடலிலே இருந்து எடுத்து இருக்கிறார்கள்? அந்தச் சங்கை எவ்வளவு ரூபாய்க்கு விற்பனை செய்கிறார்கள்? இப்படி வலம்புரிச் சங்கை எடுப்பவர்களுக்கு ஊக்கத் தொகை ஏதேனும் வழங்கப்படுகிறதா என்பதையும், இந்தச் சங்கு விற்பனை செய்ய சங்கை கடலிலே இருந்து கொண்டு வருவதற்கான தனி வாரியம் அமைக்கப்படுமா என்று கேட்டேன். அதையும் அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சங்கைப் பற்றி முதலில் கேட்டார்கள், இப்போது வலம்புரிச் சங்கைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, வலம்புரிச் சங்கைப் பற்றிச் சொல்லவேண்டுமானால், வலம்புரிசங்கு என்பது மிக அபூர்வமாகக் கிடைக்ககூடிய ஒன்று ஆகும். அத்தகைய வலம்புரிச் சங்குகள் பல ஆண்டுகளுக்கு ஒரு முறையோ, சில சமயங்களில் ஆண்டுக்கு ஒன்றோ, அல்லது இரண்டோ அரிதாக கிடைக்கும். அவ்வாறு கிடைக்கும் சங்குகளை சிலர் பூசைக்காக வாங்கி வைத்துக் கொள்வர். அது அரிதாகக் கிடைப்பதால் அனைவரும் வாங்கிக் கொள்ள விரும்புவர். அந்த வலம்புரிச் சங்குக்கென தனியாக விலை அரசு நிர்ணயிப்பது இல்லை. வலம்புரிச் சங்கு கிடைக்கும் போது ஏற்படும் செலவினத்திற்கு, மேல் ஒப்பந்தப் புள்ளி மூலம் கிடைக்கும் அதிகபட்ச விலைக்கு வலம்புரி சங்கு விற்கப்படுகிறது இதற்கு முன்பு பிடிக்கப்பட்ட வலம்புரி சங்குகள் ஒப்பந்தப்புள்ளி மூலம் விற்பனை செய்யப்பட்டது. 13-1-83-ம் நாளிட்ட வனம் மற்றும் மீன் துறையின் 43 பல்வகை எண். அரசாணையில் மீன் துறைக்கு கிடைக்கும் வலம்புரிச் சங்குகளில் சிறந்த சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அருங்காட்சியகங்களில் காட்சிப் பொருளாக, பொதுமக்களின் பார்வைக்காக வைக்கலாம் என ஆணையிடப் பட்டுள்ளதைத் தொடர்ந்து, இரண்டு வலம்புரிச் சங்குகள் சென்னை அருங்காட்சியக இயக்குநருக்கு கொள்முதல் விலை யிலேயே விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே, 1978 ஆம் ஆண்டு கண்டெடுக்கப்பட்ட இரு பிறவி வலம்புரிச் சங்கு, தமிழக அமைச்சரவைக் குழு கூடி, அதை அழகுறப் பதித்து காட்சிப் பொருளாக வைக்க ஆணை இட்டுள்ளது. வலம்புரிச் சங்கினை பதித்து வைக்கப்பட்டு, வடிவமைத்து தயார் செய் ததும், வலம்புரிச் சங்கு காட்சிப் பொருளாக வைக்கப்படும்.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்தில் சங்கு கடத்தல் பல நேரங்களில் பல வழிகளில் நடத்தப்படுகிறது என செய்திகள் வருகின்றன என்றார். எந்த நேரங்களில் எந்த வழிகளில் கடத்தப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலேயே இதற்கு பதில் சொன்னேன். எந்த வழியில் கடத்தப்பட்டாலும் தடுப்பதற்கு, தடுத்து நிறுத்து வதற்கு அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே சங்கு குளிப்பது தூத்துக்குடி பகுதியிலே தான். ஆனால் அத்தனை சங்குகளும் மேற்கு வங்காளத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அங்கு தான் வளையல் கள், மோதிரங்கள் செய்யப்படுகின்றன. இங்கு வளையல்கள், மோதிரங்கள், வேறு சங்கிலே உற்பத்தி செய்யும் பொருட்களை

செய்ய, இங்கே தூத்துக்குடியிலேயோ அல்லது மண்டபம் அருகாமையிலேயோ, உற்பத்திச் சாலை ஏற்படுத்துவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சங்கு ஆபரணங்கள் அனைத்தும் கிழக்குப் பக்க மக்கள் தான் அணிகிறார்கள். இங்கே தொழிற்சாலையை ஏற்படுத்தினாலும், அங்கு இருப்பவர்களைக் கொண்டு வந்து செய்தால் தான் அவர்கள் வாங்கிப் போட்டுக் கொள்வார்கள். இங்கே எப்படி தாலி எல்லாம் மிக முக்கியமாக கருதப்படுகிறதோ ஒரு சங்கு வளையலோ, மோதிரமோ, உடைக்கப்பட்டாலோ கூட அபசகுனமாக நினைக்கிறார்கள். அப்பொழுதே ரீப்ளேஸ் பண்ணி கையிலே போட வேண்டுமென்ற ஒரு நிலைமையிலேதான் கிழக்கு வங்க மக்கள் இருக்கிறார்கள். எனவே, அவர்கள் இங்கே வந்து ஆபரணம் செய்ய விரும்புவது இல்லை. எனவே அவர்களைக் கொண்டு வந்து ஆபரணம் செய்வதாகத்தான் ஏழெட்டு தொழிற்சாலைகள் நம் நாட்டைச் சேர்ந்தவர்கள் ஏற்படுத்தி வைத்துக்கொண்டு வாங்கும் சங்குகளை அங்கே அனுப்பிக்கொண்டு இருந்தார்கள். தற்போது அது தடை செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே ஆரம்பிக்கின்ற நிலைமை இல்லை.

உள்நாட்டு மீனவர்களுக்கு குடியிருப்பு

430—(*வினா எண் 187) திரு. செ. செம்மலை: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடலில் மீன் பிடிப்போருக்கு வீடுகள் கட்டித் தருவது போல் உள்நாட்டு மீனவர்களுக்கும் வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: தலைவர் அவர்களே தற்போது இல்லை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே உள்நாட்டு மீனவர்கள் மீன்பிடித் தொழிலைத் தவிர வேறு தொழில்களிலும் ஈடுபடுகிறார்கள் என்ற கருத்தில் வீடு கட்டிக் கொடுக்கப்படுகின்ற திட்டம் அவர்களுக்கு மறுக்கப்படுகிறது. உள்நாட்டு மீனவர்களும் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கிறார்கள். மீனவ சமுதாயத்திற்குப் பல்வேறு சலுகைகளை அளித்து வருகின்ற இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவரவர்களின் அரசு அவர்களுடைய நலனைக் கருத்திற்கொண்டு. குறைந்தபட்சம் பாதி மானியமாகவும், பாதி கடனாகவும் அளித்து உள்நாட்டு மீனவர்களுக்கும் வீடுகள் கட்டித் தருகின்ற திட்டத்தைப்பற்றிப் பரிசீலிப்பதற்கு இனிமேலாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடலோரத்தில் உள்ள மீனவர்களுக்கே போதிய வீடுகளை நம்மால் கட்டித் தர முடியவில்லை. கடல் கொந்தளிப்பு அலை, புயல் ஆகியவைகளினால் இவர்கள் மிகுந்த அளவிற்குப் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். ஆகவேதான் விரைந்து புயல் பாதுகாப்புக் கட்டிடங்களைக் கட்டியிருக்கிறோம். இன்னும் பல கிராமங்களில் புயல் பாதுகாப்புக் கட்டிடங்களைக் கட்டித் தர வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். என்றாலும், உள்நாட்டு மீனவர்களைப் பொறுத்தவரையில் அவர்களது ஏழ்மை நிலைமைகளைக் கருத்திற்கொண்டு நாம் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது உள்நாட்டு மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தாங்கள் பிடிக்கின்ற மீன்களை விற்பனை செய்து வருகிறார்கள். அந்த மீனவ சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது இலாபகரமாக நடந்து வருவதால், அவர்களுக்கு அரசாங்கம் வீடு கட்டித் தருகின்ற திட்டத்தைப்பற்றிப் பரிசீலிக்கின்ற வரையில், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவாவது அவர்களுக்கு வீடு கட்டுவதற்குக் கடன் கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்குமா, அதற்கான நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: பரிசீலிக்கலாம்.

பிற்பட்ட மாணவர்களுக்கான பயிற்சி நிலையங்கள்

431-*வினா எண் 1424 திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஐ.ஏ.எஸ். போட்டித் தேர்வுக்குப் பயிற்சி அளிக்கும் நிலையங்கள் மாநிலத்தில் எத்தனை செயல்பட்டு வருகின்றன?

(ஆ) தென் மாவட்டங்களுக்கு அத்தகைய பயிற்சி நிலையம் ஒன்றினை மதுரையில் அமைக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

• மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் சென்னை நகரில் மட்டும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற போட்டி தேர்வுக்குப் பயிற்சியளிக்க முழுநேர தனிப் பயிற்சி நிலையம் ஒன்று இயங்கி வருகிறது.

(ஆ) 1980-ஆம் ஆண்டு திருச்சி, திருநெல்வேலி, மற்றும் கோயம்புத்தூர் தவிர மதுரையிலும் பகுதி நேர பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்க ஆணையிடப்பட்டது. இதன் படி திருச்சி, கோவை, மதுரை பயிற்சி நிலையங்கள் 1981-ம் ஆண்டில் இருந்தும் திருநெல்வேலி பயிற்சி நிலையம் 1982-ம் ஆண்டு வேலை செய்ய ஆரம்பித்தன. ஆனால் மேற்படி பயிற்சி நிலையங்களில் சேரப் போதிய எண்ணிக்கையில் மாணவர்கள் முன்வராத காரணத்தாலும், எதிர் பார்த்த அளவில் முன்னேற்றம் இல்லாத காரணத்தாலும் திருநெல்வேலி பயிற்சி நிலையத்தை 1983ம் ஆண்டிலிருந்தும், இதர பயிற்சி நிலையங்களை 1984ல் இருந்தும் மூடிவிட அரசு ஆணை பிறப்பித்தது.

(இ) தற்போது மதுரையில் சிறப்புப் பயிற்சி நிலையம் அமைக்க நடவடிக்கை ஏதும் இல்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதுரையிலே தொடங்கப்பட்ட பயிற்சி நிலையம் இப்பொழுது மூடப்பட்டதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். தென் மாவட்டங்களினுடைய மாணவர்கள் பயன் அடையும் வகையில், இந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி. எஸ்.,க்கு மாணவர்களின் எண்ணிக்கை வேண்டுமானால் குறைவாக இருக்கலாம். ஆனால் மாநில அரசு நடத்துகின்ற குரூப் 1 சர்வீஸ் என்பது, அந்தப் பணிக்கு இணையான டெபுடி கலெக்டர் டெபுடி சூப்பிரண்டென்ட் ஆஃப் போலீஸ் ஆகிய தேர்வுகளுக்கான பயிற்சி அளிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, குரூப் 1 சர்வீசுக்குப் பயிற்சி கொடுப்பதற்கான வாய்ப்பை உருவாக்க முடியும். தென் மாவட்டங்களில் உள்ள மாணவர்கள் இந்தப் பயிற்சியைப் பெறுகின்ற வகையில், மதுரையிலே ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., குரூப் 1 சர்வீஸ் ஆகிய தேர்வுகளுக்கு பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற வகையில் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எம். ஆர். கோவேந்தன்: பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலே நடத்தப்படும் இந்தப் பயிற்சி நிலையத்தின் மூலம் இதுவரையில் பயிற்சி அளிக்கப்பட்ட மாணவர்கள் எத்தனைபேர்? அதில் எத்தனை பேர் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வு பெற்றிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் உள்ள மாணவர்கள் அதிக அளவில் தேர்ச்சி பெறத்தக்க வகையில் பயிற்சி அளிப்பதற்காக டெல்லியில் உள்ள டாக்டர் ராவ் ஸ்டடி சர்க்கிள் போன்ற மிகப் பிரசித்திபெற்ற நிறுவனங்களில் உள்ள பேராசிரியர்களை இங்கு அழைத்தோ அல்லது இங்கிருந்து



மாணவர்களை அங்கே அனுப்பியோ இந்த மாநிலத்தில் உள்ள மாணவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளில் அதிக அளவில் தேர்ச்சி பெறும் வகையில் நடவடிக்கைகள் ஏதேனும் எடுத்திருக்கிறதா? அப்படி இல்லையென்றால் வருங்காலங்களிலே யாவது நடவடிக்கை எடுப்பதற்குப் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அகில இந்திய உயர் அரசு பதவிகளான ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ்., போன்ற தேர்வுகளை எழுத பிற் படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இன மாணவர்களுக்குச் சென்னையில் தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆண்டிற்கு 50 பேருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை 757 பேருக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. இவர்களில் 15 பேர் தேர்வு பெற்றனர்.

ஐ. ஏ. எஸ்.—4, ஐ. பி. எஸ்.—3, வேறு பணிகள் 8 ஆக மொத்தம் 15 பேர்கள் தேர்வு பெற்றனர்.

தகுதி— எம்.ஏ., எம்.எஸ்.ஸி., பி.ஜி.எல்.. பி.எல். எம்.பி.பி.எஸ்., பி.வி.எஸ்.ஸி., முடித்தவர்கள். மேற்படி நபர்கள் கிடைக்காவிட்டால், பி.ஏ., பி.எஸ்.ஸி. முடித்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

வருமான வரம்பு—விடுதி வசதி வேண்டுவோருக்கு ரூ. 5,000-க்குள்; மற்றவர்களுக்கு ரூ. 9,000-வரை.

25 மாணவர்களுக்கு விடுதி வசதி உண்டு.

மாணவியர் மாநிலக் கல்லூரி விடுதியில் தங்கலாம். இவர்களுக்கு உணவிற்கு ரூ. 95/-ம் அறை வாடகை ரூ. 10-ம் வழங்கப்படுவதுடன், போக்குவரத்துச் செலவும் தரப்படுகிறது. பயிற்சி நிலையத்தில் நூலக வசதியும், படிப்பக வசதியும் உள்ளன.

பயிற்சி முறை—1. பிரிலிமினரி தேர்வு—மே, ஜூன் மாதங்கள். 2. முதன்மைத் தேர்வு—நவம்பர், டிசம்பர் மாதங்கள். ஆண்டிற்கு 4 மாதங்கள் மட்டுமே இப்பயிற்சி நிலையம் செயல்படுகிறது.

மாணவர் தேர்வுக் குழு

இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை .. தலைவர்
இயக்குநர், கல்லூரிக்கல்வி .. .. .. உறுப்பினர்
முதல்வர், தனிப் பயிற்சி நிலையம் .. .. உறுப்பினர் மற்றும் செயலர்.

### ஆலோசனைக் குழு

| | | |
|---|---|---|
| செயலர், சமூக நலத்துறை | .. | தலைவர் |
| இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை | .. | உறுப்பினர் |
| இயக்குநர், கல்லூரிக் கல்வி | .. | ,, |
| இயக்குநர், தொழிற்கல்வி | .. | ,, |
| ஐ.ஜி., ஆயுதப் போலீஸ் | .. | ,, |
| இயக்குநர், சமூக நலத்துறை | .. | ,, |
| முதல்வர், தனிப் பயிற்சி நிலையம் | .. | ,, |
| முதல்வர், ஆதிதிராவிடர் தனிப்பயிற்சி நிலையம் | .. | ,, |

2 பேராசிரியர், 1 உதவிப் பேராசிரியர் முழு நேரமாகவும், 5 பேராசியர்கள், 3 உதவிப் பேராசிரியர்கள் பகுதி நேரமாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இது தவிர விடுதிக் காப்பாளர் உட்பட 16 பேர் இந்நிலையத்தில் பணிபுரிகின்றனர்.

டாக்டர் ராவ் ஸ்டடி சர்க்கிள், டெல்லி:

சென்னை தனிப்பயிற்சி நிலையத்தைத் தவிர டெல்லியில் தனியாரால் நடத்தப்படும் டாக்டர் ராவ் ஸ்டடி சர்க்கிள் என்ற பயிற்சி நிலையத்துக்கும் அகில இந்திய சிவில் சர்விஸ் தேர்வுக்குப் பயிற்சி பெற தமிழகத்திலிருந்து மாணவர்கள் அனுப்பப்படுகின்றனர்.

இங்கு பயிற்சி பெற்றவர்களில் இதுவரை 4 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இப்பயிற்சிக்கு ஆண்டுக்கு ஒரு இலட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது.

தகுதி—பல்கலைக் கழகங்களில் முதல் மதிப்பெண் பெற்ற பத்து பேர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

முதல் வகுப்பு பட்டம் பெற்ற, அறிவில் கூர்மையான பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவராய் இருத்தல் வேண்டும்.

ஆண்டு வருமானம்—ஆண்டு வருமானம் ரூ. 12,000—க்குள் இருக்க வேண்டும்.

பயிற்சி முறை—1. பிரிலிமினரி தேர்வு—4 மாதங்கள் (பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே).

2. முதன்மைத் தேர்வு—3 மாதங்கள் (ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர்)

3. வாய்மொழித் தேர்வு—பத்து நாட்கள்.

விடுதி வசதி—தமிழ்நாடு இல்லம் ஒல்டு பிளாக்கில் இரண்டு அறைகளில் தலா ஐந்து பேர் தங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாடகை—சலுகை வாடகையில் ஒரு நாளைக்கு தலா ரூ 3,



உணவு—தமிழ்நாடு இல்லத்தில் கிடைக்கிறது. இவ்வாறு இந்தப் பயிற்சி நடத்தப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 2. மாஸ்கோ உலக இளைஞர்கள் மாநாட்டிற்குச் செல்லும் உறுப்பினர்களுக்கு வாழ்த்துக்கள்.

திரு உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாஸ்கோவில் நடைபெறுகின்ற உலக இளைஞர்கள் மாநாட்டிற்கு நம்முடைய மன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் முருகானந்தம், டாக்டர் கே. பி. இராமலிங்கம், பிரேம் குமார் தங்கமணி ஆகியோர் செல்கிறார்கள். அவர்கள் அந்த நாட்டில் இளைஞர்கள் வருங்காலத்தில், அந்த தேசத்திற்கு எவ்வளவு பெரிய சேவை செய்ய ஆயத்தமாகிறார்கள் என்பதை அறிந்து வருவார்கள். நல்லெண்ணத் தூதுவர்களாக அவர்கள் செல்கிறார்கள். மேலும் பல விவரங்களை அவர்கள் அறிந்து வருவார்கள் என்ற வகையில் இந்த மன்றத்தின் நல்வாழ்த்துக்களை உங்கள் மூலமாக நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் நான் இளைஞன் என்ற காரணத்தினாலே, இளைஞர்கள் மாநாட்டிற்குக் கலந்துகொள்ள செல்கின்ற சட்ட உறுப்பினர்களை வாழ்த்துகின்றேன்.

### 3. "வணிக ஒற்றுமை" ஆசிரியர் தொடர்ந்த வழக்கில் உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்னையை இந்த மாமன்றத்தின் கவனத்திற்கும் தங்களுடைய மேலான கவனத்திற்கும் கொண்டு வந்து அதிலே தங்களுடைய கருத்துக்களை, விரும்பி, வேண்டி நான் அறிய விழைகின்றேன். இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களைப் பற்றியும் அவையைப் பற்றியும் களங்கம் கற்பிக்கின்ற வகையிலே 'வணிக ஒற்றுமை' ஆசிரியர் திரு. ஏ. எம். பால்ராஜ் அவர்கள் செய்தியை வெளியிட்டு, அது இந்த மன்றத்திலே பிரச்னையாக எழுப்பப்பட்டு, தங்களாலே உரிமைக் குழுவுக்கு அனுப்பப்பட்டு, உரிமைக் குழுவின் பரிந்துரை மீது அந்த ஆசிரியருக்குத் தாங்கள் தண்டனை வழங்கினீர்கள். அந்தத் தண்டனையையொட்டி அவர்மீது தாங்கள் நடவடிக்கை

எடுக்க இருந்த நேரத்திலே, அவர் உயர்நீதிமன்றத்திலே ஒரு வழக்கைத் தொடுத்தார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் கொடுத்த அந்தத் தீர்ப்புச் செல்லுமா, செல்லாதா என்கின்ற முறையிலே ஒரு வழக்கைத் தொடுத்திருந்தார். அந்த வழக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு தவணை கொடுக்கப்பட்டு வழக்கறிஞர்களால்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் தீர்ப்பு,......

திரு. என். எஸ். வி. சித்தன்: அவையின் சார்பாக தங்களுடைய தீர்ப்பை அளித்தீர்கள் என்று நான் திருத்திக் கொள்கிறேன். அந்த வழக்கு உயர்நீதி மன்றத்திலே எடுத்துக் கொள்ளப்பட்டு, விவாதிக்கப்பட்டு, பின்னாலே வணக்கத்திற்குரிய நீதிபதி அவர்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். நாம் பல்வேறு சமயங்களில் சொல்லியிருக்கிறோம், 'ஹவுஸ் இஸ் சுப்ரீம்' என்று, எனவே இந்த அவையின் சார்பாக அளிக்கப்படும் தங்களுடைய தீர்ப்பைப்பற்றி இந்த உலகத்தில் யாரும் கேள்வி கேட்க முடியாது; கருத்து சொல்ல முடியாது. அந்த அளவுக்கு இந்த மாமன்றத்திற்கு மேலாண்மை இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அப்படி இருக்கும்போது அந்த வணக்கத்திற்குரிய நீதிபதி அவர்கள் இந்த வழக்கை எடுத்துக்கொண்டு, விசாரித்து, தீர்ப்பும் வழங்கியிருக்கிறார்கள். வணக்கத்திற்குரிய நீதிபதி அவர்கள் தன்னுடைய தீர்ப்பை சொல்லும்போது இறுதியாக ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். தங்களுடைய அனுமதியோடு அதை படித்துக்காட்ட விரும்புகிறேன். "The Hindu, dated 19th July 1985"-.

" In this context, the Judge cited the words of late Dr. Radhakrishnan who said : 'Our representatives in the Legislature should represent our culture which has left an imprint on civilisation through its philosophy and religion. Our representatives who will speak on behalf of our nation should be cultured, disinterested, public spirited persons and not those who are lost in petty personal local, caste and communal squabbles and succumb to seduction of power. The future of our country depends on the education of our masters." என்று சொல்லிவிட்டு, மேலும் சொல்கிறார்கள். "The question is : 'Is it too much of an expectation or too high a demand? Let history answer" the Judge said'. என்று அந்தத் தீர்ப்பிலே ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். வணக்கத்திற்குரிய நீதிபதி அவர்கள் எச்சரிக்கையாக, கவனமாக தன்னுடைய கருத்தாகச் சொல்லாமல் சிறந்த ஞானி, அறிவுலக மாமேதை, முன்னாள் இந்திய ஜனாதிபதியின் கருத்தாகச் சொல்லியிருக்கிறார்கள்.

தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புவது, நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரச்னைகள் வரும்போது நீதிமன்றமும் சட்ட மன்றமும் தனித்தன்மை வாய்ந்தவை; ஒருவருடைய தீர்ப்பை



ஒருவர் எழுப்பக்கூடாது, விமர்சிக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறோம். பல்வேறு சமயங்களில் வணக்கத்திற்குரிய நீதிபதிகள் தீர்ப்பைப்பற்றி, அவர்களுடைய நடவடிக்கைபற்றி எல்லாம் நாங்கள் விளக்கங்கள் தேடியபோதும் சரி, தீர்மானம் கொண்டுவந்தபோதும் சரி, அதை எல்லாம் தங்களுடைய அறையிலேயே தள்ளிவிட்டிருக்கிறீர்கள்; அதே நேரத்தில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இந்த மாமன்றத்தில் விவாதத்தின்போது பேசும்போதுகூட நீதிபதிகளைப் பற்றி ஒரு நீதிபதி சொன்ன கருத்தைக்கூட சொல்ல நீங்கள் அனுமதிக்கவில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அப்படி இருக்கும்போது இன்றைக்கு நீதித் துறையில் தங்களுடைய தீர்ப்பினை எடுத்துக்கொண்டு விவாதிப்பது சரிதானா என்று உங்கள் மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அப்படியானால் எதிர்காலத்திலே நாமும் நீதிபதிகளைப் பற்றி இந்த மன்றத்திலே பிரச்னைகளை எழுப்பலாமா? நீதிபதிகளைப் பற்றி இன்றைக்கு எவ்வளவோ சுவையான செய்திகள் இருக்கின்றன. அதற்கு அனுமதி கொடுப்பீர்களா? தங்கள் மூலம் இதற்கு ஒரு தீர்ப்பை எதிர்பார்க்கிறேன். அதோடு 'வணிக ஒற்றுமை' ஏட்டின் ஆசிரியருக்கு தாங்கள் சபையின் சார்பில் அளித்த தண்டனை நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் இங்கே ஒரு பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள். யாருக்கும் வழக்கு மன்றத்திற்குச் செல்ல உரிமை இருக்கிறது, மறுக்க முடியாது. அந்த ஏற்றுக் கொள்வதும், தீர்ப்பு வழங்குவதும், மறுப்பதும் நீதிபதியைப் பொறுத்தது. அதுபற்றி நாம் வினா எழுப்ப முடியாது. நீதிபதிகள் சிலபல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்றம் எப்படி இருக்கவேண்டும், துலங்கவேண்டும் என்ற பொது இலக்கணத்தைச் சொல்லியிருக்கிறார்கள் என்றுதான் நாம் அதை கொள்ள வேண்டும். அந்தமாதிரி நீதிபதிகள் எப்படி இருக்கவேண்டும், செயல்பட வேண்டும் என்ற பொது இலக்கணத்தை நாமும் சொல்கிறோம். நீதிபதிகள் நடுநிலையோடு இருக்க வேண்டும், ஒருபால் போடாமல் இருக்க வேண்டும், தராசுபோல் இருக்க வேண்டும் என்று நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு பொது இலக்கணமாகக் கூறுவதைப்போல அவர்களும் நமக்கு பொது இலக்கணம் படைத்திருக்கிறார்கள் என்ற வகையிலே ஏற்றுக்கொள்ள வேண்டும். கடைசியாக அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதிலே உயர்நீதிமன்றம் தலையிடுவதாக இல்லை, சட்டமன்றம்தான் பொறுப்பு என்று சொல்லியிருக்கிறார்கள். உரிமைக் குழுவிற்கு தண்டனை வழங்க உரிமை இருக்கிறது. ஒருவரை உரிமைக் குழுவின் பரிந்துரை

மீது கைது செய்து, சிறைக்கு அனுப்ப உரிமை இருக்கிறது என்று சொல்லி வழக்கை தள்ளுபடி செய்திருக்கிறார்கள் அவர்கள் சொல்லியிருக்கிற கருத்தை பொது இலக்கணமாக எடுத்துக்கொள்ள வேண்டும், நாமும் அவ்வாறு சொல்ல உரிமை படைத்திருக்கிறோம்.

திரு. என் எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கை ஏற்றுக்கொள்ளுவதற்கும் தள்ளுபடி செய்வதற்கும் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் சட்ட மன்றம் பற்றி, சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி இப்படி எல்லாம் இருக்க வேண்டும், இப்படி எல்லாம் இருக்கக்கூடாது என்று உள்நோக்கம் கற்பித்து, இந்த வழக்கிலே சொல்ல என்ன உரிமை இருக்கின்றது?

(முற்பகல் 10-30)

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பொறுத்தவரையில் நான் ஒரு முக்கியமான விஷயத்தை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தவறு செய்ததாகப் பத்திரிகை ஆசிரியரால் ஒத்துக் கொள்ளப்பட்டு பின்னர் பேரவையால் தண்டிக்கப்பட்ட பிறகு அந்தப் பத்திரிகைக்காரர்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டும், பத்திரிகைத் துறை எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்ற அறிவுரைகள் எதுவும் சொல்லாமல் மாறாக தவறு செய்தவர்களைத் தண்டித்த சட்டமன்றத்தைப் பற்றியும், சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றியும், அவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற வகையில் முன்னாள் இந்திய ஜனாதிபதி அவர்களுடைய பேச்சின் எக்ஸ்ட்ராக்டைக் காட்டியதோடு மட்டுமல்லாமல் கடைசியில் ஒன்று சொல்லியிருக்கிறார்கள். அது தான் என்னுடைய மனதைப் புண்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. ''The question is : 'Is it too much of an expectation or too high a demand? Let history answer,' the Judge said.'' இது நடக்குமா? அல்லது இது நடக்க வேண்டுமா என்று அவர்கள் சொல்லி இருப்பது ஏதோ இப்போது அப்படி நடக்கவில்லை என்பது போலவும், இனி சட்டமன்ற உறுப்பினர்கள் அப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பது போலவும் இருக்கின்றது. Derogation to the Assembly என்ற வகையில்தான் இது இருக்கின்றது. பப்ளிக் லைஃபிலே இருக்கின்ற பொது மக்கள் இதைப் படிக்கின்றபோது அவர்கள் இந்த சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றியும், சட்டமன்றம் பற்றியும் தவறான கருத்து கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. இதிலே அரசியல் சட்டம் 212 பற்றிச் சொல்லப்பட்டு இருக்கின்றது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சமுதாயத்திற்கு நலம் செய்கின்ற சட்டங்கள் இங்கே இயற்றப்படும்போது அந்த சட்டங்களுக்கு முன் அறிவிப்பு கூட கொடுக்காமல் உயர்நீதி மன்றங்கள் ஸ்டே வழங்குகின்ற காரணத்தால் அந்த நலம்



பயக்கின்ற சமுதாயத் திட்டங்களை உரிய நேரத்தில் நடைமுறைப் படுத்த இயலவில்லை என்ற உயரிய கருத்தை இங்கே சொன்னதற்காக அங்கே உயர்நீதி மன்றம் கன்டெம்ப்ட் ஆஃப் கோர்ட் வழக்கு தொடர்ந்து இன்னும் அந்த வழக்கு பென்டிங்கிலே இருக்கின்றது. மேலும் சபையில் நடந்த நடவடிக்கைகள், பேசிய பேச்சுக்கள் குறித்து நீதிமன்றத்தில் விவாதிக்கக்கூடாது என்று நீதிபதியே சொன்ன கருத்துக்களுக்கு எதிராக ஒரு ரிட் மனுகூட இன்னும் தள்ளுபடி செய்யப்படாமல் இருப்பது பற்றித் தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

Mr. SPEAKER: It is quite unfortunate that the Hon'ble Judge has referred to an extract. That is uncalled for. அதைச் செய்திருக்கக் கூடாது. 'As excerpt of a speech of Franklin D. Roosevelt, President of United States of America :

"When the Congress has sought to stabilise national agriculture, to improve the condition of labour, to safeguard business against unfair competition, to protect our national resources and in many other ways to serve our clear national needs, the majority of the Court has been assuming the power to pass on the wisdom of these Acts of Congress and to approve or disapprove the public policy written into these laws.

"The Court in addition to the proper use of its judicial functions has improperly set itself as a Third House of the Congress —a super legislature as one of the justices has called it—reading into the Constitution words and implications which were not there and which were never intended to be there. We have therefore reached the point as a Nation where we must take action to save the Constitution from the Court and the Court from itself . . . We want a Supreme Court which will do justice under the Constitution, not over it. In our Courts we want a Government of laws and not of men".

இவ்வாறு ப்ரெசிடென்ட் ரூஸ்வெல்ட் அவர்கள் தன்னுடைய பேச்சிலே சொல்லியிருக்கிறார்கள். இது டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களுடைய பேச்சிற்குரிய பதிலாக அமைகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய அறைக்கு வந்து கால் அட்டெஷன் மற்றும் கொஸ்டின்ஸ் எல்லாம் கொடுக்கிறீர்கள். நான் அவற்றை சேம்பரிலேயே டிஸ் அலவ் பண்ணுகிறேன். நீதிமன்றத்தின் மீது இன்னும் மக்களுக்கு நம்பிக்கை இருக்கின்றது. அது குறையக் கூடாது என்ற ஒரே காரணத்திற்காகத்தான் நான் அதைச் செய்தேன். பேரவை முன்னர் அவர்கள்கூடச் சொன்னார்கள்—நீதிபதி தள்ளுபடி பண்ணிவிட்டார்கள் இந்த கேஸிலே கூட.

'They should not have allowed it to be numbered' கேஸ் வந்து, அதற்கு நம்பர் பண்ணி, கோர்ட்டுக்குக் கூட வரக் கூடாது என்று, There is clear provision under the Constitution under Article. 212. அது 212. இப்போது நாம் 211 பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். 211-ஐப் பார்த்தால் யாரும் அதிலே கேஸ் ஃபைல் பண்ண முடியாது. It should not be taken into file. சாதாரணமாக வந்தால், The office will put up the file to the concerned judge. He will go through the file and will say that it is not maintainable at the appeal stage itself. எனவே ஒன்றாகப் பார்த்து, விவாதத்திற்கு வந்து, அதைப்பேசி முடித்து பிறகு தீர்ப்புச் சொல்வார்கள். நான் அந்தமாதிரி இப்போது அலவ் பண்ணவில்லை. இந்த அவையிலே எடுத்துக் கொண்டு, நீங்கள் விவாதித்து பேசி முடித்து, திரும்பவும் அதை டிஸ்-அலவ் பண்ணினால் அது நம்முடைய பர்ப்பஸை வெளியிலே கொண்டு வந்து விடும். அதைத்தான் ஜஸ்டிஸ் வி. ஆர். கிருஷ்ணய்யர் சொல்லியிருக்கிறார்கள். 'populist judge' என்று. சில பிரச்னைகள் அதிலே இருக்கின்றன. அதனால் அதை எடுக்க வேண்டாம்.

நம்முடைய திரு. குப்புசாமி அவர்கள் பேசும்போது முதலமைச்சருடைய வழக்கைப் பற்றிச் சொன்னார்கள். அந்த நேரத்திலே கூட I have kept the House under darkness to save the judiciary.

இப்போது 211-லே விவாதிக்கக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய நீதிமன்றத்திலே இந்த நீதிபதியையும் சேர்த்து, 3 நீதிபதிகளைக் கொண்ட ஒரு குழு, ஒரு ஃபுல் பெஞ்ச் தீர்ப்புக் கொடுத்திருக்கிறது, நீதிபதிகளைப் பற்றி பேசலாம் என்று.

ஒரு முன்னாள் உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதி தன் மீது சுமத்தப்பட்ட ஒரு குற்றச்சாட்டிற்காக ஒரு வழக்கு தாக்கல் செய்தார்கள். அந்த வழக்கில் 3 நீதிபதிகளைச் சேர்ந்த குழு விசாரித்தது. அதில் இந்த நீதிபதியும் இருந்தார்கள். அதிலே தீர்ப்பிலே சொல்லியிருக்கிறார்கள் — நீதிபதிகளைப் பற்றி பேசலாம் என்று. ஆனால் அந்த தீர்ப்பையே மக்களுக்கு தெரியாத அளவுக்கு, எந்த புஸ்தகத்திலேயும் இடம் பெறவில்லை. எந்தக் குடிமகனும் பெற முடியாது. அப்படி அவர்கள் தங்களுடைய தனித் தன்மைகளை பாதுகாப்பதற்கு, கண்ணியத்தைப் பாதுகாப்பதற்கு அப்படிச் செய்தார்கள்.

1971 ஆம் ஆண்டு அந்த நீதிமன்றத்தில் வக்கீலாக அமர்ந்திருந்தபோது நான் பார்த்தேன்; இதேபோல ஒரு பத்திரிக்கை ஆசிரியர் நீதிபதியைப் பற்றி தரக் குறைவாக எழுதிய காரணத்தினால், நீதிமன்றத்திற்கு வரவழைக்கப்பட்டார். 7 நீதிபதிகள் சேர்ந்து விசாரித்தார்கள். நான் அப்போது பார்த்ததனால் சொல்கிறேன். 7 நீதிபதிகள் விசாரிக்கும்போது, அந்தப் பத்திரிகையாளர் 7 பேர்களையும் பார்த்து குறை சொன்னார்.



ஆனால் அந்த வழக்கை நீதிபதிகள் — அந்தக் கேஸ்கட்டையே சீல் வைத்து நீதிமன்றத்தின் மூலையில் வைத்துவிடுங்கள். இதை திறக்க வேண்டும் என்றால் கூட நீதிமன்றத்தினுடைய உத்தரவை வாங்க வேண்டும் என்று 1971 ஆம் ஆண்டு உத்திரவிட்டிருந்தார்கள். இன்றைக்கும் அந்த 1971 ஆம் ஆண்டு கேஸ்கட்டு அப்படியே இருக்கிறது. யாரும் அதைக் கேட்கவில்லை. அந்த அளவுக்கு நீதிமன்றம் தன்னுடைய கண்ணியத்தையும் மரபையும் மக்கள் அதன்மீது வைத்திருக்கிற நம்பிக்கையையும் பாதுகாத்துக் கொள்வதற்காக செய்கிறார்கள். அந்த உணர்வை இங்கே சொல்லக்கூடிய அளவுக்கு வைத்து விட்டீர்கள். நானும் அதை துரதிருஷ்டவசமாக எடுத்துச் சொல்ல நேரிட்டு விட்டது. இத்துடன் இதை நிறுத்திக் கொள்வோம்.

## 4. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் கொடுத்த அறிவிக்கைகள்.

திரு. இ. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் கலைக் கல்லூரிகளில், பல கல்லூரிகளிலும், பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் இடங்கள் காலியாக உள்ளன. அதற்குக் காரணம் எஜுகேஷன் டிபார்ட்மெண்டிலேயிருந்து சென்ற புரபோசல்களை பைனான்ஸ் டிபார்ட்மெண்ட் கிளியரன்ஸ் பண்ணிக் கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அதனால் இந்தப் பதவிகள் நிரப்பப்படாமல் இருப்பதாக சொல்லுகிறார்கள். இது குறித்து நான் கால்-அட்டென்ஷன் கொடுத்திருந்தேன், ஆனால் அதை டிஸ்-அலவ் பண்ணியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டிஸ்-அலவ் செய்த கால்-அட்டென்ஷன் என்றால் அதைப்பற்றி இங்கே பேசவே கூடாது. டிஸ்-அலவ் செய்யப்பட்டது என்பதை முதலிலேயே நீங்கள் சொல்லியிருந்தால் நான் அலவ் பண்ணியிருக்கவே மாட்டேன். வேண்டுமானால் இன்றையதினம் கால்-அட்டென்ஷன்களை எடுக்கும்போது-கிட்டத்தட்ட 39 கால் அட்டென்ஷன்களை எடுக்க அனுமதி தந்திருக்கிறேன், அப்போது அதில் இது இன்குளுட் ஆகவில்லை என்றால், வேண்டுமானால் கேளுங்கள்.

THIRU T. VENKATA REDDY : Mr. Sperker, Sir, I have given notice of an Adjournment Motion 23 days back.. ·

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு, இதுவரையில் எடுக்க முடியாது இருந்தவைகளில் அலவ் பண்ணக் கூடியதில் 39 கால் அட்டென்ஷன்கள் கடைசியில் எடுக்க இருக்கிறேன். அவற்றில் இது சேர்ந்திருக்கிறதா என்று பார்த்து, இல்லையென்றால் தனியாக எழுதி கொடுங்கள், நடவடிக்கை எடுக்கக் கேட்கலாம்.

திரு. ப. தீர்த்தராமன் : 40 கால் அட்டென்ஷன்களை எடுப்பதாகச் சொல்லுகிறீர்கள். ஆனால் என்னுடைய கால் அட்டென்ஷன் அதிலே இல்லை. மிக முக்கியமானப் பிரச்னை. தண்ணீர் இல்லை. மக்கள் அவதிப்படுகிறார்கள். இப்போது எடுக்காவிட்டால், அதைப்பற்றி யார் பதில் வாங்கி தருவார் கள். . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடைசியில் எல்லா கால் அட்டென்ஷன்களும் வரும்போது, நீங்கள் இதைச் சேர்த்துக் கேட்கலாம். அதைப்பற்றி நான் கேட்டுச் சொல்கிறேன். அவர்கள் பதிலை பின்னர் தருவார்கள். . . .

## 5. கவன ஈர்ப்புகள்.

### (அ) திண்டிவனம் நகராட்சி திரௌபதியம்மன் கோவில் திடலிலுள்ள குப்பைகளை அகற்றுதல்.

(முற்பகல் 10–40)

திரு. கே. எம். தங்கமணி : தலைவர் அவர்களே, 'திண்டிவனம் நகரிலுள்ள திரௌபதியம்மன் கோவில் திடலில், நகரின் கழிவுப் பொருட்கள் அனைத்தையும் கொண்டு வந்து கொட்டுவதால், கொசுக்கள் உற்பத்தி அதிகமானதோடு, தொத்து வியாதிகள் ஏற்பட்டு சுற்றுப்புற சூழ்நிலை மிகவும் பாதிக்கப்படுவதால், அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த' அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

#### அறிக்கை.

திண்டிவனம் நகராட்சியின் நான்கு சுகாதாரப் பிரிவுகளில் 0.84 செண்ட் பரப்பு உள்ள திரௌபதி அம்மன் கோயில் மைதானம் முதல் சுகாதாரப் பிரிவில் உள்ளது. மேற்படி 1-வது பொது சுகாதாரப் பிரிவில் உள்ள 42 தெருக்களிலும் குப்பைகள் தினந்தோறும் அகற்றப்பட்டு நகராட்சி கலவை உரம் தயாரிக்கும் இடத்திற்கு அனுப்பப்பட வேண்டும். ஆனால் நகராட்சியின் வாகனங்கள் பழுதுப்பட்ட நிலையில் போதுமான வாகன வசதி இல்லாததாலும் நகராட்சி உரக்கிடங்கு 2 கிலோ மீட்டருக்கு மேல் தொலைவில் இருப்பதாலும் அருகாமையிலுள்ள திரௌபதியம்மன் கோயில் மைதானம் காலியாயிருந்த காரணத்தாலும் அதை அந்நியர்கள் ஆக்கிரமிப்பு செய்யா வண்ணம் தடுக்கும் பொருட்டும்



குப்பைகளை கொட்டும் சப்-டிப்போவாக நீண்ட நாட்களாக பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்சமயம் குப்பை வண்டிகள் மற்றும் டிராக்டர் முதலியவை பழுது பார்க்கப்பட்டு விட்டதால் குப்பைகளை உரக்கிடங்கிற்கு எடுத்துச் செல்ல உத்தரவிடப்பட்டு மேற்கண்ட பணி தீவிரமாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி காலியிடத்தை அந்நியர் ஆக்கிரமிக்காமலிருப்பதற்காக முள்வேலி அமைக்க நகராட்சி ஆணையரால் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

திரு. கே. எம். தங்கமணி : தலைவர் அவர்களே, திண்டி வனத்தில் திரௌபதி அம்மன் கோவில் திடல் என்பது நகரத்தின் இறுதிப் பகுதியாகும். அந்த இடத்தின் பக்கத்தில் சப்-கலெக்டர் பங்களாவும் என்.ஜி.ஓ. காலனியும், செஞ்சி பஸ் ஸ்டாண்டும் இருக்கின்றன. இவ்வளவு நாட்களாக இல்லாத அளவிற்கு நகரத்தின் குப்பைகளை அங்கே கொட்டி கம்போஸ்ட் உரம் தயாரிப்பதால் ஏராளமான கொசுக்கள் உற்பத்தியாகி, அங்கே தொத்து நோய்கள் பரவுகிற பேரபாயம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்தக் குப்பைகளை உடனடியாக அகற்ற வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நகராட்சிக்கு உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, திரௌபதி அம்மன் கோவில் அருகில் இருக்கிற குப்பை கொட்டுகிற சப்-டெப்போவை காலி செய்து விட்டு, ஏற்கனவே இருந்த பழைய டெப்போவிற்கு அவற்றை எடுத்துக் கொண்டு போகிறார்கள், அங்கே உரம் தயாரிக்கிறார்கள் என்று தான் குறிப்பிட்டேன். ஆகவே திரௌபதி அம்மன் கோவில் அருகில் இருக்கிற இடம் விரைவில் காலி செய்யப்பட்டு விடும்.

திரு. கே. எம். தங்கமணி : தலைவர் அவர்களே, அது ஒரு சப்–டெப்போ என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நகராட்சியில் அது சப்-டெப்போவாக இல்லை. இப்போது சமீபகாலமாகத்தான், 4, 5 மாதங்களாகத்தான் நகரத்தின் குப்பைகளை அங்கே கொட்டி வருகிறார்கள். எனவே நகராட்சியில் துப்புறவுத் தொழிலாளர்களை அதிகமாக நியமிக்கவும், வண்டி வாகனங்களை வாங்கவும், நியமிக்கப்படுகிற துப்புறவுத் தொழிலாளர்களுக்கு துப்புறவுத் தளவாடங்களை வாங்குவதற்கும் நகராட்சிக்கு மானியம் வழங்க அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நிதிப்பற்றாக்குறை என்பது பல நகராட்சிகளிலும் இருக்கிறது. எல்லா நகராட்சிகளுக்கும் மானியம் வழங்கிக் கொண்டிருப்பது என்பது ஒரு அரசுக்கு இயலாத காரியம். தேர்தல்கள் முடிந்த பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நகரமன்ற உறுப்பினர்கள், தலைவர்கள் வந்ததற்குப் பிறகு இதுபற்றி அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறோம். அப்போது அரசு அதுபற்றி பரிசீலிக்கும்.

[1985 ஜூலை 19

(ஆ) பாடநூல் நிறுவனம் வெளியிடும் பாட நோட்டுப் புத்தகங்கள் அரசாங்கம் நிர்ணயித்த விலைக்கு கிடைக்கச் செய்வது.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, "பள்ளிப் பாட புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் அரசாங்கம் நிர்ணயித்த விலையில் பள்ளிகளிலும், கடைகளிலும் கிடைக்காத நிலையில் அதிக விலைகக்கு விற்பனை செய்யப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இது குறித்து நேற்றே ஒரு அறிக்கை அவைக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: அறிக்கை வைக்கப்படவில்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அறிக்கையை படித்து விடுகிறேன்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிடும் பாடப் புத்தகங்கள் அனைத்து தாலுகா கூட்டுறவு மொத்த வியாபாரிகளுக்கும் அனுப்பப்பட்டு அவர்கள் மூலம் சில்லரை வியாபாரிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. போதுமான அளவிற்கு அனைத்து புத்தகங்களும் தமிழ்நாடு முழுவதும் விநியோகிக்கப் பட்டுள்ளன. 5-6-85 அன்று புத்தக விற்பனை தொடங்கப் பட்டது. பாடநூல் நிறுவனம் நிர்ணயித்த விலையினைவிட அதிக விலைக்கு புத்தகங்கள் விற்கப்படுவதாகவோ அல்லது புத்நகங்கள் மொத்த மற்றும் சில்லரை வியாபாரிகளிடம் கிடைக்கவில்லை என்ற புகாரோ ஏதும் பெறப்படவில்லை.

புத்தகங்களின் விலை விவரங்கள் முக்கியமான பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டது. இத்துடன் விலை விவரங்களடங்கிய அச்சடிக்கப்பட்ட விளம்பர தாள்கள் பாடநூல் சில்லரை விற்பனையாளர்களுக்கு வழங்கப்பட்டு அவ்விளம்பரத் தாள்கள் கடைகளின் முன்னால் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் ஆரம்ப முதலே புத்தகங்கள் தட்டுப்பாடுகள் இல்லாமல் மாணவர்களுக்கு கிடைக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றது. எனவே, புத்தகம் கிடைப்பதில் காலதாமதம் மற்றும் அதிக விலைக்கு விற்கப்படுதல் என்ற புகார்களை தவிர்க்க அனைத்து முயற்சிகளும் பாடநூல் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



1985 ஜூலை 19] [திரு. செ. அரங்கநாயகம்]

இந்நிறுவனம் தயாரிக்கும் நோட்டுப் புத்தகங்கள் தாலுக்கா மொத்த விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள் வழியாக பள்ளிகளுக்கு விற்கப்படுகின்றன. தனியார் எவருக்கும் இக்குறிப்பேடுகள் விற்கப்படுவதில்லை. எனவே குறிப்பேடுகள் அதிக விலைக்கு விற்கிறார்கள் என்ற புகாருக்கு இடமில்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விவரமான அறிக்கையைக் கொடுத்து இருக்கிறார்கள். குறிப்பாக தனியார் கடைகளிலேயும், தனியார் பள்ளிகளிலேயும் வழங்கப்படுகின்ற நோட்டுப் புத்தகங்களின் விலை அரசு நிர்ணயித்துள்ள விலையில் இல்லை. நான் சென்னையிலே இருக்கின்ற ஒரு பள்ளியில் கொடுக்கின்ற நோட்டுப் புத்தகங்களின் விலைக்குறிப்பேட்டை கையிலே வைத்திருக்கிறேன். அவர்கள் 6 பள்ளிகளை நடத்துகிறார்கள். இன்றையதினம் 6-ஆம் வகுப்பு படிக்கின்ற ஒரு மாணவனுடைய புத்தகக் கணக்கு என்னிடம் இருக்கிறது. 20, 28 நோட்டுக்கள் வாங்குவதற்கு அவர்கள் விதித்து இருக்கின்ற விலை 111.50 காசுகள். ஆனால் அரசு நிர்ணயித்து இருக்கின்ற விலையைப் பார்த்தால், 64.50 காசு வருகின்றது. இன்றையதினம் தமிழகத்திலே புத்தகங்கள் வாங்குகின்ற மாணவர்களின் எண்ணிக்கை தோராயமாகப் பார்த்தால், 50 லட்சம் மாணவர்கள் இருக்கிறார்கள். மாணவர்கள் தனியார்கள் கடைகளிலும் வாங்குகிறார்கள். அப்படி ஒரு கணக்கை நாம் பார்க்கிறபோது, 25 கோடி ரூபாய் அவர்களுக்கு லாபமாக, அரசு நிர்ணயித்த விலைக்கு அதிகமாக சம்பாதிக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட கொள்ளை லாபம் அடிப்பவர்களையும், கள்ளச் சந்தைக்காரர்களையும் தடுப்பதற்கு அரசு தகுந்த முறையில் நடவடிக்கை எடுக்குமா? என்ன எடுத்திருக்கிறது? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் வெளியிடுகிற நோட்டுப் புத்தகங்களையும், பாடப் புத்தகங்களையும் அதிகமான விலைக்கு விற்றால், அதற்கு நாம் பொறுப்பு ஏற்கலாம்: தனியார்கள் தயாரித்து வெளியிடுகின்ற நோட்டுப் புத்தகங்களையும், பாடப் புத்தகங்களையும் பற்றி நாம் பொறுப்பேற்க முடியாது. ஆனால் தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் சார்பிலே வெளியிடப்படுகின்ற புத்தகங்கள் சரியாகக் கிடைக்கின்றனவா? இல்லையா? அதனாலே வெளியிடப்பட்ட நோட்டுப் புத்தகங்கள் உரிய விலையில் கிடைக்கின்றனவா, இல்லையா? என்பதைப் பற்றி ஒரு அறிக்கை தரவேண்டும் அல்லது அதைப்பற்றி தெரிந்து வரவேண்டும் என்று சொல்லி, 2 நாட்களுக்கு முன்னதாக கல்வித்துறை அதிகாரிகள் பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறார்கள். தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் சார்பிலே வெளியிடப்பட்ட புத்தகங்கள், குறிப்பாக இலவசப் பாடப் புத்தகத் திட்டத்தின் கீழ் தரப்படும் புத்தகங்கள் கடையில் விற்கப்படுவதாக, மாண்புமிகு உறுப்பினர்

வீரப்பன் அவர்கள் நேற்று முன்தினம்கூட சொன்னார்கள். அறந்தாங்கியில் விற்றதாக. அது மாதிரியான ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டு இருக்குமானால் அது கிரிமினல் குற்றமாக கருதப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும். காரணம் இலவசப் பாடப் புத்தகங்கள் குழந்தைகளிடம்தான் இருக்கவேண்டுமே தவிர, வேறு யார் வைத்திருந்தாலும், அது திருடப்பட்டதாகவும், அது எந்தக் கடையிலே இருந்தாலும் திருடிய பொருளை விற்றதாகவும் கருதப்பட்டு, அது கிரிமினல் குற்றமாக கருதப் பட்டு, அவர்கள் மீது வழக்கு போடப்படும். கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனத்தின் சார்பிலே வெளியிடப்பட்ட பாட புத்தகங்கள், அதன் சார்பிலே தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வருகின்ற நோட்டுப் புத்தகங்கள் பற்றி ஆராய்ந்து அதைப்பற்றி பார்த்து வருவதற்கு 2 நாட்களுக்கு முன்னால் அதிகாரிகள் அனுப்பப்பட்டு இருக்கிறார்கள்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நல்ல பதிலைச் சொன்னதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சத்துணவு மூலம், இலவச சீருடை மூலம். இலவச பாடப் புத்தகங்கள் மூலம் 70 லட்சம் மாணவர் களுக்கு தமிழக அரசு உதவி செய்து வருகிறது. இப்படி அரசு எடுக்கின்ற நல்ல உதவிகளுக்கு நன்றி சொல்கின்ற நேரத்தில் தற்சமயம் அரசுப் பள்ளிகளில் பாடப் புத்தகங்கள், நோட்டுகள் கொடுக்கின்ற விலையில், தனியார் பள்ளிகளிலும் கொடுப்பதற்கு தனியார் கடைகளைப் போன்று தனியாக கடைகள் ஏற்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்குமா? இங்கே நான் தனியார் பாடப் புத்தகங்களையும், அவர்கள் போடுகின்ற நோட்டுப் புத்தகங் களையும், அரசுப் போட்டிருக்கின்ற பாடப் புத்தகங்களையும் காண்பிக்கத் தயாராக இருக்கிறேன், அவைத் தலைவர் அவர்கள் அனுமதித்தால். ஒரு அங்குலம்தான் கம்மியாக இருக்கிறது. 192 பக்கங்கள் கொண்ட நோட்டு உள்ளது. இப்படிப்பட்ட நிலையில் குறைச்சலாக பக்கங்களைப் போட்டு, அளவுகளையும் குறைத்துப் போடுகிறார்கள். ஆகவே, தனியார் பள்ளிகளில் அரசுக் கடைகளை ஏற்படுத்தி, அங்கே இருக்கின்ற மாணவர்களுக்குக் குறைந்த விலையில் நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் கிடைக்கவும், மாணவர்களுக்கு நன்மை தரத்தக்க அளவிற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் இப்படி எல்லாம் தவறு செய்து மக்களை ஏமாற்றுகிறார்கள் என்ற காரணத்தால்தான் அரசு நோட் புத்தகங்களை தயாரித்து வருகின்ற முடிவை மேற்கொண்டு கடந்த 3, 4 ஆண்டுகளா



அதை திறம்பட வெற்றிகரமாக செய்து வருகிறார்கள். தனியார் துறையிலே வியாபாரம் செய்கின்றவர்கள் மாணவர் களுக்கு மட்டும் அல்ல, பொது மக்களுக்கும் நோட் புத்தகங் களை தயாரித்து விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதை தடுக்கவோ, தடை செய்வதற்கோ நம்மால் முடியாது. அது அவர்களுடைய உரிமை. ஆனால் பொது மக்கள் அப்படிப் பட்டவர்களிடமிருந்து நோட் புத்தகங்களை வாங்கக் கூடாது. இந்த தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்திடமிருந்து தான் வாங்க வேண்டும். அந்த குறிப்பிட்ட பள்ளிகளில் இருக்கின்ற நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாடு பாட நூல் நிறுவனத் தோடு தொடர்பு கொண்டு அவர்களுக்கு தேவையான நோட் புத்தகங்களை பெற முயற்சிக்கவேண்டும். வேறு ஏதாவது காரியம் இருந்தால் அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

(இ) கைத்தறித் துணி விற்பனைக்கு ரிபேட் அளிக்கும் நாட்களை அதிகப்படுத்துதல்.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கைத்தறித் துணி விற்பனையில் 20% ரிபேட் கொடுத்து விற்க இதுவரை ஆண்டொன்றுக்கு 60 நாட்கள் என்றிருந்ததை, அண்மையில் மைய அரசு 30 நாட்களாகக் குறைத்ததினால், தமிழ்நாட்டில் கைத்தறித் துணித் தேக்கம் அதிகமாகி, அதன் பொருட்டு நெசவாளர்கள் மத்தியில் ஏற் பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி--நெசவுத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

1982-83-ம் ஆண்டு வரை மத்திய அரசு ஆண்டொன்றுக்கு 30 நாட்களுக்கு சில்லறை விற்பனை மீது 20% தள்ளுபடியும், மொத்த விற்பனை மீது 15% தள்ளுபடியும், தவிர நாடு முழுவதும் ஆங்காங்கே மத்திய அரசால் நடத்தப்பெறும் கண் காட்சியை ஒட்டி கண்காட்சியில் பங்கேற்கும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு 20% தள்ளுபடியும் அளித்து வந்தது. இதற்கான தள்ளுபடிச் செலவை 50:50 என்ற விகிதத்தில் மாநில மற்றும் மத்திய அரசுகள் பகிர்ந்து கொண்டன. மைய அரசு நடத்தும் தேசீய கைத்தறி கண்காட்சியில் (எக்ஸ்போ) பங்கு கொண்டு விற்பனையை பெருக்கும் அளவிற்கு தமிழ்நாட்டிலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதி வசதியின்மை யால், மாநிலச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) மற்றும் ஓரிரு பெரிய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் தவிர, இதர சங்கங்கள் மேற்படி தேசீய கைத்தறி கண்காட்சிகளில் பங்கு கொள்ள முடிவதில்லை. எனவே மத்திய மற்றும் மாநில

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1985 ஜூலை 19

அரசுகள் ஆண்டொன்றுக்கு 30 நாட்களுக்கு அளிக்கப்பட்ட 20% மற்றும் 15% தள்ளுபடி சலுகையை மாநில மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் தங்களிடம் தேங்கிக்கிடக்குப் கைத்தறி துணிகளை விற்க பயன்படுத்தி வந்தன.

2. இருந்தாலும் உற்பத்தி பெருக்கத்திற்கேற்ப துணி விற்பனை பெருகவில்லை. எனவே, அளவுக்கதிகமான துணித் தேக்கத்தை குறைக்கும்பொருட்டு மத்திய அரசு தனது திட்டத்தை மாற்றியமைத்து 1983-84-ம் ஆண்டு முதல் வருடத் திற்கு 60 நாட்களுக்கு தள்ளுபடி என்று அறிவித்தது. மத்திய அரசு அறிவித்த 60 நாட்களுக்கு தள்ளுபடி திட்டத்தினை 1983-84 மற்றும் 1984-85 ஆகிய ஆண்டுகளில் மாநில அரசு ஏற்றுக்கொண்டு அதன்படி சில்லறை விற்பனை மீது 20%-ம் மொத்த விற்பனை மீது 15%-ம் தள்ளுபடி அளித்தது. இந்த 60 நாட்கள் தள்ளுபடி முக்கியமான பண்டிகை காலங்கள் மற்றும் பெரியோர்களின் பிறந்த தினத்தை ஒட்டி ஆண்டு முழுவதும் பரவலாக அளிக்கப்பட்டது. மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கமும், பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் அவ்வப் போது துணித் தேக்கத்தை குறைக்க இந்த 60 நாட்கள் திட்டம் மிகவும் உதவியாயிருந்தது.

3. ஆனால் நடப்பு ஆண்டில் (1985-86) ஆண்டொன்றுக்கு 30 நாட்கள் மற்றும் தேசிய கைத்தறி கண்காட்சிகளில் பங்கேற்கும் சங்கங்களுக்கு கண்காட்சி காலங்களில் 20% தள்ளுபடி அளிக்கலாம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. தேசிய கண்காட்சிகளில் (எக்ஸ்போ) பங்கேற்பதினால் அளிக்கப்படும் தள்ளுபடியினால் மாநில சங்கம் உட்பட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வேண்டிய அளவுக்கு பயன் ஏற்பட முடியாது. எனவே தமிழகத்திலுள்ள எல்லா நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் ஆண்டு ஒன்றுக்கு 30 நாட்களுக்கு மேல் விற்பனை மீது தள்ளுபடி தரமுடியாத நெருக்கடி உருவாகி யுள்ளது. இதனால் ஆண்டு முழுதும் குறிப்பாக மைனாரிடி சமூகத்தினரால் கொண்டாடப்படும் கிறித்துமஸ், ரம்சான், ஓணம், யுகாதி போன்ற பல்வேறு பண்டிகைகளுக்கு தள்ளுபடி அளிக்க இயலாத இக்கட்டான நிலையும் நேரிட்டுள்ளது. எனவே, தமிழ்நாட்டில் எல்லா மதத்தினர் மொழியினர்களையும் திருப்தி படுத்தும் வகையில் கோ-ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் தமது சரக்குகளை இம்மாநிலத்திலும் மற்றும் வெளி மாநிலங்களிலும் விற்பனை செய்து சரக்குத் தேக்கத்தை அவ்வப்போது குறைத்துக்கொள்ளும் பொருட்டு முந்தைய இரு ஆண்டுகளில் அளித்ததுபோல் 60 நாட்களுக்கு குறையாமல் சில்லறை விற்பனை மீது 20% தள்ளுபடியும், மொத்த விற்பனை மீது 15% தள்ளுபடியும் அளிக்க மத்திய அரசுக்குப் பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. அவர்களது சாதகமான ஆணை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.



1985 ஜூலை 19]

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை பார்க்கிறபோது நான் தெரிந்து கொள்ள விரும்புவது 60 நாட்கள் ரிபேட் கொடுத்தால் எத்தனை சதவீதம் ஆண்டு ஒன்றுக்கு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தாலும் பிரதம கூட்டுறவு சங்கங்களாலும் தேங்கி இருந்த துணிகளை விற்று எவ்வளவு முதல் ஆகிறது? 60 நாள் ரிபேட் கொடுத்த தால் கடந்த 2 ஆண்டுகளில் மத்திய, மாநில அரசுகள் அளித்த சதவீதம் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983-84, 1984-85 ஆகிய 2 ஆண்டுகளில் 60 நாட்கள் ரிபேட் கொடுக்கிற உத்திரவு அமலில் இருந்தது. 1983-84 ஆம் ஆண்டில் 60 நாட்கள் தள்ளுபடி கொடுத்ததால் ஆண்டு முழுவதும் ஏற்பட்ட விற்பனை பிரதம நெசவாளர் சங்கத்தால் ஏற்பட்ட விற்பனை 45 கோடியே 62 லட்சத்து 38 ஆயிரம் ரூபாய் ஆகும். 60 நாட்கள் தள்ளுபடி கொடுத்ததால் ஏற்பட்ட விற்பனை 42 கோடியே 83 லட்சத்து 42 ஆயிரம் ரூபாய் ஆகும். சதவீதம் 93 சதவீதம் ஆகும்.

அதேபோல் 1983-84 ஆம் ஆண்டில் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) ஆண்டு முழுவதும் விற்ற தொகை 106 கோடியே 24 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் ஆகும். அதிலே 60 நாட்கள் தள்ளுபடி கொடுத்ததால் ஏற்பட்ட விற்பனையின் அளவு 92 ஆயிரத்து 38 லட்ச ரூபாய் ஆகும். சதவீதம் 87 சதவீதம் ஆகும்.

1984-85 ஆம் ஆண்டு பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஆண்டு முழுவதும் ஏற்பட்ட விற்பனை 100 கோடியே 29 லட்ச ரூபாய் ஆகும். இதிலே 60 நாட்கள் தள்ளுபடி கொடுத்ததால் ஏற்பட்ட விற்பனை 70 கோடியே 38 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் ஆகும். இது 70 சதவீதம் ஆகும்.

1984-85 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் அதாவது கோ-ஆப்டெக்ஸ்-ல் ஆண்டு முழுவதும் ஏற்பட்ட விற்பனை 91 கோடியே 86 லட்சம் ரூபாய் ஆகும். 60 நாட்கள் தள்ளுபடி கொடுத்ததால் ஏற்பட்ட விற்பனை 78 கோடியே 87 லட்ச ரூபாய் ஆகும். இது 86 சதவீதம் ஆகும்.

இதிலிருந்து 60 நாட்கள் தள்ளுபடி கொடுத்ததால் தான் 70 சதவீதம் முதல் 93 சதவீதம் வரை துணி தேங்காமல் விற்பனை ஆகியிருக்கிறது என்று புலனாகிறது. ரிபேட்டைப் பொறுத்தவரையில் 1983-84 ஆம் ஆண்டு பிரதம கூட்டுறவு சங்கங்கள் மூலமும், தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் அதாவது கோ-ஆப்டெக்ஸ் மூலமும் விற்றதற்காக ஏற்பட்ட

தள்ளுபடி தொகை பின்வருமாறு: பிரதம நெசவாளர் சங்கம்
மூலம் விற்றதால் 7 கோடியே 83 லட்சத்து 83 ஆயிரம் ரூபாய்
ஆகும். தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் அதாவது
கோ-ஆப்டெக்ஸ் மூலம் துணி விற்றதில் ரிப்பேட் தொகை 12
கோடியே 15 லட்சத்து 36 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டது.

1984-85 ஆம் ஆண்டுக்கு ரிபேட் தொகை, பிரதம நெச
வாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஏற்பட்ட விற்பனையினால்
தள்ளுபடி 13 கோடியே 34 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய்
ஆகும். கோ—ஆப்டெக்ஸ் மூலம் விற்றதனாலே கொடுக்கப்
படவேண்டிய ரிபேட் தொகை 10 கோடியே 63 இலட்சத்து
98 ஆயிரம் ஆகும்.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஆயிரத்து தொள்ளாயிரத்து எம்பளத்து ஐந்தாம்
ஆண்டு ரிபேட் எத்தனை நாளைக்கு........(சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எம்பளத்தி என்பது
தென்னாற்காடு பாஷை.

திரு. ஏ. தங்கராசு : பேரவைத் தலைவர் அவர்களே, 1985
ஆம் ஆண்டு ரிபேட் எத்தனை நாளைக்கு இதுவரை கொடுக்கப்
பட்டு இருக்கிறது என்பதையும், தீபாவளி, கிறிஸ்துமஸ்,
பொங்கல் போன்ற பண்டிகைகளுக்கு எத்தனை நாட்களுக்கு
ரிபேட் கொடுக்க உத்தேசம் என்பதையும், பெருந்தலைவர்கள்
பிறந்த நாட்களுக்கு ரிபேட் வழங்குவதற்கு மத்திய அரசுக்கு
நமது அரசு பரிந்துரை செய்து இருக்கிறதா என்பதையும் அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, இந்த ஆண்டு 60 நாட்கள் கொடுத்துவந்த
ரிபேட்டை 30 நாட்களாக மத்திய அரசு குறைத்ததினால் இது
வரையில் அகில இந்திய கைத்தறி விழாவுக்கு 15 நாட்களும்,
ரம்சான் பண்டிகைக்கு 5 நாட்களும் மொத்தம் 20 நாட்கள் இது
வரை ரிபேட் கொடுக்கப்பட்டு விட்டது. எஞ்சிய நாட்கள் 10
தான். அதனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூலம் மத்திய
அரசுக்கு 30 நாள் என்பதை 60 நாள் ஆக உயர்த்தக் கேட்டுக்
கொண்டிருக்கிறோம். அப்படி உயர்த்தினால் பேரறிஞர்
அண்ணா மற்றும் தந்தை பெரியார் பிறந்த நாட்களுக்கு 7
நாளும், தீபாவளிக்கு 19 நாட்களும், கிறிஸ்துமஸ்-க்கு 7 நாட்
களும், பொங்கலுக்கு 7 நாட்களும், ஆக 40 நாட்களுக்கு ரிபேட்
கொடுக்க ஏதுவாகும். அதைத் தொடர்ந்து, மத்திய அரசுக்கு
30 நாள் என்பதை மீண்டும் 60 நாள் ஆக உயர்த்த வேண்டி
கடிதம் எழுதி இருக்கிறோம்.



## 6. அறிக்கைகள் அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

திரு. பி. மு்றிப்புத்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நான் கீழ்க்கண்ட அறிக்கைகளை அவைக்கு
அளிக்கிறேன்.

(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்
1960—61 முதல் 1965-66 ஆம் ஆண்டு வரையிலான
ஆண்டுக் கணக்குகள் குறித்து பொது நிறுவனங்கள்
குழு (1980--82) அளித்தபதின்மூன்றாவது அறிக்கையில்
கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு
எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின்
பதின்மூன்றாவது அறிக்கை.

(ஆ) தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் செயல்
முறை குறித்து பொது நிறுவனங்கள் குழு (1980-
81) அளித்த மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள
பரிந்துரைகள் மீது, அரசு எடுத்த நடவடிக்கை
பற்றிய மேற்படி குழுவின் பதினைஞ்காவது
அறிக்கை.

## 7. அறிவிப்புகள்.

(அ) சட்டமன்ற அரசியல் கட்சிகளுக்கு திரும்ப அலுவல் அறைகள்
ஒதுக்கித் தருவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

சட்டப் பேரவையில் இடம் பெற்றுள்ள அரசியல் கட்சி
களுக்கு அலுவல் அறைகள் ஒதுக்குவது பற்றி எழுந்த பிரச்சினை
குறித்து மறு பரிசீலனை செய்யப்பட்டது.

சட்டப் பேரவையிலுள்ள கட்சிகளுக்கு நான் சில சட்டமன்ற
அலுவல் அறைகளை ஒதுக்கித் தர முடிவு எடுத்துள்ளேன்.

சுயேச்சைகள் என்று சில கட்சிகளை குறிப்பிடுவதற்கு
மாறாக, முன் போல் அல்லாமல், அந்தக் கட்சிகளின் பெயரா
லேயே அழைக்கப்படும். இவ்வாறு எடுக்கப்பட்டுள்ள முடிவு
களை ஏற்றுக் கொள்ளும் வகையில் அந்த அரசியல் கட்சிகள்
சட்டமன்ற குழுக்களிலிருந்து விலகுவதைத் திரும்பப் பெற்றுக்
கொண்டு, ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

## 8. அரசினர் சட்ட முன்வடிவு

மருந்துப் பொருட்கள், ஏனைய பண்டகப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்ட முன் வடிவு, 1985

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு மருந்துப் பொருட்கள், ஏனைய பண்டகப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத் திருத்தல்) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட டைட்டிலே ஒரு தினுசாக இருக்கிறது. என்ன வென்றால், 'A Bill to provide for the punishment of the offence of unlawful possession of drugs and other stores belonging to the Govt. of Tamilnadu---'' என்று டைட்டிலில் சொல்லி இருக்கிறது. 'அன்லாஃபுல் பொசஷன்' ——இது இரண்டைத் தவிர மற்றது நடத்தலாமா, அன்லாஃபுல்—ஆக? எனவே, ஏற்கனவே தவறு செய்கின்ற போது தடுக்கிறதற்காக சட்டம் இருக்கும்போது, இப்படிப்பட்ட ஒரு சட்டம் அவசியம் தானா?

(முற்பகல் 11-00)

நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? நாங்கள் இதை எதிர்க்க வேண்டிய நிர்ப்பந்தத்துற்கு ஆளாக்குவது எது என்பதைக் கூற விரும்புகிறேன். எந்த நேரத்திலேயும் சர்ச் செய்யலாம். ஒரு எஸ். ஐ. வந்து எந்த இடத்திலேயும், எந்த நேரத்திலேயும், 'on suspicion' போய் சர்ச் செய்யலாம் என்று சொல்கிறீர்கள். எதன் மேலே என்றால், Doctors, nurses, drug shop owners சந்தேகத்தின் பேரில் கூட சர்ச் பண்ணலாம் என்ற நிலைமை யிருக்கிறது. ஸ்டோர்கள் மட்டுமல்ல, அண்மையில் நான் கேள்விப்பட்டேன், ஜி.எச்.-இல் இதற்கு ஏ. சி. போடப்பட்டிருப் பதாக அறிகிறேன். அங்கே பல டாக்டர்களும், நர்சுகளும் இது போன்ற சந்தேகத்தின் பேரில் சர்ச் செய்யப்படுவார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். எந்தத் திருட்டாக இருந்தாலும் அதைத் தண்டிப்பதற்கு நடைமுறையிலேயே சட்டம் இருக்கிறது. எந்தத் திருட்டையும் தடுக்கலாம், அப்படித் தடுப்பது மட்டு மல்ல, அரெஸ்ட் செய்யலாம், தண்டனை கொடுக்கலாம். எனவே, இப்படிப்பட்ட சட்டத்தை ஏற்படுத்தி தேவையற்ற நிலைமையை உருவாக்குவதற்கான வாய்ப்பாக இது இருக்கிறது என்பதால் இதற்கு நான் என்னுடைய எதிர்ப்பைத் தெரிவிக்க விரும்புகிறேன்.



உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். டாக்டர்களை ஜி.எச். கேட்டிலே எஸ்.ஐ. தடுக்கலாம், எந்த நேரத்திலேயும் at all times சர்ச்செய்யலாம். இதற்கெல்லாம் இப்பொழுது இருக்கின்ற சட்டத்திலேயே வாய்ப்பு இருக்கின்ற பொழுது இப்படிப்பட்ட சட்டம் அவசியம்தானா என்று கேட்க விரும்புகிறேன். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. அது மருந்துத் திருட்டாக இருந்தாலும் சரி, இரும்புத் திருட்டாக இருந்தாலும் சரி, அது தண்டிக்கப்பட வேண்டியதுதான். ஆனால், அதே நேரத்தில் சந்தேகத்தின் பேரில் கௌரவமாகத் தொழில் செய்து வருகின்ற டாக்டர்கள் நர்சுகள் ஆகியவர்களைக் கேட்கலாம், அதுமட்டுமல்ல டிரக் ஸ்டோரில் எந்த நேரத்திலேயும் எஸ்.ஐ., எண்டர் ஆகலாம்; சந்தேகத்தின் பேரில் எண்டர் ஆகலாம், சர்ச் செய்யலாம் என்று இருப்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று அல்ல என்பதைத் தாழ்யோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், அதிகாரிகள் இந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு இருக்கிறது.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன், நான் ஒரு டிரக் ஸ்டோர் வைத்திருப்பதாக வைத்துக் கொள்வோம். என்னைப் பிடிக்காதவர்கள் என்மீது மொட்டைப் பெட்டிஷன் போட்டார்கள் என்றால், அதை வைத்துக்கொண்டு எஸ்.ஐ., ரெலவன்ட் என்று சொல்லி, எனக்கு பெட்டிஷன் வந்திருக் கிறது. எனவே, சந்தேகத்தின்பேரில் சோதனை செய்ய வேண்டுமென்று சொல்லி இரவு ஒரு மணிக்குக் கூட வந்து சர்ச் செய்யலாம்; ஏனென்றால் விதி அப்படி இருக்கிறது. கிரிமினல் புரொசீஜர் கோடை வைத்துக் கொண்டே இதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்ற பொழுது, இப்படிப்பட்ட ஒரு சட்டம் மொத்தத்திலே அவசியம் தானா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இது ஒன்று.

அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தின் மூலம் நமக்குத் தெரிவது என்னவென்றால், ஏன் இருக்கின்ற சட்டங்கள் பயன்படவில்லையா? அந்தச் சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியவில்லையா என்கின்ற நிலைமைகள்தான் இருக்கின்றன. அப்படி எடுக்கப்பட்டு ஃபெயிலியர் ஆகியிருக் கிறதா? இப்படிப்பட்ட சட்டங்கள் ஏற்கனவே இருக்கின்ற பொழுது இது அவசியம்தானா? சந்தேகத்தின்பேரில் suspicion at all times இது ரொம்பவும் வன்மையான கண்டனத்திற்கு உரியது. கிரிமினல் புரொசீஜர் கோடிலேயே நடவடிக்கை எடுக்கலாம். எனவே, இது தேவையற்றது. கௌரவமாகத் தொழில் செய்கின்றவர்களை அவமானப்படுத்துவதற்கு இது பயன்படும் என்று கூறி அமர்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்கள் இந்தச் சட்ட முன்வடிவை உருவாக்கித் தந்திருக்கின்ற இந்தச்

சட்டத்தை நான் மிகவும் வன்மையாக எதிர்க்கின்றேன். காரணம், 'Statem nt of objects and Reasons' என்று சொல்லுகின்ற நேரத்திலே 'Cases of frequent pilferage of drugs and other stores from the Government Medical Institutions in Tamil Nadu have come to the notice of the Government'' என்று சொல்லுகிறார்கள். பட்ஜெட் விவாதத்தின் பொழுதே நான் சொன்னேன். 'The most inefficient Department in the whole of Tamil Nadu is the Medic l Department because there is disarray and confusion.' என்று சொன்னேன். அதற்கு ஒரு ஒப்புதல் வாக்கு மூலமாக இருக்கிறது. நீங்களே ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள். ''cases of pilferage' ஏராளமான மருந்துகள் ஆஸ்பத்திரிகளில் கொள்ளை போகிறது என்பதை இந்த அரசாங்கமே ஒத்துக்கொண்ட ஒப்புதல் வாக்குமூலமாகத்தான் இதைக் கருதுகிறேன். அடுத்த படியாகப் பார்க்கின்றபொழுது அரசாங்கத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளில் உள்ள மருந்துகள் எப்படிக் களவாடப்படுகின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்கின்றபொழுது நானும் ஒரு ஆஸ்பத்திரியில் பத்தாண்டுக் காலம் கௌரவ அதிகாரியாக பணியாற்றி இருக்கின்றேன். மருந்துகளைக் கையாள்பவர்கள் யார்?

இங்கே ஆஸ்பத்திரியிலே உள்ள டாக்டர்கள் மருந்துகளை எழுதிக் கொடுக்கிறார்கள். அங்கே வார்டிலே உள்ள நர்சுகள், மொத்தம் இவ்வளவு மருந்து தேவை என்று சீப் பார்மஸிஸ்டுக்கு எழுதிக் கொடுக்கிறார்கள். அங்கே சீப் பார்மஸிஸ்டு கொடுத்து அனுப்புகிறார். அதை ஆயாக்கள் மூலமாகவோ, வார்டு பாய்ஸ் மூலமாகவோ கொண்டு வந்து நோயாளிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. அங்கே மருந்து கொள்ளை போகிறது என்று சொல்லும்போது, எங்கே கொள்ளை போகிறது, யார் கொள்ளை அடிக்கிறார்கள் என்பதைக் கண்டு பிடிக்க வேண்டியதுதான் அவசியமே ஒழிய, இதற்காக ஒரு சட்டம் கொண்டு வருவது, superfluous, unnecessary and unwarranted. அதைத்தான் என்னால் பார்க்க முடிகிறது.

இன்னும் மேற்கொண்டு சொல்லப்போனால், கொள்ளை போகின்ற இடங்களைப் பற்றி சிந்திக்கின்றபொழுது, நான் சொல்கின்றேன், எனக்குத் தெரிந்த அளவுக்கு, அங்கே fo· 10,000 capsules of terramycin. இன்டென்ட் செய்தால், சப்ளை செய்கின்ற காண்ட்ராக்டர்கள் ஒரு பாட்டிலிலே 100-லே 10-ஐ எடுத்துவிட்டு, 8,000 அங்கே காணாமல் போய்விட்டது என்று கணக்கு எழுதினால், கண்டு பிடிப்பது யார்? இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், பெண்டாட்டியை வைத்து, குடும்பம் நடத்த வக்கில்லாதவன், ரோட்டிலே யாரும் என் பெண்டாட்டியைப் பற்றிப் பேசினால் அவன் தலையைச் சீவி விடுவேன் என்று உத்தரவு போட்டான் எப்படி இருக்குமோ, அதைப்போலத்தான் You have got Drug stores, you have got accounting, you have got ways and means to control and for





distribution system. இவைகளையெல்லாம் வைத்துக்கொண்டு ஆஸ்பத்திரி மருந்துகளவு போகின்றது, அதைத் தடுப்பதற்குச் சட்டம் கொண்டு வருகிறேன் என்று சொன்னால், எங்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது.

இன்னும் சொல்லப் போனால், அண்மையிலேகூட எனது அருமை நண்பராக இருக்கிற, முன்னாள் சபாநாயகர், நற்போதைய மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள், ஒரு முறை டென்டல் ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டுமென்று அவருடன் நானும் சென்றேன். அவருக்குப் பல் வலி என்று அங்கே ஆம்பிசிலின் 5 காப்சல்ஸ் மருந்து எழுதிக் கொடுத்தார்கள். அந்த மருந்தைக் கீழே வாங்க வேண்டுமென்று சொன்னபொழுது, அந்த டாக்டர் சொன்னார் என்று எழுதிக் கொடுத்தார்கள். நீங்கள் அந்த மருந்திலே எனக்குச் சந்தேகம் இருக்கிறது. வெளியிலே பேடன்ட் டிரக்ஸ் வாங்கிவிடுங்கள் என்று அவரே சொன்னார். ஆகவே, அந்த நிலைமை இருக்கும்போது, ஆஸ்பத்திரியிலே இருக்கிற அந்த மருந்தை எடுத்துக்கொண்டு, யார் என்ன செய்ய முடியும்? ஒன்று, அந்த மருந்தை. unqualified quacks ஆயாக்கள், நர்சுகள், வார்டு பாய்கள், இவர்கள் டாக்டர்களாக, வெளியிலே ப்ராக்டிஸ் செய்து கொண்டிருந்தால், அவர்கள் அதை விற்று பணம் சம்பாதிக்க முடியும். இல்லாமற் போனால், அந்த ஆஸ்பத்திரி மருந்து எதற்குப் பயன்படும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். டாக்டர் ஹண்டே அவர்களைப் பற்றி 'I am more proud of him. He is the most succ ssful, most popular and most beloved doctor in his locality. People love him; adore him; admire him. He isthe most human doctor. But I am not proud of him because he is the M nister of this State for Public Health.' ஆகவே, அப்படிப்பட்ட அந்த நிலைமையிலே இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருப்பது என்னால் சிந்தித்துக்கூட பார்க்க முடியவில்லை.

கடைசியாக, அருமை நண்பர் மாண்புமிகு திரு. பொன்னுரங்கம் அவர்கள் சொல்லியதைப் போல, இந்த மருத்துவத் துறையிலே உள்ளவர்கள், பிரைவேட் பிராக்டிஸ் செய்கின்றவர்கள், டாக்டர் இராமலிங்கம், டாக்டர் பொன்னுச்சாமி, டாக்டர் நல்லமுத்து, டாக்டர் யாசிலாமணி போன்றவர்கள் இருக்கிறார்கள். நாங்கள் மருந்துகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். You have already made a Sub-Inspector to haul us up in our houses. எங்களுக்குச் சந்தேகம் இருக்கிறது; நீங்கள் ஆஸ்பத்திரியில் மருந்துகளைப் பெற்று விற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்ற சந்தேகம் இருக்கிறது என்று சொல்லி சாதாரணமான எஸ்.ஐ. மருந்து இருக்கிறதா என்று சோதனை போடக்கூடிய அளவுக்கு You are disgracing and degarding the medical profession. I request the Hon. Minister for Public Health மருத்துவத் துறையில், ப்ரபொஷனல் சஸீக் என்ற அடிப்படையில் நான் கேட்டுக் கொள்கிறேன். அதிகாரம் துஷ்பிரயோகம் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

Please do not betray the doctors to the bureaucrats. There are other ways under the Cr.P.C. and I.P.C. Theft of property and possession of theft property is an offence. Please withdraw this Bill. தாழ்மையுடன் உங்கள் காலிலே, கெஞ்சி கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். I plead on behalf of every doctor who is likely to be subjected to this sort of torture and harassment in case they fall out of Government guise. Thank you very much.

(முற்பகல் 11-10.)

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற மருத்துவமனைகளில் இருக்கக்கூடிய நோயாளிகளுக்கு கொடுக்கக்கூடிய ஊசி, மாத்திரை, மற்ற பொருள்கள் எல்லாம் திருட்டுத்தனமாக விற்கப்படுகின்றன. இப்படி திருட்டுத்தனமாக விற்பதைத் தடுத்து, தண்டனை வழங்க இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகையால் இந்தச் சட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். இது ஒரு நல்ல சட்டம்தான்.

ஆனால் நோயாளிகளுக்காக அரசு மூலம் கொடுக்கக்கூடிய மருந்துகளைத் திருடி விற்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களை உண்மையிலே விசாரிக்கக்கூடாது. நேற்று முன்தினம் நாடு கடத்தலாம் என்று ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டதே. அந்த மாதிரி இப்படிப்பட்டவர்களை சமூக விரோதிகளாகக் கருத வேண்டும். ஒரு மாதத்திற்கு மருந்துகள் மருத்துவ மனைகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. குறிப்பாக தஞ்சை இராஜா மிராசுதார் மருத்துவமனையில் சில மாதங்களுக்கு முன்னாள் ஒரு தந்தை தன்னுடைய மகனை சிகிச்சைக்காகக் கொண்டு வருகிறார். 25 அல்லது 26-ந் தேதி வாக்கில் கொண்டு வருகிறார். 25-ந் தேதியோடு மருந்து தீர்ந்துவிட்டது. தேவையான ஊசி மருந்து இல்லாத காரணத்தால் வெளியே வாங்கி வரவேண்டும் என்று எழுதிக் கொடுத்து அவர் போய் வாங்கி வருவதற்குள் குழந்தை இறந்து விட்டது. 30 நாட்களுக்கு என்று கொடுக்கக்கூடிய மருந்து 25 நாட்களில் தீர்ந்து விடுகிறது என்றால் பாக்கி 5 நாட்களுக்குள்ள மருந்து எங்கே போகிறது, எப்படி மறைகிறது?

சில தினங்களுக்கு முன்னாள் மதுரை, சென்னை பெரிய மருத்துவமனைகளில் இலட்சக்கணக்கான ரூபாய்க்கு மருந்துகள் திருட்டு போவது பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. ஆனால் என்ன நடவடிக்கை என்று மக்களுக்குத் தெரியாது. மற்ற குற்றவாளிகளைவிட இப்படி நோயாளிகளுக்கு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கக்கூடிய நோயாளிகளுக்கு வழங்கக்கூடிய இந்த மருந்துகளை யார் திருடினாலும்



விற்றாலும் அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும். வழங்கப்படக்கூடிய தண்டனை என்ன என்பது பொது மக்களுக்கு தெரிய வேண்டும். அரசாங்கமும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் எதிர் காலத்தில் இப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்து உயிருக்காகப் போராடி மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் உயிரைக் காக்க அரசாங்கம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்,

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் அற்புதமான வகையிலே திரு. பொன்னுரங்கம் அவர்களுடைய கேள்விகளுக்கும் டாக்டர் சௌரிராஜன் அவர்களுடைய கேள்விகளுக்கும் விடை அளித்திருக்கிறார்கள். இந்த 'அன் லாஃபுல் பொசஷன் ஆஃப் டிரக்ஸ்' என்று சொல்லக் கூடிய அளவுக்கு சட்டத்தில் ஷரத்தைப் போட்டிருக்கிறோம். ஸ்டேட்மென்ட்ஸ் ஆஃப் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸில் கூட சொல்லியிருப்பதைப்பற்றி டாக்டர் சௌரிராஜன் அவர்கள் சொன்னார்கள். இதிலே எந்தவிதமான பிரச்சனையும் இல்லை. Cases of frequent pilferage of drugs and other stores from the Government Medical Institution in Tamil Nadu have come to the notice of the Government. ஆகவே, அரசாங்கம் எச்சரிக்கையாக இருக்கிறது. அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு பல விஷயங்கள் கொண்டுவரப் பட்டிருக்கின்றன அதன் பிறகு நடவடிக்கை எடுக்கிறோம், கோர்ட்டுக்குப் போகிறோம். கோர்ட்டுக்குப் போகும்போது இந்தக் கடுமையான சட்டம் இல்லாத காரணத்தால் குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. தப்பிக்காமற் இருக்கத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர வேறு அல்ல, ஆகவே, இதிலே பிரச்சனை ஒன்றும் இல்லை.

முற்போக்கு எண்ணம் கொண்டிருக்கிற திரு. உத்திராபதி அவர்கள் முற்போக்கான கருத்துக்களைச் சொன்னார்கள், குற்றவாளிகள் தப்பித்து விடாமல், கடுமையான தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். இப்படிப் பட்ட நடவடிக்கை எடுக்கும்போது எதற்காக கோபித்துக் கொள்ள வேண்டும். வேகமாக எதிர்க்க வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. சட்டத்தில் ஓட்டை இல்லாமல் கொண்டு வந்திருக்கிறோம். ஏனென்றால் அரசாங்க மருத்துகள் வேறு இடத்திற்குக் கொண்டு போகப்பட்டு, தவறான முறையில் விற்கக்கூடிய நிலைமையைத் தவிர்க்க வேண்டும். ஏற்கெனவே சில தவறுகளை நாம் கண்டுபிடித்திருக்கிறோம். பத்திரிகைகளிலே கூட சில செய்திகள் வந்திருக்கின்றன. 6 ஆண்டுகளுக்கு முன்னால் செய்த தவறு, திருட்டு கண்டுபிடிக்கப்பட்டு, படிப்படியாக நல்லமுறையில் நடவடிக்கை எடுத்து, தண்டனை வழங்க 5½-ஆண்டுக் காலம் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

ஏனென்றால் ஏற்கெனவே இருந்த சட்டத்தினால் ஆமை வேகத்தில்தான் போக முடியும். அந்த வகையிலே நடவடிக்கை எடுத்து, 5½ ஆண்டுகளுக்குப் பின்னால்தான் கோர்ட்டிலே தண்டனை வழங்க முடிந்தது. மருந்துகளை திருடியவர்களுக்கு தண்டனை வழங்க அவ்வளவு சிரமப்பட்டிருக்கிறோம், இதை எல்லாம் பார்த்த பிறகுதான் நம்முடைய கையிலே இருக்கிற ஆயுதம் போதாது. கடுமையான சட்டம் கொண்டுவர வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறோமே தவிர டாக்டர்களை பழி வாங்க வேண்டுமென்ற எண்ணத்தில், டாக்டர்களுக்கு அநீதி இழைக்க வேண்டுமென்ற நோக்கத்தில் கொண்டு வரவில்லை. அந்த மாதிரி மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணியிருந்தால் அது சரியான கருத்து அல்ல. அவர்கள் குறிப்பிட்டது முற்றிலும் தவறான கருத்து என்பதை என்னைவிட நன்றாக மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதிலே என்ன தவறு இருக்கிறது?

In clause 5, we have provided for Indeminity. In clause 7 reletes to confiscation how ordered. 'When the offender is convicted or when the person charged with an offence against this Act is acquitted, but the court decides that anything is liable to confiscation, such confiscation may be ordered by the Court.'

இதுதான் கொஞ்சம் கஷ்டமாக இருக்கக்கூடிய ஷரத்தாக இருக்கின்றது என்று மாண்புமிகு திரு. பொன்னுரங்கம் அவர்கள் கூட சொன்னார்கள். இது சாதாரணமாக எல்லா சட்டங்களிலும் இருக்கக்கூடிய ஷரத்துதானே தவிர வேறு ஒன்றும் இல்லை. பப்ளிக் சர்வன்ட்ஸ் என்பவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் நாம் எதற்காகக் கொண்டுவந்திருக்கிறோம் என்றால் சமூக விரோதிகள் மட்டுமல்லாது சிலர் மருந்துகளை வாங்கி வியாபாரம் செய்வதற்குக் கூட முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுக்கவேண்டும் என்ற வகையிலே 6 ஆண்டுகளுக்கு முன்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி அதன்படி அந்த மாத்திரைகளின் மீதெல்லாம் த.அ. என்று அதாவது தமிழ்நாடு அரசு என்பதின் சுருக்கத்தை அதாவது Logo—Gram போட்டுக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அப்படி எழுதப்பட்ட நிலையிலும் அதனை வெளியே எடுத்துச் சென்று பவுடராக ஆக்கிப் பொட்டலமாக வெளியே கொடுக்கக்கூடிய நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம். கேப்சூல்களைப் பொறுத்தவரையில் அவற்றில் உள்ள மருந்துகளை மிக எளிதாக எடுத்துவிட முடியும். அதையும் கொண்டுபோய் எடுத்து பாக்கெட்டிலே போட்டுக் கொடுக்கக்கூடிய ஒரு துர்பாக்கியமான நிலைமை இருக்கின்றது. எனவே இவற்றை



எல்லாம் தடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தச் சட்டம் கொண்டுவந்திருக்கக்கூடிய நிலைமை பற்றி பிற மாநிலங்களுக்கும் தெரிந்திருக்கின்றது. இந்தச் சட்டத்தை நீங்கள் எப்படிக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று பிற மாநிலங்களில் நம்மைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் திரு. சௌரிராஜன் அவர்கள் இங்கே சொன்னதற்காகச் சொல்கிறேன்.

மத்திய அரசு கூட நமக்குக் கடிதங்கள் எழுதி இருக்கின்றது. மத்திய அரசிலே இருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர்கள், இப்படி எல்லாம் பரவலாக நடைபெறுகின்றதே, பல்வேறு மாநிலங்களில் நடைபெறுவதைப் பார்க்கிறோமே, இதை எப்படியாவது கட்டுப்படுத்துகின்ற வகையில் கடுமையான சட்டத்தைக் கொண்டுவரலாமா, கொண்டுவரக் கூடாதா, கொண்டு வாருங்கள் என்று கூட அவர்கள் சார்பாக அதாவது மாண்புமிகு திரு. மக்வானா அவர்கள் சார்பாகவும், மாண்புமிகு திரு. மோசினாத் கிட்வாய் அவர்கள் சார்பாகவும் நமக்கு எழுதப் பட்டிருக்கின்ற கடிதங்கள் நம்மிடத்திலே இருக்கின்றன. இப்படி அகில இந்திய ரீதியாக இருக்கின்ற நிலைமைகளை எல்லாம் பார்க்கிறோம். இந்த மருந்துகளை எல்லாம் வேறு மாநிலங்களுக்குக் கொண்டு போய் விற்கக் கூடிய சூழ்நிலை கூட இருக்கின்றது. அவற்றை எல்லாம் கட்டுப்படுத்தவேண்டும் என்பதற்காகத்தான் சட்டம் கொண்டுவந்திருக்கிறோம்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் இன்னும் கூடக் கொஞ்சம் கடுமையாக இருந்தாலும் பரவாயில்லை என்ற மாதிரியாக சொல்லி இருக்கிறார்கள். எனவே மிகக் கடுமையாக, தாட்சண்யம் இல்லாத அளவுக்குக் கொண்டுவந்திருக்கிறோம், இந்தச் சட்டமுன்வடிவை. ஆனால் இதன் மூலம் சிலர் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னால் அந்த அச்சத்திற்கு நாம் பொறுப்பல்ல. அந்த அச்சத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் கவலைப்படவில்லை. மக்களின் நலனுக்காக இத்தகைய சட்ட முன்வடிவைக் கொண்டு வருகின்ற போது வெஸ்டட் இன்டரஸ்ட் இருப்பவர்கள் இதனால் பாதிக்கப் படுகிறார்கள் என்று சொன்னால் அதற்காக இந்த அரசு அஞ்சாது. எனவே இப்படிப்பட்ட சட்டம் நிச்சயமாக மக்களின் நலனுக்காகத் தேவை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இதனை இன்ட்ரட்யூஸ் செய்வதற்காக மூவ் பண்ணியபோது நான் மேலவையில் இருந்ததன் காரணத்தால் என்னால் வர முடியவில்லை. ஆனால் இதனை எல்லோரும் வரவேற்பார்கள் என்றுதான் நான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனாலும் இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகப் படுத்துகின்றபோதே பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு மருந்துப் பொருட்கள், ஏனைய பண்டகப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத் திருத்தல்) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

9. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை 1984–85 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கை ஆகியவை மீது விவாதம் (தொடர்ச்சி).

திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய முதல் பேச்சினை இந்த மன்றத்தில் துவக்குவதற்கு முன்னாலே இங்கே இதற்கு முன்னாலே நடை பெற்ற பல்வேறு மானியக் கோரிக்கைகளின் மீது பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள் பேசுகின்றபோது தடம் புரளுகின்ற அரசெனக் குறிப்பிட்டார்கள். அவர்களெல்லாம் சொன்னதைப் போல இது தடம் புரளுகின்ற அரசு அல்ல; தமிழ் மக்களின் தன்மானத்தையும், சுய உரிமைகளையும் பாதுகாக்கும் தாயுள்ளம் கொண்ட அரசு என்பதை அவர்களுக்குச் சுட்டிக்காட்டுவதோடு, இந்த அரசைக் கவிழ்த்து விடுவதற்காகவும் அழித்துவிடுவதற் காகவும் பலர், பல கோணங்களிலே போராட்டங்கள் என்ற பெயரில் செயல்பட்டபோது, தடந்தோள் தந்து, அந்தப் பள்ளங்களிலே விழுந்துவிடாமல் சாரதியாக இருந்து ஆட்சியைக் காத்த சரித்திரநாயகன் புரட்சித் தலைவர் ஆவார்கள்.

1972 ஆம் ஆண்டிலே இருந்து நடைபெற்று வருகின்ற போராட்டங்களில் துரியோதனனுக்கும் பாண்டவர்களுக்கும் இடையில் நடைபெற்று வருகின்ற தமிழகத்தின் குருக்ஷேத்திரப் போரில் திண்டுக்கல்லாக இருந்தாலும், சோலையாக இருந்தாலும், புதுவையாக இருந்தாலும், தமிழகமாக இருந்தாலும் பொய் வழக்குகள் என்னும் அரக்கு மாளிகைகள் கட்டி, கழகத்தை அழித்துவிடலாமென்று கருதியநேரத்தில் இந்தக் கழகத்தைக் கண்ணனாக, காண்டீபனாக, அறநெறி பிறழா தர்ம சிந்தனை யுள்ள தருமராக இருந்துகாப்பாற்றி ஆட்சிக்குக் கொண்டு வந்த பெருமை அருட்கொடையாளர், தங்கத் தலைவன், எழுதவிருக் கின்ற சரித்திரத்தின் தளநாயகர் அவர்களையே சாரும் என்பதை இந்த மன்றத்தின் மூலம் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



(முற்பகல் 11–20)

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் — தலைமை.)

ஊனக் கண் கொண்டு ஊர் மக்களைப் பார்த்து உதவாத அரசு என்று சொல்லிப்பார்த்து சோர்வடைந்து, ஊர் மக்களாலே உதாசீனப்படுத்தப்பட்டு உருத் தெரியாமல் போனவர்கள் மத்தியிலே ஊர் மக்களின் ஒட்டு மொத்தமான பேராதரவை பெற்று பேராட்சி செய்து வருகின்ற பெருந்தகை யாளர், இதய தெய்வம், என்னைப் போன்றவர்களை எல்லாம் இம்மாமன்ற உறுப்பினராக்கி அழகு பார்க்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய கால் மலரை தொட்டு வணங்கி, நடைபெறுகின்ற மின் வாரிய மானிய கோரிக்கையின் மீது என் முதல் பேச்சினை தொடர்கிறேன்.

கிராம வாழ் மக்களின் நலனிலே தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற இதய தெய்வம், புரட்சித் தலைவரின் அரசு, ஏழை எளிய மக்களின் ஓலை குடிசைகளுக்கு ஒளி கொடுக்கும் திட்டத்தினை 1979 ஆம் ஆண்டு துவங்கி இதுவரை 6.52 லட்சம் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கி, உலகெங்கிலும் செயல்படாத யாரும் எண்ணிப்பாராத நிலையில் ஏழ்மையின் இருளகற்ற எண்ணிய ஏழை பங்காளரின் அரசு, குடிசைக்கு ஒளி தந்து, தமிழகத்திலே தாழ்நிலையில் உள்ளோரும், மண்ணெண்ணெய் கூட வாங்க வழியற்று, வீட்டில் விளக் கேற்றாமல் வீதி விளக்குகளின் வெளிச்சத்தில் உணவு உண்டோரும் கொஞ்சிடும் குழந்தைகளுடன், குதூகலமாக மின் விளக்கொளியில் வாழ வசதியை தந்து, ஏழை மக்களால் ''விளக்கேற்றி வைத்த புண்ணியவான்'' என்று மனமுவந்து பாராட்டி மகிழ்கின்ற இந்த அருட்கொடையாளரின் அரசுக்கு என் உளமார்ந்த நன்றியினை காணிக்கை ஆக்குகின்றேன். இவ்வாறு வசதியற்ற மக்களால் வாயார, வானளாவ புகழுக்கு ஆளாகும் இந்த அரசு கிராமப்புறங்களுக்கு ஒளி மயமான வாழ் வினை நந்தது போல், இதே நிலையில் பேரூராட்சி நகராட்சிகளில் வாழ்ந்துக் கொண்டிருக்கிற மக்களின் குடில்களுக்கும் வழங்குவது புனித அரசுக்கு மேலும் புகழ் சேர்ப்பதாகும்.

இவ்வாறு செயல்படுத்த நிதிக் குறை ஏற்படுமாயின் அப்பகுதி வாழ் மக்களில் வாழ்க்கையின் அடித்தளத்தில் வறுமையில் உழல்கின்ற ஆதித்திராவிட மக்களின் குடிசைகளுக் காவது வழங்க முன் வருதல் நலம் பயக்குமென்று நம்புகிறேன்.

மின் துறையைப் பொறுத்த மட்டில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் உற்பத்தியில் தன் கவனம் செலுத்தாமல், வினியோகம் செய்வதிலே தன் வீரத்தை காட்டினார்கள். சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும் எனும் முதுமொழிக்கேற்ப திட்டமிட்டு செயல்படாத தி.மு.க. ஆட்சியில்தான் இன்று மின்வெட்டு போன்ற நிலைமைகளை சந்திக்க வேண்டி உள்ளது என்பதை கூறிக் கொள்கிறேன். ஆனால் அள்ளி வழங்குகின்ற

அருளாளரின் ஆட்சியில், பருவ மழை பொய்த்துவிட்ட நிலையிலும், நிலக்கரி பற்றாக்குறை ஏற்பட்டு, கிடைக்கின்ற நிலக்கரியும் கல்லும், மண்ணும் கலந்து அதை பிரித்தெடுத்து மீண்டும் பயன்படுத்துகின்ற நிலையிலேயும், அரவை இயந்திரங் களும், பழுது பட்ட நிலையிலேயும் வருடாந்திர தேவையான 26 லட்சம் டன் நிலக்கரிக்கு மாறாக தூத்துக்குடி மின்நிலையம் 1983–84-ல் 16 லட்சம் டன்களும், 1984–85-ல் 18.71 லட்சம் டன்களும் பெற்று, நிலக்கரி பற்றாக்குறையைப் போக்க எரி எண்ணெயை பயன்படுத்தியதின் பேரில் கிலோ லிட்டருக்கு ரூ. 1,000 அதிகமாக செலவிடப்பட்ட நிலையிலும், மின்துறை 1983 ஏப்ரல் முதல் மார்ச் 1984 வரை கிடைத்த 1,035 மில்லியன் யூனிட்டுகளுக்கு மாறாக 1984 ஏப்ரல் முதல் 1985 மார்ச் வரை கிடைத்தஅளவு 13,695 மில்லியன் யூனிட்டுகளாகும்.

அதாவது 32.29 சதவீத உயர்வு சக்தியை பல்வேறு இன்னல் சிக்கலான நிலைகளுக்கிடையேயும் தன் திறமையான நிர்வாகத் திறனால் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் சாதனை படைத்து, தமிழகத்தின் பொற்கால ஆட்சி படைத்த புனித புரட்சித் தலைவரின் அரசுக்கு புகழினை பெற்றுத் தந்துள்ளமைக் காக என் உளம் கனிந்த பாராட்டினை இம்மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தின் முதுகெலும்பான விவசாய பெருமக்களுக்கு எண்ணற்ற சலுகைகளை அள்ளித் தந்தாலும் இன்றைய நிலையில் குறிப்பாக தென்னார்காடு மாவட்டத்தில் விவசாயிகள் பெரும் இன்னலுக்கு உள்ளாகி உள்ளனர். காரணம் தொழிலிலே முதலீடு செய்யும் ஒருவன் தன் உற்பத்தி பொருளை விலை நிர்ணயம் செய்கின்றபோது உற்பத்தி செலவு பிளஸ் இலாபம் =விற்பனை விலை. ஆனால் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற மிளகாய் கத்தரி போன்ற பொருள்கள் நாளுக்கு நாளும், மரவள்ளி, பருத்தி போன்ற பொருள்கள் ஆண்டுக்கு ஆண்டும், நெல், கம்பு போன்றவை சீசன் நேரத்திலும் குறிப்பிட்ட பண முதலைகளால் மிக குறைந்த விலைக்கு வாங்கப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் — தலைமை.)

உதாரணமாக மிளகாய், 55 கிலோ ரூபாய் 30–க்கும், கத்திரி 50 கிலோ ரூ. 3-க்கும் கொள்முதல் செய்து வேறிடங் களுக்கு அனுப்பி இலாபம் ஈட்டுகின்றனர். சென்ற ஆண்டு 100 கிலோ பருத்தியின் விலை ரூ. 720 வரையில் விற்றது. ஆனால் இந்த ஆண்டு ரூ. 430 விற்கிறது. இந்நிலையில் விவசாயி வாழ்வானேயானால் அவன் வீட்டிலேயே கிடந்து பட்டினியால் வாடி இறக்கும் நிலை ஏற்படுமே தவிர, விளை நிலங்களுக்கு பயிரிடுவதற்காக செல்ல மாட்டான். இதனைக் கருத்திற் கொண்டு, அரசாங்கமே விவசாயிகளின் பொருளை என்று விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்கிறதோ, அன்று தான் விவசாய பெருமக்கள் வயிறார உண்டு வாழ முடியும் என்பதை சொல்வது என் கடமையெனக் கருதுகிறேன்.



இதையெல்லாம் கருத்தில் கொண்டு விவசாயிகள் சேற்றில் கால் வைத்தால்தான் நாமெல்லாம் சோற்றிலே கை வைக்க முடியும் என்பதை உணர்ந்த ஏழைப் பங்காளரின் அரசு விவசாயத்தின் அடிப்படை தேவையான மின்சாரத்தை இலவச மாகவும், குதிரை சக்திக்கு ஆண்டான்றுக்கு ரூ. 75 விகிதத்திலும் தர முன்வந்தது. இதன் அடிப்படையில் தமிழகத்தில் 72 ஆயிரத்து 219 விவசாயிகள் சான்றிதழ் பெற்று இலவச மின்சாரத்தை பெற்றுள்ளார்கள் என்பதும் போற்றுதலுக்குரியதானாலும், 2½ லட்சம் சிறு விவசாயிகளை கொண்ட தமிழகத்தில் பயன டைந்தவர்கள் 72 ஆயிரம் விவசாயிகள் என்று கருதுகிறேன். மற்றவர்களுக்கும் அந்தப் பயன் கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடியில் 1981-82-ம் ஆண்டில் 41 சதவீதமாக இருந்த உற்பத்தி குறியீடு 1984-85–ம் ஆண்டில் 57.7 சதவீத மாகவும், எண்ணூரில் 1981-82–ல் 31 சதவீதமாக இருந்த உற்பத்திக் குறியீட்டை 1984–85ல் 42.5 சதவீதமாகவும் உயர்த்துக்காட்டி 1984–85–ம் ஆண்டிற்கென நிர்ணயிக்கப் பட்ட குறியீட்டளவான 20,000-ஐ உயர்த்தி 50,000 பம்பு செட்டு களுக்கு மின் இணைப்பு வழங்க அரசு மின்வாரியத்தை பணித் தாலும் குறியீட்டையும் தாண்டி 50,950 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புத் தந்து, விவசாயிகளின் துயரைப் போக்கியது மட்டுமன்றி, இச்சலுகையால் குறிப்பாக தென்ஆற்காடு மாவட்டம் அதிகப் பயனடைந்தது என்பதையும் மீறி எல்லா மாவட்டங்களையும் விட ஒரு ஏக்கர் நிலத்து ஒரு மோட்டார் என்ற அளவிலே உள்ளது என்பதை நினைக்கும் போது, இந்த முப்பிறவி கண்ட நாயகரின் காலடியில் அம்மாவட்ட விவசாயிகள் தங்கள் நன்றியினை காணிக்கை ஆக்கியுள்ளார்கள் என்பதில் மிகையேதுமில்லை. (மணியடிக்கப்பெற்றது.)

திரு. ஆ. நடராசன்; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மின்வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தெரிவிக்க விரும்புகிறேன். நேற்றையதினம் எங்கள் கட்சியின் சார்பிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் மு. இராமநாதன் அவர்கள் மிகத் தெளிவாக பல்வேறு கருத்துக்களையும், நல்ல ஆலோசனைகளையும் எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில் கடந்த ஏழு ஆண்டு காலமாக ஒருவரே அமைச்சராக இருப்பது உள்ளபடியே இந்தத் துறையை நல்லமுறையில் நடத்துவதற்கான ஒரு வாய்ப்பாக இருக்கிறது. ஆனால் அந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறதா என்பதை நீங்கள் அருள் கூர்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த அறிக்கையில் சொற்கள் ஏராளமாக இலைகளைப் போல இலைகள் செறிந்துள்ள இடத்தில் பழங் [illegible]க்கின்றன. பார்க்க முடியாது. இந்தக் கருத்தை [illegible]ள அதிகமாக

மரியாதைக்குரிய சி.வி.ஆர். பணிக்கர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்கொப்ப பல்வேறு திட்டங்களை இந்த வாரியத்தின் மூலமாக செய்யப்படுவதாக சொல்லப்பட்டிருக்கிறதே தவிர ஆனால் செய்யப்படாத ஒரு நிலைமையைதான் நாம் பார்க்கிறோம். இங்கே உற்பத்தி அதிகமாக செய்யப்படவில்லை. அனல் மின் நிலையங்களானாலும், புனல் மின் நிலையங்களானாலும் முழு அளவிலே செயல்படாத நிலைமையை நாம் பார்க்கிறோம். அவைகள் முழு அளவிற்கு செயல்பட்டிருக்குமானால் நிச்சயமாக மின்பற்றாக்குறை ஏற்பட்டிருக்காது. முழு அளவில் செயல்படாததற்கு மூன்று காரணங்கள் இருக்கக் கூடும். பழுதுபட்ட இயந்திரங்கள், சப்—ஸ்டாண்டர்டு குவாலிட்டியில் இருப்பது, அதேபோல கொடுக்கப்பட்டிருக்கிற மெட்டீரியல்ஸ் மிகமோசமான நிலையில் இருப்பது. அடுத்து தொழில் நுட்ப வல்லுநர்கள் சிறப்பானவர்களாக இல்லாமல் இருப்பது. ஆகவே இந்த காரணங்களால் அவைகள் முழு அளவிற்கு செயல்படாத நிலைமை ஏற்பட்டிருக்கக் கூடும். அந்த நிலைமைகளை நிவர்த்திக்க பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல பல்வேறு திட்டங்களுக்கு மத்திய அரசிடத்தில் அனுமதி கேட்டிருக்கிறோம். எட்டு ஆண்டுகளாக அனுமதி தரவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 8 ஆண்டுகாலமாக இந்தக் காரியங்களை சாதிக்க முடியாமல் இருப்பது உள்ளபடியே வருத்தப்படக் கூடிய காரியமாகும். இவைகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் அதேபோல விவசாயிகள் மற்றவர்கள் அனைவரும் மின்சாரம் என்று சொன்னாலே மிகுந்த வேதனையோடு, சங்கடத்துடன் இருக்கிற நிலைமையை நாம் பார்க்கிறோம்.

(முற்பகல் 11-30)

அதற்கான நிலைமைகள் ஏற்படுவதற்கு காரணம் ,விவசாயிகளுக்கு எந்த நேரத்திலே மின்சாரம் வரும் என்று தெரியாத நிலைமை. அதைப்போல தொழிலாளர்களும் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட மின்வெட்டின் காரணமாக பல வேதனைகளைப் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். நாங்கள் ஆட்சி செய்த காலத்திலே செய்யப்படாத, திட்டமிடாத காரணத்தாலே இந்த நிலைமைகளுக்கு ஆளாகியதாக எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் அவர்கள் குறிப்பிட்டார்கள், தி.மு.கவினுடைய அரசாங்கம் மாற்றப்பட்டு 8 ஆண்டுக்காலம் ஆகிவிட்டது. 8 ஆண்டுக்காலமாக நீங்கள் பொறுப்பிலே இருக்கிறீர்கள். 8 ஆண்டுக் காலத்திலே ஏன் இந்தச் சாதனையைச்



செய்யவில்லை என்று சொன்னால், நீங்கள் திரும்ப, தி.மு.க. தான் செய்யவில்லை, எனவேதான் நாங்கள் செய்ய முடியவில்லை என்று சொல்வது உங்களுடைய இயலாமையை, உங்களுடைய திறமையற்ற நிலைமையை இது எடுத்துக் காட்டுவதாகத்தான் இருக்கிறது என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன்.

அதைப்போலவே நேற்றையதினம் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் அவர்கள் சொன்னார்கள். சமயநல்லூர் அனல் மின் நிலையத்தை சமயம் பார்த்து விற்று விட்டீர்கள் என்று போகிற போக்கிலே ஒரு குறைபாட்டை சொன்னார்கள். நாங்கள் விற்றுவிட்டோம் என்பதை இந்தச் சபையிலே நீங்கள் பலமுறை சொல்லி, உங்களால் பேசப்பட்டதை நாங்கள் கேட்டோம், நான் இப்போதும் தெரிவித்துக் கொள்கிறேன். கறக்காத மாடு அது, வீண் அடைந்து போனது. பழுதடைந்த இயந்திரத்தை விற்றுவிட்டதால், நீங்கள் அதிலே குறைபாடு உள்ளது என்றும், லஞ்சம் வாங்கிவிட்டோம் அல்லது அதிலே ஊழல் செய்துவிட்டோம் என்றும் குறிப்பிடுகிறீர்கள். இதையே 8 ஆண்டுக்காலமாக சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள். உங்களிடம் அரசாங்கம் இருக்கிறது. அதிகாரம் இருக்கிறது. அதன் மீது நடவடிக்கை எடுக்க உங்களால் ஏன் முடியவில்லை என உங்களைப் பார்த்து நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த நேரத்திலே அமைச்சராக இருந்த பலபேர்கள் தி.மு.க.- விலே இருந்த காரணத்தாலே உங்களால் நடவடிக்கை எடுக்க முடியவில்லையா? என நான் கேட்க விரும்புகிறேன்.

அது மாத்திரம் அல்ல. பேசின் பிரிட்ஜ்—லே 8 மெகா வாட் கூட இன்றையதினம் உற்பத்தியாகவில்லை. அதை வைத்துக் கொண்டு நீங்கள் ஏன் கட்டி அழவேண்டும். அதை விற்று விட வேண்டியதுதானே? அதை விற்றுவிடுவதற்கு நீங்கள் தயாராகவில்லை. ரயில்வேக்கு பல இடங்களை வாடகைக்குக் கொடுத்து பல லட்சம் ரூபாய் அளவிற்கு நாம் இழந்து கொண்டு இருக்கிறோம். அங்கே எட்டிலிருந்து 10 மெகா வாட் வரைதான் — வருடத்திற்கு 86 மெகாவாட் — உற்பத்தியாகிறது. அதை விற்றுவிடவேண்டியதுதானே? அதை விற்றுவிடுவதற்கு ஏன் அஞ்சுகிறீர்கள்? அது நகரின் நடுவிலே இருக்கிற காரணத்தாலே 10 லட்சம் மக்கள் பாதிக்கப்படுகின்ற நிலைமை ஏற்படுகிறது. எனவே நீங்கள் திரும்பத் திரும்ப ஊழல் என்று சொன்னால்தான் அது பத்திரிகையிலே வரும், அல்லது எங்களைச் சுட்டிக்காட்டுகின்ற காரணத்தால், நீங்கள் செய்வது எல்லாம் நியாயமாகிவிடும் என்ற காரணத்தால், இப்படிச் சொல்வதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். காரணம் ஊழலைப் பற்றி பேசுகின்ற தகுதியை நீங்கள் இழந்துவிட்டீர்கள். நாங்கள் சொல்கிறபோது, நீங்கள் ஆதாரம் இருக்கிறதா? என்று சபாநாயகர் அவர்கள் பல நேரங்களிலே குறுக்கிடுகிறார்கள். சமயநல்லூரில் விற்றதற்கு, அது தவறு என்பதற்கு என்ன ஆதாரத்தை நீங்கள் கையிலே வைத்துக்கொண்டு பேசுகிறீர்கள்?

ஆதாரம் இல்லை. போகிற போக்கிலே சொல்கிறீர்கள். 8 ஆண்டுக்காலம் எங்களுடைய முதல்வர் எம்.ஜி.ஆர், இந்த நாட்டை ஆள்கிறார். புனிதமானவர், புத்தரைப் போன்றவர், நீதியானவர் என்றெல்லாம் பேசுகிறீர்கள். உங்களைப் பார்த்து நான் கேட்கிறேன்.

திரு இரா. முத்தையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமயநல்லூரிலேயிருந்த அனல் மின்சாரத்தை விற்றது ஒரு தவறான அடிப்படையில்தான் என்பதை இந்த் மன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற பொது நிறுவனங்கள் குழுவினுடைய அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே அதை விற்றது தப்பு என்பதற்கு என்ன ஆதாரத்தை வைத்துக்கொண்டு பேசுகிறீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பது பொருந்தாத கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் சமயநல்லூர் அனல் மின்சாரத்தை விற்றதால், இன்றைக்கு 2 மாவட்டங்கள், குறிப்பாக, மதுரை, இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு இன்றைக்கு சொல்ல முடியாத அளவிற்கு துயரத்தைக் கொடுத்த அரசாங்கம், அன்றைக்கு இருந்த தி.மு.க. அரசாங்கம்தான் என்பதை மீண்டும் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினருக்கு உங்கள் மூலமாக வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உறுப்பினர் சுமத்திய குற்றச்சாட்டை நாங்கள் 1977-லேயிருந்து கேட்டுக்கொண்டு இருக்கிறோம். அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? நாங்கள் அதை விற்றுவிட்டதாகச் சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள்? உங்கள் அரசாங்கத்திலே நீங்கள் செய்கின்ற தவறுகளை நாங்கள் சுட்டிக்காட்டுகிறபோது, ஆதாரம் இருக்கிறதா? ஆதாரம் இருக்கிறதா? என்று கேட்கிறீர்கள். பொது நிறுவனங்கள் குழுவின் மூலம் மின்சார வாரியத்தைப் பற்றி, ஆடிட்டர் ரிப்போர்ட்லே தந்திருக்கிற பல்வேறு குற்றச்சாட்டுக்களை நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா? அந்த தவறுகளுக்கு இந்த அரசாங்கம்தான் காரணம் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? எனறு கேட்க விரும்புகிறேன்.

அதேபோல் பல்வேறு குற்றச்சாட்டுக்களைப்பற்றி, பல கமிஷன்கள் மூலம், இன்றைக்கு இருக்கின்ற அரசாங்கத்தின் மீதும், கடந்த கால அரசாங்கத்தின் மீதும் சொல்லப்பட்டு இருக்கிறது. அவைகள் பழுதடைந்தது, தேவையில்லை. அதிகாரிகளுடைய ஆலோசனையைப் பெற்று விற்றிருக்கிறார்கள். அதிலே ஆட்சேபணை இல்லை. 8 ஆண்டுக்காலமாக ஆட்சி செய்கிறீர்கள். எவ்வளவு குற்றச்சாட்டுக்களை நீங்கள் போட்டு இருக்கிறீர்கள். அந்தக் குற்றச்சாட்டுக்கள் மீது என்ன நடவடிக்கை உங்களால் எடுக்க முடிந்தது? நாங்கள் ஊழல் என்றால் ஏன் உணர்ச்சி வசப்படுகிறீர்கள்? ஆரவாரப்படுகிறீர்கள் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு).



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனவே இந்த நிலைமைகளை எல்லாம் நீங்கள் அருள்கூர்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்றையதினம் நம்முடைய பொது நிறுவனங் களுடைய குழுவின் தலைவர் அவர்கள் சில அறிக்கைகளை வைத்தார்கள். அந்த அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டு இருக்கிற அல்லது சொல்லப்பட்டு இருக்கிற காரியங்களை நிவர்த்திச் செய்து வருகின்ற அரசினுடைய கடமை அல்லவா? அதற்கு யார் காரணமோ அவர்கள் மீது நீங்கள் எடுத்த நடவடிக்கை என்ன? கருணாநிதி ஊழல் செய்தார், கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஊழல் செய்தார்கள் என்று பட்டியல் போட்டுக் கொண்டு இருக்கிறீர்களே தவிர உங்களைப் பார்த்து நான் பணிவோடு பேரவைத் துணைத்தலைவர் அவர்கள் மூலமாக கேட்டுக் கொள்ளுவது 8 ஆண்டுகளாக நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள்? உங்களால் முடியவில்லை. காரணம் 8 ஆண்டுகளிலே நீங்கள் செய்து இருக்கின்ற குற்றச்சாட்டுகளுக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டிய இடத்தில் வந்து கொண்டு இருக்கிறீர்கள், என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதிகாரிகளைப் பற்றி சொன்னால் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அவசரப்படுகிறார், ஆத்திரப்படுகிறார், வாரியத் தலைவருக்கும், அமைச்சருக்கும் சரியான உடன்பாடு இல்லை என்று நான்..

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேரமோ மிகவும் குறைவு. மாண்புமிகு உறுப்பினர்கள் மின்வாரியம் திறமையான முறையில் இயங்குவதற்கு என்ன என்ன ஆலோசனைகள் இருக்கின்றனவோ அவைகளை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குற்றச்சாட்டுகள், அல்லது வாதங்கள் அல்லது பிரதிவாதங்கள் என்று வருமானால் அதற்கு இன்றைக்கு உண்மையிலேயே நேரம் போதாது. ஆக சுருங்கச் சொல்லி விளங்க வைக்கவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நிர்வாகத்தில் எந்த தகராறும், குறைபாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசனைகளை அவர்கள் அளித்த விளக்கப் புத்தகத்திலே கொடுத்து இருக்கிறார்கள். உள்ளபடியே எந்த மானியத்திலும் கடந்த ஆண்டில் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு பதில் கொடுத்தது கிடையாது. ஆனால் இதில் பதில் கொடுத்து ஒரு அறிக்கையை சமர்ப்பித்து இருக்கிறார்கள். அது உள்ளபடியே வரவேற்கக் கூடிய செயல் ஆகும். குற்றச்சாட்டுக்களைச் சொல்கிறோம் என்று சொல்வதைக் காட்டிலும் 8 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த அரசைப் பற்றி நீங்கள் மீண்டும் மீண்டும் எந்த மானியத்தில் பேசினாலும் அதையே பேசிக்கொண்டு இருக்கிறீர்களே அது நியாயம் தானா என்பதை நீங்கள் அருள் கூர்ந்து எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் ஏராளமான காண்டிராக்டர் முறையின் காரணமாக அங்கே பாதிக்கப்படுகின்ற நிலைமைகளைப் பார்க்கிறோம். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு சாதனையை செய்து இருக்கிறார். அதை நான் உளளபடியே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பார்பர் சாப் முதல் ஐவுளி கடை வரையில் எல்லா இடங்களிலும் ஜெனரேட்டர்கள் வந்திருக்கிறது. காரணம் என்ன என்றால் நீங்கள் அளித்து இருக்கின்ற உங்களுடைய வாரியத்தின் மூலம் தரப்படுகின்ற மின் சக்தி போதாது என்பதற்காக உற்பத்தி செய்து தான் தீரவேண்டும், தங்களுக்கு செலவு அதிகம் ஆனாலும் சரி என்று நிலைமையில் இன்றையதினம் வந்திருக்கிறார்கள். அதுபோன்ற நிலைமையை தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏறத்தாழ 1 லட்சத்து 7 ஆயிரம் பேர் இருந்த இந்த மின் வாரியத்தில் இன்றைய தினம் 80 ஆயிரம் பேர் தான் இருக்கிறார்கள். இன்னும் அதை 60 ஆயிரம் பேராக குறைப்பதற்கு அந்த வாரியம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறது என்று அறிகிறேன். அந்த நிலைமை மிகவும் மோசமான நிலைமை ஆகும்.

அதேபோல் கிராமங்களில் இருக்கின்ற நிலைமைகளை நீங்கள் அருள் கூர்ந்து பார்க்கவேண்டும். அங்கே ஒரு ஒயர்மென் 50 மின் விளக்குகளைப் பார்த்துக்கொண்டு இருந்தான். ஆனால் இன்றையதினம் அவன் 2 ஆயிரம் விளக்குகளைப் பார்க்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதன் காரணமாக எங்கேயும் தெரு விளக்குகள் எரியாத நிலைமைகள் இருக்கின்றன.

தெரு விளக்குகளை உள்ளாட்சித் துறை ஏற்றுக்கொள்ளுவதான ஒரு நிலையை அறிவித்து இருக்கிறார்கள். நான் பத்திரிகையில் பார்த்தேன். உங்களைப் பார்த்து நான் கேட்டுக்கொள்கிறேன். 1976 ஆம் ஆண்டுக்கு முன்னாலே கொண்டு வரப்பட்டு தோல்வி அடைந்த திட்டம் அது. மின் வாரியத்தில் இருக்கிற கம்பங்களின் மேல் யார் ஏறுவது, உள்ளாட்சித் துறை ஊழியர்கள் ஏற முடியாது. அவர்கள் வாங்கிக்கொடுக்கின்ற பொருட்கள் தரமானதா என்று உள்ளாட்சித் துறையில் இருக்கின்ற அதிகாரிகளுக்கு தெரிய வாய்ப்பில்லை. எனவே அந்த நோக்கத்தை நீங்கள் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் ஊழியர்களை குறைக்கின்ற அதே நேரத்தில் 5 பேர் தலைமை பொறியாளர் இருந்த நிலைமையை மாற்றி தற்போது 12 பேரை போட்டு இருக்கிறீர்கள். அதேபோல் முன்பு மேற்பார்வை பொறியாளர்கள் 16 பேர் இருந்தார்கள். இன்றையதினம் 70 பேரை போட்டிருக்கிறீர்கள். இப்படி பெரிய அதிகாரிகளை பார்வையிடுகிற அதிகாரிகளை அதிகப்படுத்துகிற அதேநேரத்தில் ஊழியர்களைக் குறைப்பது நியாயமான காரியமாக இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





இங்கே நம்முடைய மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு சிந்தன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல தொழிலாளர்கள் உரிமைகளை பறிக்கிறீர்கள், அவர்களுடைய கோரிக்கைகளை புறக்கணிக்கிறீர்கள். அவைகளை தீர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு எல்லாம் ரகசிய குறிப்பேடு இருந்தது. எப்படி அதை வைக்கக்கூடாது என்ற ஒரு முறையை ஏற்படுத்தினோமோ அந்த நிலைமையை மாற்றி தற்சமயம் பிக் அண்டு சூஸ் என்ற வகையில் உங்களுக்கு தேவை இல்லாதவர்களை நீங்கள் பழிவாங்கவேண்டும் என்று கருதுபவர்களை பலயிடங்களுக்கு மாற்றிவிடுகின்ற நிலைமையைப் பார்க்கிறோம்.

(முற்பகல் 11–40)

அதன் காரணமாக கணவன், மனைவியை விட்டுப் பிரிகின்ற நிலைமைகள். முதலமைச்சரே கணவனையும், மனைவியையும் பிரிக்கக்கூடாது என்று சொன்னார். அதையும் மீறுகின்ற நிலையில் 'பிக் அண்டு சூஸ்' நிலைமையில் செயல்பாடு இருக்கிறது. அவைகளை மாற்றவேண்டும், என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

1969 ஆம் ஆண்டு, 1974 ஆம் ஆண்டு, 1974–79 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஒப்பந்தத்தைப்போல், இன்றையதினம் 1984–வது ஆண்டு, நவம்பர் 30—உடன் ஒப்பந்தம் முடிந்துவிட்டது. 1984–ஜூனிலிருந்து பேசப்பட்டு வருகிறது. இன்னும் முடிக்கப்படவில்லை. அதை உடனடியாக தீர்த்து அங்கே இருக்கின்ற தொழிலாளிகளுக்கு 3 ஆண்டுக் கால ஒப்பந்தமாகக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

யார், யாருக்கோ, இலவச மின்சாரம் நாங்கள் தருகிறோம், குடிசைகளுக்கு அங்கே வாழ்கிறவர்களுக்கு தருகிறோம்: விவசாயத்திற்குத் தருகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், அந்தத் துறையிலே பணியாற்றக்கூடிய மின்சார ஊழியர்களுக்கு நிச்சயமாக இலவச மின்சாரத்தை வழங்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. ஆ. நடராசன்: துணைத் தலைவர் அவர்களே, எனக்கு இன்னும் இரண்டு நிமிடங்கள் அனுமதி கொடுங்கள். சில பிரச்சினைகள் பேசவேண்டியதிருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, பேசுவதைவிட, அவர் கையில் உள்ள விவரங்களை என்னிடத்திலே கொடுத்து விடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; நேரம் ஆகிவிட்டது. எனவே, அமைச்சரிடம் கொடுத்துவிடுங்கள்.

திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்திலே இன்றைக்கு மின் வாரியத்திலே 2 நாட்களாக மாண்புமிகு அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களை எல்லாம் இங்கே பொதுவாக வழங்கி இருக்கிறார்கள்.

முன்னாலே நடந்த காங்கிரஸ் பேரியக்கத்தின் அரசு பல திட்டங்கள் தீட்டி, மின் உற்பத்தி நிலையங்கள் எல்லாம் உற்பத்தி செய்தார்கள். அதற்குப் பின்னாலே வந்த அரசுகள், அதை எடுத்து, 6 இலட்சம் பேருக்குக் கொடுத்தால், 10 இலட்சம் பேருக்கு பங்கு போட்டு கொடுத்தோம் என்று சொன்னார்களே தவிர, அந்த உற்பத்தி நிலையங்களை உற்பத்தி செய்வதற்கான திட்டங்களை அவர்கள் ஆக்கவில்லை.

பிறகு, இந்த அரசு வந்தும் கூட, ஒரு 5 ஆண்டுத் திட்டத்திற்குப் பிறகு தான், பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, இன்றைக்கு பல உற்பத்தி செய்கின்ற திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன.

ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் மின்சாரப் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. மத்திய அரசாங்கத்தாலே இங்கே வந்து ஏற்படுத்தப்பட்ட நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திலே அன்றைக்கு 630 மெகாவாட் என்று சொன்னால், 1–வது சுரங்கம், 2–வது சுரங்கம் வந்து, 1250 மெகாவாட் என்று இப்படி அதிகப்படியாக உற்பத்தி பண்ணுகிறார்கள். குறைந்த செலவில் அந்த மின்சாரம் அங்கே உற்பத்தி செய்யப்படுகிறது.

அந்த மின்சார உற்பத்திக்காக, என்னுடைய தொகுதியிலே இருக்கிற பொதுமக்கள், நிலமும், வீடும் கொடுத்து உதவி இருக்கிறார்கள். ஆனால், நிலம், வீடு கொடுத்த பின்னாலே, அவர்களுக்கு நியாயமான விலை நிர்ணயம் செய்யப்படவில்லை. ஆனால், வசதி படைத்தவர்கள் கோர்ட்டுக்குச் சென்று, கோர்ட்டிலே வாதம் நடத்தி, ஒரு ஏக்கருக்கு 20 ஆயிரம், 30 ஆயிரம் என்று வாங்கிவிட்டார்கள்.

ஆனால், என்னைப் போல ஏழை அப்பாவிகள் 3 ஆயிரம், 5 ஆயிரம் என்று வாங்கிக் கொண்டு அந்த நிலத்தை ஒப்படைத்தார்கள். இன்றைக்கு 1,2,3 என்று சுரங்கங்கள் உயர்ந்து கொண்டே போகின்றன. அங்கே நிலம் கொடுக்கப்பட்டு, என்னுடைய தொகுதியிலே காலி-ஆகப் போய்விட்டது. 1,2–வது சுரங்கம் வந்து, இன்றைக்கு மூன்றாவது சுரங்கத்திற்குத் திட்டம் தீட்டி நில ஆர்ஜிதம் செய்து கொண்டிருக்கிறார்கள்.



ஆனால் அதற்காவது, அரசு இப்போதே திட்டம் இட்டு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நியாயமான அந்த நில விலை ஆர்ஜிதம் செய்யும்போது செய்யவேண்டும் என்று உங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே, அங்கே நிலம் கொடுக்கக்கூடிய அந்த விவசாயிகளுக்கு, வீடு கொடுப்பவர்களுக்கு, மத்திய அரசாங்கம் ஒரு நிறுவனத்திற்கு அது ஆரம்பிப்பதற்கு நிலம் கொடுத்தால் அந்த நிலம் கொடுத்தவர்களுடைய குடும்பத்தினருக்கு அந்த நிறுவனத்தில் வேலை கொடுக்கவேண்டும் என்பது சட்ட விதி என்று ஏற்கனவே ஆணையில் குறிப்பிட்டு இருக்கிறது.

அந்த அடிப்படையிலே மாண்புமிகு தமிழகத்தினுடைய மின் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கனவே இந்த அரசு சார்பிலே, என்.எல்.சி.யுடன் முன்பு பேச்சுவார்த்தை நடந்தபொழுது, நிலம் கொடுத்தவர்களுக்கு 60 சதவீதம் வேலைவாய்ப்பு கொடுக்கப்படும் என்று உறுதிமொழி கொடுக்கப்பட்டது. அப்படி உறுதிமொழி கொடுத்தும்கூட, இன்றுவரையிலேயும் அந்த விவசாயக் குடும்பங்களுக்குச் சொன்ன வாக்குறுதியை அந்த நிறுவனம் நிறைவேற்றவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அந்தப் பகுதியிலே மின் நிலையம் உருவானதற்குப்பிறகு, தன்னூற்றுக்கள் போய்க்கொண்டிருந்த பகுதிகளில், அதன் மூலம் தண்ணீர் பாய்ந்துகொண்டிருந்த நிலங்களுக்குத் தண்ணீர் போதுமான அளவிற்குக் கிடைக்கவில்லை. 300 அடி, 400 அடி ஆழத்திற்குக் கீழே தண்ணீர் போய்விட்ட காரணத்தினால் குடி தண்ணீருக்குக்கூட வசதியில்லாமல் தண்ணீர் கீழே போய்விட்டது. இதன் காரணமாக, வண்டி கட்டிக்கொண்டு போய் அடுத்த இடத்திற்குப் போய் தண்ணீர் கொண்டு வந்து குடிக்கின்ற நிலைமையில் இருக்கிறோம். எனவே அந்த மின் நிலையம், அதைச் சுற்றியுள்ள 20 மைல், 30 மைல் சுற்றுபுறத்திற்கு 24 மணி நேரமும் மின் சப்ளையைக் கொடுக்க வேண்டும் என்கின்ற என்னுடைய திட்டத்தை உங்கள் மூலமாக அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் பகுதியில் குடிதண்ணீருக்கான தண்ணீர் கீழ் மட்டத்திற்குப் போனது என்பது மட்டுமல்ல, 30 மைல், 40 மைல் சுற்றுப்புறத்தில் உள்ள தண்ணீர் 300 அடி, 400 அடிக்குக் கீழே போவதால், மின்சாரமும் 4 மணி நேரமோ 3 மணி நேரமோ மட்டும் கிடைப்பதால் உழவுத் தொழிலைச் சரியான முறையில் செய்ய முடியவில்லை. இவ்வாறு தண்ணீர் வற்றி விடுகின்ற நேரத்தில் மின்சாரப் பைப்புகளைப் போட்டு நீர்த்தேக்கத்திலேயிருந்து தண்ணீரை எடுக்க வேண்டுமென்றால் கிட்டத்தட்ட ஐயாயிரம் ரூபாய், பத்தாயிரம் ரூபாய் என்று ஆகிவிடுகிறது. ஆகவே அந்த நிறுவனத்திடம் சொல்லி சுற்றுபுறத்தில் உள்ள 30 மைல், 40

[திரு. ஆர். தியாகராசன்] [1985 ஜூலை 19

மைல் அளவிற்கு தனியாக டிரான்ஸ்ஃபார்மர் அமைத்து 24 மணி நேரமும் கரண்ட் கொடுக்க வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம், இந்தத் தமிழகத்திலே இருக்கின்ற மின் நிலையங்கள் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தினைத் தமிழகத்திற்குத்தான் கொடுக்க வேண்டுமென்ற அளவிற்குப் பேசினார்கள். அப்படி மத்திய அரசிடமிருந்து வாங்க வேண்டுமென்று உரிமையோடு பேசினார்களே, அதையே பின்பற்றி நானும் சொல்கிறேன். என்னுடைய தொகுதியிலே 1, 2, 3 சுரங்கங்கள் உண்டாவதால் சுற்றியுள்ள பகுதிகளுக்குத் தனி டிரான்ஸ்ஃபார்மர் வைத்து 24 மணி நேரமும் கரண்ட் கொடுக்க வேண்டுமென்று உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தக் கரண்ட் கொடுக்கப்படுவதைப் பொறுத்தவரையில் விவசாயிகளின் நிலைமை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. எந்த நேரத்தில் எவ்வளவு கரண்ட் இருக்கிறது என்று தெரியாமல் 6 மணி நேரம் என்றால் 4 மணி நேரம்தான் கரண்ட் கிடைக்கிற நிலையில், விவசாயம் பாதிக்கப்படுகிறது. காலம் குறைவாக இருப்பதால் நான் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் துணை மின் திட்டங்களை நிறைய அளவிற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த அமைச்சரவர்களை, ஏ.ஈ.—ஆக இருந்த காலத்திலேயிருந்தே 1960—லேயிருந்தே சாதாரணமாக நான் அறிவேன். அவர்கள் மின் துறையில் நல்ல திறமை வாய்ந்தவர்கள். அவர்கள் அதற்காகவே படித்துப் பட்டம் பெற்றவர்கள். இவர்கள் காலத்திலே தமிழகத்திலே மின் உற்பத்தியில் தன்னிறைவு பெறவில்லை என்றால் உண்மையிலேயே அது ஒரு பெரிய தமிழகத்தினுடைய போதாத பாவ காரியம் என்று நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட நல்ல காரியங்களை நல்ல திறமையோடு, வெளிநாடுகளுக்குச் சென்று, அவர்கள் புதுமையான திட்டங்களைத் தெரிந்து கொண்டு, கடல் அலையிலேயோ அல்லது வேறு எதிலேயோ மின்சாரத்தை இந்த ஆண்டுக்குள்ளே உற்பத்தி செய்ய வேண்டும், நெய்வேலியிலேயே கரி வெட்டுகிறார்கள். அதை வாங்கிக்கூட 100 மெகாவாட் திறன் கொண்ட பிரிவைத் துவக்கலாம். தமிழக அரசு தன்னுடைய தனிப் பெரும் திறமையினால், குறைந்த விலைக்கு அந்த நிலக்கரியை நிறைய தருகிறார்கள்—அதை வாங்கி உற்பத்தி செய்யக்கூடிய திட்டத்தைத் தீட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில் இன்றைக்கு மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்குத் திட்டம் தீட்டி, முழு நேரமும் விவசாய உற்பத்திக்கு மின்சாரம் கொடுப்பதற்கு அமைச்சரவர்கள் உறுதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுதுதான் உணவுஉற்பத்தியிலே நாம் தன்னிறைவு பெற முடியும். உணவு உற்பத்திக்கு அவசியமான நீர்ப்பாசனத்திற்கு கரண்ட் மிகவும் அவசியம் எனவே, அந்தக் கரண்ட்



1985 ஜூலை 19] [திரு. ஆர். தியாகராசன்]

இல்லாமல் உழவுத்தொழிலை செய்யமுடியாது. நீங்கள் எவ்வளவோ செய்திருக்கிறீர்கள்; 75 ரூபாயாக இருந்ததை 50 ரூபாயாக ஆக்கப் போகிறீர்கள், நல்ல காரியங்கள் எல்லாம் செய்யப் போகிறீர்கள், ஒரு போஸ்ட் என்றெல்லாம் கொடுத்து இருக்கிறீர்கள். நான் நிறையக்கூட கேட்கவில்லை, மூன்று மாதங்களுக்காவது முழுவதுமாகக் கொடுத்து விடுங்கள்.

(முற்பகல் 10–50)

ஒருசில சமயங்களிலே, குறிப்பிட்ட அந்தக் காலங்களிலே கரண்ட் கொடுக்க முடியாத சூழ்நிலையில், பயிர்கள் காய்ந்து, பயிர் வைக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. முன்னாலேயே சொல்லி விட்டால் பரவாயில்லை' நான் உங்களை நம்பி வைத்து பிறகு பயிர் காய்ந்து விடுகின்றது. அதனாலே நட்டம் ஏற்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்கிறேன்.

நெய்வேலி கரங்கம் சுற்றி தனி டிரான்ஸ்பார்மர் வைத்து, எங்களுக்குக் கரண்ட் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

நெய்வேலி சுரங்கம் வெட்ட, நிலம் கொடுத்தவர்களுக்கு வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு சொல்லிய சட்டத்திட்டத்தின்படி எந்த நிறுவனமாக இருந்தாலும், அந்த நிறுவனம் நிலம் ஆர்ஜிதம் செய்யும் போது, நிலம் கொடுத்தவர்களுக்கு, வேலை கொடுக்க வேண்டும். அதில், சிறு விவசாயிகள் பெரு விவசாயிகள் என்று வித்தியாசம் பார்க்காமல், எங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும்

அடுத்தது, பணம் படைத்தவர்கள், தங்கள் நிலங்களுக்கு, வழக்கு, தொடுத்து, ரூ.30,000 கூட, வாங்கியிருக்கிறார்கள். ஆனால், மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும்' நிலம் உவந்து கொடுத்தவர்களுக்கு ரூ. 3,000, ரூ. 5,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மூன்றாவது சுரங்கம் எடுக்கும்போது ஏழை பணக்காரன் என்று பார்க்காமல் நில விலையை வாங்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரிஷிவந்தியம் தொகுதியில் திருக்கோவிலூரில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டு, அதற்காக நிலம் வாங்கப்பட்டு அங்கே எந்த வேலையும் தொடங்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதை உடனடியாகக் கட்டி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

டாக்டர் அ. பொன்னுசாமி: பெருமை பெற்ற பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, நம் வாழ்விலும், நம் நாட்டின் வளத்திலும் நீக்கமற நிறைந்திருக்கின்ற, ஏன் இதயம் துடிப்பதற்கும் மூளை வேலை செய்வதற்கும் காரணமாக இருக்கின்ற மின் சக்திப் பற்றி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் தமிழக முதல்வரின் அரசு கொண்டு வந்துள்ள நிதிநிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி.

மிகக் குறைந்த செலவிலே தயாரிக்கப்படும் புனல் நீர் மின் சக்தியை, பெரிய நீர்த் தேக்கங்களிலிருந்தும், சிறு நீர்த் தேக்கங்களிலிருந்தும் தயாரிக்கத் திட்டங்கள் தீட்டி செயல்படும் அரசை நாம் பாராட்டுகின்றோம். திட்டங்கள் தீட்டினால் மட்டும் போதாது. தீட்டிய திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்ற புரட்சித் தலைவரின் எண்ணப்படி செயலாற்றிடும் மின் துறையை நாம் போற்றுகின்றோம்,

பாண்டியாறு, புன்னம்புழா திட்டம், ஒகேனக்கல் நீர்மின் திட்டம், Of course in the interest of the States, the inter-state projects should be implemented immediately இதற்காக துரித நடவடிக்கைகளை எடுத்து வரும் அரசைப் பாராட்டுகின்றோம். சிறிய நீர் வீழ்ச்சிகளிலே இருந்து, குறிப்பாக, கொல்லிமலை, கொடைக்கானல், கல்வராயன் போன்ற திட்டங்களை ஆய்வில் உள்ள திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற இருக்கும் அரசைப் பாராட்டுகின்றேன். 10.52 இலட்சம் பம்ப்செட்டுகளுக்கு மின்சக்தி வழங்கி நம் நாட்டிலே முதன்மையாக விளங்கும் அரசைப் பாராட்டுகிறேன். இந்த 10½ இலட்சம் பம்பு செட்டுகளிலே இருந்து வெளிவரும் தண்ணீரின் வேகத்தைப் பயன்படுத்தி மின் சக்தி தயாரிக்க முடியுமா? அது சாத்தியமானதா என்பதை அரசு ஆய்ந்திடல் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புனல் பொய்த்து விட்டால் நாம் நம்பியிருப்பது அனல் மின்சாரம்தான். இதனை நன்குணர்ந்த அரசு மேட்டூரிலே அமைய இருக்கின்ற திட்டத்தினையும் நெய்வேலியிலே அமைய இருக்கின்ற திட்டத்தினையும் விட சென்னையிலே, கடலூரிலே அமைய இருக்கின்ற திட்டத்தினை இப்போது இயங்கி வருகின்ற இடங்களில் மின் நிலையங்களை விரிவாக்கிடும் திட்டங்களையும் துரிதப்படுத்தி உடனடியாக நமது பற்றாக்குறையைப் போக்குவதற்கு அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு நமது பாராட்டுகள் உரித்தாகும்.

குறிப்பாக புனல் மின்சாரம் பொய்க்கின்ற கால கட்டத்திலே தான் அனல் மின்சார நிலையங்களில் கோளாறுகளும் குளறுபடிகளும் வருகின்றன.

புனல் மின்சாரம் நன்றாக இருக்கின்ற கால கட்டத்திலேயே இவைகளைப் பழுதுபார்த்து தயார் நிலையிலே வைத்து அரசு ஆவன செய்ய வேண்டும். இதற்குத் தேவையான நிலக்கரி நல்லதாக இருக்க வேண்டும். அதுவும் பற்றாக்குறையில்லாமல்



தொடர்ந்துகிடைத்திடல் வேண்டும், என்பதற்காக போக்குவரத்துக் கப்பல்கள் வாங்க இருக்கும் அரசை நாம் பாராட்டுகின்றோம்.

புனல் பொய்த்து அனல் அகன்றுவிட்டால் நாம் நம்பி இருப்பது அணு மின் சக்தி என்பதை உணர்ந்த அரசு கல்பாக்கத்தில் கிடைக்கின்ற மின்சக்தி முழுவதும் நமக்குக் கிடைக்க வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்துகின்றது, பாராட்டுக்கள்.

சூரிய ஒளி, கடல் வெப்பம், காற்று, கழிவு இவைகளைக் கொண்டு மின்சக்தி தயாரிக்கும் சாத்தியக் கூறுகளை ஆய்ந்து நடவடிக்கைகளை எடுத்துவரும் அரசை நாம் பாராட்டுகின்றோம்.

மின்சாரத்தைக் கொண்டுவரும் வழியிலே ஏற்படும் மின் இழப்பை குறைக்க வேண்டும்: மின் திருட்டை நிறுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

15,735 கிராமங்களில் 15,706 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கியுள்ளோம். 10.52 இலட்சம் பம்பு செட்டுகளுக்கும் குடிலுக்கு ஓர் ஒளி விளக்கு, அதுவும் இலவச மின்விளக்கு என்னும் திட்டத்தில் 6.52 இலட்சம் விண்ணப்பங்களுக்கு வழங்கியுள்ள இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

ஐந்து ஏக்கர் புஞ்சை அல்லது 2½ ஏக்கர் நஞ்சை நிலம் படைத்தவர்க்கெல்லாம் இலவச மின்சாரம். அதற்கு மேல் நிலம் படைத்தோருக்கு ஒரு குதிரைத் திறனுக்கு 75 ரூபாயாக மின்சாரம் வழங்கும் அரசைப் பாராட்டுகிறேன்.

அதேநேரத்தில் 3 ஏக்கர் நஞ்சை வைத்திருந்தால் கூட பரவாயில்லை, அவனுக்கு ஏதாவது சொஞ்சம் விளையும். ஆனால் 6 ஏக்கருக்கும் அதற்கும் மேற்பட்ட புஞ்சை வைத்திருப்பவர்கள் வானம் பார்த்த பூமி படைத்தவர்கள். குறிப்பாக பெருந்துறை, குன்னத்தூர், ஊத்துக்குளி, விஜயபுரி பகுதிகளில் வாழ்கின்ற விவசாயிகள் ஒருசில யூனிட்டுகள் கூட ஓட்டுவதில்லை. முற்காலத்திலே மினிமம் சார்ஜ் கட்டிக்கொண்டு வந்த விவசாயிகள் காடுகளுக்குக்கூட கந்தாயம் கட்ட முடியாத நிலையிலே உள்ள தாழ்ந்த நிலை விவசாயிகள் 375 ரூபாய் முதல் 750 ரூபாய் வரை கட்ட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவரின் அரசு இந்த ஏழை எளிய விவசாயிகளையும் எண்ணிப்பார்த்து, அதைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு அளிக்கப்படுகின்ற மின்சாரத்தை பகலிலேயே வழங்க வேண்டும். கிராமங்களில் 4 அடி நீளமுள்ள டியூப் லைட்டுகளைப் போடவேண்டும். ஆழ்குழாய் கிணறுகள் உள்ள இடங்களில்எல்லாம் மின் விளக்குகள் அமைத்திட வேண்டும்.

வருவாய் குறைந்த ஊராட்சிகள், பேரூராட்சிகள் சில நேரங்களில் மின்சாரக் கட்டணத்தைக் கட்ட முடியாமல் போனாலும் மின் வெட்டு செய்யாமல், கிராமங்கள் இருளில் மூழ்கிவிடாமல் இருக்க, தொடர்ந்து மின்சாரம் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கிராமப்புறத் தொழில்கள் சிறந்து விளங்க மின் துண்டிப்போ அல்லது மின் குறைப்போ இல்லாமல் கிடைக்க, தனி இணைப்பு வழங்கிட வேண்டுகிறேன்.

மின்சக்தியிலே தன்னிறைவு பெற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்துவரும் நடவடிக்கைகளைப் பாராட்டி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் மிகவும் திறமைசாலி என்று பாராட்டத்தான் வேண்டும். ஏனென்றால் இந்த விவாதத்தை சட்டமன்றம் தொடங்கிய ஆரம்பத்தில் வைத்திருந்தால் ஒரு இருண்ட தமிழ்நாட்டைப்பற்றி நாம் விவாதிக்க வேண்டியிருந்திருக்கும், இப்போது இடையிடையே ஒளிவிட்டுக் கொண்டிருக்கிற காலத்தில் இந்த விவாதத்தை நாம் செய்வதற்கு அவர் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்.

மின்சாரத்தினுடைய முக்கியத்துவத்தைப்பற்றி ஆழமாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது. நேரம் மிகக் குறைவாக இருக்கிற காரணத்தால் நானும் மிகக் குறைவாகவே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மேலோட்டமாக அமைச்சர் அறிக்கையைப் பார்க்கிற போது நிர்வாகச் செலவு ஏறத்தாழ 300 கோடி ரூபாய், நாம் செலுத்த வேண்டிய வட்டியையும் சேர்த்து ஆகிறது. வருமானம் 500 கோடி ரூபாயாக இருக்கிறது. ஏறத்தாழ 50 சதவீதம் ஒரு துறையிலே வரக்கூடிய வருமானத்தை செலவிட்ட பின்னால் அதில் என்ன நன்மையான காரியத்தைச் செய்ய முடியும் என்று நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். கிட்டத்தட்ட இந்த மின்சார வாரியத்திற்குத் தேவைப்படுகிற எரிபொருளுக்கு 200 கோடி ரூபாய் செலவிடுகிறோம் என்றும் கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மின்சாரத்தை மற்ற மாநிலங்களிலிருந்து வாங்குவதற்கு 200 கோடி ரூபாய் செலவிடுகிறோம். இந்த நிலையிலே 300 கோடி ரூபாய் வட்டிக்கும் நிர்வாகச் செலவிற்கும் நாம் செலவழிப்பது மிகவும் அதிகம் அல்லவா என்பதைப்பற்றி அமைச்சகம் ஆராய்ந்து அதைக் குறைப்பதற்கு உரிய மார்க்கம் என்ன என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். பல்வேறு நிறுவனங்களிலிருந்து வாங்கிய தொகைக்கு 51 கோடி ரூபாய் வட்டி கொடுத்திருக்கிறோம். அரசு தந்த கடனுக்காகவும் 77 கோடி ரூபாய் வட்டி கட்ட வேண்டியிருப்பது ஒரு நல்ல இனமாக எனக்குப்படவில்லை. அரசிடம் இதை ஏன்





மானியமாகப் பெற்றுக்கொள்ளக்கூடாது? குறைந்த வருவாய் வரக்கூடிய அந்த நிறுவனத்தில் 77 கோடி ரூபாய் அரசுக்கு வட்டியாகச் செலுத்துவதுபற்றி அமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரம் வழங்கும் நிலையங்களில் இன்று இருக்கக்கூடிய நிலைமைகளைப்பற்றி நாம் கவனத்தோடு பார்க்கும்போது எதிர்காலத்தில் இந்த நிலையங்களிலிருந்து அதிகமாக மின்சாரம் பெறுவதற்குரிய கூறுபாடுகள் இல்லை என்று நாம் காண்கிறோம். அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற அறிக்கையில் [illegible]சிறு திட்டங்கள், புனல் திட்டங்கள் இவற்றை நம்பி, கிடைக்கக்கூடிய மின்சாரத்தை வைத்து 8-வது ஐந்தாண்டு திட்டத்திலே நாம் தன்னிறைவுபெற்ற மாநிலமாக வரமுடியும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், ஏன் இந்தியாவே, இந்த பருவமழை நடத்திக் கொண்டிருக்கிற சூதாட்டத்தால் பெரிய பாதிப்புக்கு ஒவ்வொரு ஆண்டும் உள்ளாகியிருக்கிறோம். ஆகவே, இந்த புனல் திட்டங்களை நிறைவேற்றுவதோ, மின்சார உற்பத்தியை அதிகரிப்பதோ சாத்தியமாகும் என்று என்னாலே முழுமையாக நம்பமுடியவில்லை.

(நண்பகல் 12-00)

குறிப்பாக இன்று இருக்கக்கூடிய இந்த மின் வழங்கு நிலையங்களில் பேசின் பிரிட்ஜ் மின் நிலையம் செயலற்றது என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அரசே அந்த அறிவிப்பைச் செய்திருக்கின்றது. ஆனால் அதிலே எரிவாயு மின்நிலையம் தொடங்கப்படுவதற்கான ஒரு சூசகமான கருத்தை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நான் அவர்களிடத்திலே அன்போடு வேண்டிக் கொள்வேன். தயவு செய்து அந்த இடத்தில் இன்னொரு மின் நிலையத்தைத் தொடங்குவதற்கோ அல்லது புதிய மின்நிலையத்தைத் தொடங்குவதற்கோ யோசிக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எரிவாயு மின் நிலையம் தொடங்க வேண்டுமென்றால் நகரத்திற்கு அப்பாலே அதைத் தொடங்குவது ஏற்புடையதாக இருக்கும், வரவேற்கத்தக்கதாக இருக்கும்.

பேசின் பிரிட்ஜ் மின் நிலையம் இருந்த இடம் ஏறத்தாழ சென்னை மாநகரத்தினுடைய மையப் பகுதியில் அமைந்த இடமாகும். இதுநாள் வரையில் அது இருந்த சூழ்நிலையில் அங்கிருக்கும் மக்களெல்லாம் மிகுந்த சுகாதாரக் கேடுகளை உண்டாக்கிக் கொண்டிருந்த நிலைமை மாறி அது செயலற்றது என்று அறிவிக்கப்படக்கூடிய தன்மையிலே அங்கே வாழக்கூடிய மக்களுக்கெல்லாம் மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாக இன்று இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. நேற்று முன்தினம் கூட நாம் இந்த அவையிலே ஒரு சட்டத்தினை நிறைவேற்றி இருக்கிறோம். அரசுக்குச் சொந்தமான நிலங்களை விற்று

வேறு நல்ல காரியங்களுக்கு முதலீடு செய்வதற்கு அனுமதிக்கலாம் என்ற வகையில் ஒரு அனுமதியை இந்தப் பேரவை வழங்கி இருக்கின்றது. எனவே இந்த பேசின் பிரிட்ஜ் இருந்த இடத்தை வீடுகள் கட்டுவதற்காக அரசாங்கம் விற்பதற்கு முன் வந்தால் பல கோடி ரூபாய் அரசுக்கு வருமானமாக வரக்கூடும். அந்த வருமானத்தைக் கொண்டு நகருக்கு வெளிப்புறத்தில் நீங்கள் அமைக்க எண்ணியிருக்கக்கூடிய எரிவாயு மின் நிலையத்தை அமைப்பது மெத்தப் பயன்தரும் என்று சொல்லிக்காட்ட நான் விரும்புகிறேன்.

கல்பாக்கம் அணு மின் நிலையத்திலிருந்து மின்சாரம் பெறுவதில் பலவிதமான இடைஞ்சல்கள் நமக்கு ஏற்பட்டு வருகின்றன. அது மத்திய அரசினுடைய சார்பாக உண்டாக்கப்படுவது என்ற நினைவு எனக்கு இருக்கின்றது. ஆனாலும் கூட அதைப் பெறுவதற்காக 1971–ஆம் ஆண்டு கோரிக்கை வைத்தோம். அந்தக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளாமல் மறுதலித்து வந்த பிறகு இந்த மாமன்றம் ஒட்டுமொத்தமாக ஒரு தீர்மானம் செய்து அதை வலியுறுத்தியதன் அடிப்படையில் தான் இன்று வரக்கூடிய மின்சாரத்தைக் கூட நாம் பெற்றுக் கொண்டு வருகிறோம் என்று சொன்னால் என்னால் இந்த உறவு நிலைமை பற்றி நன்றாகக் கருத முடியவில்லை. கல்பாக்கம் தமிழகத்தினுடைய மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகத்தான் அமைக்கப்பட்டது. ஆகவே தொடக்கத்திலேயே இந்த அணு மின் நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யக்கூடிய எல்லா மின்சாரமும் முழுக்க முழுக்க தமிழகத்திற்குத்தான் ஒதுக்கப்பட வேண்டும் என்று தொடர்ந்து நம்முடைய அரசு வலியுறுத்த வேண்டும்.....

மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர முதல்வர் இதற்கே எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர முதல்வர் அவர்கள் கொஞ்சம் ஆத்திரத்தில் சொல்லக்கூடும். இருந்தாலும் அமைதியாகத் தொடர்ந்து வற்புறுத்தி அதைப்பெற்றே தீர வேண்டும். கல்பாக்கத்தினுடைய முழு மின்சாரமும் நமக்கே, தமிழகத்திற்கே வழங்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கல்பாக்கம் அணு மின் நிலையம் எப்படிச் செயல்படுகின்றது என்பது பற்றி தமிழக அரசும் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது தொடங்கப்பட்ட நாளிலிருந்து அது வேலையற்று இருக்கின்ற நாட்களும், முடக்கப்பட்ட நாட்களும் தான் அதிகமாக இருப்பதாகப் பத்திரிகையில் செய்தியாக அடிக்கடி வந்துகொண்டிருக்கின்றது. ''The very concept of Industry'' அதிலே ஏதாவது தவறு இருக்கின்றதா என்பதைப் பற்றி மத்திய அரசோடு நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும். எப்போது அந்த மின்சாரத்தைப் பெற்று



தமிழகத்திற்கு ஒளி வழங்க முடியும் என்று வருகிறதோ அந்த நேரத்தில் எல்லாம் கல்பாக்கம் மின் நிலையத்திலிருந்து நமக்குக் கிடைக்கவேண்டிய மின்சாரம் கிடைக்கவில்லை என்ற செய்தி தான் அடிக்கடி கிடைக்கின்றது. ஆகவே அந்த கல்பாக்கம் அணு மின் நிலையம் எப்படிச் செயல்படுகின்றது என்பதற்காக தனியாக ஒரு குழு நியமித்து மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெற்று அதிலே ஆராய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இடையிலே பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. நெய்வேலி நிறுவனத்திற்குத் தமிழக அரசு பல்வேறு கோடி ரூபாய் தர வேண்டுமென்று ஒரு அறிக்கையை நெய்வேலி நிறுவனத்தின் அதிபர்கள் தெரிவித்திருந்தார்கள். அப்படித் தெரிவிக்கவேண்டிய அவசியம் அவர்களுக்கு எப்படி ஏற்பட்டது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அது தமிழக அரசுக்குப் பெருமை தேடித் தரத்தக்க செய்தியாக இல்லை. அதைப்பற்றி தமிழக அரசு சார்பாக ஒரு மறுப்பு வந்ததாக நான் பத்திரிகையில் பார்க்க முடியவில்லை.

ஆனால் அதே நேரத்திலே மால்கோ நிறுவனத்திடமிருந்து தமிழ்நாடு அரசுக்கு பல கோடி ரூபாய் வர வேண்டியிருக்கிறது என்று நாம் தொடர்ந்து பலமுறை சொல்லி வருகிறோம். இறுதியிலே கிட்டத்தட்ட அவையெல்லாம் இல்லாமல் ஆகி விட்டதோ என்ற ஒரு சந்தேக உணர்ச்சி கூட இந்த நாட்டிலே காணப்பட்டது. ஆனால் அண்மையிலே அரசு சார்பாக அளிக்கப் பட்ட அறிக்கையில் அந்தத் தொகையை வசூலிப்பதற்கு முயற்சி செய்கிறோம் என்று சொன்னார்கள்.

பல கோடி ரூபாயை ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து பெறுவதற்கு நாம் விட்டு விட்டிருக்கக்கூடிய நேரத்தில், ஒரு அரசு நிறுவனத்திற்கு நாம் தர வேண்டிய தொகையைப்பற்றி வெளியிலே, பத்திரிகையிலே சொல்லிக் காட்ட வேண்டிய அளவுக்கு அவசியம் என்ன நேர்ந்தது என்பதைப்பற்றி நான் தெரிந்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்று மின்சாரத் துறையில் உற்பத்தியைப் பற்றி பேசும் போது விரைவாக மின்சாரத்தை வழங்குவது பற்றியும் அரசு தக்க கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வளவு எல்லாம் சிரமம் இருக்கக்கூடிய நேரத்தில் விண் கேளிக்கைகளுக்கு வெளிச்சம் போட்டு காட்டுவதற்காக எவ்வளவோ மின்சாரம் நாடு எங்கும் செலவழிக்கப்படுகிறது. அதிலே ஒரு கட்டுப்பாடு வரம்பு விதிக்கப்படுமானால் அது நன்றாக இருக்கும். மற்றொன்று, இன்று சென்னை நகரத்திலே போடப்படக் கூடிய கேபிள்கள் எல்லாம் மிகவும் பழுதடைந்திருக்கிற காரணத்தினால் பல்வேறு பகுதிகளிலேயும் அடிக்கடி மின்சாரத்தினுடைய தட்டுப்

லாடு ஏற்படுகிறது. அதை மாற்றி அமைத்து, நகர் முழுவதும் புதியதாக கேபிள்கள் அமைக்கப்படக்கூடிய பணியிலே ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, கடைசியாக ஒரே ஒரு யோசனையை சொல்லி முடித்துக் கொள்ள, விடை பெற விரும்புகிறேன்,

பல தொழிற்பேட்டைகளை நாம் உண்டாக்குகிறோம். அப்படி குறைந்த அளவுக்கு உள்ள சிறு தொழில்களைக் கொண்ட தொழிற்பேட்டைகளை உண்டாக்குகிறபோது அதிலே அமைக்கப்பட்டிருக்கக்கூடிய தொழிற்சாலைகள் எல்லாமுமாகச் சேர்ந்து, தங்களுக்கு தேவைப்பட்ட மின்சாரத்தை உண்டாக்குவதற்கான சில இயந்திரங்களை அங்கே நிறுவி, அந்த தொழிற்பேட்டைக்கு தேவைப்பட்ட மின்சாரத்தை அங்கேயே உற்பத்தி செய்யக்கூடிய வகையில் அனுமதி அளிப்பது நமக்கு தற்போது ஏற்பட்டு வரக்கூடிய இந்த இக்கட்டான நிலைமையையும் தீர்க்கும் என்று தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது நான் சொல்ல வேண்டிய கருத்துக்களை, நேரத்தின் அருமை கருதி, மிகச் சுருக்கமாகத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சென்ற முறை உறுப்பினர்கள் பேசிய பேச்சுக்களுக்குப் பதில் அளிக்கிற வகையில் ஆக்ஷன் டேக்கன் ரிப்போர்ட்டை இந்த அவையிலே வைத்திருக்கிறார்கள். அதே போன்று மற்ற துறைகளிலும் இப்படிப்பட்ட ஆக்ஷன் டேக்கன், ரிப்போர்ட்டுகளை வைக்கும்படி வற்புறுத்த வேண்டும் என்று துணைத் தலைவர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப்பணித்துறையின் செயலாளர் தான் மின் துறைக்கு இப்போது செயலாளராக இருந்து வருகிறார்கள். அது எந்த வகையிலே பொருத்தம் என்று எனக்குத் தெரியவில்லை. புனல் நீர் மின் திட்டம் மூலமாக மின் உற்பத்தியைச் செய்து வந்த நேரத்திலே பொதுப்பணித்துறை செயலாளர் இருந்தது ஒரு வேளை சரியாக இருக்கலாம். ஆனால் இன்றைக்கு அனலில் இருந்து மின்சாரம் தயாரிக்கிறோம்; அணுவில் இருந்து மின்சாரம் தயாரிக்கிறோம்; காற்றிலிருந்து மின்சாரம் தயாரிக்கிறோம்; கடலிலிருந்தும் மின்சாரம் தயாரிக்கிறோம்; சூரிய வெளிச்சத்திலிருந்தும் மின்சாரம் தயாரிக்கிறோம். எனவே இந்தக் காலக்கட்டத்தில் பொதுப்பணித்துறையைச் சார்ந்த செயலாளர், இந்தத்துறைக்கும் செயலாளராக இருப்பது பொருத்தமாக இருக்காது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு என்றே தனியாக செகரட்டரி ஃபார் எனர்ஜி என்று புதுப் பதவியை உருவாக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



அதைப்போல நம்முடைய தமிழகத்தினுடைய மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, மின் உற்பத்தியிலே நம்முடைய மின்சார வாரியமும், தமிழக அரசும் அதிகமான முயற்சிகளை எடுத்து வந்தாலும். மைய அரசு கீழ் மேட்டூர், மேட்டூர் அணை மின் நிலையம், தூத்துக்குடி, காடம்பாறை போன்ற மின் திட்டங்களுக்கு, அனுமதி கொடுத்தாலும் இன்றைக்கு 1983-84, 1984—85ல் மின் உற்பத்தியினுடைய அளவு 235 மெகாவாட் மட்டும்தான் அதிகரித்திருக்கிறது. ஆனால் நம்முடைய தேவை இன்றைக்கு 310 மெகாவாட்டாக உயர்ந்து உள்ளது. எனவே அந்தத் தேவையைப் பூர்த்தி செய்கிற வகையில் மத்திய அரசிடமிருந்து நம்முடைய மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள், ஒகேனக்கல் நீர் மின் திட்டத்தையும் தூத்துக்குடி விரிவாக்கத் திட்டத்தையும், வட சென்னை மின் உற்பத்தி திட்டத்திற்கான அனுமதியையும் விரைந்து பெறவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

7வது திட்டத்தில் மைய அரசு நார்த்தர்ன் ரீஜன்களுக்கு மட்டும் பிரையாரிட்டி ஏரியா என்று அறிவித்திருக்கிறது. எனவே இப்போதிருக்கிற திட்டப்படி பஞ்சாப், ராஜஸ்தான், யு.பி., டெல்லி ஆகிய மாநிலங்களுக்கு மட்டும் தான் முன் உரிமை கொடுத்து திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு முயற்சி செய்தால், Tamil Nadu and West Bengal do not figure as States needing urgent action என்று சொல்லுகிறார்கள். எனவே அந்த நிலை வருகிற போது சவலைக் குழந்தைக்கு அதிக உணவைக் கொடுத்துவிட்டு, திடகாத்திரமான குழந்தையை பட்டினி போடுவதாக அமையும். எனவே பிற்படுத்தப்பட்ட மாநிலங்கள் என்று சொல்லி அவர்களுக்கு முன் உரிமை கொடுத்து, நம்மை பின்னுக்கு தள்ளுவது, வளர்ந்து வருகிற நம்முடைய தமிழகத்தினுடைய வளர்ச்சியை மேலும் பின் அடையச் செய்யக் கூடியதாக அமைந்துவிடும். எனவே அந்த வகையில் 7வது திட்டத்தில் நம்முடைய மாநிலத்திற்கு அதிக மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்க தமிழக அரசும், புரட்சித் தலைவர் அவர்களும், நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்களும் அதிக முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அதேபோல இராமகுண்டத்திலிருந்து தமிழகத்திற்கு எனர்ஜியைக் கொண்டு வருவதற்கு ட்ரான்ஸ்மிஷனில் பிரச்னை இருக்கிறதென்று சொல்கிறார்கள். எனவே எக்ஸ்பர்ட்கமிட்டியின் ரிப்போர்ட்டின்படி 'நேஷனல் கிரிட் கார்ப்பரேஷன்' ஒன்றினை அமைத்தால் அப்படிப்பட்ட பிரச்னைகள் இருக்காது. உடனே

யாக அந்த முயற்சிகளை மேற்கொண்டால் மின்சாரம் கொண்டு வருவதற்கு வாய்ப்பாக இருக்குமென்று தெரிவிக்கிறார்கள். எனவே மத்திய அரசை நேஷனல் கிரிட் கார்ப்பரேஷன் ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்த வேண்டும்.

என்னதான் மின் உற்பத்தியை நாம் அதிகப்படுத்தினாலும் தேவைகள் நமக்குகூடிக் கொண்டே போகிறது. எனவே, இந்த வகைகளில்நமக்கு கிடைக்கிற மின்சாரத்தைத் தவிர Non-conventional sources of energy-யில் நம்முடைய மின் துறை அதிக அக்கறை செலுத்த வேண்டும். இப்படி செயல்படுகிற போது கோபர் கேஸ், விண்ட் மில், சோலார் எனர்ஜி ஆகிய முறைகளில் மின்சாரம் பெற நடவடிக்கை எடுக்கலாம். கிராமங்களுக்கு மின்சாரம், வேண்டுமென்றால் உடனே கோபர் கேஸ் பிளாண்ட்டை அங்கே வாரியம்அமைத்து தெருவிளக்குகள் வசதிகளைச் செய்ய வேண்டும். எலிவேட்டட் பிளேசில் விண்ட் மில்லை ஆரம்பித்து தண்ணீரை வெளியே கொண்டுவருவதற்கான அந்த முறையைச் செய்ய வேண்டும். இதனைச் செய்கிற வகையில் மின் வாரியத்தில் "Non-conventional source of energy" என்று மின் வாரியத்தில் ஒரு தனி பிரிவை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்றேன்.

அடுத்து மின்சார திருட்டுகள் ஏற்படுகிறபோது ஐ.பி.சி. 379 பிரிவை போட்டு ரெட் வித் Section 39 எலக்ட்ரிசிட்டி ஆக்டைப் போடுகிறார்கள். ஆனால் சுப்ரீம் கோர்ட்டின் ஒரு தீர்ப்பின்படி எலக்ட்ரிசிட்டியைப் பொறுத்த வரையில் மூவபிள் பிராப்பர்ட்டி இல்லையென்று சொல்லி, அதனால் பிரிவு 379 அதற்கு அட்ராக்ட் ஆகாது என்று பல வழக்குகளை தள்ளி விடுகிறார்கள். ஆகவே இந்த நிலையைப் போக்குவதற்கு எலக்ட்ரிசிட்டி தெப்ட் வருகிற போது அதுவும் இதற்குப் பொருந்தும் என்ற I.P.C.யிலே அமென்ட்மெண்டு கொண்டு வருதவற்கு நம்முடைய அரசு மத்தியஅரசை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான தாரமங்கலம் தொகுதியில் தெரு விளக்குகள் கேட்டு ஒன்றியங்களின் மூலம் தீர்மானங்கள் போட்டு அனுப்பியும், மெட்டீரியல்ஸ் இல்லையென்றும் ட்ரான்ஸ்பார்மரில் லோட் இல்லையென்றும், சொல்லி அவற்றின் மேல் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள். எனவே உடனடியாக அங்கே தெரு விளக்குகளை அமைத்துக் கொடுப்பதற்கும், ட்ரான்ஸ்பார்மர்களை மாற்றுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் அவர்களின் தொகுதியான ஸ்ரீரங்கம் தொகுதியில் மணிகண்டம், அந்தநல்லூர் ஆகிய இரண்டு ஒன்றியங்களில் பல மாதங்களாக குடிசைகளுக்கு மின் விளக்குகள் கேட்ட விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. நம்முடைய மின்வாரியத் தலைவர் அவர்கள் ஸ்ரீரங்கம் தொகுதியில் உள்ள மணிகண்டம்,



அந்தநல்லூர் ஆகியஒன்றியங்களில் நிலுவையில் உள்ள அத்தனை விண்ணப்பங்கள் மீதும் நடவடிக்கை எடுத்து குடிசைகளுக்கு மின் விளக்குகளைக் கொடுக்க விரைந்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் தொகுதியான வேடசந்தூரில் கொல்லப்பட்டி என்ற இடத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கான ஒரு திட்டமிருந்து, அந்த மின் நிலையத்தை அமைப்பதற்கு இடம் எல்லாம் பார்த்து நடவடிக்கை எடுத்தபோது, தனியார் நிறுவனத்தின் தலையீடு காரணமாக அந்த இடம் மாற்றப் படுவதாக அறிகிறோம். ஏற்கனவே திட்டமிட்டபடி அதே இடத்தில் இந்த மின் நிலையத்தை விரைவாக நிறுவுவதற்கு மின் வாரியத் தலைவர் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு, அளித்த வாய்ப்பிற்கு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மின்துறை அமைச்சர் அவர்கள் இனிமேல் வரவிருக்கிற திட்டங்களைப் பற்றி இங்கே நிறையவே சொல்லி இருக்கிறார்கள். அவைகளை உடனடியாக கொண்டு வருவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்தாலும் அதனுடைய பலன் எல்லாம் சற்று காலதாமதமாகத்தான் வரும் என்பதை நாமெல்லாம் அறிவோம். இருந்தாலும்கூட கூடங்குளம் அனல் மின்நிலையம் போன்றவைகளை உடனடியாக கொண்டு வருவதற்கு ஏற்பாட்டை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தமிழகத்தைப் பொறுத்தவரையில் நீர் மின்சாரம் எடுப்பது என்பது பெரிய பெரிய ஆறுகளிலும், அருவிகளிலும் எடுத்து அவைகளைப் பயன்படுத்தி விட்டோம். ஆனால் இந்தியாவில் நீர்மூலம் எடுக்கவேண்டிய மின்சாரத்தின் அளவு இன்னும் ஏராளமாக இருக்கிறது. 75 ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை நாம் இந்தியாவில் இருக்கிற நீர் மூலம் எடுக்க முடியும். ஆனால் இதிலே 16 சதவீதம்தான் நாம் எடுத்திருக்கிறோம். மீதி 84 சதவீதம் மின்சாரம் எடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே நீர் மின்சாரத்தை அதிகமாக எடுப்பதற்குரிய முயற்சியில் ஈடுபடுகிறபோது வடபுலத்தில் உள்ள ஆறுகளாலும், மத்திய இந்தியாவில் இருக்கிற ஆறுகளாலும்தான் அதிகமான மின்சாரத்தை தரமுடியும். அப்படி தருகிறபோது ஒரு தேசிய விநியோகத் திட்டம் இருந்தால்தான் முடியுமென்பதால் நேஷனல் கிரிட் ஒன்றை கொண்டு வருவதற்கு அந்த முயற்சியில் தமிழக அரசு ஈடுபட வேண்டும்.

நம்மைப் பொறுத்தவரையில் 1985 ஆம் ஆண்டு சராசரி 35 யூனிட்டுகள் பயன்படுத்திக் கொண்டு இருந்த நாம், தலைக்கு 31 யூனிட்டுகள் பயன்படுத்திக் கொண்டு இருந்த நாம்—இப்போது 200 யூனிட்டுகள் பயன்படுத்துகிறோம். இந்த 200 யூனிட் பயன்படுத்துவது எல்லாம் உற்பத்திக்குப் போகிறதா? அல்லது வேடிக்கை, கேளிக்கை, விளையாட்டுக்குப் போகிறதா? தேவையில்லாத இடங்களில் இவைகள் எரிந்து கொண்டு இருக்கிறதா? அல்லது சுழன்று கொண்டு இருக்கின்றதா? என்பதைப் பார்க்க வேண்டும். எனவே சேமிப்பு என்பது ஒரு முக்கியமான அம்சமாக பள்ளிக் குழந்தைகள் உள்பட சொல்லிக் கொடுக்கவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு 2½ ஏக்கர் நஞ்சை நிலம் இருந்தாலும் இலவசம் என்றும், 5 ஏக்கர் புஞ்சை நிலம் இருந்தாலும் இலவசம் என்றும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சுதந்திர தினத்திலே அறிவித்ததைத் தொடர்ந்து அப்படியே கடைபிடித்து வரவேண்டும். நிபந்தனைகள் ஏதும் விதிக்கக்கூடாது என்று பணிவன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்தை மட்டுமே செய்கின்றவர்களுக்குத்தான் இந்தச் சலுகை என்று சொல்வதற்கு பதிலாக அந்த நிலத்தை வைத்திருக்கின்றவர்கள், — உதாரணமாக 2½ ஏக்கர் நிலத்தை வைத்திருக்கின்றவர்கள், — வேறு தொழில் செய்தால் அந்த வேறு தொழில் செய்கின்றபோது, அதிலே கூட கொஞ்சம் வரி ஏதாவது வாங்குவதற்கு வேறு முயற்சிகளிலே ஈடுபட வேண்டுமே தவிர, இங்கே 2½ ஏக்கர் நிலம் என்பது எல்லோருக்கும் சமமாக அது விநியோகிக்கப்படவேண்டும். அதைப் போலவே, 5 ஏக்கர் என்பது சமமாக விநியோகிக்கப்படவேண்டும். அவர்கள் வேறு சில உத்தியோகத்திலே ஈடுபட்டு இருந்தாலும், அல்லது தொழிலில் ஈடுபட்டு இருந்தாலும் இந்தச் சொத்து, அங்கே இருக்கின்ற கணக்கை அவர்கள் காட்டுகிறபோது, அதிலே ஏதாவது வரியை அதிகமாகப் போட்டுக்கொள்ளவேண்டுமே தவிர, நிலத்திலே வேறுபாடு காட்டாமல் இருக்கவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் 75 ரூபாய் குதிரைச் சக்திக்கு என்று சொல்வது அபரிமிதமான துன்பத்தை அல்லது லாபத்தை விவசாயிகளுக்கு கொடுக்கிறது. சில இடங்களில் பெரிய நஷ்டத்தைக் கொடுக்கிறது. மிகக் குறைந்தபட்சமாகக் கட்டிக் கொண்டிருந்தவர்கள்கூட இப்போது அதிகமாக, குதிரைத் திறனுக்கு 75 ரூபாய் வைத்துக் கட்டவேண்டும் என்று சொன்னால் மிகச் சிரமமாக இருக்கிறது. அவர்களால் கட்ட இயலாத நிலை இருக்கிறது. ஒரு பக்கத்திலே ஒருவன் நன்மை பெறுகிறபோது, இன்னொரு பக்கத்தில் இருப்பவன் அதிக தீமை பெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற வகையில் இந்த மின்சாரத்தை அதிகமாக உபயோகித்தவர்கள்கூட குதிரைத் திறனுக்கு 75 ரூபாய் வைத்துக் கட்டவேண்டும் என்று சொல்லும் அந்த வரம்பு முறையை மாற்றி





வேறு வகையிலே அவர்களுக்கு சலுகைகள் அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குடிசைகளுக்கு நாம் திட்டம் கொண்டு வந்திருக்கிறோம். அது நல்ல திட்டமாக இருந்தாலும், பல பகுதிகளில் இருக்கின்ற குடிசைகளுக்கு இன்னும் வழங்காமல் இருக்கின்றது. அதற்கும் நாம் கொடுக்கவேண்டும். அப்படிப்பட்ட குடிசைகளுக்கும் இந்த மின் திட்டத்தை வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரே ஒரு வேண்டுகோள். இறுதியான வேண்டுகோள். அதிகமாக பேசுவதில்லை என்று முடிவோடு இருக்கின்ற காரணத்தாலும், நேரம் இல்லை என்ற காரணத்தாலும் 146 கோடியே 16 இலட்சத்திற்கு பற்றாக்குறை இருக்கிற நேரத்தில், இன்னும் இலவசம், இலவசம் என்று சொல்லலாமா என்று நீங்கள் கேட்கக் கூடும். உங்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். சில நேரங்களில் உற்பத்தி செய்கின்றவர்களுக்கு நீங்கள் உதவி செய்யவேண்டும் என்றால், நாம் உண்ணுகின்ற உணவை தருகின்ற விவசாயிகளுக்கு அந்தக் காரியத்தைச் செய்யவேண்டும் முதலிலே. இன்று மின் இணைப்புக்காக காத்து இருப்பவர்களுக்கு அந்தப் பணியைச் செய்வதற்கு நீங்கள் உடனடியாக முயற்சிகளை மேற் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அமெரிக்கா போன்ற பகுதிகளிலேயிருந்து வந்த 2 பேர்கள், சூரிய ஒளியிலிருந்து மின்சாரத்தை எடுப்பதற்கு திட்டம் அனுப்பியிருப்பதாகவும், காற்றில் இருந்து மின்சார சக்தியை எடுப்பதற்கு திட்டம் அனுப்பியிருப்பதாகவும் என்னிடம் நேரிடையாகச் சொன்னார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒருநாள் நான் பேசிக்கொண்டு இருந்தபோது நினைவுபடுத்தினேன். ஆகவே அப்படிப்பட்ட திட்டங்களுக்கு நீங்கள் விரைவிலே அனுமதி கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. எரிசாணம். இந்த எரிசாணம் போன்ற திட்டங்களை எல்லாம் பரவலாக்குவதற்கு, நல்ல முயற்சியை மேற்கொள்ளுவதற்கு, போதுமான பிரச்சாரம் இல்லை. அரசாங்கத்தினுடைய திட்டங்கள் அன்றாட வாழ்க்கையில் ஈடுபட்டுக் கொண்டு இருப்பவர்களுக்குப் போய்ச் சேருகின்ற வகையில் பிரச்சாரச் சாதனங்கள் எதையாவது ஒன்றை நீங்கள் ஏற்பாடு செய்து சேமிப்பைப் பலப்படுத்தி, இந்த மின்சாரத்தை எல்லா வகையிலும் உற்பத்தி செய்வதற்குரிய முயற்சிகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மறந்து விடாதீர்கள், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இலவச திட்டம் என்று

அறிவித்த மகத்தான திட்டத்திற்கு நானிலம் எங்கும் இருந்து என்ன, உலகம் எங்குமிருந்தும், பாராட்டுக்கள் வந்து கொண்டிருக்கிறபோது, நிபந்தனைகளைப் போட்டு, அந்தப் பலன் அவர்களைப் போய்ச் சேராமல் விட்டுவிடாமல், பலன் முழுவதும் போய்ச் சேருமாறு பார்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பிலே எங்கள் குழுவின் துணைத் தலைவர் தோழர் வி. பி. சிந்தன் அவர்கள் மின்வாரியத்தில் மின் உற்பத்தி சம்பந்தப்பட்ட, அதனுடைய திட்டங்கள், உற்பத்தி, அதில் இருக்கிற கோளாறுகள், கஷ்டங்கள் அதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப் போன்ற விஷயங்களை எல்லாம் நேற்றைய தினம் பேசியிருக்கிறார்கள். நான் அந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லவில்லை. குறிப்பாக மின்வாரியத்திலே செயல்படக்கூடிய ஊழியர்களைப் பற்றி, தொழிலாளர்களைப் பற்றி மட்டும்தான் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயிகள் சம்பந்தப்பட்ட வரையில், அவர்களுக்கு இன்னும் இந்த மின்சார சப்ளை ஒழுங்காக கிடைக்காமல் இருக்கும்படியான குறைகள் தொடர்ந்து நம்முடைய மாநிலத்தில் சொல்லப்பட்டு வருகிறது. அதற்கு பலன் உண்டு என்ற முறையிலே, உடனடியாக மின் வாரியமும் அரசும் அதற்கு தீர்வு காணவேண்டும். சிறிய விவசாயிகளுக்கு, ஏழை விவசாயிகளுக்கு அதுவும் குறிப்பாக பஞ்சப் பிரதேசத்தில் இருக்கும்படியான விவசாயிகள் குறைந்தபட்ச கட்டணம் 375 ரூபாய் என்று அவர்கள் கட்டவேண்டியது இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-20)

அவர்கள் உபயோகிக்கக்கூடிய மின்சாரத்திற்கும் இந்த குறைந்தபட்ச கட்டணத்திற்கும் பார்த்தால் சம்பந்தமே இல்லாமல் இருக்கிறது. மிகவும் அநீதி என்றுகூட சொல்லலாம். உதாரணமாக நாகப்பட்டிணத்தில் ஒரு விவசாயி 5 ஆண்டுக்குள் 96 ரூபாய்தான் சராசரியாக 5 ஆண்டிலே அவர்கள் பயன்படுத்திய மின்சாரம் ஆகும். ஆனால் அவன் 375 ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது. இதை உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஆகவே, அவன் பயன்படுத்திய மின்சாரத்திற்கு நீங்கள் பணம் வாங்கிக்கொள்ளலாம். மற்றபடி குறைந்தபட்ச கட்டணம் என்று இப்படி வைக்காமல் ஒரு இணைப்பு வாங்கியிருக்கிறான் என்றால் ஒரு உத்திரவாதமாக ஒரு குதிரையின் பெயரில் அளவுக்கு ஒரு கட்டணத்தை விதித்தால் அது சரியாக இருக்கும். 5 ரூபாய் 10 ரூபாய் என்று விதித்துக் கொள்ளுங்கள். 5 ரூபாய் ஆகாது. இந்த முறையை கூட பிடிக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து, வீடுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய மின்சாரத்திற்கு கட்டணம் நீங்கள் ஏற்றவில்லை. அது நல்லது. ஆனால் சிறிய தொழில் போன்றவைகளுக்கு மின்சார கட்டணத்தை உயர்த்தி அதிகப்படுத்தப்பட்டது. அந்த நிலை தாங்க முடியாததாக இருக்கிறது. சின்ன சின்ன பட்டறைகள், ஒர்க் சாப்கள் அல்லது ஒரு லேத்தில் வேலை செய்பவர்களுக்கு, சின்ன ரைஸ் மில் இந்த மாதிரி கூலிக்கு அரைப்பவர்களுக்கு இப்படி பல்வேறு இடங்களில் பயன்படுத்தும் மின்சாரத்திற்கு எல்லாம் கட்டணத்தை அதிகப்படுத்தியிருப்பது, மிகவும் உயர்வாக உள்ளது. இன்றைக்கு போட்டு இருக்கக்கூடிய கட்டணமே தாங்கமுடியாது அவர்களால். அதை குறைக்க வேண்டும். குறிப்பாக உங்களுக்கு சம்மந்தம் இல்லை என்று சொன்னாலும் நான் எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிறது.

நீங்கள் மொத்தமாக மின்சாரத்தை விலைக்கு விற்று அதை வாங்கி பயன்படுத்துகின்ற கோவை மாநகராட்சியிலே ஒரு 5 எச்.பி. மோட்டார் வைத்து ஓட்டுகின்ற சின்ன லேத் பட்டறையில் அவனுக்கு இருந்த கட்டணத்தை ஒரு யூனிட்டுக்கு 35 பைசா உயர்த்தியிருக்கிறார்கள். அதேபோல் ஒரு வெல்டிங் பிளாண்டு வைத்து வேலை செய்பவருக்கு இதைவிட அதிகமாக ஒரு யூனிட்டுக்கு 1.44 ரூபாய் கட்டணத்தை உயர்த்திப் போட்டிருக்கிறார்கள். இது எனக்கு சம்மந்தம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் சம்மந்தமில்லை என்று சொன்னாலும் கூட உங்களிடமிருந்து தான் வாங்கிய மின்சாரத்தை அவர்கள் விலைக்கு விற்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

அங்கே அவர்கள் மக்களுக்கு பயன்படுகின்ற சரண்டுக்கு தமிழ்நாடு மின்வாரியம் ஒரு யூனிட்டுக்கு வாங்கிய கட்டணத்திலே ஒரு பைசா குறைவாகவே வாங்கிக்கொண்டு இருந்த இடம் அது. அதிலேயே அவர்களுக்கு லாபம் இருந்தது. 2 கோடி ரூபாய்க்கு மேல் லாபம் வந்து அவர்கள் வைத்து இருந்த பணத்தை அங்கே மாநகராட்சிக்கு சம்பளம் கொடுப்பதற்கு பணம் இல்லாதபோது இவர்கள் கடனாக கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் இதை கவனத்தில் கொள்ளவேண்டும், அந்த சிறிய தொழில் செய்பவர்களுக்கு கட்டணத்தை இன்னும் குறைக்க முயற்சிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுத்துறை, தனியார்த்துறை மூலம் மின்சாரம் உற்பத்திச் செய்வதற்கு அரசு கொள்கை அளவில் ஒத்துக்கொண்டு செயல்படுவது சரி அல்ல என்பது என்னுடைய கருத்து. ஒரு ஸ்டேட்டரசிக் இண்டஸ்ட்ரியை இப்படிப்பட்ட தொழிற்சாலையை மின்சாரம் உற்பத்தி செய்வதை அரசு தன் கையில்தான் வைத்துக்கொள்ளவேண்டும் என்பது எங்களுடைய உறுதியான கருத்து. அதை அரசு கவனிக்கவேண்டும். இதை எல்லாம் நம்முடைய கூட்டுத்துறைக்கு தனியார் துறைக்கு கொடுத்து சுரண்டல் முறையில் வர்க்கம் நடத்த அனுமதிக்கக்கூடாது.

அடுத்து நாளைக்குத் தனியார் துறையில் இருப்பவர்கள் இப்படிப்பட்ட தொழிலை நீங்கள் விடும்போது துப்பாக்கி, பீரங்கி, யுத்த கப்பல், விமானம் சண்டைக்கான கருவிகளை எங்களிடம் உற்பத்திக்கு விடுங்கள் என்று ஏன் கேட்க மாட்டார்கள் அவர்கள். அப்படிப்பட்ட நிலையை அரசு கையாளக் கூடாது.

தொழிற்சங்க உரிமைகளைப் பறிப்பது என்பது இப்போது அதிகமாக இருக்கிறது. இந்த நிர்வாகமும் இன்றைய தலைவரும் வெகு திறமையாக இதில் அவர்கள் வேலை செய்கிறார்கள். மின் உற்பத்தியில் காட்டவேண்டிய திறமையை காட்டாது, தொழிலாளர்களைக் குறைப்பதில் திறமையைக் காட்டுகிறார்கள். இதற்கு எவ்வளவோ சமயங்களில் உதாரணங்களை அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். இன்றைக்குச் சொல்ல நேரம் இல்லை. இருந்தாலும் ஒருசிலவற்றைச் சொல்கிறேன். உதாரணமாக டி.ஈ. தொழிற்சங்க உரிமையை பறிக்கிறார். சங்கத்திற்கு கொடுக்கப்பட்ட கட்டிடத்தை அதிலே இருந்து அவர்களை துரத்திவிட்டு அவர்களிடமிருந்து பிடுங்கிவிட்டார்கள். அதனால் ஹை கோர்ட்டுக்கு போய் கேஸ் போட்டு அந்த கோர்ட்டும் இப்படி செய்தது தப்பு என்று சொல்லி கட்டிடத்தை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறது,

இப்படி நீதிமன்றம் போய் நீதிமன்றமே அவர்கள் செய்தது தப்பு என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறது, உண்மையில் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்திற்கும் உண்டாக்கப்படவேண்டிய உறவுகளை உண்டாக்காமல் இப்படிப்பட்ட கடுமையான நடவடிக்கைகள் எடுப்பது சரியல்ல. அவைகளை எல்லாம் கைவிடவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை விசேஷமாக கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் கூட்டம் போட்டு பேச முடியாது. அதற்கு இடம் கொடுக்க மாட்டார்கள். நீலகிரி மலையில் குந்தா இடம் போன்ற பெரிய உற்பத்தி இடங்களில் எல்லாம் மலை பிரதேசங்களில் எல்லாம் கூட்டம் போட்டு பேச தனியாக இடம் கிடைக்காது.

மின் வாரியத் தொழிலாளிகள் மின் வாரியத்திலே வேலை இருக்கிற இடங்களிலேயே ஒரு கூட்டம் போட்டு பேசக்கூடாது; அதற்கு எல்லாம் கட்டுப்பாடு. இப்படி பல கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அந்தக் கட்டுப்பாடுகள் இருக்கக்கூடாது. தொழிற் சங்க உரிமைக்காக, தொழிலாளிகளுடைய ஒற்றுமைக்காக அவர்கள் நடத்தக்கூடிய இயக்கங்களுக்காக அவர்களுக்கு அப்படிப் பட்ட தடைகளை விதிக்கக் கூடாது. பழி வாங்கக் கூடாது.



தொழிற்சங்கத் தலைவர்களையும் பழிவாங்கி இருக்கிறார்கள். உதாரணமாக, அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தினுடைய தலைவர் அங்கப்பன் டிஸ்மிஸ் அது என்ன? பெரிய பிரம்மாண்டமான குற்றச்சாட்டா? இது யோசிக்க வேண்டிய விஷயம். அதே மாதிரி இன்ஜினியர்கள் சங்கத்தின் தலைவர் ராமசாமி டிஸ்மிஸ். இப்படித் தொழிற்சங்கத் தலைவர்களை டிஸ்மிஸ் செய்வதற்கு ஒரே ஒரு அர்த்தம், "bad Trade Union activities" தொழிற்சங்கத் தலைவர்களையும், முக்கிய ஊழியர்களையும் இஷ்டம் போல் நூற்றுக்கணக்கிலே இடமாற்றம் செய்வதும், டிஸ்மிஸ் செய்வதும் இயக்கத்தினுடைய தலைமையையே இல்லாமல் செய்துவிடுவது, கொய்து விடுவது என்ற இடத்திற்கு கொண்டு செல்கிறது.

நிச்சயமாக அதை தொழிற்சங்க இயக்கம் அனுமதிக்காது. அது உங்களுக்கு நல்லுறவை உண்டாக்காது என்பதை தாழ்மையுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தொழிற்சங்க மாநாட்டில் 'சாவனிர்' மாதிரி புத்தகங்களை வெளியிடுகிறோம். எங்களுடைய மத்திய அமைப்பின் தொழிற் சங்க மாநாட்டிலே ஒரு விசேஷ வெளியீடு என்கிற மாதிரி 'சாவனிர்' என்று சொல்லி வெளியிடுவது; ஒவ்வொரு மாநாடுகளிலேயும் எப்படி வெளியிடுகிறார்கள் என்பதைப் பார்த்து இருக்கிறோம்.

அப்படி வெளியிடுவதற்கு முன்பு தொழிற்சங்கத்தை சேர்ந்த நண்பர்கள்—மின்வாரிய ஊழியர்கள் தானே அதிலே மெம்பர்களாக இருக்கிறார்கள்—அவர்கள் சாவனிருக்கு விளம்பரங்கள் பெற்றார்கள் என்பதற்காக அவர்களுக்கு தண்டனை கொடுக்கப் பட்டிருக்கிறது. இது எவ்வளவு பெரிய அநீதி என்பதைப் பார்க்கவேண்டும். அந்த விளம்பரம் வாங்குகிறவனுடைய லிஸ்ட்டை, பட்டியலை சமர்ப்பிக்க ஆரம்பித்தால், என்னென்ன எல்லாம் நடக்கிறது என்று தெரியும். அதை எல்லாம் செய்யக் கூடாது.

அதேமாதிரி, தொழிலாளிகளை நினைத்தபடி நூற்றுக் கணக்கிலே இடம் விட்டு மாற்றுவது; கணவனும், மனைவியும் சேர்ந்து ஒரே இடத்தில் உத்யோகம் செய்து கொண்டிருக்கலாம் என்ற உத்தரவை எல்லாம், இந்த அரசே, மாண்புமிகு முதலமைச்சராலே பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது எல்லாம் இன்றைக்கு தூள் தூளாக போய்விட்டது. என்ன வேண்டுமானாலும் நடக்கும் என்ற நிலைமை. எதற்காக இதைச் செய்கிறார்கள்? என்றால், அவர்களுடைய மனதிலே ஒரு பயம் ஏற்படவேண்டும். "to strike a terror in their heart" இது நிர்வாகத்தின் திறமை அல்ல. இதை யாராலேயும் செய்துவிட முடியும். அடாவடித்தனமாக நடக்கிற ஒரு ஆளாலேயே செய்ய முடியும். இப்படி ஒருவருக்கு பயத்தை உண்டாக்கி, அடிமைகளைப் போல், தொழிலாளிகள் இருக்க வேண்டும் என்று விரும்பு

கிறார்கள். அப்படிப்பட்ட நடவடிக்கையைச் செய்யக்கூடாது. மின் வாரியத்தினுடைய தலைமையில் அப்படிப்பட்ட நடவடிக்கை நீக்கப்பட வேண்டும். அது வரக்கூடாது என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தொழிற்சங்கத்தினுடைய உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

டிஸ்மிஸ் செய்யப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களை எந்த விதமான பிரச்சினையும் இல்லாமல் திரும்ப வேலைக்கு எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு தொழிற்சங்கம் நாடகம் நடத்துவதற்கு டிக்கட் விநியோகம் பண்ணியது, சகோதர தொழிலாளிகளிடம்; அதற்குக் கூட தண்டனை கொடுக்கப்பட்டது.

சம்பளக் கோரிக்கை பேச்சுவார்த்தை, அது தொடர்ந்து நீட்டிக் கொண்டே போவது சரி அல்ல. மத்திய சர்க்காரிலேயே பல பிரச்சினைகளைப் பேசி சம்பளம் கொடுத்தாச்சு. பஞ்சப்படி கொடுத்தாச்சு. இங்கே கொடுக்க வேண்டிய அந்தப் பஞ்சப் படியைக் கூட ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்—டிலே கொடுக்க வேண்டும். அதை மறுக்கக்கூடாது. ஏனென்றால் மத்திய சர்க்காரிலே கொடுக்கிற உரிமையை நீங்கள் ஏன் கொடுக்கக் கூடாது? அவர்கள் செய்வதிலே பலவற்றை நாங்கள் எதிர்த்து இருக்கிறோம். இருந்தாலும் இதை நீட்டிக் கொண்டு போகக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். சீக்கிரம் பேச்சு வார்த்தையை முடிக்கவேண்டும்.

மின் வாரியத்திலிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள் என்றால், ஒரு வேலைப் பளுவையும் இதோடு சேர்த்து இணைத்துக் கொண்டு போவதற்கும் பார்க்கிறார்கள். தயவுசெய்து ''புரொடக்ஷன், புரொடக்டிவிடி லிங்க்ட் வேஜ் செட்டில்மெண்ட்'' என்ற நிலைமைக்குப் போகாதீர்கள். அது எந்த நன்மையும் செய்யாது. ஸ்டேட் செக்டர் இன்டஸ்டிரி முழுவதும், மத்திய சர்க்கார் ஒப்பந்தம்-1 ரூபாய் 65 பைசா பஞ்சப்படியாக நிர்ணயித்தார்களே, புரொடக்டிவிடி லிங்க்ட்—ஆக. அது சரி அல்ல, வைவிட வேண்டும். மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்புகள் மோசமாக போய் இருக்கிறது. கம்பங்கள் நட்டதே சாய்ந்து விழுந்து போகிறது. தஞ்சாவூர் போன்ற மாவட்டங் களில் சதுப்பு நிலங்களிலே கட்டினால் நிற்காது. அதற்கு உறுதி யான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதே மாதிரி லோடு ஜாஸ்தி ஆகி, பல மின் மாற்றிகள், டிரான்ஸ்பார்மர்கள் கெட்டுப்போய் விட்டது. கோவை மாநகரிலே அடிக்கடி விளக்குகள் எல்லாம் போவதற்கு அது ஒரு காரணம். மின்சாரம் இல்லாத நிலை. அப்படிப்பட்ட குறைபாடுகளை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு அவற்றை தீர்க்கும்படியான முறையிலே திறமையாகக் கொண்டுவர. மின்வாரியம் வேலை



செய்யவேண்டும். மின் வாரியத்தினுடைய தலைவரும், நிர்வாகமும்; தொழிலாளிகளை பயமுறுத்தும்படியான நடவடிக்கை வைத்துக் கொள்ளக்கூடாது. தொழிற்சங்க உரிமை பூரணமாக அனுமதிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மின்சார வாரியத்தினுடைய நிதி நிலைமை அறிக்கை மீது சில கருத்துக்களை சுருக்கமாக விளக்க இருக்கிறேன். மின் இல்லை என்றால் உலகம் இல்லை. உலகம் இல்லை என்றால் மின் இல்லை என்ற அளவுக்கு இப்போது மின்சாரம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் புரிந்து கொண்டிருக் கிறோம்.

அதே போன்று, 7—வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நம்முடைய தமிழகத்தினுடைய வரவு-செலவு திட்டத்தில் மின்சார உற்பத்திக்காக மிக அதிக முக்கியத்துவம் கொடுத்து அந்த உற்பத்தியை அதிகம் செய்ய வேண்டும் என்று அந்த நோக்கத் தோடு இப்போது 7—வது ஐந்தாண்டுத் திட்டம் இங்கே தீட்டப் பட்டு இருப்பதை நான் பாராட்டுகிறேன். அப்படிப்பட்ட

(பிற்பகல் 12-30)

சூழ்நிலையில் மின்சாரத்தை பொறுத்தவரையில் ஒன்றை நான் சொல்லவேண்டும். இன்றையதினம் மின்சாரப் பற்றாக்குறையும், தண்ணீர்ப் பற்றாக்குறையும் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில் மிகவும் முக்கியமான பிரச்னைகளாக உள்ளதால், மின்சாரம் தேசீயமயம் ஆக்கப்பட வேண்டும். அதைப்போன்றே நீர்ப்பாசனமும் தேசீயமயமாக்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் மிகவும் ஆழமாக வலியுறுத்தி அதற்கான ஒரு தீர்மானத்தை நம்முடைய மின்சாரத்துறை அமைச்சரவர்கள் கொண்டுவர வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில் 1983—84 ஆம் ஆண்டைவிட 1984—85 ஆம் ஆண்டில் 50 சதவீதம் உற்பத்தி அதிகமாக இருக்கிறது என்பதைக் குறிப்பிலிருந்து பார்க்க முடிகிறது. ஆனாலும் கூட நம்முடைய உற்பத்தியின் நிலைமை போதாது. புனல் மின்சார நிலையங்களைப் பொறுத்த வரையில் இப்பொழுதுள்ள சூழ்நிலையில், பருவமழை காலதாமத மாகத் துவங்கியிருப்பதால், மந்தமாக உள்ளதால், இப்படிப்பட்ட மின்சார உற்பத்தியிலே புனல் மின்சார உற்பத்தி மிகவும் மோசமாக இருப்பதால் அனல் மின்சார நிலையங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நல்ல வழியிலே செயல்படுத்த வேண்டு மென்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னால் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதைப்போல, கல்பாக்கம் அணுமின் நிலையம் மத்திய அரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தாலும், அதில் பல் வேறு கோளாறுகள் இருப்பதால்—குறிப்பாக சமீபத்தில் சிறு மீன்கள் குழாய்களுக்கு உள்ளே சென்றதால் மின்சாரம் தடைபட்டு உற்பத்தியும் குறைந்தது அங்கே நம்முடைய நிபுணர் குழுவை வைத்து கல்பாக்கம் அணுமின் நிலையம் எப்பொழுதும் சிறப்பாக உற்பத்தியைச் செய்யும் முறையில் நாம் நல்லமுறையில் பாடுபட வேண்டும்.

முதல் கட்டத்திலே உற்பத்தியாகின்ற எல்லா மின்சாரத்தையும் தமிழக அரசு வாங்கிவிடும்; இரண்டாவது கட்டத்தில் உற்பத்தியாகின்ற மின்சாரத்தில் 50 சதவிகிதம் மின்சாரத்தை நாம் வாங்குவது, அதைப் போல அண்டையிலே உள்ள இராமகுண்டத்தில் உற்பத்தியாகின்ற மின்சாரத்தில் 50 சதவீதத்தையும் நாம் பெறுவது ஆகியவைகளில் கவனம் செலுத்த வேண்டும். நம்முடைய மாநிலம் இன்னும் பற்றாக்குறை மாநிலமாக இருப்பதால், அங்கேயுள்ள மின்சாரத்தை மிகவும் அதிகமாக வாங்குவதற்கு தமிழக அரசு நிச்சயமாக நல்லமுறையில் செயல்பட வேண்டுமென்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

கல்பாக்கம் மட்டுமல்ல, பக்கத்தில் உள்ள பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம் ஒரு காலகட்டத்தில் சாதாரணமாக அமைக்கப்பட்டது. இப்பொழுது அது சென்னையில், மத்தியப் பகுதியில் இருப்பதால், அந்த பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்திலிருந்து மாசுகள் சர்வ சாதாரணமாக பரவி சென்னை நகரத்தின் தூய்மைக்குப் பங்கமாக அமைகிறது. மேலும் இரயில்வே கரி, நிலக்கரியெல்லாம் சேர்ந்து மோசமான சூழ்நிலை இருப்பதால், பல மைல்களுக்கு அசுத்தமான நிலைமை இருப்பதால் பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தை உடனடியாகப் பக்கத்திலே உள்ள இன்னொரு இடத்தில் மாற்றியமைப்பதற்குத் தமிழ்நாடு மின்சாரத்துறை அமைச்சரவர்கள் பெரு முயற்சி செய்ய வேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எண்ணூரில் உற்பத்தியாகின்ற மின்சாரத்தை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நிச்சயமாக அதிகமாக்குகின்ற முறையில் செயல்படுத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகப்பட்டினத்திற்கு அருகில் அனல் மின் நிலையம் ஒன்றைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் ஏறக்குறைய பத்தாயிரம் ஃபீடர் பாயின்ட் பம்பு செட்டுகளும், 1,800 மினுமம் போர் வெல்களும் இருக்கின்றன. மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் வருமோ வராதோ என்ற ஏக்கத்தில் இருப்பதால், கீழே உள்ள தண்ணீரை



மேலே கொண்டு வருவதற்கு விவசாயிகளுக்கு மின்சாரத்தைக் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலையில் நாகப்பட்டினத்தில் அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார விநியோகத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய விநியோகத்திலே நீண்டதூரம் செல்லக்கூடிய அலுமினியம் கண்டக்டரில் இழப்பு ஏறத்தாழ 23 சதவீதம் என்று தெரிகிறது. ஆனால் அண்டை மாநிலங்களில் 16 சதவீதம், 17 சதவீதம்தான் இழப்பு ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, இப்படிப்பட்ட இழப்பைக் குறைப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத் துறையில், இந்த நவீன காலத்தில் நவீன முறைகளைத் திணிக்க வேண்டும். கம்ப்யூட்டரைப் பயன்படுத்துகின்ற முறையை நிச்சயமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக என்னுடைய தொகுதியில் பல இடங்களில் தெரு விளக்குகள் எரிவதில்லை. பல்வேறு கோளாறுகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில், தெரு விளக்குகள் எரிய உள்ளாட்சி மன்றங்களுக்கே பொறுப்பு ஒப்படைக்கப் படுவதைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். எது எப்படியிருந்தாலும் மின்சார விளக்குகள் எல்லா இடங்களிலேயும் எரிய வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. டி. ஆர். வெங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றில் கொட்டினாலும் அளந்து கொட்டு என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் இன்றைக்குச் செயல்படாத மின்திட்டம் முழுவதுமே ஆற்றோடு போய்விட்டது என்று சொன்னால் அதற்குக் காரணமானவர்கள் யார் என்பதைத் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நான் கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு நேரத்தினுடைய அருமை கருதி, நாட்டிலே மின்சாரம் இல்லை என்று சொன்னாலும் கூட, அந்த மின்சாரத்தைப் பற்றிப் பேச இங்கே நேரம் இல்லாத காரணத்தாலே—சுருக்கமாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

சேர்வலாறு திட்டத்திலே ஏற்கனவே பென்ஸ்டேக்கில் போடப்பட்டிருந்த தலைவாயிலில் இருக்கக் கூடிய கேட்டை—மணிக்கு 1 அடி வீதம் தண்ணீர் உயர்ந்து கொண்டிருக்கும் போது—மூடி இருந்தால் 1 மின் நிலையம் காப்பாற்றப்பட்டிருக்கும். ஆனால் அது செய்யப்படவில்லை; ஏன் என்ற கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன்.

அதேபோன்று ஸ்பெரிக்கல் வால்வ் அட் டெர்மினல் ஆன்கர் என்ற வால்வை, அந்த பென்ஸ்டேக் கேட்டிலே அமைத்திருந்தால், அந்த டெர்மினல் வால்வ்வை மூடுவதன் மூலமாக, வருகின்ற நீர்ப் பெருக்கை தடுத்து நிறுத்தி, அந்த மின் நிலையத்தைக் காப்பாற்றி இருக்கமுடியும். ஆனால் பிளான் டிசைனிலே இருக்கின்ற மிஸ்டேக் காரணமாகவா, அல்லது அந்தத் திட்டத்தைப் போட்டவர்கள் சரியாகப் போடவில்லை என்ற காரணத்தாலோ, அந்த ஸ்பெரிக்கல் வால்வ் ஆட் டெர்மினல் ஆன்கர் ஏன் போடப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் இங்கே விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த இரண்டு காரணங்களாலேதான் அந்த நிலை ஏற்பட்டது. இன்றைக்குச் சேர்வலாறு திட்டத்திலே ஏதோ புதிதாக தண்ணீர் வரவில்லை. தண்ணீர் வரக்கூடிய திட்டமாகத் தீட்டப்பட்டும் கூட, அதிலே தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படாததனாலே அவ்வாறு ஏற்பட்டுள்ளது. எனக்கு வந்த தகவலின் படி, உயர்மட்ட அதிகாரிகள் அங்கே தங்காமல் குற்றாலத்திலே இருந்த கெஸ்ட் அவுசிலே தங்கி உல்லாசமாகப் பொழுதைக்கழித்துக் கொண்டிருந்த நேரத்திலே, அங்கே தண்ணீர் பெருகி, அந்தத் தண்ணீர் ஆற்றோடு போய்விட்டது என்பதாகும். ஆனால், குற்றவாளிகளைத் தவற விட்டுவிட்டு ஒன்றும் அறியாத அப்பாவிகளைப் பிடித்து, இன்றைக்கு அங்கே ஒருவரை சஸ்பென்ட் செய்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். நான் இந்த மன்றத்திலே கேட்டுக் கொள்வதெல்லாம், பல கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்பட்டதன் காரணமாக, இந்தச்சட்ட மன்ற உறுப்பினர்களுடைய குழு ஒன்றை ஏற்படுத்தி, அந்தக் குழுவைச் சேர்வலாறு திட்டத்திற்கு அழைத்துச் சென்று, எதனால் இழப்பு ஏற்பட்டது என்பதைப் பார்த்து, தெரிவிக்க ஆவன செய்யவேண்டும். அந்த இழப்பிற்குக் காரணமானவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பல இலட்சக்கணக்கான ரூபாய்களை, கோடிக்கணக்கான ரூபாய்களை இழந்து கொண்டிருக்கிற மின்சார வாரியம் இன்றைக்குத் தமிழ்நாட்டிலே வழக்குரைஞர்கள், டாக்டர்கள், மற்றும் ஆடிட்டர்களுடைய இல்லங்களை ஏதோ ஒரு கமர்ஷியல் ஆர்கனைசேஷனாகக் கருதி, அவர்களுக்கு கமர்ஷியல் டாரிப் ரேட் விதிப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அதே போல, பல கோடி ரூபாய்கள் வருமானம் பெரிய முதலாளிகளிடத்திலே நிலுவையில் இருக்கும் போது, வசூலிக்கின்ற முறையை மாற்றி, தக்க முறையிலே வசூலிக்க ஆவன செய்யவேண்டும். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இங்கே லார்ஜ் ஸ்கேல் பவர் திருட்டுக்கு உடந்தையாக இருக்கிற அதிகாரிகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். தேவையானால், இன்றைக்கு இந்த மன்றத்திலே கொண்டுவரப் பட்ட மருந்துகள் திருட்டுத் தடைச் சட்டத்தில் பேசிய



மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கருத்தின் அடிப்படையிலே, மின்சாரத் திருட்டைத் தடுப்பதற்காகத் தேவையாக தனி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து மின்சாரத் திருட்டைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கிற குருசாமிபுரம், சடையபுரம், எவியாள்புரம் போன்ற பகுதிகளிலே மிகக் குறைவான மின் அழுத்தம் இருக்கிறது. அவற்றைச் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று என்னுடைய தென் காசி நகரத்திலே, இருக்கக் கூடிய ஆபீசை இரண்டாகப் பிரித்து, அதற்கு இரண்டு ஏ. டி. இ.க்களைக் கன்ட்ரோலுக்குக் கொண்டு வருகிறார்கள். இதை நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயே வன்மையாகக் கண்டித்து, அதனால் பொது மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொன்ன பொழுது, மாவட்டக் கலெக்டர் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, அதைச்சட்டமன்ற உறுப்பினர்களோடு கலந்து செய்கிறேன் என்று சொல்லியும்கூட, அதிகாரிகள் பாராமுகமாக இன்றைக்குத் தென் காசி நகருக்கு வந்து டி.ஏ. பெனிபிட் வேண்டுமென்று இரண்டு அதிகாரிகளுடைய பொறுப்பிலே கொண்டுவந்து செய்து கொண்டிருக்கிறார்கள். இதனால் அங்கேயிருக்கக் கூடிய அதிகாரிகளுக்கும் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அம்பாசமுத்திரத்திலிருந்து ஒருவர் தென்காசிக்கும் செங்கோட்டைக்கும் சென்று அதனாலே கிடைக்கின்ற, டி.ஏ. பெனிபிட்டை அடைகின்றார்கள். அதற்காகச் செய்கின்றார்கள் என்று அறிகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தென்காசி நகரைத் தனியாகவும் செங்கோட்டை நகரைத் தனியாகவும் பிரித்து, இரண்டு ஏ.டி.இ.க்களை போட வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

பஞ்சாயத்து விளக்கெல்லாம், முனிசிபாலிட்டி விளக்கெல்லாம் இன்றைக்கு எரியாததற்குக் காரணம் மின்சார வாரியம்தான் என்று தமிழ்நாடு முழுவதும் பரவலாகப் பேசப்படுகிறது. இந்த நிலைமை நீங்க, பஞ்சாயத்துத் தேர்தலும், முனிசிபாலிட்டி தேர்தலும் வர இருக்கின்ற அடிப்படையில், அந்தப் பணியை மீண்டும் பஞ்சாயத்துக்களிடமும் முனிசிபாலிட்டியிடமும் ஒப்படைக்க வேண்டுமென்ற ஆலோசனையை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிற காரணத்தினால் பாமர ஏழைகள் மின்சார வாரியத்துடன் ஒரு அக்ரிமென்ட் போட்டுக்கொண்டு மின்சாரம் பெற ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், மின்சார வாரியம் முழு அளவு மின்சாரம் கொடுக்காத நிலையில் அந்த ஒப்பந்தத்தினால், மினிமம் ரேட் என்று சொல்லிக் கொண்டு இன்றைக்கு வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற ஒப்பந்தங்கள் ஒரு தலை பட்சமாக இருப்பதைத் தடுத்து நிறுத்தி, அவற்றை ரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே உள்ள இடையன்குவளை என்ற கிராமத்திலே, மின்சார கம்பங்கள் தெருவின் நடுவிலே நடப்பட்டு, மின்சார ஒயர்கள் இழுக்கப்பட்டிருக்கின்றன. நான் டி.இ. அவர்களைச் சந்தித்துப் பொதுமக்கள் சார்பாக அந்த மின் கம்பங்களை, ரோட்டினுடைய ஓரத்திலே வைக்க வேண்டுமென்று கேட்டபொழுது, அதற்கு நீங்கள் பணம் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். நீங்கள் செய்த தவறுக்குப் பொதுமக்கள் என்ன செய்யமுடியும்? ரோட்டின் ஓரத்திலே நடவேண்டிய மின்சாரக் கம்பத்தை இப்படி நாட்டிவிட்டு, அதை மாற்றி நடவேண்டுமென்றால் பொது மக்கள் ஒரு கம்பத்திற்கு 700 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொல்வது எந்த வகையிலும் சரியல்ல. இப்படிப்பட்ட அவல நிலைகளைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

ஆல்டர்னேட்டிவ் சோர்ஸஸ் ஆஃப் எனர்ஜி பற்றி பல உறுப்பினர்கள் இங்கே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நேரம் இல்லாத காரணத்தால் மேலும் நான் அதைப்பற்றி விளக்க விரும்பவில்லை. (மணியடிக்கப்பெற்றது)

முக்கியமாக குலசேகரப்பட்டினம் மின் திட்டத்தையும் எங்களுடைய நெல்லை மாவட்டத்தில் கூடங்குளம் அனல் மின் திட்டத்தையும் அமைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார நிதி நிலை அறிக்கை மீது பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது பொன்னான நேரத்தையும் அரிய சிந்தனையையும் செலவழித்து நல்ல பல கருத்துக்களை எடுத்து வழங்கியதற்கு முதற்கண் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. சிந்தன் அவர்களும், அதைப் போல திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. கோவை இராமநாதன் அவர்களும், மாண்புமிகு திரு. அப்துல் சமத் அவர்களும் பேசுகின்றபோது அமைச்சர் என்கிற முறையிலே என்னை மலர்களிலே எல்லாம் சென்று தேன் எடுக்கின்ற தேனீயைப் போல பணியாற்றுகின்ற அமைச்சர் என்றெல்லாம் பாராட்டினார்கள். ஆனாலும் ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதைப் போல திட்டம் ஏட்டிலே இருக்கிறதே தவிர நாட்டிலே இல்லை என்று குறிப்பிட்டார்கள். தேனீக்களுக்கு இருக்கிற ஒரு இயல்பு என்னவென்றால் எங்கே



சென்று தேன் எடுத்தாலும் எல்லா தேனையும் ஒரே இடத்தில்
தான் கூடுகட்டி, கொண்டுவந்து வைக்கும். அந்தப் பொது
வுடைமைத் தன்மை நமக்கு இன்னும் வரவில்லை என்பதை நாம்
தெரிந்து கொள்ள வேண்டும், இருந்தாலும் அந்த உணர்வைத்
தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்து
அந்தப் பேரார்வம் அமைய பாடுபடுவோம் என்று சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

இங்கே மின்சாரப் பற்றாக்குறை பற்றி மாண்புமிகு உறுப்
பினர்கள் தெரிவித்தபோது இரண்டு கருத்துக்களை நினைவிலே
வைத்துக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.
இந்தத் துறைக்கு பொறுப்பேற்ற 6-வது ஐந்தாண்டுத் திட்டத்
தில் இந்தியா முழுவதற்கும் 20,000 மெகாவாட் மின்
உற்பத்தியைக் கூடுதலாகச்சேர்க்க வேண்டுமென்று திட்டமிட்டார்
கள். அதிலே தமிழ்நாட்டிற்கு எவ்வளவு என்று மின்சார
அமைச்சர்கள் மாநாட்டில் பார்த்தபோது, 230 மெகாவாட்
தமிழ்நாட்டின் பங்காக இருக்கும் என்பது தெரிந்தது. கடந்த
காலத்தில் மின்உற்பத்தித் திட்டங்கள் எந்த அளவுக்குப் புற
கணிக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு இது ஒரு சிறந்த சான்றுக்

6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாடு முழுவதற்கும் 20,000
மெகாவாட் மின்சாரம் கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகிற,
போது தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தூத்துக்குடியில்
3-வது பிரிவை உருவாக்குவதன் மூலம் 210 மெகாவாட்
சேர்வலாறு திட்டத்தில் 20 மெகாவாட் மட்டுமே கிடைக்கும் என்ற
நிலை இருந்தது. இதை மாற்றியமைக்க வேண்டுமென்று பெரும்
முயற்சிஎடுத்துக் கொண்டதன் விளைவாக, குறிப்பாகச் சொல்லப்
போனால் அன்றையதினம் மத்திய அரசினுடைய மின்சாரத்
துறை அமைச்சராக இருந்த கனிகான்சவுத்ரி அவர்களிடம்
சொன்னோம். 20,000 மெகாவாட்டில் ஒரு பர்சென்ட் கூட
தமிழ்நாட்டிற்கு வரவில்லையே என்று சொன்னபோது தனியாக
என்னையும் தமிழக அதிகாரிகளையும் சந்தித்து, இது மிகவும்
மோசமாக இருக்கிறது, தமிழ்நாட்டிற்கு ஏதாவது செய்தே தீர
வேண்டும் என்று உறுதியான நடவடிக்கை மேற்கொண்டு, அதன்
பிறகு மத்திய அரசு உதவியோடு—இன்று மாண்புமிகு உறுப்
பினர்கள் இந்த அறிக்கையிலே பார்த்தால் தெரியும்-நாம் 3344
மெகாவாட் திறனிலிருந்து 6365 மெகாவாட் திறனை இந்த
ஐந்தாண்டுத் திட்டத்தில் எட்டியிருக்கிறோம். ஏறநிலம் மட்டும்
1946 மெகாவாட், கிட்டத்தட்ட 2000 மெகாவாட் அளவுக்கு
நாமே உற்பத்தியைக் கூடுதலாக்கியிருக்கிறோம். அந்த அளவுக்குப்
பார்க்கும் போது, 7—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் எந்த
அளவுக்குக் கூடுதலாக திட்டங்களை மேற்கொள்ளப்போகிறோம்
என்பது பற்றியிலே இந்த அரசு கண்ணும் கருத்து
மாக இருக்கிறது என்பதற்குத் தலைசிறந்த எடுத்துக் காட்டாகும்.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது "தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்று சொல்வார்கள், ஆனால் இந்திய அரசிடம் அது செல்லாது" என்று குறிப்பிட்டார்கள். நான் ஒன்றை மட்டும் சொல்கிறேன். யார் தட்டினாலும் கதவைத் திறந்தால் சில நேரங்களில் ஆபத்து கூட வந்துவிடும் ஆகவே, தட்ட வேண்டியவர் தட்டினால் பலன் கிடைக்கும் என்பதற்கு 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய சர்க்கார் மூலமாக சுமார் 600 மெகாவாட்டும், நமது திட்டத்தின் மூலமாக 1,946 மெகாவாட்டும் கூடுதலாக கிடைக்கும் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தியாகும்.

அதோடு மட்டுமல்ல. இதுவரையில் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் பிற மாநிலங்களிலிருந்து மின்சாரத்தைப் பெற்றுத்தான் நிலைமையைச் சமாளித்து வந்திருக்கிறார்கள். இன்று நேற்றல்ல, கடந்த 25 ஆண்டுக்காலமாக அதுதான் நிலைமை. சில ஆண்டுகளில் கேரளாவில் இருந்து பெறுவோம்: சில ஆண்டுகளில் கர்நாடகத்திலிருந்து பெறுவோம். ஆனால் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு தமிழ்நாட்டினுடைய மின் தேவையைப் பொறுத்தவரையில் தன்னிறைவு நாம் எய்த வேண்டும் எதிர்பாராத காரணங்களுக்கு வேண்டுமானால் பிற மாநிலங்களிலிருந்து மின்சாரத்தைப் பெறுகின்ற நிலைமை இருக்கவேண்டுமே தவிர மற்ற மாநிலங்களிலிருந்து வருகின்ற மின்சாரத்தை வைத்துத்தான் நம்முடைய மின் தேவையை நிறைவு செய்து கொள்கிறோம் என்று இருக்கக்கூடாது என்றார்கள். கடந்த சில ஆண்டுகளாகப் பருவமழை பொய்த்தும் கூட தேவையான பருவமழை பெய்யாமல் இருந்தும் கூட பிற மாநிலங்களிலிருந்து உதவி பெறாமல் நாம் தன்னிறைவை எட்டி வந்திருக்கிறோம்; மின்பற்றாக்குறையைச் சமாளித்து வந்திருக் கிறோம்.

கடந்த சில மாதங்களில் கூட மின்பற்றாக்குறை மிகக் கடுமையாக இருந்தது. மாண்புமிகு திரு. அப்துல் சமத் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். மின்சாரத்துறை அமைச்சர் ரொம்ப சாமர்த்தியமாக அந்த நேரத்தில் இந்த மின்சார வாரியத்தினுடைய நிதி நிலை அறிக்கையை எடுத்துக் கொண்டால், எங்கே அதைப் பற்றி எல்லாம் பேசுவார்கள் என்று கருதி கடைசியாக வைத்துக் கொண்டார்கள் என்று கூடக் குறிப்பிட்டார்கள். சில நேரங்களில சாமர்த்தியமாக இருப்பதும் தேவை என்பதை நான் அவருக்கு நினைவூட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை இராமநாதன் அவர் கள் தூங்காதே தம்பி தூங்காதே என்றுசொன்னார்கள். நான் தூங்காமல் தான் இருக்கிறேன் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும். இனிமேலாவது ஒத்துக்கொள்வார்கள் என்று



நான் கருதுகிறேன். அந்த வகையில் பார்க்கிறபோது பருவ மழை பொய்த்தும் கூட நாம் இந்த ஆண்டு ஓரளவுக்குச் சமாளித் தோம். ஆனால் இடைஞ்சல் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன வென்றால் தூத்துக்குடியில் உள்ள மூன்றாவது இயந்திரத்தில் எதிர்பாராத வகையில் ஹைட்ரஜன் லீக்கேஜ் ஏற்பட்டுவிட்டது, அதற்குக் காரணம் ஒரு சில இயந்திரங்களைப் பொறுத்தவரையில் அதாவது பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிமிட்டட் நிறுவனம் தந்திருக்கின்ற இயந்திரங்களைப் பொறுத்தவரையில் ஏற்பட்ட ஒரு டெக்னிக்கல் ப்ராளம் ஆகும். அந்த ப்ராப்ளம் வராமல் இருந்திருக்குமேயானால் நிச்சயமாக இந்தத் திடீர்மின்நிறுத்தங்கள் கடந்தசில மாதங்களில் நமக்குஏற்பட்டிருக்காது ஏன் நான் இதை எல்லாம் குறிப்பிடுகிறேன் என்றால் சட்டியிலே இருந்தால் தானே அகப்பையிலே வரும் என்று சொன்னார்கள். ஆனால் பந்தியில் உட்கார வைத்துவிட்டு அதற்குப் பிறகு சமையல் செய்யப் போவது என்றால் சரியாக இருக்காது. ஆகவே மின்உற்பத்தியை எந்த அளவுக்கு அதிகப்படுத்த முடியுமோ, எந்த அளவுக்கு அதிகப்படுத்திக் கொண்டு வருகிறோமோ அதைப் பொறுத்துத்தான் தமிழ்நாட்டின் எதிர் காலம் இருக்கின்றது என்ற கொள்கை முடிவை உறுதியாக ஏற்றுக் கொண்டு அந்த வழியில் செயல்பட்டதன் காரணத்தால் தான் சில அடிப்படைக் காரியங்கள் எல்லாம் மேற்கொள்ளப் படுகின்றன.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இன்னும் விசேஷமான நிலைமை என்னவென்றால் நீர் மின்நிலையங்களைப் பொறுத்தவரையில் அவை அருகி வருகின்றன. அனல் மின் நிலையமும் அணு மின்நிலையமும் தான் நமக்கு இருக்கின்ற வழிகள். அனல் மின்நிலையம் என்கிறபோது நிலக்கரி கொண்டு வருவதானலும், நிலக்கரி வெட்டி எடுப்பதானாலும், அனுப்பு வதானாலும், நிலக்கரி ஒதுக்குவதானாலும் இயந்திரங்களைத் தருவதானாலும் அது இந்திய அரசின் பொறுப்பில்தான் இருக் கின்றது. அதைப் போல அணு மின்நிலையத்தைப் பொறுத்த வரையில் முழுக்க முழுக்க அதுவும் இந்திய அரசின் பொறுப்பில் தான் இருக்கின்றது. எனவே தமிழ்நாட்டினுடைய மின் தேவையை நிறைவு செய்ய வேண்டும் என்றால் நாம் கால்பங்கு இந்திய அரசு முக்கால் பங்கு இதிலே ஈடுபடவேண்டும். ஆகவே தான் நாம் போடுகின்ற புதிய புதிய திட்டங்களுக்கு இந்திய அரசு தொடர்ந்து அனுமதி அளித்துக் கொண்டு வருவதன் மூலம் தான் இந்தத் தேவையை நிறைவு செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர் களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

கடலூரில் புதிய அனல் மின்நிலையம் அதை யொட்டித்தான் அமைய இருக்கின்றது. அதையொட்டித் தான் நெய்வேலியில் 3-வது சுரங்கம் ஏற்படுத்தவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். இந்திய சர்க்காரைப் பொறுத்த வரையில் மிகவும் பரிவோடு பரிசீலித்து 7-வது ஐந்தாண்டு திட்டத்தில் நிச்சயமாக அதனை ஏற்றுக் கொள்வார்கள் என்று இந்த அரசைப் பொறுத்த வரையில் நான் நம்புகிறேன்.

அதேபோல் கல்பாக்கம் மின் நிலையத்தில் ஒரு விரிவாக்கத் திட்டம் வேண்டுமென்று அதாவது Fast Breeder Reactor என்று சொல்வார்கள். 40 மெகவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய இப்போது ஏற்பாடு செய்கிறார்கள். விரைவில் அது 500 மெகாவாட் என்ற அளவுக்கு உற்பத்தித் திறனை உயர்த்து கின்ற அளவுக்கு இந்திய அரசு அதற்கான நடவடிக்கையை மேற் கொள்ள இருக்கிறார்கள். அவற்றை எல்லாம் விரைவுபடுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் நேற்று பேசினார்கள். இன்று இல்லை. தொலை நோக்கு வேண்டும் என்று சொன்னார்கள். தொலை நோக்கு மட்டுமல்ல: இந்த அரசைப் பொறுத்த வரையில் பொது நோக்கம் கொண்டு செயல்படுகின்ற காரணத்தால் இன்று நாளை என்று நாம் பார்க்கவில்லை. அதுவும் மின்உற்பத்தித் திட்டங்களைப் பொறுத்தவரையில் ஒரு திட்டத்தை ஆரம்பிக்கிறோம் என்றால் 7 ஆண்டுகள், 8 ஆண்டுகள் கூட ஆகிவிடும். ஆகவே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில் அடிக்கடி அவர்களே சொல்லி வருவது போல் அவர்கள் செய்து வருவது போல் அடுத்த தேர்தலைப் பற்றி நாம் சிந்திப்பதில்லை. அடுத்த தலைமுறையைப் பற்றித் தான் சிந்திக்கின்ற காரணத்தால் புதிய, புதிய அனல் மின் உற்பத்தித் திட்டங் களும், அணு மின் உற்பத்தி நிலையங்களும் இன்றைக்குத் தமிழகத்திற்குக் கிடைத்து வருகின்றன என்பதை நான் இங்கே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

சேர்வலாறு-திட்டத்தில் ஏற்பட்டு விட்ட வெள்ளப் பெருக் கினால் நேர்ந்த சேதத்தைப் பற்றிச் சொன்னார்கள். இங்கேயே சட்ட மன்றத்திலேயே அது பற்றி ஏற்கெனவே ஒரு முறைப் பேசப்பட்டிருக்கிறது. என்ன குறைபாடுகள், யாரால் ஏற் பட்டவை, எப்படி ஏற்பட்டவை என்பதையெல்லாம் நிச்சய மாக நாங்கள் பார்த்து வருகிறோம், ஆனால் அதனாலே மிகப் பெரிய நஷ்டம் வந்து விட்டது என்று நாமாகவே கருதத் தேவையில்லை, ஏனென்றால் தரப்பட்டிருக்கிற இயந் திரங்கள் எல்லாம் இன்ஷியூர் செய்யப்பட்டிருக்கின்றன. வேண்டுமானால் ஓரளவுக்கு டேமேஜ் இருக்கலாமே தவிர, பெரிய அளவுக்கு ஒன்றும் சேதம் ஏற்பட்டு விட்டதாக நாம் கருதிக் கொள்ளத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாய மக்களுக்கு மின் வசதியைக் கொடுப்பது பொறுத்த வரையில் முக்கியமான இரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஒன்று, விவசாயிகளுக்கு பம்ப் செட்டுகள் ஏராளமாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தான் தரப்பட்டன, இப்போது தரப்படவில்லை என்று சொன்





னார்கள். அதேபோல அன்றையதினம் ஏராளமான கிராமங் களுக்கு மின்சார வசதி வழங்கப்பட்டது இப்போது வழங்கப்பட வில்லை என்று சொன்னார்கள். சாதாரணமாக பையன் பிறந்து வளர்கிறபோது, 18, 19 வயது வரையில் வேகமாக வளர்வான் 18 வயதில் நீ 5 அடி வளர்ந்தாயே, 36 வயதில் ஏன் 10 அடி வளரவில்லை என்று அவனைக் கேட்க முடியாது, அது அது அந்தந்தப் பருவத்திலே நடைபெறும். அதுபோல ஆரம்ப காலத்திலே தரப்பட வேண்டிய மின் இணைப்புகள் சற்று வேகமாக தரப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள் கிறேன். நான் அந்த நேரத்திலேயே, திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கிறபோதே, இது குறித்து தலையிட்டுப் பேசி யிருக்கிறேன். பதிவேடு குறிப்புகளை எடுத்துப் பார்த்தால் தெரியும். மின்சாரத்தை விநியோகம் செய்வதிலே காட்டுகிற அக்கறையை விட மின்சார உற்பத்தியில் அதிக அக்கறை காட்ட வேண்டும் என்று இந்தப் பேரவையிலேயே எடுத்துச் சொல்லி யிருக்கிறேன். ஆகவே பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு என்பது ஓரளவிற்கு இப்போது நிறைவு பெற்றுள்ளது. இந்த நிலைமை தொடர்ந்து வந்தால், ஏராளமான பம்ப் செட்டு களுக்கு மின் இணைப்பைக் கொடுத்துக் கொண்டே போனால், தமிழ்நாட்டின் நிலத்தடி நீர் மட்டும் அல்ல, தமிழ்நாட்டிலே உள்ள நீர் வளமே குறைந்து. இப்போது எப்படி, சாதாரணமான மழை பெய்யாவிட்டால் கூட, நாடு முழுவதும் குடிதண்ணீர் பஞ்சம் வந்திருக்கிறது என்று நாம் அலறிக் கொண்டிருக் கிறோமோ, அந்த நிலை: நம்மோடு மட்டும் அல்லாது அடுத்த தலைமுறைக்கும் ஏற்படுத்தி விடுவோமோ என்ற சூழ்நிலை இருக்கிறது.

ஆகவே பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கொடுப்பதைப் பொறுத்தவரையில் எவ்வளவுக்கெவ்வளவு நிதானமாகப் போகி றோமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது என்பது என்னுடைய தாழ்மையான, பணிவான அபிப்பிராயம். ஏற்கெனவே 10-1/2 லட்சம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுத்து, இந்தியாவிலேயே நம் மாநிலம் முதலிடம் வகிக்கிறது என்பது நமக்குப் பெருமைதான். ஆனால் அதற்காக நாட்டிலே இருக்கிற எல்லாக் கிணறுகளுக்கும் மின் இணைப்பைக் கொடுத்துக் கொண்டே போவோமேயானால் கடைசியில் என்ன நிலைமை வரும் என்றால், பல கிணறுகளில் நீரே இல்லை என்ற நிலைமை தான் உருவாகும். நிலத்தடி நீர் நிபுணர்கள் இதிலே எச்சரிக்கை யாக இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இருக்கின்ற தண்ணீரை நம்முடைய தலைமுறையிலேயே பயன் படுத்திவிட்டு, அடுத்த தலைமுறைக்கு வெறும் பாலைவனமாக நாட்டை விட்டுச் செல்லக்கூடாது என்பதிலே நாம் சற்று கவன மாக இருக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல கிராமங்களைப் பொறுத்தவரையில் அப்படிதான் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுத்து விட்டோம். வேண்டுமானால் மலை மேல் வாழ்கின்ற சில பகுதிகளுக்கு அவை மலைப் பிரேதசமாக இருப்பதால் அங்கு மின்சாரம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவைகளுக்கும், இலட்சக் கணக்கான ரூபாய் செலவு செய்து கம்பித் தொடர்களை மேலே இழுத்துக் கொண்டு செல்வதை விட—ஏனென்றால் அவர்கள் கேட்பது விளக்கு மட்டும்தான். பெரிய இன்டஸ்டிரிஸ் ஒன்றும் அவர்கள் கேட்கவில்லை. ஆகவே, சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் எடுத்து தரலாமா, டீசல் என்ஜினை வைத்துத் தரலாமா என்ற ஆய்வுக்கு செய்து கொண்டு வருகிறோம். அந்த அளவுக்குத் தான் அந்த எலக்ட்ரிபிகேஷன் தேவை இருக்கிறதே தவிர பெரிய அளவில் மின்சாரத் தேவை எதுவும் இல்லை.

ஆகவே என்னைப் பொறுத்த வரையில் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படுவது என்றாலும், பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்படுவது என்றாலும் அதை முழு அளவுக்கு முடித்திருக்கிறோம் என்பதுதான் கருத்து. அந்த வகையில் நான் இதனை அணுக வேண்டும். அதை விட்டு, 1966-லே இவ்வளவு பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு 1976-லே இவ்வளவு பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு, இன்று இவ்வளவு பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு என்று கணக்கிடுவதை விட, அதைப்போலவே 1966லே இத்தனை கிராமங்களுக்கு மின்சாரம், தரப்பட்டது, 1976லே இத்தனை கிராமங்களுக்கு தரப்பட்டது இன்று இவ்வளவு தரப்பட்டிருக்கிறது என்று புள்ளி விவரங்களைச் சொல்லி, அறிஞர் அண்ணாவின் பெயர்களையெல்லாம் அனாவசியமாக இழுத்துக் கொண்டு, நம்முடைய அறியாமையைப் புலப்படுத்த தேவையில்லை என்பதை மட்டும் இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகளுக்கு மின் கட்டணம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதிலேயும் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளுக்குத் தேவை 24 மணி நேரமும் மின்சாரம். இது நம் எல்லோருக்கும் தெரியும், ஏனென்றால் நாம் அனைவரும் விவசாயக் குடும்பத்திலிருந்து வந்தவர்கள் தாம். அதுவும் தொழிற்சாலைகள் எல்லாம் கிராமங்களுக்குப் போக வேண்டும் என்று சொன்னால், அங்கே 24 மணி நேரமும் மின்சாரம் வேண்டும். இன்றையதினம் அங்கே விவசாயிகளுக்கு மின்சாரம் குறைகிறது என்று சொன்னால், தொழில்களுக்கும் மின்சாரம் குறைகிறது. அதன் காரணமாகத்தான், தொழில் துவங்குபவர்கள் நகரங்களில் இருந்தால் நல்லது, கிராமங்களுக்குப் போனால் தொல்லை என்று நினைக்கிற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, நம்முடைய நோக்கம் கிராமப்புறங்களில் இருக்கிற பகுதிகளுக்கு 24 மணி நேரமும் மின்சாரம் கொடுக்கப்பட வேண்டும் என்பது தான்.





மின்சாரம் குறைக்கப்பட வேண்டும் என்றால், நகர்ப்புறத்திலே தான் குறைக்கப்பட வேண்டும். அப்படி ஒரு நிலைமை இருந்தால்தான் கிராமப்புறங்களில் தொழில் வளர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியும் ஏற்படும். விவசாயத்தையே நம்பி இருக்கிற கிராமப்புற மக்களுக்கு தொழிற்சாலைகளின் மூலமாக வேலை வாய்ப்பும் அதிகமாக ஏற்படும். ஆனால் அந்த நோக்கத்தை நம்மால் செயல்படுத்த முடியுமா? அல்லது செயல்படுத்த முடியாதா? சரி, பேசாமல் இருந்து விடலாமா என்றால் பேசாமலும் இருக்க முடியாது. நம்முடைய மின் உற்பத்தி பெருக பெருக எந்த அளவிற்குக் கிராமப்புறங்களுக்கு மின்சாரத்தை அதிகப்படுத்த முடியுமோ, அந்த அளவிற்கு கிராமப்புறங்களுக்கு மின்சாரத்தை அதிகப்படுத்துவதற்கு இந்த அரசு நிச்சயமா நடவடிக்கை எடுக்கும்.

அதே நேரத்தில் மின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு பெரிய பிரச்சனையாக இருப்பது முதலீடு. பெறுகிற மின்சாரத்திற்கு உரிய கட்டணத்தைத் தருகிற பழக்கத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் இன்றைக்கு என்ன நிலைமை என்றால் கட்டண உயர்வு என்று வருகிறபோது விவசாயிகள் பக்கம் நாம் போவதில்லை. கட்டண உயர்வு முழுவதும் தொழிற்சாலைகள் பக்கம்தான் போகிறது. எவ்வளவு நாளைக்குத் தான தாங்குவார்கள், எவ்வளவுதான் தாங்குவார்கள்? பக்கத்து மாநிலங்களில் அல்லது மற்ற இடங்களில் தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதற்காக அவர்கள் கட்டணச் சலுகையை காட்டுகிறபோது நாம் கட்டண உயர்வை அதிகப்படுத்திக் கொண்டு போனால் ஒருபுறம் தொழிற்சாலைகளே வராது; தொழிற்சாலைகளிலிருந்து வருகிற வருமானமும் வராது. மின் வாரியத்திற்குப் பணம் வராது. பணம் வரவில்லையென்றால் மேலும் மேலும் உற்பத்தித் திட்டங்கள் வராது. உற்பத்தித் திட்டங்கள் வரவில்லையென்றால் விவசாயிகளுக்கு 24 மணி நேரம் மின்சாரம் கொடுக்க முடியாது. ஆகவே எப்படியோ ஒரு தவறான பழக்கம், அதை நெகட்டிவ் சர்க்கிள் என்று சொல்வார்கள். ஒன்றுக்கொன்று நெகட்டிவாக கீழே போகிற போது அந்தச் சுழலில் சிக்கிக் கொண்டிருக்கிறோம். இதிலேயிருந்து விடுபட்டு வருவதற்கு விவசாயிகளைப் பொறுத்த வரையில் விதிக்கிற கட்டணத்தைக் கொடுக்கவும், அதே நேரத்தில் அதிகமாகக் கொடுப்பதற்கும் அவர்கள் முன்வருவார்களானால் அது வளர்கிற வட்டத்திற்கு அழைத்துச் செல்லும் என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்தில் விவசாயிகளுக்குக் கட்டணத்தைக் கூட்டப் போகிறோம் என்ற முடிவிற்கு நீங்கள் வர வேண்டாம். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அதை எதிர்காலத்திலும் சம்மதிக்க மாட்டார்கள் என்பதை நீங்களும் அறிவீர்கள். நானும் நன்றாக அறிவேன். அதே நேரத்தில் கொடுக்க வேண்டிய கட்டணத்தைக் கொடுத்து, தேவைப்படுமானால் கூடவும்

கொடுத்து, மின் உற்பத்தி பெருகி, தேவையான அளவிற்கு மின்சாரம் வருவதற்கு வாய்ப்பை உருவாக்குவது தமிழக விவசாயிகளின் எதிர்காலத்திற்கு நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் ஊதிய ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் ஊதிய ஒப்பந்தம் உருவாவதற்கு வழி பிறக்கும்.

இலவச மின்சாரம் தொழிலாளர்களுக்கு வேண்டுமென்று கேட்டார்கள். தொழிற்சங்கத்தை மின் வாரியத்தில் நடத்துகிறவர்கள் அந்தக் கோரிக்கையை கேட்டுத்தான் ஆகவேண்டும். ஏனென்றால் தொழிலாளர்களிடத்தில் இருக்கிற ஒரு கோரிக்கை அது. ஆனாலும் நான் அவர்களுக்கெல்லாம் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு தொழிலிலும் இருக்கிற தொழிலாளர்கள் அந்தந்தத் தொழிலில் இருப்பவைகளைத் தங்களுக்கு வேண்டுமென்ற முறையில் போவார்களானால் பிறகு சமுதாயத்தைப் பற்றி யார் கவலைப்படுவது? 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்' என்று சொல்வார்கள். ஆகவே, ஊருக்கெல்லாம் மின்சாரம் கொடுக்கிற நல்ல காரியத்தில் ஈடுபட்டிருக்கிற அந்தத் தொழிலாளர்கள் மற்றவர்களுக்கு மின்சாரம் தாருங்கள் என்று கேட்பதுதான் சிறப்பே தவிர, எங்களுக்குக் கொடுங்கள் என்று கேட்பது பண்பின் அடிப்படையிலே கூட சரியாகத் தெரியவில்லை. ஆகவே அந்த மாண்புமிகு உறுப்பினர்கள் வலியுறுத்த மாட்டார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

ஊர் மாற்றங்களைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். கூடுமானவரையில் ஊர்மாற்றங்கள் செய்கிறபோது குடும்பங்கள் பிரிக்கப்படாமல் இருப்பதற்கான அக்கறை மின்வாரியத்தாலே மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக வங்கி தருகிற கடன் காரணமாக தொழிலாளர்கள் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது என்ற ஒரு கருத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்களால் சொல்லப்பட்டது. உலக வங்கி கடனுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. பொதுவாகவே ஒரு கருத்து, மின்வாரியத்திலே நிறைய தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்பது. ஆனால் மின்வாரியத்திலே பணியாற்றுகிற தொழிற் சங்கங்களைக் கேட்டால் தொழிலாளர்கள் போதாது என்பார்கள். இதற்கு என்ன தீர்வு என்றால் ஒவ்வொருவருக்கும் என்ன வேலை என்று வரையறை செய்து அந்த வேலையை அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, அதுபோக மீதி வேலை இருக்குமானால் அந்த வேலைக்கு உரியவர்களை நாம் நியமித்தால் இந்த பிரச்னை தீரும். அவரவர்களுக்கு வேலையை வரையறை செய்ய வேண்டுமென்று மின்வாரியம் முயற்சி மேற்கொள்கிறபோது, ஊதிய உயர்வோடு இதைச் சேர்க்கலாமா என்று தயவுசெய்து தொழிற்சங்கத்தலைவர்கள் கேட்கக்கூடாது. எதை நியாயமான



வேலையென்று கருதுகிறார்களோ, எந்த அளவிற்குத் தங்களால் செய்ய முடியுமென்று எதிர்பார்க்கிறார்களோ, அந்த அளவிற்கு ஒரு வரையறைக்குட்பட்டு அந்த வேலையைச் செய்து முடிப்பார்களானால் அவர்களுக்கும் ஒரு திருப்தி. மின்வாரியத்திற்கும் ஒரு கணக்கு ஏற்படும். ஆகவே அந்த வகையிலே வேலை வரையறை என்பது மிகவும் தேவை. அதையொட்டித்தான் தொழிலாளர்களை அதிகப்படுத்த வேண்டுமா, குறைக்க வேண்டுமா என்பது தீர்மானிக்கப்பட வேண்டுமே தவிர, எப்போதும் இருப்பதைப் போலவே இருந்து கொண்டிருக்க வேண்டும் என்ற நிலைமை நிச்சயமாக சரியானதாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-00)

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேலையைக் குறித்து ஒரு வரையறை செய்து கொள்ள வேண்டுமென்றும், அதற்கு வேண்டியவைகளைத் தான் இப்போது பேசுகிறேன். இது வேலைப் பளுவை உயர்த்த வேண்டுமென்ற ஏற்பாடு அல்ல என்றும், வேலையை வரையறை செய்து கொள்ள வேண்டும். இன்னின்னவர்களுக்கு இன்னின்ன வேலை என்று ஏற்படுத்தி விட்டால் பிரச்னை இருக்காது என்றும் சொன்னார்கள்.

நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், சம்பளம் பற்றி பேச்சு வார்த்தை நடத்துகிறபோது, அத்தோடு இந்த விஷயத்தை இணைப்பது தான் அதிலே இருக்கிற கஷ்டம். தனியாக மின் வாரியத்திற்கோ அல்லது அரசுக்கோ, இருக்கிற வரையறைகளிலே மாற்றங்கள் செய்ய வேண்டும் என்ற எண்ணங்கள் இருந்தால் அதற்குத் தேவையான ஒரு திட்டத்தை தயாரிக்கட்டும். அதை முன் வைக்கட்டும். அதைப்பற்றி தொழிற் சங்கங்கள் பேசுவார்கள். அவர்கள் பேச மறுக்கவில்லை. அந்த முறையில் செய்தால் இந்தச் சம்பள பேச்சு வார்த்தை முடியும். அதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?'

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, எதையும் தருகிறபோதுதான் பெற முடியும். காற்றுள்ளபோது தான் தூற்றிக் கொள்ள முடியும். ஆகையினாலே இதைப் பேசி முடிக்கவேண்டும் என்றால், அதையும் இதிலே இணைக்கக்கூடாது என்று சொல்வது எந்த வகையிலே பொருந்தும் என்பது எனக்குத் தெரியவில்லை. ஊதியமும் பேசுவோம். இதையும் பேசுவோம் என்றுதான் பேசுகிறார்கள். இதிலே பேசுவோம் என்ற நிலைமைக்கு வந்துவிட்ட பிறகு, அதைச் சீக்கிரம் முடிப்பதை யார் வேண்டாம் என்று சொல்கிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களை நிச்சயமாக நல்ல அறிவுரைகளை வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாசம் திறமையாகச் செயல்படவேண்டும், ஆங்காங்கு அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும் என்ற கருத்தை எல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள் அதுபற்றி அரசு தீவிரமாக சிந்தித்து வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கூட நான் பேசிக் கொண்டு இருந்தேன். அவர்கள் கூட, எப்படி போக்குவரத்துத் துறையிலே பல்வேறு போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கப் பட்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு பகுதியிலே இயங்கி வருகிறதோ, அதைப்போல தமிழ்நாட்டை 7 பிரிவாகப் பிரித்து, இந்த வினியோகத்தைப் பொறுத்தவரையில், ஆங்காங்கே சிறு சிறு கம்பெனிகளாக ஆக்கலாமா என்றும் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படிச் செய்கிறபோது என்ன ஒரு பிரச்னை வருகிறது என்றால், இப்போது விவசாயிகளுக்கு நாம் இலவசமாக மின்சாரம் தருவதால், நாம் ஒரு கம்பெனி என்று அமைத்தால் அந்தக் கம்பெனி நஷ்டத்திலேதான் தொடர்ந்து இருக்குமே தவிர, அது சரியாக இயங்குவதற்கு வாய்ப்பு வராது. ஆகையினாலே, இதை ரயில்வேயை எப்படி பிரித்து இருக்கிறார்களோ, சதர்ன் ரயில்வே ஜெனரல் மேனேஜர் என்றெல்லாம், சொல்லி, அதைப்போல 7 பிரிவாக, பிரிக்கலாமா என்பதைப் பற்றியும், இதே மின் வாரியத்தை வைத்துக் கொண்டு மின் வினியோகங்களை மட்டும் 7 பிரிவுகளாக பிரிக்கலாமா, அதற்கு போதுமான அதிகாரங்களை, அதுவும் பயனீட்டாளர்களுக்கு உள்ள குறைகளைப் போக்குவதற்குரிய அதிகாரங்களை அளிக்கலாமா என்பதைப் பற்றியும் அரசு விரைவிலே முடிவு எடுக்க இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே நேர்மையைப் பற்றிச் சொன்னார்கள். பல இடங்களில் உள்ள குறைபாடுகளைப் பற்றிச் சொன்னார்கள். விஜிலன்ஸ் கமிட்டியினுடைய கண்காணிப்பைப் பற்றிச் சொன்னார்கள். இலஞ்சம் எல்லாம் இருக்கிறது என்று சொன்னார்கள். நான் ஒன்றை மட்டும் பொதுவாகச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சமுதாயத்தினுடைய அங்கம்தான் மின்சார வாரியம். ஆகையினாலே மின்சார வாரியத்தில் முழுக்க முழுக்க, நூற்றுக்கு நூறு எல்லோருமே நல்லவர்களாகவும், ஒழுக்கம் உள்ளவர்களாகவும், சாமியார்களாகவும் இருந்து மின்சார வாரியத்தை நடத்த முடியும் என்று நான் நிச்சயமாக நம்ப முடியவில்லை. எந்த மனிதனை எடுத்துக் கொண்டாலும் நல்லதும் இருக்கும். அவர்களிடத்திலே குறைபாடுகளும் இருக்கும். தங்கத்தை வெட்டி எடுக்கிறபோது, களி மண்ணோடுதான் சேர்ந்து வரும். (குறுக்கீடு). கருங்கல், களிமண் எல்லாம் சேர்ந்துதான் வரும். அதைக் கழுவிவிட்டுத்தான் அந்தத் தங்கத்தைகூட எடுக்க வேண்டி வரும். ஆகவே அந்தத் தங்கத்திற்கு இந்த நிலைமை என்றால் சாதாரணமான மக்களுக்குச் சொல்லவா வேண்டும். ஆகவே குறைபாடுகள் என்பது இருக்கத்தான் செய்யும். அந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கு எந்தளவிற்கு நிர்வாகம் முயற்சிகளை மேற்கொள்ளும் வேண்டுமோ அந்த அளவிற்கு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை மட்டும் நான் இங்கே உறுதியாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



இன்னும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு பிரச்னைகளைப்பற்றி எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரச்னைகளின் மீது மின்சார வாரியம் தகுந்த நடவடிக்கை எடுக்கும். ஆனால் நான் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புவது' தமிழ்நாடு முன்னுக்கு வரவேண்டும் என்றால் அது மின்சார வளர்ச்சியைப் பொறுத்திருக்கிறது. மின்சார உற்பத்தியைப் பொறுத்திருக்கிறது, மாநில அரசு முதல் போட்டு செய்கிறோம். மத்திய அரசு முதல் போட்டு செய்கிறோம். அப்படியும் பற்றாக்குறை என்கிறபோது, தனியார்களிலே உள்ளவர்கள் எல்லாம் நாங்களும் முன்வருகிறோம் என்று சொன்னால், அதையும் நாம் வரவேற்கத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களோடு சில தினங்களுக்கு முன்னாலே பேசியபோது உலக வங்கி, மற்ற நிதி நிறுவனங்கள் மூலமாக கடன் பெற்று, வட சென்னை அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரையில் ஒரு தனி நிறுவனமாக தனி கம்பெனியாக ஆக்கி, மாநில மைய சர்க்கார் நிதிக்கு அப்பாற்பட்டு, வேறு நிதியைப் பெற்று, அந்த மின் உற்பத்தித் திட்டத்தை உருவாக்கலாமா என்று அவர்கள் பரிசீலிக்கச் சொல்லி இருக்கிறார்கள். அரசு அதையும் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. ஆகவே மின் வாரியத்தைப் பொறுத்த வரையிலும், மின் தட்டுப்பாட்டை நீக்க வேண்டும், மின் பற்றாக்குறையைப் போக்கவேண்டும், தமிழ்நாடு மின்சாரத் தேவையில் தன்னிறைவு அடையவும். ஏழாவது ஐந்தாண்டு திட்டத்திலே அல்ல என்றாலும், எட்டாவது ஐந்தாண்டு திட்டத்திலேயாவது மின்சாரம் 24 மணி நேரமும் கிடைக்கின்றது, பல மின் உற்பத்தி நிலையங்கள் போதுமான அளவிற்குத் தேவையில்லாத காரணத்தாலே பல இயந்திரங்கள் இயங்காமல் இருக்கின்றன என்று எப்படி மேலை நாடுகளிலே இப்போது நிலைமைகள் இருக்கிறதோ, அதைப்போல நாமும் ஒரு நிலைமையை எட்டவேண்டும் என்பதுதான் இந்தத் தமிழக அரசினுடைய தலையாய நோக்கம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். சிலவற்றிற்குப் பதில் சொல்லியிருக்கிறேன். பதில் சொல்லப் பெறாதவைகளுக்கு பதில் அச்சடித்து உங்களுக்குத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே வாக்கெடுப்பு இல்லை என்றாலும் கூட உங்களுடைய வாக்குகள் எல்லாம் எங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்று கூறி உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மின்வாரிய நிதிநிலை அறிக்கைகள் மீதான விவாதம் முடிவுற்றது.

5 கவனஈர்ப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) பதில் வரப்பெற்றவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55-ன் கீழே, குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர் களிடமிருந்து கீழ்காணும் பொருள்கள் குறித்து அறிக்கைகள் வரப் பெற்று, அனுமதிக்கப்பெற்றவை. . . .

5. கவன ஈர்ப்புகள் —தொடர்ச்சி.

[1985 ஜூலை 9

திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை எல்லா உறுப்பினர்களுக்கும் வரவில்லை. ஆகவே விவர அறிக்கை எல்லா உறுப்பினர்களுக்கும் தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மொத்தம் 40 கவன ஈர்ப்புகள் வந்து நான் அனுமதித்து அவற்றில் 12 கவன ஈர்ப்புக்குப் பதில் வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். பதில் பெறாதவர்கள் என்னுடைய கவனத்தை ஈர்த்தால் பதில் வரும் இது நான் வந்து அடாப்ட் செய்யும் புதுமுறை ஆகும்.

(i) சென்னை இராயபுரம் மன்னார்சாமிகோயில்தெரு மேம்பாலத்தை அகலப்படுத்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர் இருக்கையில் இல்லை. அமைச்சர் அறிக்கை அளிக்கலாம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சென்னை இராயபுரம் மன்னார் சாமி கோயில் தெருவில் உள்ள மேம்பாலம் பழமையானதாகும். இப்பாலத்தில் நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு, தற்போதுள்ள இரண்டு வழித் தடங்களுக்குப் பதிலாக, நான்கு வழித்தடங்களாக அகலப் படுத்தும் திட்டம் பரிசீலிக்கப்பட்டு ரூ. 5.60 கோடி செலவாகுமென தோராயமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மன்னார் சாமி சாலையிலுள்ள பாலத்தின் பராமரிப்பு இரயில்வே நிர்வாகத்தைச் சார்ந்ததாகும். இப்பாலத்தின் தெற்கு இணைப்புச் சாலை மாநகராட்சி ஆதிக்கத்திலும், வடக்கு இணைப்புச்சாலை நெடுஞ்சாலைத் துறை ஆதிக்கத்திலும் உள்ளது. எனவே இத் திட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ. 5.60 கோடியில் ரூ. 2.80 கோடியை இரயில்வே நிர்வாகம் ஏற்கவேண்டுமென்று இரயில்வே நிர்வாகம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. எஞ்சிய ரூ. 2.80 கோடியை, சென்னை மாநகராட்சியும், நெடுஞ்சாலைத் துறையும் சரிசம்மாக ஏற்றுக்கொள்ளவேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது. சென்னை மாநகராட்சியின் நிதி நிலை சரியில்லாத காரணத்தால், சென்னை மாநகராட்சி தான் செலுத்த வேண்டிய தொகையை, மானியமாக வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. இது சம்பந்தமான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இத்திட்டம் செயல் படுத்தப்பட்டால் மேம்பாலத்தின் மீது தற்போதுள்ள நெரிசல் தவிர்க்கப்படும்.



1985 ஜூலை 19]

ii மதுரை மாநகராட்சியில் மின் கட்டண உயர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர் இருக்கையில் இல்லை. அமைச்சர் அறிக்கை அளிக்கலாம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

25-5-1985 நாளிட்ட அரசு ஆணை (நிலை) பொதுப் பணித் துறை எண் 793-ல் 1985 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தேதியிலிருந்து தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழகம் முழுவதும் வழங்கப்படும் மின்சார விநியோகத்திற்காக வசூலிக்கப்படும் கட்டண விகிதங்களை உயர்த்தியுள்ளது. வீடுகளில் பயன் படுத்தப்படும் மின் கட்டண விகிதத்தில் எவ்வித மாறுதலும் இல்லையென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2, சிறு தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டிலும், 5 குதிரை வேக மின் சக்தி வரையுள்ள மோட்டார்கள் உபயோகிக்கும் சிறு தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் மின்சார விநியோகத்திற்கு, ஏற்கனவே வசூலிக்கப்படும் மின்சார கட்டணம் போல், யூனிட் ஒன்றுக்கு 55 பைசாவாகவே இருக்கும் 5 குதிரை வேக மின்சக்தியைவிடக் கூடுதலாக உபயோகிக்கும் சிறு தொழிற்சாலைகளுக்குச் சென்னை மாநகர் நீங்கலாக, மற்றும் பகுதிகளுக்கு வழங்கப்படும் மின்சார விநியோகத்திற்கு மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு, 71 பைசாவிலிருந்து 80 பைசாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து. மதுரை மாநகராட்சி, மின்சாரத்தை மொத்தமாக வாங்கி, விநியோகம் செய்கிறது, தமிழ்நாடு மின்சார வாரியம் மின் கட்டணத்தை உயர்த்தியிருப்பதால், மதுரை மாநகராட்சி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குப் பிரதி மாதமும் கூடுதலாக ரூ. 16.45 இலட்சம் செலுத்த வேண்டியுள்ளது. இவ்வுயர்வினை ஈடு செய்ய மதுரை மாநகராட்சியும் மின் கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம் உயர் அழுத்த மின்சாரம் உபயோகப்படுத்தப்படும் தொழிற்சாலைகளுக்கு ஒரு கே.வி.ஏக்கு (K.V.A) உயர்ந்த பட்சம் ரூ. 45-ம் கூடுதலாக ஒவ்வொரு யூனிட்டுக்கும் 0.55 பைசா வசூலிக்கப்பட்ட நிலையிலிருந்து 1—6-1985 முதல் ஒரு கே.வி.ஏக்கு உயர்ந்தபட்சம் ரூ.50ம் கூடுதலாக ஒவ்வொரு யூனிட்டுக்கும் 0.64 பைசாவாக உயர்த்தியுள்ளது. மேலும் உரிமம் பெற்றவர்களுக்கு (மதுரை மாநகராட்சி தமிழ்நாடு மின்சார வாரியம் ஒரு கே.வி.ஏக்கு உயர்ந்த பட்சம் ரூ. 35/லிருந்து ரூ.40 ஆகவும் அத்துடன் ஒவ்வொரு யூனிட்டுக்கும் 0.40 பைசாவிலிருந்து 0.55 பைசாவாகவும் உயர்த்தியுள்ளது.

4. எனவே 1985 சூலை மாதம் முதல் மின் சட்டண வீதத்தை உயர்த்துவதற்கு மாநகராட்சி மன்றம் தீர்மானித்துள்ளது. மதுரை மாநகராட்சியால் 30-6-1985 வரையில் வசூலிக்கப்பட்டு வந்த கட்டண விகிதங்கள், ஒரு கே.வி.ஏக்கு அதிக பட்சம் ரூ. 55-ம், கூடுதலாக ஒவ்வொரு யூனிட்டுக்கும் 0.60 பைசா, சூலை முதல் தேதிக்குப் பின்னர் ஒரு கே.வி.ஏ.க்கு உயர்ந்த பட்சம் ரூ. 60–ஆகவும், கூடுதலாக ஒவ்வொரு யூனிட்டுக்கு 0.75 பைசாவும் மாநகராட்சியால் உயர்த்தப்பட்டுள்ளது. தொழிற்சாலை அல்லாத பிற இனங்களுக்கு உயர்ந்த பட்சம் 1 கே.வி.ஏ-க்கு ரூ. 65–ம், கூடுதலாக ஒவ்வொரு யூனிட்டுக்கும் 0.75 பைசா என்ற கட்டண விகிதங்களிலிருந்து, உயர்ந்தபட்சம் 1 கே.வி.ஏ-க்கு ரூ. 70-ம், கூடுதலாக ஒவ்வொரு யூனிட்டுக்கும் 0,90 பைசாவாகவும் அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களுக்கு, (விடுதிகள். அரசு மருத்துவமனைகள்) உயர்ந்தபட்சம் 1 கே.வி.ஏ-க்கு ரூ. 45 கூடுதலாக ஒவ்வொரு யூனிட்டுக்கும் 0.55 பைசா என்ற கட்டண விகிதங்களிலிருந்து, உயர்ந்த பட்சம் 1 கே.வி.ஏ-க்கு ரூ. 50-ம் கூடுதலாக ஒவ்வொரு யூனிட்டுக்கும் 0.70 பைசா என்றும் உயர்த்தப்பட்டுள்ளது.

5. குறைந்த அழுத்த மின்சாரம் உபயோகிப்போர்களில் குடியிருப்புகளுக்கான மின் கட்டணத்தில் உயர்வு ஏதுமில்லை. வியாபார நிறுவனங்களுக்கு 1 யூனிட்டுக்கு ரூ. 1.20-லிருந்து ரூ. 1.40 ஆகவும், குறைந்த பட்ச சர்வீஸ் ஒன்றுக்கு ரூ. 12-லிருந்து ரூ. 15 ஆகவும் அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களுக்கு (கல்வி விடுதிகள்' அரசு மருத்துவ மனைகள்) யூனிட் ஒன்றுக்குக் ரூ.1.15-லிருந்து ரூ. 1.25 ஆகவும், சர்வீஸ் ஒன்றுக்கு குறைந்த பட்சம் ரூ. 11.50–லிருந்து ரூ. 15 ஆகவும் அதிக சக்தி உபயோகிப்போருக்கு யூனிட் ஒன்றுக்கு ரூ. 0.90–லிருந்து ரூ.1.30 ஆகவும், குறைந்த பட்சம் 1 குதிரை வேக மின் சக்தி கொண்டதற்கு ரூ. 15-லிருந்து ரூ. 25 ஆகவும், குடிசைத் தொழில்களுககு யூனிட் ஒன்றுக்கு ரூ. 0.40 பைசாவிலிருந்து 0.55 பைசாவாகவும் சர்வீஸ் ஒன்றுக்குக் குறைந்த பட்சம் ரூ. 5–லிருந்து ரூ. 7.50 ஆகவும், தெரு விளக்குகளுக்கு யூனிட் ஒன்றுக்கு ரூபாய் 0.75 லிருந்து 0.90 பைசாவாகவும் உயர்த்தப்பட்டுள்ளது, மீட்டர் வாடகைகளில் மாற்றம் ஏதுமில்லை.

6. மாற்றியமைக்கப்பட்ட மின்கட்டண உயர்வினால், மதுரை மாநகராட்சிக்கு மாதந்தோறும் கூடுதலாக ரூ. 14.73 இலட்சம் தான் வருமானமாக கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த உயர்விற்கு பின்பும் மதுரை மாநகராட்சிக்கு மாதந்தோறும் ரூ. 1.72 இலட்சம் இழப்பு ஏற்படுகிறது.



மதுரை மாநகராட்சி விநியோகிக்கும் மின்சாரத்தைப் பெறும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை

| வாடிக்கையாளர்களின் வகை. | | எண்ணிக்கை. |
|---|---|---|
| உயர் மின் அழுத்தம்- | | |
| (1) தொழிற்சாலைகள் | | 11 |
| (2) தொழிற்சாலை அல்லாதவைகள் | | 14 |
| (3) அங்கீகரிக்கப்பட்ட நிலையங்கள் (கல்வி விடுதிகள், அரசு மருத்துவ மனைகள் முதலியன.) | | 8 |
| மொத்தம் | | 33 |
| குறைந்த மின் அழுத்தம்;- | | |
| (1) வீடுகளுக்கான இணைப்புகள் | | 48,537 |
| (2) வியாபாரம் | .. | 19,310 |
| (3) அங்கீகரிக்கப்பட்ட நிலையங்கள் (கல்வி விடுதிகள், மருத்துவமனைகள் முதலியன). | | 255 |
| (4) தொழிற்சாலைகள் | .. | 4,190 |
| (5) குடிசைத் தொழில்கள் | .. | 446 |
| (6) வேளாண்மை | .. | 4 |
| (7) தெரு விளக்குகள் | .. | 1 |
| மொத்தம் | .. | 72,743 |

7. குறைந்த அழுத்த மின்சாரம் வீட்டு உபயோகத்திற்கும் விவசாயத்திற்கும் பயன்படுத்தப்படுவதால் கட்டண உயர்வு எதுவும் பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செய்யப்படவில்லை.

8. இம் மின் கட்டண உயர்வினால், கீழ்க்கண்டவர்களிடமிருந்து ஆட்சேபனை மனுக்கள் மாநகராட்சியால் பெறப்பட்டுள்ளன;—

(1) மதுரை நகர் மன்ற, மாமன்ற முன்னாள் உறுப்பினர்கள் சங்கம்.

(2) திரு. கே. குருசாமி, முன்னாள் மாமன்ற உறுப்பினர், மதுரை.

(3) மதுரை இராமநாதபுரம் வர்த்தக சங்கத்தினால் 8–7–1985 நாளிட்ட ''இந்து'' நாளிதழில் வெளி வந்துள்ள திறனாய்வு (criticism)

(4) மதுரை மாவட்ட பொதுஜன நல உரிமைச் சங்கம் மதுரை.

9. 1985 சூலை மாதம் முதற்கொண்டு, மின்சார கட்டண விகிதங்கள் உயர்த்தப்பட்டுள்ளதால் மேற்குறிப்பிட்ட ஆட்சேபனை மனுக்கள் தவிர, இதுவரையில் பொது மக்களிடமிருந்து எந்தவிதமான எதிர்ப்பும் இல்லையென மதுரை மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

iii உதகமண்டலம் இந்திரா அரசு பூங்காவின் முன்பு தனியார் பல மாடி ஹோட்டல் நடத்த அனுமதித்துள்ளது

திரு டி. ஆர். வேங்கடரமணன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஊட்டி இந்திரா அரசு பூங்காவின் முன் அரசு விதிகளை மீறியும் இயற்கைச் சூழ்நிலைக்கு விரோதமாகவும் தனியார் பல மாடி ஹோட்டல் நடத்த அனுமதி அளித்தது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சன்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

உதகமண்டலம் நகராட்சியில் ''ஒட்லி சாலையில்'' சர்வே எண். 4221/1எ—ல் அரசு பூங்காவை ஒட்டியுள்ள இடத்தில், பல மாடி ஒட்டல் கட்ட திரு. கப்பினி என்பவர் 8-12-1983-ல் அனுமதி வேண்டி நகராட்சிக்கு விண்ணப்பித்தார். உத்தேசிக்கப்பட்ட கட்டிடம் விதிமுறைகளுக்கு உட்பட்டிருந்ததால், 2—2—1984—ல் நகராட்சியால் உரிமம் வழங்கப்பட்டது. அதன் பின்னர், மேற்படி கட்டிடம் அரசு தாவரவியல் பூங்காவை ஒட்டி அ மைவதால், அப்பூங்காவின் இயற்கை அழகை குலைப்பதாயும், அணுகுபாதையை பாதிப்பதாகவும் கருதப்பட்டதால், ஏற்கனவே வழங்கப்பட்ட கட்டிட உரிமத்தை நகராட்சி ஆணையர் 2—6— 984-ல் ரத்து செய்தார். அவ்வுத்திரவை எதிர்த்து திரு. கப்பினி உதகமண்டலம் குற்றவியல் சார்நிலை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். இதற்கிடையில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து மீறி கட்டிடம் கட்டுவதைப் பார்வையிட்ட நகராட்சி ஆய்வாளர் 13—12—1984-ல் மனுதாரருக்கு நோட்டீஸ் வழங்கினார். அதற்குக் கட்டிடம் கட்டப்படுவதை தடை செய்ய வேண்டாம் என வேண்டி, 27—12-1984—ல் மனுதாரர் பதில் அனுப்பினார். தொடர்ந்து, ஏற்கனவே வழங்கப்பட்ட உரிமத்தை 1—2-1985 முதல், மேலும் ஒரு வருட காலத்திற்குப் புதுப்பித்துக் கொள்ள திரு. கப்பினி 11-1—1985-ல் நகராட்சிக்கு விண்ணப்பித்தார். அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக விதிகளை மீறிக் கட்டியிருப்பதாலும், அதற்காக நகராட்சி நோட்டீஸ் கொடுத்து இருப்பதாலும், கட்டிட உரிமத்தைப் புதுப்பிக்க முடியாது என 6-2-1985 நகராட்சி ஆணையாளர் மனுதாரருக்குத் தெரிவித்துள்ளார்



மனுதாரர் நீலகிரி மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில், நகராட்சி ஆணையாளர், கட்டிட உரிமத்தை ரத்து செய்து வழங்கிய உத்திரவு முறையற்றது என்றும், மேற்படி கட்டிடம் கட்டுவதில் நகராட்சி தலையிடுவதற்கு நிரந்தர தடையும் அளித்து, 26—4—1985-ல் நீதிபதி தீர்ப்பு வழங்கியுள்ளார்.

iv கோவை மாநகராட்சியில் சிறு வியாபாரிகள் நடைபாதைகளை ஆக்கிரமித்துக் கொண்டு கடைகள் நடத்துவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர் இருக்கையில் இல்லை. அமைச்சர் அறிக்கை அளிக்கலாம்.

மாண்புமிகு ப. உ. சண்முகம்; பேரவைத் தலைவர் அவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பெரிய கடைவீதியில் ஒப்பனக்காரத் தெருவுக்கும் ரங்கை கவுண்டர் தெருவுக்கும் இடைப்பட்ட பகுதியில் 72 சிறு வியாபாரிகள், தெருவின் நடுவில் 5 அடி இடத்தை ஆக்கிரமித்துக்கொண்டு ரப்பர் செருப்புகள், பழங்கள், பொம்மைகள், பனியன்கள், துணிகள் ஆகியவற்றை விற்பனை செய்து வந்தனர். அதேபோன்று 14 சிறு வியாபாரிகள் மாநகராட்சி அலுவலகம் முன்பும், 23 சிறு வியாபாரிகள் வட்டாரநூலக ஆணைக்குழு கட்டிடத்தின் முன்பும் மற்றும் 29 சிறு வியாபாரிகள் பொதுப்பணித்துறை அலுவலகத்தின் முன்பும் உள்ள நடைபாதையை, தட்டிகளும் பெட்டிகளும் வைத்து ஆக்கிரமித்துக் கொண்டு, வியாபாரம் செய்து வந்தனர்.

2. 14-5-1985-ல் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல்துறை கண்காணிப்பாளரும் மற்றும் கோவை மாநகராட்சி தனி அலுவலரும் சிறு வியாபாரிகளிடம் பேசி சாலையின் நடுவில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது என்றும், இந்த வியாபாரிகளுக்குக் கீழ்க்கண்டவாறு மாற்று இடவசதி அளிப்பதெனவும் முடிவு செய்தனர்:—

(1) பெரிய கடைவீதியின் நடுவில், ஒப்பனக்காரத் தெருவுக்கும், ரங்கை கவுண்டர் தெருவுக்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்த 72 சிறு வியாபாரிகளில், 6 பேர்களுக்கு இதே தெருவின் ஓரத்தில் இடங்கள் ஒதுக்குதல்;

(2) மேற்குறிப்பிட்டவர்களில் மீதமுள்ள 26 பேர்களுக்கு மாநகராட்சி அலுவலகத்தின் முன்னுள்ள கார்கள் நிறுத்துமிடத்தில் இடம் ஒதுக்குதல்:

(3) மாநகராட்சி அலுவலகத்தின் முன் இருந்த சிறு வியாபாரிகளுக்கு ''பிரசன்டேஷன் கான்வெண்ட்'' முன் இடம் ஒதுக்குதல்:

(4) பொதுப்பணித்துறை அலுவலகத்திற்கு முன்பிருந்த வியாபாரிகளுக்கு ''பூம்புகார்'' முன் உள்ள இடம் ஒதுக்குதல்.

3. கடந்த 15-5-1985 அன்று எல்லா சிறு வியாபாரிகளின் ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டு விட்டன. இந்த.ச் சிறு வியாபாரிகளுக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடங்களின் அருசாமையில் இருப்போரிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் சிறு வியாபாரிகளுக்கு மாற்று இடம் அளிக்க எதிர்ப்புகள் வந்தன.

4. ஆகவே, கடந்த 6–6-1985 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர், காவல்துறை கண்காணிப்பாளர், மற்றும் நகராட்சித் தனி அதிகாரி ஆகியோர் ஆக்கிரமிப்புகளை அகற்றுவது பற்றியும் மாற்று இடங்கள் ஒதுக்குவது பற்றியும் மறுபரிசீலனை செய்தனர். இதனைத் தொடர்ந்து சிறு வியாபாரிகள் செய்துள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும், கடைக்காரர்கள் வைத்துள்ள காட்சில் பெட்டிகள் (show cases) சாளர விதானங்கள் ( sun-shades ), பெட்டி வடிவில் உள்ள பெயர்ப்பலகைகள் (name boards-box type ஆகியவைகளால் ஏற்படும் ஆக்கிரமிப்புகளையும் அகற்றுவதென முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி, பெரிய கடைவீதியில் ஒப்பனக்காரத் தெருவிற்கும், ரங்கை கவுண்டர் தெருவிற்கும் இடைப்பட்ட கோவை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மேற்சொன்ன நிலையான ஆக்கிரமிப்புகள் உள்பட அனைத்து ஆக்கிரமிப்புகளும் அப்புறப்படுத்தப்பட்டன.

5. பெரிய கடை வீதியில் மற்ற பகுதிகள் நெடுஞ்சாலைகள் மற்றும் ஊரகப் பணிகள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. அங்குள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுமாறு மேற்கண்ட துறையின் கோட்டப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

6. நெரிசலான இந்த வணிகப் பகுதியில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்றுவதென முடிவு எடுக்கப்பட்டுள்ளதால், மாற்று இடங்கள் ஒதுக்குவது என்ற பிரச்சனைக்கு இடமில்லை.



7. இதற்கிடையில் துணி வியாபாரிகள் சங்கம், பெரிய கடைவீதியில் சிறு வியாபாரிகளின் ஆக்கிரமிப்புகளைத் தடுக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார்கள். எந்த ஆக்கிரமிப்பும் அனுமதிக்கப்படுவதில்லை என்பதால் இந்த வழக்கில் வழக்காட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## V சென்னை நகரில் கொசுத் தொல்லை

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், கு. ரமணி மற்றும் எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே' ''சென்னை நகரத்தில் பல்வேறு பகுதிகளில் கொசுத் தொல்லை அதிகரித்திருப்பதால் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழக்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

சென்னை நகரில் கூவம் ஆறு, அடையாறு, ஓட்டேரி கால்வாய், மாம்பலம் கால்வாய் போன்ற பெரிய நீரோட்டங்கள் கொசுத் தொல்லைக்கு முக்கிய காரணமாக விளங்குகின்றன. இவை மட்டுமின்றி, கொசுப்பெருக்கம் கீழ்க்காணும் நீர்நிலைகளிலும் காணப்படுகின்றன:—

| | |
|---|---|
| (1) கிணறுகள் | 76,717 |
| (2) நீர்த்தொட்டிகள் | 92,780 |
| (3) மழைநீர் வடிகால்வாய்கள் | 484 கிலோ மீட்டர் |

கொசுத் தடுப்பு நடவடிக்கைக்காக, சென்னை நகரில் 150 வட்டங்களை 30 பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு சுகாதார ஆய்வாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஒவ்வொரு பகுதியிலும் 25 முதல் 40 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். வாரத்தில் ஒரு நாள் ஒவ்வொரு வட்டத்திலும் கொசுத் தடுப்புப் பணிகள் நடைபெறுகின்றன. நகரில் காணப்படும் பெரிய நீர்த்தேக்கங்களுக்கென, தனியாகப் பணியாளர்களை நியமித்து, பார்வையிடுவதற்கு, ஒரு சுகாதார ஆய்வாளர் தனித்தனியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். சுகாதார ஆய்வாளர்களின் பணி

யினை, 15 உதவி பூச்சியியல் வல்லுநர்கள் கண்காணித்து வருகிறார்கள். இப்பணிகளின் மேற்பார்வைக்காக, தமிழக அரசின் சுகாதாரத் துறையினின்று மாற்றுப்பணியில் வந்துள்ள இரண்டு முதுநிலைப் பூச்சியியல் வல்லுநர்கள் மூன்று மாத காலமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

நாள்தோறும், ஏறத்தாழ 500 மருந்து தெளிப்பான்கள் உபயோகத்தில் இருந்து வருகின்றன. புகை பரப்பி, கொசுக்களை கொல்லும் முறை எளிதானதாகவும், செம்மையானதாகவும் கருதப்பட்டதால், கடந்த நான்கு மாத காலத்தில் 60 புகை பரப்பும் கருவிகள் 3.5 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டு உபயோகத்தில் இருந்து வருகின்றன. 8 மெட்ரிக் டன் டி.டி.டி. மருந்து, மாநில சுகாதார இயக்குநரிடம் இருந்து பெறப்பட்டு சென்னை நகரில் குடிசைப் பகுதிகளில் தெளிக்கப்படுகிறது. பெரிய நீர்த்தேக்கங்கள், மாநில பொதுப் பணித்துறையின் பராமரிப்பில் இருந்து வருவதால், சம்பந்தப்பட்ட துறைகளுக்கு இக்கால்வாய்களை ஒழுங்குபடுத்தும் பணியினை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. வீட்டுவசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் போன்ற அமைப்புகளையும், தங்கள் பகுதிகளில் கொசுத் தடுப்புப்பணிக்கு ஏற்ப நீர்நிலைகளை அமைத்துத் தருமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில், 48,523 நபர்கள் மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டார்கள். இவ்வாண்டின் முதல் நான்கு மாதங்களில் 12,843 நபர்கள் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் மாதந்தோறும் ஏறத்தாழ 35 ஆயிரம் இரத்தத் தடல்வல்கள் ( Blood ) எடுத்து, மலேரியா நோய்க்கான பரிசோதனை நடைபெற்று வருகிறது. ஏறத்தாழ 1 இலட்சம் குளோரோகுயின் மாத்திரைகள் காய்ச்சல் கண்டவர்களுக்கு, இலவசமாக ஒவ்வொரு மாதமும் வழங்கப்படுகிறது. மலேரியா காய்ச்சல் கண்டவர்களுக்கு இலவசமாக மூன்று நாட்களுக்குத்தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. சைதாப்பேட்டை, மாம்பலம், அயனாவரம், வண்ணாரப்பேட்டை போன்ற பகுதிகளில் யானைக்கால் நோய் பரவியுள்ளது. இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்காக, இரவு நேரங்களில் இப்பகுதிகளில் இல்லந்தோறும் சென்று இலவசமாக இரத்தப் பரிசோதனை நடைபெற்று வருகிறது. ஏறத்தாழ 9,000 இரத்தத் தடல்வல்கள் மாதந்தோறும் எடுக்கப்பட்டு, யானைக்கால நோய் கண்டிருப்பவர்களுக்கு, இலவசமாக சிகிச்சையளிக்கப்படுகிறது. இதற்கான மாத்திரைகளும், மருந்து வகைகளும், மாநில சுகாதார இயக்குநரிடமிருந்து இலவசமாக பெறப்படுகின்றன. இதற்கான பணியாளர்களையும், மாநில அரசு மாற்றுப்பணியில் மாநகராட்சிக்கு அனுப்பியுள்ளது.

ஏறத்தாழ 150 அடிப்படை சுகாதார ஊழியர்கள், மலேரியா இரத்தத் தடல்வல்கள் சேகரிப்பதிலும், 50 அடிப்படை சுகாதார ஆய்வாளர்கள் சிகிச்சையளிக்கும் பணியிலும், ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். 15 உதவி சுகாதார அலுவலர்கள் மலேரியா



136428 600 008

தடுப்புப் பணியினை மேற்பார்வையிட்டு வருகிறார்கள். நகரின் பல பாகங்களில் கொசு சேகரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஏறத்தாழ ஆயிரம் மணிநேரங்கள் ஒரு மாதந்தோறும் கொசு சேகரிப்புப் பணிக்கென செலவிடப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட கொசுக்கள் இனம் பிரிக்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. நோய் அதிகமாக காணப்படும் பகுதிகளில், தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை போன்ற பெரிய நகரத்தில், கொசுவினை ஒழிப்பது என்பது, சென்னை மாநகராட்சியால் மட்டும் செய்ய கூடிய காரியம் அல்ல. மாநில அரசைச் சார்ந்த, பல்வேறு துறைகளான பொதுப்பணித்துறை குடிசைப்பகுதி மாற்று வாரியம் வீட்டுவசதி வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கால் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் போன்றவைகளும், மைய அரசை சார்ந்த இரயில்வே நிர்வாகத்தினர், துறைமுகப் பொறுப்புக் கழகம் போன்ற பல்வேறு அமைப்புகளும் ஒன்றுபட்டு, ஒத்துழைப்புக்கொடுத்தால்தான், கொசுத் தொல்லையினை கட்டுபடுத்த முடியும். எனவே, சம்பந்தப்பட்ட துறைகள் அனைத்திற்கும் தகுந்த வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 1½ கோடி ரூபாய் ஆண்டுதோறும் கொசுத் தடுப்பு மற்றும் மலேரியா, யானைக்கால் போன்ற நோய்களை கட்டுபடுத்துவதற்குச் செலவிடப்படுகிறது. இவ்வாறு, சென்னை நகரத்தில் கொசு ஒழிப்பிற்காக தேவையான நடவடிக்கைகள் மாநகராட்சியால் எடுக்கப்பட்டு வருகின்றன.

(vi) உரிமமின்றி பதநீர் இறக்க அனுமதி கோரல்.

திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாட்டில் அண்மையில் பனைகளில் இருந்து 'பதநீர்' இறக்குவதற்கு 'உரிமம்' வேண்டும் என்று அதிகாரிகள் வற்புறுத்துவதால் பனை ஏறும் தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

பனை மரங்களிலிருந்து பதநீர் இறக்க உரிமம் வழங்கும் முறை 5-1-1984-ம் நாளிட்ட அரசாணை எண் 22-ல் ரத்து செய்யப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டது. இச்சலுகையால் மரமேறும் ஏழைத் தொழிலாளர்களுக்கு இடையூறு ஏற்படுத்தி அவர்களுக்குப் பாதகமாக அமையவும் வாய்ப்புண்டு என்ற

காரணத்தினால் தமிழ் மாநில மதுமரத் தொழிலாளர்கள் சங்கம் உரிமம் வழங்கும் முறையை ரத்து செய்த மேற்படி ஆணையை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டது. மரமேறும் தொழிலாளர்களின் நலனைக் கருத்திற் கொண்டு உரிமம் வழங்கும் முறையை ரத்து செய்த மேற்படி ஆணை 4-3-1985 நாளிட்ட அரசாணை எண் 153-ல் மீண்டும் பரிசீலனை செய்யப்பட்டு. பனை/தென்னை மரங்களிலிருந்து நீரா/பதநீர் இறக்குவதற்கு உரிமம் வழங்கும் முறையை மீண்டும் கொண்டு வரவும், இந்த ஏற்பாடு எல்லா மாவட்டங்களுக்கும் பொருந்தும் வகையிலும், தனி நபரோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களோ எவையாயினும் உரிமம் பெற்றுத்தான் பனை மரங்களிலிருந்து நீரா/பதநீர் இறக்குவதற்கு அனுமதிக்கப்படுவர் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. பதநீர் இறக்க உரிமம் வழங்கும் முறை மீண்டும் செயலுக்குக் கொண்டுவந்த அரசாணை எண்153 நாள் 4-3-1985-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணையை ரத்து செய்ய வேண்டும் என தமிழ்நாடு மாநில பனை-தென்னை தொழிலாளர் சங்கம், சேலம், பனைவெல்லம் உற்பத்தித் தொழிலாளர்கள் சங்கம், இராமநாதபுரம் மாவட்டம், புதுவலசை வட்டார பனைத் தொழிலாளர்கள் சங்கம், இராமநாதபுரம் ஆகியவைகள் கோரியுள்ளன.

3. பதநீர் இறக்க உரிமம் வழங்கும் முறை மீண்டும் செயலுக்கு கொண்டுவந்த அரசாணை எண் 153 நாள் 4-3-1985-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணையை ரத்து செய்யும்படியும், மேற்படி பதநீர் உரிமமின்றி இறக்க அனுமதிக்கும்படியும் கேட்டுக் கொண்ட மேற்படி சங்கங்களின் கோரிக்கைகள் தனியாக அரசின் பரிசீலனையில் உள்ளன. இதில் பதட்டநிலை ஏதுமில்லை.

(vii) அரசுத் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை பணியில் அமர்த்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பரிதி இளம் வழுதி, பொன் முத்து ராமலிங்கம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''அரசுத் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு 1984 அக்டோபரில் பணியில் அமர்த்தப்பட்ட தொகுதி 4 ஊழியர்கள் 31-5-1985 ஆம் தேதியோடு பணி நீக்கம் செய்யப்பட்டது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.



மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

பொதுத் தேர்தல் மற்றும் உணவுப் பொருள் சோதனைச் சாவடி போன்ற சிறப்புப் பணிகளுக்கு ஏற்படுத்தப்பட்ட பணியிடங்கள் கலைக்கப்பட்டதால் மேற்கூறிய பணியிடங்களுக்கு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் மூலம் 1984-ம் ஆண்டு அக்டோபர் மாதம் நியமிக்கப்பட்ட பணியாளர்கள் பணியிடம் காலியின்மையால் தற்காலிகமாக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காம் தொகுதிக்கான தேர்வு மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசுத் துறைகளில் பணிபுரிந்து பின்னர் பணி நீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களை மீண்டும் பணியமர்த்த, அரசால் தலைமைச் செயலகத்தில் சிறப்புப் பிரிவு ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. அவ்வாறு தேர்வாணைக் குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணிபுரிந்து 31-5-1985 அன்று பணி நீக்கம் செய்யப்பட்ட 128 நபர்களையும் மீண்டும் மற்ற துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களில் மறு ஒதுக்கீடு செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவை 17-6-1985 தேதியிட்ட கடிதம் மூலம் அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இக்கடிதத்தின்படி பணி நீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களுக்குத் தமிழ்நாடு தேர்வாணைக் குழு பணியிடம் உள்ள வேறு துறைகளில் மீண்டும் பணியமர்த்த நடவடிக்கை எடுக்கும்.

(பிற்பகல் 1-10)

(viii) நாமக்கல்லிலிருந்து கர்நாடக மாநிலத்திற்குக் கோழிகள் இறைச்சி, முட்டைகள் கொண்டு செல்லத் தடை.

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், நாமக்கல்லிலிருந்து கர்நாடக மாநிலத்திற்குக் கோழி இறைச்சி, முட்டைகள் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுவதை தடை செய்துள்ளதால் ஏற்பட்டுள்ள இன்னல்கள், குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றைவைக்கிறேன்.

அறிக்கை

கர்நாடக அரசு அம்மாநிலத்திலுள்ள கோலார், பெங்களூர், மைசூர், தட்சிண கர்நாடக மாவட்டங்களுக்குள் நோயுற்ற கோழிகள், முட்டைகள், கோழி இறைச்சி ஆகியவற்றை கொண்டு வருவதையும், போக்குவரத்தையும் ஆறு மாதத்திற்குத்

தடை செய்திருப்பதாகத் தகவல் வந்துள்ளதாக கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டில் உள்ள நாமக்கல் பகுதியில் ''ராணிகெட்'' என்ற நோய் கோழிகளிடையே பரவலாக இரு பதாகக் கூறி இத்தடை உத்தரவு கர்நாடக அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கோழிப்பண்ணைத் தொழிலில் ஈடுபட்டவர்களின் நலனைக்கருதி கர்நாடக அரசின் தடை உத்திரவை ரத்து செய்யக் கோருமாறு கால்நடை பராமரிப்பு இயக்குநர் அரசிற்குப் பிரேரணை அனுப்பியுள்ளார். அதே பிரேரணையில் மாற்று யோசனையாக தமிழ கத்தில் கோழிகளிடையே பல புதிய நோய்கள் தோன்றுவதைத் தடுக்க கர்நாடக மாநிலத்திலிருந்து தர்மபுரி, சேலம், நீலகிரி மாவட்டங்களுக்குள் கோழிகள், கோழிப்பண்ணை உபகரணங்கள், கோழித் தீவனம் ஆகியவற்றைக் கொண்டு வருவதைத் தடை செய்யும் அளவில், தமிழ்நாடு கால்நடை நோய் சட்டத்தில் (1866) தகுந்த திருத்தம் செய்யவும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இது தனியாக அரசின் பரிசீலனையில் உள்ளது. நோய்கள் பரவாமலிருக்க அதே நேரத்தில் கோழி வளர்ப்பவர்களும் அதிகம் பாதிக்கப்படாமலிருக்க தக்க நடவடிக்கையை அரசு பரிசீலிக்கிறது.

(ix) திருப்பூர் பனியன் தொழிற்சாலைகளில் ஏற்பட்டுள்ள மந்த நிலை.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருப்பூரில் ஏற்றுமதி வாய்ப்புகள் குறைந்து விட்டதால், 10,000 பனியன் தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

திருப்பூரில் உள்ள பனியன் தொழிற்சாலைகளில் சாதாரணமாக ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்டு மாதங்களில் ஏற்றுமதியில் ஒரு மந்த நிலை ஏற்படும் என்றும், இதனால் தொழிலாளர்களின் வேலை வாய்ப்புகள் பாதிக்கப்படுவதில்லை என்றும் அறியப்படுகிறது. மேலும் ஏற்றுமதி செய்வதில் ஏஜன்சி மூலம் பனியன் ஏற்றுமதி செய்யாமல், உற்பத்தியாளர்கள் நேரடியாகவே ஏற்றுமதி செய்தால் மந்த நிலையைத் தவிர்க்கலாம் என்றும் கருத்து தெரிவிக்கப்படுகிறது. இது தவிர ஏற்றுமதி செய்யும் வாய்ப்புக்கள் குறையவில்லை என்றும் அறியப்படுகிறது.



தற்சமயம் ஏற்றுமதி வாய்ப்புக் குறைவினால் பனியன் தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்படவில்லை என்றும் தொழிலாளர்கள் லே-ஆப்போ அல்லது ஆட்குறைப்போ செய்யப்படவில்லை என்றும் தெரிகின்றது. நிலைமை தற்சமயம் அமைதியாக உள்ளது.

(x) தாழையூத்திலுள்ள இந்தியா சிமெண்ட்ஸ் தொழிலாளர்களின் கோரிக்கைகள்.

திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருநெல்வேலி மாவட்டம் தாழையூத்திலுள்ள இந்திய சிமெண்ட்ஸ் தொழிற்சாலையில் பணிபுரியும் சுமார் 300 காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் சிமெண்ட் ஆர்பிட்ரேஷன் தீர்ப்பை அமுல்படுத்த வேண்டுமென்று கோரியதால், மேனேஜ்மெண்ட் எந்தவித காரணமுமின்றி அவர்களை வேலையைவிட்டு நீக்கிய காரணத்தினால் தங்கள் கோரிக்கையை வற்புறுத்த 10-7-1985 அன்று போராட்டம் நடத்தியபோது அவர்களை காவல் துறையினர் அத்துமீறி கைது செய்த காரணத்தால் தொழிலாளர் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

சங்கர் நகர், இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் 1,600 பேர் பணியாற்றுகின்றனர். இந்நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் சார்பில் (1) சிமெண்ட் மற்றும் குவாரி தொழிலாளர்கள் சங்கம், (2) திருநெல்வேலி தாலுக்கா தேசியப் பொதுத் தொழிலாளர் சங்கம், (3) சிமெண்ட், குவாரி மற்றும் கெமிக்கல் தொழிலாளர் சங்கம் (4) இந்தியா சிமெண்ட் தொழிலாளர் சங்கம் மற்றும் (5) இந்தியா சிமெண்ட் எம்ப்ளாயீஸ் யூனியன் ஆகியவை 14 பொதுக் கோரிக்கைகளை முன்வைத்து 14-6-1985 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ வேலைநிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்து தொழில் தகராறு எழுப்பியிருந்தனர்.

மேற்குறிப்பிட்ட 14 கோரிக்கைகளில் உற்பத்திப் பிரிவில் நிரந்தர இடங்கள் பல காலியாகவிருக்கும்போது அப்பகுதியில் நிர்வாகம் ஒப்பந்தத தொழிலாளர்களை வைத்துப் பணி வாங்குவது சரியல்ல என்பதால் அவ்விடங்களில் ஒப்பந்தத் தொழிலாளர்களை கம்பெனி தொழிலாளர்களாக நியமித்து சிமெண்ட் ஊதியக்குழு பரிந்துரைப்படி சம்பளம் வேண்டும் என்பதும் ஒரு கோரிக்கையாகும்.

கோரிக்கைகள் தொடர்பாக திருநெல்வேலி தொழிலாளர் துறை அலுவலர், தொழிலாளர் பிரதிநிதி மற்றும் நிர்வாகம் ஆகிய இருதரப்பினரிடையே, சமரசப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். சமரசப் பேச்சுவார்த்தைகளின்போது ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலைதரப்படாமல் நிறுத்தப்பட்டுள்ளார்கள் என்றும் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் எனவும் தொழிற் சங்கம் கோரியது. நிர்வாகத் தரப்பில் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டது. சமரசப் பேச்சுவார்த்தைகளில் ஒரு சுமுகமான முடிவு ஏற்படாத காரணத்தால், திருநெல்வேலி தொழிலாளர் துறை அலுவலர் தமது சமரச முறிவறிக்கையை அனுப்பியுள்ளார்.

இதற்கிடையே, இந்தியா சிமெண்ட் எம்ப்ளாயீஸ் யூனியன் (என்டி.யு.சி.) தனது 11-7-1985 தேதிய கடிதத்தில் மேற்கண்ட தாவா குறித்துச் சமரசப் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டு இருக்கும்போது நிர்வாகம் 80 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ததாகவும், நிர்வாகத்தினரை முன்பிருந்த நிலையை (Status quo) கடைப்பிடிக்கும்படி தொழிலாளர் துறை அலுவலர் கேட்டுக் கொண்டதாகவும், அப்படி நிர்வாகம் நடந்துகொள்ளவில்லையெனவும் நிர்வாகம் அனைத்து (400) தொழிலாளர்களையும் வேலையிலிருந்து நீக்கிவிட்டு அவர்களுக்குப் பதிலாக புதிய தொழிலாளர்களை வேலைக்கமர்த்த ஏற்பாடு செய்ததாகவும் இதன் தொடர்பாக போராட்டத்தில் ஈடுபட்ட சுமார் 300 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டதாகவும், எனவே இதில் தலையிடும்படியும் கேட்டுக் கொண்டது.

தொழிற் சங்கம் கேட்டுக் கொண்டபடி பிரச்சினை குறித்து இரு தரப்பினரிடையே தொழிலாளர் துறை இணை ஆணையர் (நிர்வாகம்) 18-7-1985 அன்று மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளவிருக்கிறார். சுமுகமான முடிவு ஏற்பட தொழிலாளர் நலத்துறை பெருமுயற்சி செய்து வருகிறது.

(xi) வேதாரண்யத்திலுள்ள உப்பளப் பகுதிகளை வனத்துறைக்கு அளிக்காதிருக்க விலக்களித்தல்.

திரு. மா. மீனாட்சி சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் உப்பளம் 20,000 ஹெக்டேரையும், கோடிக்கரை பறவைகள் சரணாலயத்திற்கு ஒப்படைக்கப் போவதாக முதன்மை வனவிலங்கு காப்பாளர் அறிவித்துள்ளதால் வேதாரண்யம் உப்பளங்களில் வேலை செய்துவரும் 50,000 தொழிலாளர்கள் வேலையிழக்கவும் புகழ்பெற்ற வேதாரண்யம் உப்பள உப்புத் தொழில் பாதிக்கப்படவும் உள்ள நிலைமை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலதுறை அமைச்சர் அவர்களின் கவனததிற்குக் கொண்டு வருகிறேன்.



மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

தஞ்சை மாவட்டம் கோடியக் கரையில் உப்பு உற்பத்திக்கென திருவாளர்கள் விம்கோ (WIMCO) மற்றும் திரு மேட்டூர் கெமிகல்ஸ் நிறுவனங்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களில் பயன்படுத்தப்படாத நிலங்களில் 8-10-1971 நாளிட்ட வருவாய்த் துறை அரசு ஆணை 2976-ல் 16,500 ஏக்கர் நிலங்களை வனத் துறைக்குத் திரும்ப ஒப்படைக்க ஆணையிட்டுள்ளது. மேலும் 23-3-1984 நாளிட்ட (வருவாய்த் துறை) அரசு ஆணை 520-ல் திருவாளர்கள் வெஸ்டர்ன் இந்தியா நிறுவனத்தின் (WIMCO) வசமிருந்த 9044.44 ஏக்கர் நிலத்தைத் திரும்பப் பெற ஆணையிட்டுள்ளது. இந்நிலங்களைத திரும்ப வனத்துறையிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை அரசின் வருவாய்த்துறை கவனித்து வருகிறது. மேற்குறிப்பிட்ட குத்தகை விடப்பட்ட நிலங்களில் பயன்படுத்தப்படாத நிலங்களையே அரசு திரும்ப எடுத்துக் கொண்டு பறவைகள் சரணாலயத்திற்கு அனுகூலமாக பயன்படுத்திக் கொள்ள வனத்துறை வசம் ஒப்படைக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2. இவ்விஷயத்தில் தலைமை வன விலங்கு அதிகாரி அவர்களிடம் தொடர்பு கொள்ளப்பட்டது. இந்நிலங்களை வனத் துறையின் நிலங்களாக அறிவிக்க வேண்டிய செயற் குறிப்பு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும் இப்பகுதியில் ஏற்கெனவே உப்புத் தொழில் நடத்திவரும் தொழிற்சாலைகளுக்கு விலக்கு அளிப்பது பற்றி தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையுடன் பரிசீலிக்கப்படும் என கூறியுள்ளார். தற்பொழுது நடைபெறும் உப்புத் தொழில் பாதிக்கப்படாமல் இருப்பதற்காகவும் மற்றும் அப்பகுதி சுற்றுப்புறச் சூழல்களைக் கெடாமல் பாதுகாக்கும் பொருட்டும் திரு. பி. விஜயராகவன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் ஒரு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்நிலப்பகுதியில் மேலும் புதிய உப்புத் தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு விஜயராகவன் கமிட்டியிடம் கலந்தாலோசித்த பின்னரே முடிவெடுக்கப்படும். மேற்கூறிய சூழ்நிலையில் இங்கு ஏற்கெனவே உள்ள உப்புத்தொழிற்சாலைகள் பாதிக்கப்படவும் மற்றும் உப்புத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் வேலையை இழக்கவும் கூடிய சூழ்நிலை ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

(xii) தற்காலிக அடிப்படையில் பணியாற்றும் ஆசிரியர்களை நிரந்தர மாக்க வேண்டுமென்ற கோரிக்கை.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு தேர்வாணைக் குழு மூலம் 1984 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி ஆசிரியர் பதவிக்கான பட்டியல் வெளியிடப்பட்டும் அவர்களுக்குக் கடந்த

8 மாத காலமாக பதவி அளிக்காமல் தற்காலிகமாகப் பணிபுரியும் ஆசிரியர்களை இன்னமும் வேலையில் வைத்துக் கொண்டிருப்ப தால் வெளியிடப்பட்ட பட்டியலில் இடம் பெற்றுள்ள ஆசிரியர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள வேதனை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச் சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

1982–84ல் தமிழ்நாடு தேவர்வாணைக்குழு 1,928 நபர்களை பட்டதாரி ஆசிரியர் பணிக்குத் தேர்ந்தெடுத்துப் பட்டியலை நவம்பர் 1984-ல் இயக்குநருக்கு அனுப்பியது. இந்தப் பட்டியலில் அளிக்கப்பட்டுள்ள தகவல்படி 850 பேர் ஏற்கனவே தற்காலிக மாகப் பணியாற்றுகிறார்கள். மீதமுள்ள 1,078 பேரும் வெளி யாட்கள் ஆவர். மாநிலம் முழுவதும் 30-11-1984 அன்றைய நில வரப்படி 1,265 தற்காலிகப் பட்டதாரி ஆசிரியர்கள் பணியாற்று கிறார்கள். மனிதாபிமான அடிப்படையில் தற்காலிகமாகப் பணி யாற்றும் அனைத்து ஆசிரியர்களுக்கும் பணிப்பாதுகாப்பு அளித்துப் பணி நிரந்தரம் செய்யக் கோரி ஆசிரியர் சங்கங்கள் கோரிக்கை களை விடுத்துள்ளார்கள். இவர்களது பணியை நிரந்தரம் செய்வது குறித்த கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

(xiii) தனியார் பள்ளி ஆசிரியர்கள் சங்கத்தின் கோரிக்கைகள்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகம் முழுவதும் தனியார் பள்ளி ஆசிரியர்கள் நடத்தும் போராட்டம் குறித்தும், குமரி மாவட்ட தனியார் பள்ளி ஆசிரியர்கள் இன்று முதல் (11-7-1985) தொடர் மறியல் போராட்டம் தொடங்கி இருப்பதும் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

பொதுவாக தமிழகத்திலுள்ள தனியார் பள்ளி ஆசிரியர் சங்கத்தினர் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் அனைத்தையும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நீட்டிக்குமாறு கோரி வருகின்றனர். கன்னியாகுமரி மாவட்டத் தனியார் பள்ளி ஆசிரியர்கள் 11-7-1985-ம் தேதி முதல் தங்களின் பொதுவான கோரிக்கைகளுக்காக நாகர்கோவில் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் முன்பு மறியல் போராட்ட நடவடிக்கைகளில்





ஈடுபட்டுள்ளனர். விடுப்புக் காலப் பயணச் சலுகை (L.T.C) மருத்துவச் செலவுகளை ஈடு செய்வது (Medical Reimbursement) மற்றும், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு 1-4-1985 முதல் மாதம் ரூ. 20-ஐ பிடித்தம் செய்து ஓய்வு பெறும்பொழுது ரூ. 10,000/ வழங்கும் திட்டத்தை அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது போல் 1-4-1984 முதல் அமுல் படுத்துவது போன்ற கோரிக்கை களைப் போராட்டத்தில் எழுப்பியுள்ளனர்.

2. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு விடுப்புக் காலப் பயணச் சலுகையை நீட்டிப்பது சம்பந்தமான கோரிக்கையைப்பரிசீலித்து, நிதி நிலைமையை முன்னிட்டு தற்போதைக்கு அக்கோரிக்கையை ஏற்க இயலாது என்று அரசு முடிவு செய்துள்ளது. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவச் செலவை ஈடுகட்டச் செய்யும் ஆணையை நீட்டிப்பது குறித்து அரசு பரிசீலனை செய்து வரு கிறது. இதைப்போலவே ஓய்வு பெறும்போது மாதம் ரூ. 20/ செலுத்தும் தொகையுடன் அரசு ரூ. 10,000/ வழங்கும் சிறப்பு நல நிதி மற்றும் பணிக்கொடை திட்டத்தை உதவிபெறும் பள்ளி களுக்கு 1-4-1985 முதல் நீட்டித்து கல்வித்துறையின் 26-4-1985 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 432-ல் ஆணை வெளியிடப் பட்டது. இத்திட்டத்தை அரசு ஊழியர்களுக்கு அமுலுக்கு கொண்டு வந்த நாளான 1-4-1984 முதல் உதவிபெறும் பள்ளி ஊழியர்களுக்கும் வழங்கும் வகையில் ஆணை பிறப்பிப்பது குறித்து அரசு பரிசீலனை செய்யலாமென கருத்து தெரிவிக்கப் பட்டது. அதன்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

(xiv) குடந்தை அரசினர் ஆடவர் கலைக் கல்லூரியில் கணிதவியல் பாடத்திற்கு மாணவர்களைச் சேர்த்தல்.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' குடந்தையிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் பிளஸ் 2 வகுப்பில் இன்ஜினியரிங் பாடப்பிரிவில் படித்த 86 சதவீதம் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சியடைந்து குடந்தை அரசினர் ஆடவர் கல்லூரியில் கணிதவியல் பட்டப் படிப்பிற்கு மனு செய்த மாணவர்களில் ஒருவரைக் கூட சேர்த்துக் கொள்ளாமல் இன்ஜினியரிங் அல்லாத மற்ற பிரிவுகளில் படித்து கணக்கில் 75 சதவீதம் மதிப் பெண்கள் பெற்றுள்ள மாணவர்களை கணிதவியலில் சேர்த்துக் கொண்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

குடந்தை அரசினர் ஆடவர் கலைக் கல்லூரியில் பி.எஸ்.ஸி. கணிதவியல் பட்டப்படிப்பில் மாணவர்களைச் சேர்த்துக் கொள் வதில் மேல்நிலைப்பள்ளியில் கணிதவியல் பாடத்தில் எடுத்த மதிப்பெண் அடிப்படையில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். பி.எஸ்.ஸி. கணிதவியல் பாடப்பிரிவில் கணிதம் முதன்மைப் பாடமாகவும், இயற்பியல் மற்றும் புள்ளியியல் துணைப் பாடங்களாகவும் போதிக்கப்படுகின்றன. மேல்நிலைப் பள்ளியில் பொதுக்கல்வியில் கணிதம் படித்த மாணவர்கள் கணிதத்தோடு இயற்பியல் பாடத்தையும் படிக்கிறார்கள். எனவே பொதுக் கல்வி (அக்கடமிக் ஸ்ட்ரீம்) படித்த மாணவர்கள் பி.எஸ்.ஸி. கணிதவியல் பாடத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இன்ஜினியரிங் தொழிற் கல்வி படித்த மாணவர்கள் கணிதப் பாடம் மட்டுமே படிக்கின்றார்கள். அவர்களுக்கு இயற்பியல் பாடம் மேல்நிலைப்பள்ளி வகுப்பில் படிக்க வாய்ப்பில்லை. பட்டப்படிப்பில் இயற்பியல் துணைப் பாடத்தை படிப்பது இத்தகைய மாணவர்களுக்குக் கடினமாக இருக்கும்.

2. எனவே என்ஜினியரிங் தொழிற்கல்வி படித்த மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு பி.எஸ்.ஸி. கணிதவியல் பாடத்தில் சேர்த்துக் கொள்வதில் முன்னுரிமை அளிக்கப்படுவது இல்லை. பொதுக் கல்வியில் கணிதம் படித்த மாணவர்களைச் சேர்த்துக் கொண்ட பிறகு எஞ்சியுள்ள இடங்களுக்கு என்ஜினியரிங் தொழிற் கல்வி படித்த மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இந்த ஆண்டில் தாழ்ந்தப்பட்ட (Scheduled Caste) வகுப்பைச் சேர்ந்த தொழிற்கல்வி இன்ஜினிரிங் படித்த மாணவர்கள் பி.எஸ்.ஸி. கணித பட்ட வகுப்பில் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளார்கள்.

3. பொதுக் கல்வி கற்ற மாணவர்களுக்கு இடங்களை அளித்த பின் காலியாக உள்ள இடங்களுக்குத் தொழிற்கல்வி இன்ஜினியரிங் படித்த மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படு கிறார்கள். சென்ற ஆண்டும் இதே முறைதான் பின்பற்றப்பட்டு வந்தது.

(XV) ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் சில பணிகள் முடிவுறாத நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மா. சின்னராசு, செ. செம்மலை, க. சோலைராசு ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.



திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்ற நிதி ஆண்டில் கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உதவித் திட்டத்தின் கீழ் (ஆர்.எல்.இ.ஜி.பி.) வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் எடுத்துக் கொள்ளப் பட்ட கசிவுநீர் குட்டை பணிகள் அதற்கென்று ஏற்படுத்தப் பட்ட பணியாளர்கள் அமைப்பு கலைக்கப்பட்டதால் முடிவுறாமல் இருக்கிற காரணத்தினால், அவற்றால் பயன்பெறும் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

"ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்" என்கிற திட்டம் மத்திய அரசின் முழு மான்யத்தின் உதவியால் தமிழ்நாட்டில் 1983–84 மற்றும் 1984–85-ம் ஆண்டுகளில் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சென்ற இரு ஆண்டுகளுக்காக தமிழ்நாட்டிற்கு ரூ. 53.40 கோடி முழு மான்யம் ஒதுக்கப்பட்டது. இது தவிர 1984-85-ம் ஆண்டிற்கு ரூ. 100 கோடி மான்யம் இத்திட்டத்திற்காக மத்திய அரசிடமிருந்து கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. இதனை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடுதல் பணியாளர்கள் அனுமதிப்பது அவசியம் என்பதை உணர்ந்து இத்திட்டத்தை செயல்படுத்தும் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை பொதுப் பணித்துறை (சிறிய நீர்ப்பாசனம்) வேளாண்மைப் பொறியியல் துறையினருக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கூடுதல் பணியாளர்கள் 31-3-1985 வரை தற்காலிக நியமனம் செய்ய அனுமதி வழங்கப்பட்டது. வேளாண்மைப் பொறியியல் துறையைப் பொறுத்தவரையில் தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு ஒரு கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் உரிய துணைப் பணியாளர்கள் மதுரை மற்றும் சேலம் ஆகிய இரு இடங் களிலும் கண்காணிப்புப் பொறியாளர்கள் அதற்குரிய துணைப் பணியாளர்கள் ஆறு கோட்டங்கள் மற்றும் இருபத்தி நான்கு உட்கோட்டங்களை அவைகளுக்குரிய துணைப் பணியாளர்கள் 31-3-1985வரை செயல்பட ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 1984-1985-ம் ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ரூ.11.00 கோடிமதிப்புள்ள பணிகள் எடுத்து செய்ய வரையறுக்கப் பட்டது. நிதி ஒதுக்கிட்டில் 5 விழுக்காடுபணியாளர் மற்றும் இதர நிர்வாக செலவினங்களுக்காகச் செலவு செய்யலாம்.

2. தமிழ்நாட்டிற்கு 1985–86-ம் ஆண்டிற்கு அரசு நில மற்றோர் வேலை வாய்ப்பு உறுதி திட்ட பணிகளுக்காக ரூ.3,457.00 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டைவிட குறைவான தொகையாகும். இதில் ரூ. 303.0[illegible] லட்சம் வேளாண்மை பொறியியல் துறை திட்டப் பணிகளுக்க[illegible]

வரையறுக்கப்பட்டது. அனுமதிக்கப்பட்ட அனைத்துத் துறை பணியாளர்களுக்கும் இதர நிர்வாகச் செலவினங்களுக்கும் ரூ. 172.00 லட்சம் செலவு செய்யலாம், இதில் வேளாண்மைப் பொறியியல் துறைப் பணியாளருக்கு ரூ.15.19 லட்சம் என வரையறுக்கப்பட்டது. இந்தக் குறைந்த தொகையில் அனுமதியளிக்கப்பட்ட அனைத்துப் பணியாளர்களையும் பணியில் நீட்டிக்கச் செய்ய இயலாது. எனவே 1-4-1985 முதல் 30-6-1985 வரை மட்டும் கூடுதல் பணியாளர்களின் தற்காலிக நியமனம் நீட்டிக்கப்பட்டது. பின்னர் 1-7-1985 முதல் இத்திட்டத்தின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட அனைத்துப் பணியாளர்களும் கலைக்கப்பட ஊரக வளர்ச்சித் துறையால் ஆணை எண் 529, ஊரக வளர்ச்சி, தேதி 28-6-1985-ல் ஆணையிடப்பட்டது.

3. எனினும் ஏற்கனவே வேளாண்மைப் பொறியியல் துறையால் மேற்கொள்ளப்பட்டு முடிவடையாது உள்ள திட்டப் பணிகளை இடையில் நிறுத்தி விடாமல் தொடர்ந்து நிறைவேற்றும் நோக்கத்துடன் இப்பணியாளர் அமைப்பு மேற்குறிப்பிட்ட ஆணையின்படி கலைக்காமல் தொடரப்படுகிறது. 30-9-1985-க்குள் எஞ்சியுள்ள பணிகளை முடித்துவிட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு 31-7-1985 வரை மூன்றில் ஒரு பகுதி பணியமைப்பைக் குறைக்கவும் மீதமுள்ள பணியமைப்பை தொடரவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(xvi) திண்டுக்கல் நகரில் குடிநீர்த் தட்டுப்பாடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் டாக்டர் த. முகமது சலீம், பா. க. மு. முத்துராமலிங்கம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திண்டுக்கல் நகரில் மழையின்மை காரணமாகவும் ஆழ்குழாய் கிணறுகள் வறண்டு விட்ட காரணத்தாலும் குடிநீர்த் தட்டுப்பாடு அதிகரித்துள்ளதால் பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விளக்க அறிக்கை வழங்கப்பட்டிருக்கிறது.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் வழங்கப்படவில்லை பார்த்து அனுப்பி விடுங்கள்.

(xvii) தஞ்சாவூர் மாவட்டம் வடபாதிமங்கலம் கரும்புப் பண்ணைக் கழகத்தில் நட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கு. சுப்பராயன், பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டம், வடபாதிமங்கலம், கரும்புப் பண்ணைக் கழகத்திற்குச் சொந்தமான சுமார் 4000 ஏக்கர் நிலம் விவசாயம் செய்யப்படாமல் தரிசாகப் போடப்பட்டுள்ளதையும், காலங்கடந்து சாகுபடி செய்யப்படுவதையும் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

தஞ்சாவூர் மாவட்டம், வடபாதிமங்கலம், கரும்புப் பண்ணைக் கழகத்தில் மொத்தம் 4,051.74 ஏக்கர் நிலங்கள் உள்ளன. இப்பண்ணைக் கழகம் 22-2-1974 அன்று நிறுவப் பட்டது. இப்பண்ணைக் கழகத்தின் மொத்த நிலம் 4,051.74 ஏக்கராக இருப்பினும் இந்நிலங்கள் பெரும்பகுதி வெண்ணாற்றுப் படுகையின் இறுதியில் அமைந்து, மழைக் காலங்களில் போதிய வடிகால் வசதி இன்மையாலும் பருவ மழையற்ற காலங்களில் போதிய நீர் இல்லாமையாலும் கழகத் தொழிலாளர்களின் போதிய ஒத்துழைப்பு இன்மையாலும் பண்ணைக் கழகம் தொடங்கிய நாள் முதல் கடந்த 11 ஆண்டுகளில், இரண்டு ஆண்டுகளைத் தவிர ஏனைய ஆண்டுகளில் பெரும் நஷ்டத்தில் இயங்கி வந்துள்ளது.

இந்நிலையில், இக்கழகத்தைத் தொடர்ந்துநடத்த வேண்டுமா அல்லது கலைத்து விடலாமா என்பது அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. மேலும் இவ்வாண்டு பண்ணை நிலத்தில் குறுவை சாகுபடி செய்வதற்காகவும், மாற்றுப் பயிர்களை விளைவிக்கவும் அரசிடம் இருந்து ரூ. 10.00 இலட்சத்தை வழிவகை முன்பணமாக அல்லது ரூ. 35.00 லட்சந்திற்கு வங்கி மூலம் நிதி உதவி பெற அரசின் உத்தரவாதம் அளிக்குமாறு பண்ணைக் கழக நிர்வாக இயக்குநர் கோரியுள்ளார். இக்குறுவை சாகுபடியின் விளைச்சலில் இருந்து பண்ணைத் தொழிலாளர்களுக்கு ஊதியம் மற்றும் சாகுபடி செலவுக்காக செலவிட்ட தொகை நீங்கலாக

எஞ்சிய தொகை இதர கழகச் செலவுகளுக்கு ஈடுகட்ட முடியும் என்ற நிலை உள்ளதா என்ற பொருள் அரசின் ஆய்வில் உள்ளது. குறுவை சாகுபடி செய்யலாமா, இல்லையா என்பது இதைப் பொறுத்தது.

தவிர, இந்த ஆண்டிற்கான வேளாண்மைப் பணிகள் பருவ காலம் காலந்தாழ்த்தி தொடங்கியுள்ளமையால் இனிமேல் தான் மேற்கொள்ள இயலும்.

(xviii) திண்டுக்கல் தாலுக்கா வீரக்கல் கிராமத்தில்

தண்ணீர் தொட்டி இடிந்ததால் சேதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மா. மணிமாறன், ஆ. நடராசன், அ. பிரணவநாதன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திண்டுக்கல் அருகிலுள்ள வீரக்கல் என்னும் கிராமத்தில் நடைபெற்ற திருவிழாவின்போது குடிநீர் பெறுவதற்காக குடிநீர்த் தொட்டியின் அருகில் மக்கள் கூடியபோது தொட்டியின் சுவர் இடிந்ததனால் 4 பேர் இறந்தும் மற்றும் 6 பேர் படுகாயமுற்ற நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

24-6-1985-ம் தேதி பகல் 12-30 மணிக்கு மதுரை மாவட்டம் திண்டுக்கல் தாலுக்காவிலுள்ள வீரக்கல் கிராமத்தில் கீழ் மட்டத்தின் தெற்கில் உள்ள தண்ணீர்த் தொட்டியின் சுவர் சௌடம்மன் கோயில் திருவிழாவின்போது இடிந்து விட்டது. இந்தத் தண்ணீர் தொட்டி 20 ஆண்டுகளுக்கு முன்னால் தனியார் கோயில் அலுவலர்களால் கட்டப்பட்டது. இத்தொட்டி 20 அடி நீளம், 4 அடி அகலம், 4 அடி உயரம் கொண்டது. இது அரசினால் கட்டப்பட்டதல்ல. சௌடம்மன் கோயில் திருவிழா 30 வருடங்களுக்கு ஒரு முறை மாவட்ட அளவில் கௌடா குலத்தினரால் கொண்டாடப்படுகிறது. இக்கோவில் அதிகாரிகள் இவ்விழாவிற்கு ஒரு நாள் முன்பு தண்ணீர்த் தொட்டியில் தண்ணீர் சேமித்து வைத்தனர். தண்ணீரில் ஊறியதால், தண்ணீர் தொட்டியின் ஒரு பகுதி அங்கு தண்ணீர் குடிக்கச் சென்ற குழந்தைகளின் மீது இடிந்து விடக் காரணமாகியது. தண்ணீர் தொட்டியின் சுவர் 8 குழந்தைகளின் மேல் விழுந்தது.



4 குழந்தைகள் இறந்து விட்டனர். செல்லன் (9 வயது), ஈஸ்வரி (8 வயது), ஆகிய இருவரும் அந்த இடத்திலேயே மாண்டனர். முத்துலட்சுமி (15 வயது), ராணி (6 வயது), ஆகிய இருவரும் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் மாண்டனர். கீழ்க்காணுவோர் காயங்களுடன் தப்பினர், அவர்கள் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்:—(1) செல்வராஜ் (வயது 13), (2) பழனியம்மாள்(வயது 7), (3) துரைசாமி (வயது 7), (4) சின்னம்மாள் (வயது 36). இவ்விபத்து காவல் துறை குற்றப்பிரிவினால் வழக்கு பதிவு செய்யப்பட்டு ஆய்வில் உள்ளது.

(xix) பரமக்குடி எமனேஸ்வரம் பகுதியில் உள்ள
நெசவாளர் சங்கங்களில் சரக்கு தேக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. சுப்பராயன், பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பரமக்குடி—எமனேஸ்வரம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் ரூ. 75 இலட்சம் துணி தேக்கம் உள்ளது குறித்தும், ஏற்கெனவே கொள்முதல் செய்த ரூ. 40 இலட்சத்தை உடனே பட்டுவாடா செய்யக் கோரியும், 15 லட்சம் ரிபேட் பாக்கிகளை வழங்கக் கோரியும், மேலும் பல்வேறு கோரிக்கைகளை நெசவாளர்கள் வலியுறுத்தியுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

பரமக்குடி—எமனேஸ்வரம் பகுதியில் சுமார் 45 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் சுமார் 10,200 பேர் அங்கத்தினர்களாக உள்ளனர். தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களுக்குப் பின்பு உள்ள காலம் கைத்தறி துணி விற்பனையில் ஒரு மந்த காலம் என்பதால் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் கோ-ஆப்டெக்ஸிலும் கணிசமான அளவுக்கு சரக்கு இருப்பு உள்ளது. சரக்குத் தேக்கத்தின் காரணமாக கோ-ஆப்டெக்ஸ் வழக்கமாகச் செய்யும் அளவிற்குக் கொள்முதல் செய்ய இயலவில்லை. எனவே பரமக்குடி—எமனேஸ்வரம் பகுதிகளிலும் கோ-ஆப்டெக்ஸின் கொள்முதல் வழக்கமான அளவிற்கில்லை.

2. இப்பகுதியில் வருடத்தில் உற்பத்தி ஆகும் கைத்தறித் துணியின் மதிப்பு சுமார் ரூ. 2.56 இலட்சம் ஆகும். கோ-ஆப்டெக்ஸ் தனது உற்பத்தித் திட்டத்தின்கீழ், பரமகுடி-எமனேஸ்வரம் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 35,000 சேலைகள் வீதம் வருட மதிப்பு ரூ. 156 இலட்சத்திற்கு ஆர்டர் கொடுத்துள்ளது. மேற்படி ஆர்டர் கொடுத்த வகையில் உற்பத்தித் திட்டத்தின் கீழ்எமனேஸ்வரம் பரமக்குடியில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் ஜனவரி '1985 முதல் ஜூன் '1985 வரை ரூ. 103.33 இலட்சத்திற்கு கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்துள்ளது.

3. இது தவிர, கோ-ஆப்டெக்ஸ் ஏப்ரல் 1985-ல் நிவாரணக் கொள்முதலாக ரூ. 30 இலட்சத்திற்கு இப்பகுதியில் உள்ள பிரதம நெசவாளர் சங்கங்களிடமிருந்து விற்பனை ஆகாத பனாரஸ், தேவேந்திரா, சுங்குடி சரிகை, சுங்குடி காட்டன் மற்றும் பம்பர் ரகங்களைக் கொள்முதல் செய்துள்ளது:—

4. இப்பகுதியில் உள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் கீழ்க்கண்ட விவரப்படி பணம் பட்டுவாடா செய்துள்ளது.

| மாதம் | பணம் பட்டுவாடா விவரம். (ரூபாய் இலட்சத்தில்) | நிலுவைத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| ஏப்ரல் 1985 | 29.93 | .. |
| மே 1985 | 8.65 | கோ-ஆப்டெக்ஸ் |
| ஜூன் 1985 | 0.93 | கொள் முதல் செய்ததில் 10-7-1985 வரை நிலுவை ரூ. 19.11 இலட்சம். |
| ஜூலை '1985 | 4.62 | |

5. தற்போது கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் பயிர்பிளை போன்ற சேலை ரகங்கள்தான் அதிக அளவில் விற்பனை ஆகின்றன. ஆனால் பனாரஸ், தேவேந்திரா, சுங்குடி சரிகை, சுங்குடி காட்டன் மற்றும் பம்பர் சேலைகள் அதிகம் விற்பனையாகாமல் தேக்கத்தில் உள்ளன. ஆயினும் விற்பனையின் அளவினைப் பொறுத்து அவ்வப்போது கோ-ஆப்டெக்ஸ் இப்பகுதி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து கொள்முதல் செய்யும் வாய்ப்புள்ளது. இப்பகுதியிலுள்ள சங்கங்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 8,02,736-ல் ரூ. 2,15,336/-ஏப்ரல்-ஜூன் '1985 காலாண்டில் வழங்கப்பட்டு, எஞ்சியுள்ள தொகை ரூ. 5,87,400/-தற்போது வழங்க வேண்டிய நிலுவையிலுள்ளது. இதில் நடப்பு ஜூலை-செப்டம்பர் '1985 காலாண்டில் ரூ. 2,31,803.70 வரை மேற்கூறிய பகுதி சங்கங்கட்கு விரைவில் வழங்கப்பட இருக்கிறது. மானாமதுரை

கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ரூ. 9,98,000-க்கான தள்ளுபடி மானியக் கோரிக்கைகள் பரிசீலனையில் உள்ளன. இவ்வாறு, அவ்வப்போது கைவசமிருக்கும் நிதி ஒதுக்கீட்டிலிருந்து, 3 மாதங்களுக்கு ஒருமுறை தள்ளுபடி மானியம் சங்கங்களுக்கு அவை கோரியதற்கேற்ப பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

**(XX) சென்னை கடலோரப் பகுதிகளில் கட்டப்பட்ட குடிசை மாற்று வாரிய வீடுகளுக்கு உப்புக் காற்றினால் ஏற்பட்டுள்ள பாதகம்.**

திருமதி. பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டொம்மிகுப்பம், நம்பிக்கை நகர் கடலோரப் பகுதிகளிலுள்ள குடிசை மாற்று வாரியத்தின் மூன்று குடியிருப்புக் கட்டிடங்கள் இடிந்து விழும் நிலையில் உள்ளதாலும் இதில் பல தீயச்செயல்கள் நடைபெறுவதாலும், அப்பகுதி வாழ் மக்களுக்கு உண்டாகும் இன்னல்கள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை**

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 1971-72-லிருந்து 1974-75 வரை நொச்சிக்குப்பம், நொச்சிநகர் மற்றும் டொம்மிங் குப்பத்தில் 876 குடியிருப்புகள் ரூ. 76.20 இலட்சம் செலவில் கட்டியது. இவற்றில் 90 குடியிருப்புகள் (நம்பிக்கை நகர்) புதிய முறையில், குறைந்த செலவில், சோதனை முறையாக ரூ. 6.40 இலட்சம் செலவில் கட்டப்பட்டன. தொடர்ந்து வீசும் கடல் காற்றின் உப்புத்தன்மையால் காரைகள் மற்றும் பூச்சுகள் யாவும் உதிர்ந்து விட்டமையாலும், அதைத் தொடர்ந்து இரும்புக் கம்பிகள் உப்புக் காற்றின் ஈரத் தன்மையால் இற்று பலவீனமடைந்ததால் குடியிருப்புகள் இடிந்து விடும் நிலை ஏற்பட்டது. அங்கு வசித்து வந்த குடியிருப்புத் தாரர்கள் அருகிலுள்ள காலி நிலங்களில் குடியேற்றப் பட்டுள்ளனர். மேலும் பழுதடைந்த 90 குடியிருப்புகளை இடிப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது ஆகஸ்டு 1985-க்குள் முடிந்து விடும். இங்கு ரூ. 24.70 இலட்சம் செலவில் புதியதாக 216 குடியிருப்புகள் நடைமுறையில் உள்ள வழக்கப்படி (Coventional Method) கட்டப்பட்டு வருகின்றன. இவற்றில் 120

குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மேலும் சட்ட விரோதமான செயல்கள் ஏதும் நடக்க வாய்ப்பில்லை. தவிர அவ்விதமான செயல்கள் நடக்க குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஒருபோதும் வாய்ப்பு அளிக்காது.

(xxi) தேயிலை ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள தேக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. உச்சி, எம். சிவகுமார், கே. கல்லன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தேயிலைத் தூள் திடீர் விலைச்சரிவினால் ரூபாய் 140 கோடி மதிப்புள்ள தேயிலைத் தூள் ஏற்றுமதி செய்ய இயலாத நிலையில் தேங்கிக் கிடப்பதால் தென்னிந்தியாவில் சுமார் 20 ஆயிரம் சிறு விவசாயிகளிடையே ஏற்பட்டிருக்கும் நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்;

அறிக்கை

தேயிலைத் தொழிலில் தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் அங்குள்ள சீதோஷ்ண நிலையின் காரணமாக தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அங்கு இத்தொழில் 20,000 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 15,000 சிறு தேயிலை விவசாயிகள் ஈடுபட்டு 45,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகின்றனர்.

இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியான தேயிலை 1984-ல் 215 மில்லியன் கி. கி. 1985-க்கு 220 மில்லியன் கி.கி. ஏற்றுமதி செய்யலாமென குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் வட இந்தியாவின் பங்கு 1984-ல் 149 மில்லியன் கி. கி. ஆகவும், 1985-க்கு 167 மில்லியன் கி. கி. ஆகவும் உள்ளது. இதிலிருந்து வட இந்திய தேயிலை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவு சென்ற ஆண்டைவிட கூடுதலாக 18 மில்லியம் கி. கி. அதிகரித்து குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவா கிறது.



ஆனால் தென்னிந்திய தேயிலை உற்பத்தியில் வெளிநாடு களுக்கு ஏற்றுமதியான தேயிலை 1934-ல் 66 மில்லியன் கி. கி. 1985—க்கு 53 மில்லியன் கி. கி. இதிலிருந்து வெளி ஆகவுள்ளது. நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் தென்னிந்திய தேயிலையின் அளவு சென்ற ஆண்டைவிடக் குறைவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது தேயிலைத் தூள் விலைச் சரிவுக்கு முக்கிய காரணமாகும். மேலும் குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை Minimum Export Price (MEP) தொடர்ந்து கடைபிடிப்பது என்ற மத்திய அரசின் முடிவினால் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் தேயிலை விற்பனையில் குறிப்பாக தென்னிந்தியாவில் மிகச் சரிவு ஏற்பட்டுள்ளது. உண்மையில் குறைந்தபட்ச ஏற்றுமதி விலை நிர்ணயிப்பது மற்றும் 220 மில்லியன் கிலோவின் அளவில் ஏற்றுமதியினை மட்டுப்படுத்து வதன் நோக்கமே உள்ளூர் தேவைக்கு அதிக அளவு கிடைக்கச் செய்வதும் அதே சமயம் குறிப்பிட்ட அளவு ஏற்றுமதிக்கு அதிக அளவில் வெளிநாட்டுச் செலவாணி ஈட்டுவதுமாகும். ஆனால் இதில் முதல் நோக்கம் நிறைவேறிய போதிலும் நடப்பு ஆண்டில் மொத்தம் ஏற்றுமதி 150 மில்லியன் கிலோவிற்கு மேற்படாது. எனினும் இந்த ஏற்றுமதிக் குறைவு உள்நாட்டுத் தேவைக்கும் அப்பாற்பட்ட மற்றொரு 70 மில்லியன் கிலோ தேயிலை தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் தற்பொழுது குறைந்த பட்ச ஏற்றுமதி விலையான ரூ.26 உலக வர்த்தக அங்காடியில் தற்போதுள்ள விலையைக் காட்டிலும் அதிகமாயிருப்பதால் ரஷ்யாவும் அரபு நாடுகளும் மட்டுமே நம்மிடம் தேயிலை வாங்கு கின்றன. மேலும் அவை அவர்களின் குறிப்பிட்ட தரத்திற்கு ஒத்துவரவில்லை என்றால் நிராகரித்து விடுகின்றன.

தேயிலை வாரியம், தேயிலைப் பயிரிடுவோர் சங்கம மற்றும் கலந்தாய்வுக் குழுவின் ஒருமித்தபரிந்துரைகளை மத்திய அரசிற்குத் தேயிலை வாரியத் தற்காலிக தலைவர் திரு. திருபாதி சமர்ப் பித்துள்ளார். இதில் குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை (Mini mum Export Price) நிர்ணயிப்பதும் ஒரு பரிந்துரை ஆகும். இது குறித்து மத்திய அரசின் முடிவு ஓரிரு நாட்களில் எதிர் பார்க்கப்படுகிறது என்ற செய்தி Business Standard என்ற பத்திரிகையில் 16-7-1985-ல் வெளியாகியுள்ளது. எல்லா உற்பத்தியாளர் சங்கங்களும் அரசின் குறைந்தபட்ச ஏற்றுமதி விலை கொள்கையை (Minimum Export Price) கைவிட மத்திய அரசை வலியுறுத்தி உள்ளார்கள்.

நீலகிரியில் உற்பத்தியாகும் பெரும்பாலான தேயிலை பழமையான ஏற்றுமதி தரத்தை உடையதாக இருப்பதாலும் (Orthodox Exportable Grades) இத்தேயிலைக்கு உள்நாட்டுச் சந்தை இல்லாததாலும், டார்ஜிலிங் தேயிலைப் போலவே நீலகிரி தேயிலையும் கருதப்பட வேண்டும் என்றும், இவ்வாண்டுக்கு தென் இந்தியாவிற்கு அனுமதித்த ஏற்றுமதி அளவு 1984-க்கு அனுமதிக்கப்பட்ட அளவைவிடக் குறைவாக இருப்பதால் நீலகிரி

தேயிலையை டார்ஜிலிங் தேயிலைக்கு ஒப்பாகக் கருதி ஏற்று மதிக்கான அளவை உயர்த்திட வேண்டுமென்றும் இவ்வரசு மத்திய அரசை அண்மையில் வலியுறுத்தியுள்ளது.

(xxii) பிற்பட்டோருக்கு இட ஒதுக்கீடு சம்பந்தமாக, உச்ச நீதிமன்ற ஆணை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வி. பி. பாலசுப்பிரமணியன், மா. சின்னராசு, செ. செம்மலை ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர் களில் ஒருவர் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாநில அரசு பிற்படுத்தப்பட்டோருக்கு தற்போது அளித்துள்ள இட ஒதுக்கீடு சம்பந்தமாக, உச்ச நீதி மன்றத்தில் சிலர் தொடுத்துள்ள வழக்கில், உச்ச நீதிமன்றம் தமிழக அரசின் இட ஒதுக்கீட்டிற்கான அரசு ஆணைக்கு 31–7–1985 ஆம் தேதியை காலக் கெடுவாக விதித்துள்ளதால் தமிழக மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

சமூக நலத்துறையின் 1–2–1980 ஆம் நாளிட்ட அரசாணை எண் 72–இல் அரசு பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் ஒருங்கிணைந்த பட்டியலை வெளியிட்டது. அதே நேரத்தில் அத்துறையின் 1–2–1980 ஆம் நாளிட்ட அரசாணை எண். 73–இல் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் மக்கட் தொகைக்கு ஏற்ற அளவில், அவர்களுக்கான இட ஒதுக்கீட்டை அரசு 31 சதவீதத் திலிருந்து 50 சதவீதமாக உயர்த்தியது.

2. இந்த அரசாணைகளை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் நீதிப் பேராண்மை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன (எண்கள் 4995–4997/1980 மற்றும் 402/1981). தற்போது செயலில் உள்ள பிற்பட்ட வகுப்பினரின் கணக்கெடுப்பையும், வரைப்பாட்டை யும் மறு ஆய்வு செய்ய தமிழ்நாடு அரசு ஒரு குழு அமைக்க இசைவதாக அரசின் சார்பில் வாதிட்ட திரு. ஆர். கே. கார்க் எடுத்துரைத்தார். உச்ச நீதிமன்றம் அதனை ஏற்றுக் கொண்டு.



அவ்வாறே ஒரு குழுவை அமைக்கும்படி மாநில அரசுக்கு 14–10–1982-இல் ஆணையிட்டது. அக்குழுவின் பரிந்துரைகள் மீது 31–5–1985-க்குள் மாநில அரசு முடிவு எடுக்க வேண்டுமென்றும் உச்ச நீதிமன்றம் காலவரையறை விதித்தது.

உச்ச நீதிமன்றம் பிறப்பித்த ஆணைக்கிணங்க, தமிழ்நாடு அரசு, சமூக நலத்துறையின் 13–12–1982 ஆம் நாளிட்ட அரசாணை எண் 3078–இல், திரு. ஜே. அ. அம்பாசங்கர், இ. ஆ. ப. (ஓய்வு) தலைமையில், 12 அலுவல் சார்பற்ற உறுப் பினர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரைச் செயலாளராகவும் கொண்ட தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப் பட்டோர் நலக் குழுவினை அமைத்தது. பின்னர் இக்குழுவில் மேலும் 7 அலுவல் சார்பற்ற உறுப்பினர்களும், பிறிதொரு அலுவலக சார்பு உறுப்பினராக சட்டத்துறை அரசு இணைச் செயலாளரும் நியமிக்கப்பட்டனர்.

3. குழுத் தலைவர் அறிக்கை ஒன்றை 28–2–1985 அன்று அரசுக்குக் கொடுத்துள்ளார். இந்த அறிக்கையில், அவர் ஒருவர் மட்டுமே கையெழுத்திட்டுள்ளார். மற்ற உறுப்பினர்கள் எவரும் கையெழுத்திடவில்லை. குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் தங்களது பரிந்துரைகள் கொண்ட வேறொரு அறிக்கையினை அரசுக்குக் கொடுத்துள்ளனர்.

4. அரசு இவ்வறிக்கைகளை ஆராய்ந்தது. பெரும் பான்மை உறுப்பினர்களின் பரிந்துரைகளுக்கும், திரு. ஜே. அ. அம்பாசங்கர் அவர்களின் சிறுபான்மை பரிந்துரைக்கும் இடையே உள்ள அடிப்படைக் கருத்து வேறுபாட்டினை அரசு பொதுவாகக் கருதிப் பார்த்தது. பெரும்பான்மையினர் பரிந்துரைகள் மற்றும் சிறுபான்மையினர் பரிந்துரைகளின் தற்போதைய வடிவில் பிற் படுத்தப்பட்டோர் பட்டியலை அடையாளங் காட்டுவதிலோ, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஒதுக்கீட்டு விழுக்காட்டினை நிர்ணயிப்பதிலோ ஒரு சரியான முடிவு எடுக்க இயலாது என்று அரசு கருதியது. மக்கட் தொகையின் சமூக — பொருளாதார நிலைமைகள் குறித்து 100 சதவீத ஆய்வு நடத்தப்பட வேண்டு மென்ற பெரும்பான்மையினரின் பரிந்துரையை அரசு ஏற்றுக் கொண்டு, அம்மாதிரியான 100 சதவீத ஆய்வு நடத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்தது. பெரும்பான்மையினரின் பரிந்துரைகளில் தெரிவித்திருந்த கருத்துக்களின் அடிப்படையில், ஏற்கெனவே நடத்தப்பட்ட கல்வி ஆய்வு குறித்தும், ஒரு சோதனை ஆய்வு நடத்தவும் அரசு தீர்மானித்தது.

5. அவ்வாறான 100 சதவீத ஆய்வு மற்றும் சோதனை ஆய்வு நடத்த, தாக்கல் செய்யப்பட இருக்கின்ற உரிமையியல் பல்வகை மனுவின் மீது உச்ச நீதிமன்றத்தின் ஆணைக்குட் பட்டு, ஒரு குழு (கமிஷன்)/கமிட்டி/ஆயம் (பேனல்) நியமிக்கப் படவேண்டுமென்றும் அரசு முடிவு செய்தது.

6. அம்மாதிரியானதொரு ஆய்வு மற்றும் சோதனை ஆய்வுக்குப் பிறகு. அரசின் முன் வைக்கப்படும் எல்லா விவரங் களின் அடிப்படையில் தான், அரசு, மாநிலத்தில் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலைச் சரியாக அடையாளங் காட்ட முடியும் என்று அரசு கருதியது. மேலும்,

(1) உச்ச நீதிமன்றத்தின் 14-10-1982 ஆம் நாளிட்ட ஆணைகளை நிறைவேற்ற. தமிழ்நாடு அரசுக்கு இரண்டு ஆண்டுக் காலம், அதாவது, 31-5-1987 வரை அவகாசம் அளிக்கவும்;

(2) ஒதுக்கீடு ஆணைகளான 1-2-1980 ஆம் நாளிட்ட சமூக நலத் துறையின் அரசாணை (நிலை) எண் 72 மற்றும் 1-2-1980 ஆம் நாளிட்ட சமூக நலத் துறையின் அரசாணை (நிலை) எண் 73 இரண்டும் மேற்கூறிய தேதி வரை அதாவது 31-5-1987 வரை தொடர்ந்து செயலில் இருக்கவும்

உச்ச நீதிமன்றத்தை அணுகலாம் என்றும் அரசு முடிவு செய்தது.

7. அதன்படி, 17-3-81-84-85 ஆம் எண்களுள்ள உரிமை யியல் பல்வகை மனுக்கள், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டன. உச்ச நீதிமன்றம் 8-5-1985 ஆம் நாளிட்ட அதனுடைய ஆணையில் பின்வருமாறு ஆணையிட்டது:—

''இந்த வழக்கில் எழுந்துள்ள கருத்து மாறுபாட்டுக்கு நேரடித் தொடர்புடைய வேறொரு வழக்கில், இந் நீதிமன்றம், இன்று தீர்ப்பு வழங்கியுள்ளதாக, இவ் வழக்கில் இரு தரப்பாரது வழக்குரைஞர்கள் மூலமாக அறிகிறோம். இந்தத் தீர்ப்பின் வாசகக் கருத்துக்களை ஆய்வு செய்து அதன் செயல்பாட்டின் வரம்பையும், விளைவுகளையும் பரிசீலிக்க சிறிது காலம் ஆகும் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இச்சூழ்நிலையில், 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1 ஆம் நாளிட்ட 72 ஆம் எண் அரசாணை; 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1 ஆம் நாளிட்ட 73 ஆம் எண் அரசாணை ஆகிய வற்றில் உத்தரவிடப்பட்ட இட ஒதுக்கீட்டின் செயல் வரம்பை 1985 ஆம் ஆண்டு சூலை திங்கள் 31 ஆம் நாள் வரை நீட்டிக்கிறோம். இருந்தாலும், இந்த ஆணை, இன்று நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் செயல் வரம்பையும் விளைவையும் எந்த வகையிலும் குறைப்ப தாகவோ அல்லது மேற்படி தீர்ப்பின் வாசகக் கருத்துக் களுக்கு மனுதாரர்கள் உடன்படுவதை எந்த வகையிலும் இடையிட்டுத் தடுப்பதாகவோ கருதப்பட மாட்டாது என்பதையும் தெளிவுபடுத்துகிறோம்''.



8. இதில் குறிப்பிடப்பட்ட தீர்ப்பு, கே.சி. வசந்தகுமார் மற்றும் ஒரு நபருக்கும் கர்நாடக மாநில அரசுக்கும் இடையே நடைபெற்றதொரு வழக்கில், உச்ச நீதிமன்றத்தின் அரசிய லமைப்புச் சட்ட ஆயம், 8-5-1985 அன்று அளித்தத் தீர்ப்புகள் தொடர்பானதாகும். இருந்தாலும், அந்தத் தீர்ப்பில், இம் மாநிலம் அதாவது தமிழ்நாடு சம்பந்தப்பட்ட ரிட் மனுக்களான 4995-4997 1980 மற்றும் 402/81 ஆகியவை குறிப்பிடப் பட்டுள்ளன. இந்தத் தீர்ப்புகளில் தலைமை நீதிபதியும், நீதிபதி டி.ஏ. தேசாய், நீதிபதி ஓ. சின்னப்ப ரெட்டி, நீதிபதி ஏ.பி. சென், நீதிபதி இ.எஸ். வெங்கடராமையா ஆகிய மற்ற நான்கு நீதிபதிகளும் தனித்தனி தீர்ப்புகள் அளித்துள்ளனர்.

இந்தத் தீர்ப்பு பிற்படுத்தப்பட்டவர்களை வகைப்படுத்து வதற்கும், அடையாளம் காட்டுவதற்கும் எந்தெந்த வழிமுறை களைக் கடைபிடிக்க வேண்டுமென்று குறிப்பிடுகிறது. அந்த வழிமுறைகளின் அடிப்படையில் மாநில அரசால் தயாரிக்கப் படவிருக்கும் பட்டியலில் உள்ள பிற்படுத்தப்பட்டவர்கள், அரசமைப்புச் சட்டம் 15 (4) (கல்வி இட ஒதுக்கீடு) மற்றும் 16 (4) (அரசுப் பணியில் இட ஒதுக்கீடு) பிரிவுகளின் கீழ் பயனடைய முடியும் என்றும் இந்தத் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பில் கர்நாடக மாநிலம் அமைக்க இருக்கும் குழுவைப் பற்றி குறிப்பிட்டிருந்தாலும், இந்தத் தீர்ப்பில் கூறப் பட்டுள்ள வழிமுறைகள் தமிழ்நாடு அரசுக்கும் பொருந்தும். காரணம், தீர்ப்பிலேயே தமிழ்நாடு அரசுக்கு எதிராக தொடரப் பட்டுள்ள நீதிப் பேராணைகள் (ரிட் மனுக்களின்) எண்கள் குறிப் பிடப்பட்டுள்ளன. மேலும் 8-5-1985 அன்று உச்ச நீதிமன்றத்தில் வழங்கப்பட்டுள்ள ஆணையிலும் இது கூறப்பட்டுள்ளது.

9. மேற்சொன்ன தீர்ப்பில் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ள வழிமுறைகளின் அடிப்படையில் இம்மாநிலத்தில், பிற்படுத்தப் பட்ட வகுப்பினர்களை இனம் கண்டறிய வேண்டியுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் ஆணைக்குட்பட்டு, இதற்காக நியமிக்கப் படக் கூடிய கமிஷன்/குழு/ஆயம் (பேனல்) ஒன்று தான் இப் பணியை ஆற்ற இயலும் என்று அரசு கருதியது. இந்த கமிஷன்/ குழு/ஆயம் (பேனல்), மக்களின் சமூக, பொருளாதார நிலைகள் குறித்து 100 சதவீத ஆய்வையும், ஏற்கெனவே நடத்தப் பட்ட கல்வி குறித்த ஆய்வில் சோதனை ஆய்வையும் மேற் கொள்ளும்.

10. எனவே,

(அ) மக்களின் சமூக-பொருளாதார நிலை குறித்து 100 சதவீத ஆய்வையும், தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு ஏற்கெனவே நடத்திய கல்வி ஆய்வு குறித்த சோதனை

ஆய்வையும் நடத்திய பிறகு, உச்ச நீதிமன்றத்தின் வழிமுறைகளுக்கேற்ப, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களை இனம் கண்டறிவது பற்றி, அரசுக்குப் பரிந்துரைகள் செய்ய ஒரு கமிஷன்/குழு/ஆயம் (பேனல்) அமைக்க அல்லது நியமிக்க அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க இந்த மாநில அரசுக்கு அனுமதி வேண்டியும்,

(ஆ) உச்ச நீதிமன்றத்தால் 14-10-1982, 8-5-1985 ஆகிய நாட்களில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை நிறைவேற்ற தமிழ்நாடு மாநில அரசுக்கு 31-5-1987வரை அவகாசம் நீட்டிக்கவேண்டியும்,

(இ) மேற்சொன்ன நாள் வரை, அதாவது 31-5-1987 வரை, இட ஒதுக்கீடு சம்பந்தப்பட்ட ஆணைகளை (அதாவது சமூக நலத் துறையின் 1-2-1980 ஆம் நாளிட்ட 72 ஆம் எண் அரசாணை, சமூக நலத் துறையின் 1-2-1980 ஆம் நாளிட்ட 73 ஆம் எண் அரசாணை) நீட்டிக்க வேண்டியும்,

உச்ச நீதிமன்றத்தைக் கோரி உரிமையியல் பல்வகை மனுக்கள் எண்கள், 24970-973/85, நாள் 8-7-1985 அன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. இம்மனுக்கள் 23-7-1985 இல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

(பிற்பகல் 1—20.)

## XXIII ஏரி, குளம் போன்ற நீர்நிலைகளில் மீன் பிடிக்கும் உரிமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் எஸ். வேணுகோபால், எஸ். இராசாராமன், துரை கிருஷ்ணமூர்த்தி, எஸ். கோவிந்தசாமி, ஈ.வெ.கி.ச. இளங்கோவன், டாக்டர் கே. நல்லமுத்து, எஸ்.பி. மணவாளன், எஸ். சிவராஜ், ஏ. சந்திரசேகரன், ப. தீர்த்தராமன், சா. துரைசாமி, இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நம் மாநிலத்திலுள்ள ஏரி, குளம் மற்றும் இதர நீர் நிலைகளிலிருந்து மீன் பிடிக்கும் உரிமம் 30-6-1985-க்கு பிறகு யாருக்கும் வழங்க வேண்டாமென மாவட்ட ஆட்சியாளர்களுக்கு மீனளத் துறை நெறியாளர் ஆணை பிறப்பித்திருப்பதன் காரணமாக மீன் பிடிப்போர், குத்தகைதாரர்களிடையே ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து"



அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

இதுவரை பொதுப்பணித்துறையிலும் மற்ற சில துறைகளிலும் அரசுக்குச் சொந்தமாக இருந்த குளங்கள், ஏரிகள், ஆறுகள் இவைகளில் இருக்கும் மீன்பிடிப்பு உரிமையை ஆங்காங்கே அமைத்து இருந்த மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டு வந்தது. ஆனால், இத்திட்டத்தில் பல சிக்கல்கள் இருந்தன. தற்போதுள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறுபட்ட அளவுகளில் இருந்து வருகின்றன. சில சங்கங்கள் பல வட்டங்களைக் கொண்டு மிகப் பெரியதாகவும், சில ஒரே வட்டத்தில் இரண்டு மூன்று சங்கங்கள் என்ற அளவில் சிறியதாகவும் இருந்து வருகின்றன. பெரிய சங்கங்கள் விவகார எல்லை அதிகமாக இருப்பதால் நிர்வாகச் சிக்கல் ஏற்பட்டு சங்கத்தை தச் சரிவர நடத்த முடிவதில்லை. இச்சங்கங்களில் புதிதாக உறுப்பினர்கள் சேரும் போது அவர்கள் உண்மையான மீனவர்கள்தானா என்று நேரடியாக அறிவதற்கு வாய்ப்பு இல்லாமல் போனதற்கு யார் வேண்டுமானாலும் சங்கத்தில் சேர்ந்துவிடலாம் என்ற நிலை இருந்து வருகிறது. அத்துடன் 5 அல்லது 6 வட்டங்களுக்கு ஓரே சங்கம் என்பதால் ஒரு வட்டத்திலுள்ள நீர்நிலைகளின் மீன்பாசிக் குத்தகையை அந்த வட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குக் கொடுக்காமல் தலைவர் விருப்பப்படி வேறு வட்டத்தில் இருப்பவருக்குக் கூட கொடுக்கலாம் என்ற நிலைமை இருக்கிறது. நீண்ட தூரம் காரணமாக தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் இடையே நேரடி தொடர்பு இல்லாமல் போய்விடுகிறது. இக் குறைகளைக் களைவதற்காக பெரிய சங்கங்களைப் பிரித்து வட்ட அளவில் அமைக்க அரசு பரிசீலனை செய்து வருகிறது. சிறிய சங்கங்களுக்குச் சரியான நிதி ஆதாரமின்றி சங்கத்தை நடத்துவதற்கே சிரமப்படுவதால் இவற்றை வட்ட அளவில் ஒன்றாக இணைப்பதையும் அரசு பரிசீலனை செய்து வருகிறது. இந்தக் கொள்கை உருவாகி நடைமுறைக்கு வந்து உண்மையான மீனவர்கள் பயன்பெறும் வரை அரசுத் துறைகளின் கீழ் உள்ள நீர்நிலைகளில் மீனவ கூட்டுறவுச் சங்கங்களுக்குமீன்பிடி உரிமையை கொடுப்பது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலான குளங்கள், ஏரிகள் மற்றும் நீர்நிலைகளில் மீன் பிடிக்கும் பருவம் பல மாதங்களுக்குப் பிறகுதான் வரும். இருந்தபோதிலும் சில ஆறுகள் குளங்களில் ஒன்றிரண்டு மாதங்களில் மீன்பிடிக்கும் பருவம் வருமேயானால் அங்கு தற்காலிககாக என்ன ஏற்பாடு செய்யலாம் என்பதை அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுத்து உள்ளது. உண்மையான மீனவர்கள்

நல்லமுறையில் பயன்பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் மேற்
கொள்ளப்பட்ட இச்செயல்கள் பொருத்தமானவை என்றுதான்
அரசு கருதுகிறது. ஆகவே, இச்செயல்களினால் மீனவர்
களிடையே பதட்டநிலை ஒன்றும் ஏற்படத் தேவையில்லை.

XXIV. சென்னை விமானப் பயிற்சிச் சங்கத்திற்கு அரசு உதவி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் டி. ஆர்.
வேங்கடரமணன், ம. ஆபிரகாம், ப. தீர்த்தராமன் ஆகியோர்
ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்
துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு போக்குவரத்துத்
துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, "சென்னை விமானப் பயிற்சிச் சங்கம் மூடப்
பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்த" அவசரப்
பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்கு
வரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு
வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை
ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

சென்னை விமானப் பயிற்சிச் சங்கத்திற்கு இம்மாநில அரசு,
உதவித் தொகையாக 1955 முதல் 1960 வரை ஆண்டொன்றிற்கு
ரூ. 25,000 மும், 1961 முதல் 1978 வரை ரூ. 40,000 மும்,
1979 ஆம் ஆண்டில் ரூ. 1,20,000 மும் அளித்து வந்தது.
இந்த உதவித் தொகையை 1980-81 முதல் ஆண்டொன்றிற்கு
ரூ. 2,80,000 ஆக உயர்த்தி அளித்து வருகிறது. இது தவிர
இங்கு தனியார் விமானப் பயிற்சி உரிமம் (Private Pilot Licence
Training) மற்றும் வணிக விமானப் பயிற்சி உரிமம் (Commercial
Pilot Licence Training) என்னும் இருவகை விமான ஓட்டும் பயிற்சி
யளிக்கப்படும் மாணவர்களுக்கு உதவித் தொகையும் அரசு
அளித்து வருகிறது.

(2) சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் வடிகால்
வாரியத்தின் செயற்கை மழை பெய்விப்பதற்கான விமானத்
தையும், அரசு ஹெலிகாப்டரையும் இச்சங்கமே பராமரித்து
வருகிறது. அதற்கான தொகையை வாரியமும் அரசும் சங்கத்
திற்கு வழங்கி வருகின்றன.



(3) உதிரி பாகங்கள் வாங்கிய வகையிலும், பராமரிப்புப் பணியாளர்களை அதிகரித்ததாலும் நிதி இடர்ப்பாடு காரணமாக இவ்வருட பிப்ரவரி மாதத்தில் சங்கப் பணிகளை நிறுத்தி வைப்பதாக, சென்னை விமானப் பயிற்சி சங்கம் அறிவித்தது. நிதி இடர்ப்பாட்டினைக் களையும் பொருட்டு, இவ்வரசு ''வழிவகை'' முன்பணமாக ரூ. 1 இலட்சம் அளித்தது. நிதித் துறையைச் சார்ந்த அலுவலர் ஒருவர் விமானப் பயிற்சி சங்கத்தின் கணக்குகளை ஆய்வு செய்து அறிக்கை ஒன்று கொடுத்தார். பின்னர் 15-4-1985 அன்று போக்குவரத்துத் துறைச் செயலாளர் அவர்கள் விமானப் பயிற்சி சங்கத்தின் வருவாயினை அதிகரிப்பது பற்றியும், அது மேற்கொள்ள வேண்டிய சிக்கன நடவடிக்கைகள் பற்றியும் நிர்வாகத்தினருடன் கலந்து பேசினார். நிதி பற்றாக்குறை காரணமாக சங்கப் பணிகளை 4-6-1985 முதல் நிறுத்தி வைப்பதாக சென்னை விமானப் பயிற்சி சங்கம் அறிவித்தது.

(4) சென்னை விமானப் பயிற்சிச் சங்கப் பணிகள் பற்றி, சங்க உறுப்பினர்களுடன் 3-6-1985 மற்றும் 7-6-1985 அன்று கலந்து பேசப்பட்டது. பின் 13-6-1985 அன்று தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. 13-6-1985 அன்று தலைமைச் செயலாளர் தலைமையில் நடந்த கூட்டத்தில் நிதித்துறைச் செயலாளர், போக்குவரத்துத் துறைச் செயலாளர், பொதுத் துறைச் செயலாளர் மற்றும் சென்னை விமானப் பயிற்சிச் சங்க நிர்வாகிகள் மூவர் கலந்துகொண்டனர். இச்சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய அரசு ஹெலிகாப்டர் பராமரிப்புத் தொகை பாக்கியை உடனடியாக வழங்கவும், செயற்கை மழைக்கான விமானப் பராமரிப்பு ஆண்டுச் செலவு முழுவதையும் முன் தொகையாக கொடுக்கவும் முடிவு எடுக்கப்பட்டது.

(5) சென்னை விமானப் பயிற்சிச் சங்கத்தின் வரவு—செலவு வகைகள் மாநில அரசிடமிருந்து பெறத் தேவையான தொகை விமானப் பயிற்சிக் கழகத்தின் நிர்வாகத் திறன், ஆகியவற்றினைக் கணித்து ஒரு அறிக்கையினை ஒரு மாதத்திற்குள் தயார் செய்து அளிக்க—

(1) போக்குவரத்துத் துறைச் செயலாளர்,

(2) பொதுத் துறைச் செயலாளர்,

(3) நகராட்சி நிர்வாகத்துறைச் செயலாளர்,

(4) நிதித்துறை இணை இயக்குநர் (பொது மாநில நிறுவனங்கள்),

(5) சென்னை விமானப் பயிற்சிக் கழக பொருளாளர்

ஆகியோரைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

6. தலைமைச் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கிணங்க சென்னை விமானப் பயிற்சிக் கழகத்திற்கு உடனடியாக ரூ. 2.40 இலட்சம் அளிக்க அரசு ஆணையிட்டுள்ளது. விமானப் பயிற்சிக் கழகம், 13-6-1985 முதல் மீண்டும் தனது பணியினைத் துவக்கியுள்ளது.

## XXV. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் புதிய பேருந்துகளைப் பயன்படுத்தாமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. ரமணி, ஜே. ஹேமச்சந்திரன், எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் ஐம்பதுக்கும் மேலான புதுப் பேருந்துகளைச் சுமார் இரண்டு மாத காலமாக உபயோகப்படுத்தாமல் வைத்துள்ளதால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

### அறிக்கை

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் 26 புதிய வண்டிகளே கூண்டு கட்டி தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இவைகள் மே மற்றும் ஜூன் மாதங்களில், வாரம் 3 பேருந்து களாக வந்தடைந்ததாகும். இவைகளைப் பதிவு செய்து, பிறகு பிற மாநில வழித்தடத்தில் பழைய பேருந்துகளுக்கு பதிலாக மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டதாகும். தற்போதுள்ள பேருந்துகளின் உரிமங்களை புதிய பேருந்துகளுக்கு மாற்றம் செய்ய, மண்டலப் போக்குவரத்து அலுவலரிடம் ஒப்புதல் பெற்று, பின்னர் வரி என்ன கட்டவேண்டும் என்பதற்குண்டான வரிக் குறிப்புபெற்று, வரி செலுத்திய பின்னரே புதிய பேருந்துகளை இயக்க இயலும். இவ்வாறு செய்யும் தொடர்ச்சிப் பணிக்கு சுமார் 15 முதல் 20 நாளாகிறது. மேலும், பிற மாநில உரிமமுள்ள பேருந்துகளுக்கு இது போன்று வரிக்குறிப்பு பெற்று, வரி செலுத்த மேலும் சுமார் 15 நாளாகிறது. மேலும் காலாண்டு (குவார்ட்டர்) ஆரம்பத்தில் பேருந்து மாற்றம் பணி செய்தால் தான் அதற்குரிய வரி சிக்கலின்றி திரும்பப்பெற முடியும். எனவே தற்போதுள்ள பேருந்துகளுக்கு உரிமம் மாற்றம் செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இது முடிவடைந்த பின்னரே தற்போதுள்ள பேருந்துகளை இயக்கலாம். இது 1-8-1985 முதல் செயல்படத் தொடங்கும்.



## (XXVI) கன்னியாகுமரியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற சில மீனவர்கள் திரும்பியுள்ளது.

திரு கோ. பெருமாள் பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரியிலிருந்து ஜூலை 3 ஆம் தேதியன்று கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் ஏழு பேர் காணாமல் போனது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

### அறிக்கை

கன்னியாகுமரி மீனவர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சம்மேளனத்தின் கே. எப். சி. பி.எம். எஸ். 1 என்ற எண்ணுள்ள மீன்பிடி விசைப்படகு 7 மீனவர்களுடன் 4-7-85 அன்று மீன் பிடிக்கச் சென்றபோது காணாமற்போனதாக அரசுக்கு தகவல் 5-7-85 அன்று கிடைத்தது. மீன் துறைக்குச் சொந்தமான கன்னியாகுமரி அண்மைக்கடல் மீன்பிடி நிலைய இசெட்.பி. (அ) 4 என்ற படகு மீனவர்கள் காணமற்போன தகவல் கிடைத்த உடனேயே, அவர்களை தேடும் பணியில் ஈடுபட்டது. இப்பணியானது 5 மற்றும் 6 தேதிகளில் மேற்கொள்ளப்பட்டது. மேலும் தூத்துக்குடியிலுள்ள இசெட்.பி.(அ) 9 என்ற மீட்புப் பணி படகும் தூத்துக்குடியிலிருந்து கன்னியாகுமரியை நோக்கி 5 மற்றும் 6 தேதிகளில் மீனவர்களை தீவிரமாக தேடிக் கண்டு பிடிக்கும் பணியிற் ஈடுபடுத்தப்பட்டது.

2. தொடர்ந்து, சென்னையிலுள்ள கடல் வர்த்தகத்துறையும், திருவான்மியூரிலுள்ள கம்பியில்லா தந்தி அலுவலர் மற்றும் சென்னை மண்டலத்திலுள்ள கிழக்கு கடற்கரை காவல் படையினருக்கு இச்செய்தியானது தெரிவிக்கப்பட்டு, விரைவாக மீனவர்களை தேடிக் கண்டுபிடிக்குமாறு அனுப்பப்பட்டது.

3. மேலும், ஸ்ரீலங்காவில் உள்ள இந்திய தூதரகத்திற்கு தொலையச்சு (டெலக்ஸ்) மூலம் இத்தகவல் தெரிவிக்கப்பட்டு, காணாமற்போன மீனவர்கள் ஸ்ரீலங்கா எல்லைக்குள் வந்துள்ளனரா என தெரியப்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப் பட்டது.

4. இதனிடையே காணாமற்போன 7 மீனவர்கள் படகுடன் எவ்வித ஆபத்துமின்றி 8-7-85 காலை திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள புன்னக்காயல் என்னும் கிராமத்தில் பத்திரமாக கரை சேர்ந்தனர்.

(xxvii) சென்னை நகரில் முதியோர், ஊனமுற்றோர் விதவைகள் ஆகியோர்களுக்கு உதவித் தொகை வழங்க நடவடிக்கை.

திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை நகரில் கடந்த மூன்று மாதகாலமாக முதியோர், உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவைகளுக்கு உதவித் தொகை வழங்கப்பெறாததால் அவர்கள் படும் இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

முதியோர் உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெறுவர்களுக்கு மாதம் ரூ. 35/- ஒவ்வொரு மாதமும் அந்த மாதம் முடிந்த பிறகு அடுத்த மாதம், இரண்டாவது வாரத்தில் அஞ்சல் வழியனுப்பல் மூலம் பணம் அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முந்திய மாதத்திற்குரிய முதியோர் உதவித் தொகை பெற்றுக் கொண்டதற்கு உரிய பண அஞ்சல் ரசீது வட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வரப்பெற்ற பிறகு அந்த மாதத்தில் மொத்தம் எத்தனை பேர் உதவித் தொகை பெற்றுள்ளார்கள் என்பதை கணக்கிட்டு அடுத்த மாதத்திற்குரிய உதவித் தொகை பட்டியல் தயார் செய்து அனுப்பப்படுகின்றது. இதற்காகும் பண அஞ்சலுக்கான செலவையும் அரசு ஏற்றுக் கொள்கிறது. மேலும் முதியோர் உதவி பெறும் நபர்களுக்கு ஆண்டுக்கு இரண்டு வேட்டி/சேலையும், நாள் ஒன்றுக்கு ஒரு வேளை சத்துணவும், சத்துணவு சாப்பிடுவர்களுக்கு வாரத்திற்கு அரை கிலோ அரிசியும், சத்துணவு சாப்பிடாதவர்களுக்கு வாரத்திற்கு 1 கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது. இதன்படி 18-7-85-ல் சென்னை மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளர் (ஜெனரல்) அவர்கள் கொடுத்த தகவல்படி சென்னை நகரத்தில் உள்ள முதியோர், உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவைகள் முதலியோருக்கு மே மாதம் முடிய எல்லோருக்கும் முதியோர் உதவித் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. ஜூன் மாதத்திய முதியோர் உதவித் தொகை இந்த மாதத்திற்குள் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(xxviii) ஈரோடு சிந்தாமணி ஊழியர்கள் கோரிக்கைகள் மீது நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஆ. நடராசன், கு. சுப்பராயன், மா. மணிமாறன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.



திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரியார் மாவட்டம், ஈரோட்டிலுள்ள கூட்டுறவு மொத்த விநியோக சங்கத்திலுள்ள (சிந்தாமணி) ஊழியர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக மேற்கொண்ட வேலைநிறுத்தம் குறித்த "அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

பெரியார் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் பணிபுரியும் சிந்தாமணி எம்பளாயீஸ் யூனியனில் (ஏ.ஐ.டி.யு.சி.) இணைந்துள்ள பேக்கர்கள், அளவையாளர்கள், சுமை தூக்குவோர் லாரி கிளீனர்கள் போன்ற 39 பணியாளர்கள் தங்கள் யூனியனைச் சேர்ந்த தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் 17 பேரை பணி நிரந்தரம் செய்யக் கோரி 10-7-1985-ம் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக தங்களுடைய 25-6-1985-ம் தேதிய கடிதத்தில் அறிவிப்பு கொடுத்திருந்தனர். அப்பண்டக சாலையில் பணிபுரியும் தினக்கூலிகளை நிரந்தரமாக்க அனுமதி கோரி பெரியார் மண்டல இணைப்பதிவாளருக்கு முன்மொழிவினை அனுப்பியிருந்தால் அம்முன் மொழிவின் மீது இணைப்பதிவாளரின் உத்திரவு வந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று 1-8-1985-ல் தொழிலாளர் அலுவலரின் முன்னிலையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போது பண்டக சாலையின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. தொழிலாளர் நலஅலுவலரும் இதனை ஏற்றுக் கொண்டு வேலை நிறுத்தத்தைக் கைவிடுமாறு அவர்களுக்கு அறிவுரை வழங்கினார். மீண்டும் 15-7-85ந் தேதி காலை 11 மணிக்கு பேச்சு வார்த்தைக்கு வருமாறு அறிவிப்பு அனுப்பியிருந்தார்.

இதற்கிடையில் 10-7-85-ம் தேதி முதல் பண்டகசாலையில் பணிபுரியும் பேக்கர்கள், அளவையாளர்கள், சுமைதூக்குவோர், லாரி கிளீனர்கள் ஆகியவர்கள் பணிக்கு வராமல் வேலை நிறுத்தம் செய்தார்கள். எனவே தொழிலாளர் நல அலுவலர் 15-7-85க்குப் பதிலாக 12-7-85-ம் தேதி பேச்சு வார்த்தை நடத்தினார். அப்பொழுது 480 நாட்களுக்கு மேல் பணிபுரியும் தினக்கூலி நபர்களை சட்டப்படி உடனே பணி நிரந்தரம் செய்யுமாறு தொழிலாளர் நல அலுவலர் தனி அலுவலருக்கு அறிவுரை வழங்கினார். பண்டக சாலையில் தினக்கூலியில் பணிபுரியும் 17 பேர்களில் 480 நாட்களுக்கு மேல் பணிபுரிந்த 14 பேர்கள் 1-7-85-ம் தேதி முதல் பணி நிரந்தரம் செய்யப்படுவர் என்றும் இதற்கான உத்திரவு 31-7-85க்குள் பிறப்பிக்கப்படும் என்றும் நிர்வாகத்தினர் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதனை ஏற்றுக் கொண்டு அவர்கள் 12-7-85 அன்று வேலைக்கு திரும்பி

விட்டார்கள். வேலை நிறுத்த காலத்திற்கு ஊதியம் ஏதும் வழங்கப்படமாட்டாது என்றும், அவர்களின் விடுப்பு கணக்கில் வர் களுக்கு அந்நாட்களை விடுப்பாகக் கருதி விடுப்பு ஊதியம் வழங்கப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டது. பேக்கர்கள், அளவையாளர்கள், சுமைதூக்குவோர், மற்றும் லாரி கிளீனர்கள் போன்ற பதவிகளில் பணிபுரியும் தினக்கூலி நபர்களின் பணியை நிரந்தரம் செய்வதற்கு ஏதுவாக தனிஅலுவலர் அனுப்பியுள்ள முன்மொழிவுகளின் மீது உத்திரவை விரைவில் பிறப்பிக்குமாறு பெரியார் மண்டல இணைப்பதிவாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(xxix) பழனி வட்டம் கீரனூரில் கட்டப்பட்டுள்ள குருசாமி நாயுடு மருத்துவ விடுதி திறக்கப்படாமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. குப்புசாமி எ. பிரேம்குமார் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழனி வட்டம், கீரனூர் மருந்தக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள குருசாமி நாயுடு நினைவு தாய் சேய் நல விடுதி ஐந்து ஆண்டுகட்கு முன்பே கட்டி முடிக்கப்பட்டும் இன்னும் திறக்கப்படாமல் இருப்பதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

தற்சமயம் மதுரை மாவட்டம் கீரனூரில் ஒரு அரசு மருந்தகம் இயங்கி வருகிறது. திருவாளர்கள் ஆர். குருசாமி நாயுடு மருத்துவ வசதி டிரஸ்டின் நிர்வாக அலுவலர் கீரனூர் மருந்தகத்திற்கு அருகில் கட்டப்பட்ட அவர்களுக்கு சொந்தமான கட்டிடத்தை 10 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பிரிவு துவக்க நன்கொடையாகத் தர இசைவு தெரிவித்தனர். மேற்கண்ட நன்கொடையை ஒப்புக்கொள்ள வேண்டியும், மகப்பேறு பிரிவு துவக்க தேவையான பணியாளர்களை அமர்த்த அரசு 1982 ஆம் ஆண்டு ஒப்புதல் அளித்தது. மேற்கண்ட கட்டிடத்தை நன்கொடையாளர்களிடம் அவர்களுக்கு சொந்தமான கட்டிடத்தை இத்துறைக்கு முறைப்படி மாற்றத் தேவையான பத்திரத்தை பெற்றும் இக்கட்டிடத்தின்; நிலை குறித்து



பொதுப்பணித்துறையின் சான்றிதழ் பெற்றும் எடுத்துக்கொள்ளு மாறு மதுரை மாவட்ட மருத்துவ அலுவலர் அறிவுறுத்தப் பட்டுள்ளார்.

இதற்கிடையில் திரு. ஓ. எம். நூருதீன், கீரனூர் மக்கள் கமிட்டித்தலைவர் மேற்கண்ட கட்டிடத்தை எடுத்துக்கொள்வதில் காலதாமதம் ஏற்படுவதைச் சுட்டிக்காட்டி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குதொடர்ந்தார். மேற்கண்ட வழக்கு அரசாங்கக்கூடுதல் வழக்கறிஞரால் வாதாடப்பட்டது. மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி மேற்கண்ட நிலத்தையும், கட்டிடத் தையும் உடனடியாக எடுத்துக்கொள்ளுமாறு தீர்ப்பளித்தார்.

இச்சமயம் திண்டுக்கல் வட்டப் பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளர் மேற்கண்ட கட்டிடத்தில் சில குறைகளை சுட்டிக்காட்டி இக்கட்டிடத்தை பொதுமக்கள் பயனுக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது என்றும், அரசின் நிதியைக்கொண்டு இக் கட்டிடத்தை செப்பனிடுதல் முறையல்ல எனவும் கருத்துத்தெரிவித் தார். மேற்கண்ட பொதுப்பணித்துறையின் அறிக்கையாலும் உயர்நீதிமன்ற தீர்ப்பாலும் இவ்விஷயம் கட்டிடத் தலைமைப் பொறியாளரின் குறிப்புரைகளை இக்கட்டிட நிலை குறித்து கேட்கப்பட்டது. தலைமைப்பொறியாளர் மேற்கண்ட கட்டிடத் தில் கீறல்கள் அதிகமாக தென்படுவதாயும் கட்டிடத்தின் மேற் தளத்தில் கீறல்கள் அதிக அளவில் இருக்கிறது என்றும் மேற் கண்ட கீறல்களை செப்பனிடுவதோ அல்லதுமேல் தளக்கான்கிரீட் கூரையை மாற்றியமைக்க முடியாது என்றும் இக்காரணங் களால் இக்கட்டிடத்தை பொதுமக்கள் பயனுக்காக எடுத்துக் கொள்ளக்கூடாது என்றும் சிபாரிசு செய்தார். அரசு மேற் கண்ட குறைபாடுள்ள கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய கட்டிடங்கள் கட்டித்தர சம்மதமா என்று நன்கொடையாளர் களிடம் அறிந்து அறிக்கை அனுப்புமாறு அறிவுறுத்தியது. அதன்படி மதுரை மாவட்ட மருத்துவ அலுவலர் நன்கொடை யாளரிடம் தொடர்புகொண்டதின்பேரில், இப்பொழுதுதான் மக்கள் கமிட்டி தலைவர் தன்செலவிலேயே இக்கட்டிடத்தை ஐந்து வருடகாலத்திற்கு பழுதுபார்த்தும் பராமரிக்கவும் ஒப்புக் கொண்டுள்ளார். இதுகுறித்து கட்டிடத்தலைமை பொறியாளரின் அறிவுரைகள் கோரப்பட்டுள்ளது. அவரது அறிக்கை எதிர்பார்க் கப்படுகிறது.

மேற்கண்ட காரணங்களால் குருசாமி நாயுடு மருத்துவவசதி டிரஸ்ட் அளித்த கட்டிடத்தை கீரனூர் அரசு மருந்தகத்தில் பத்து படுக்கைகள் கொண்ட மகப்பேறு பிரிவு அமைக்க இதுநாள் வரை எடுத்துக்கொள்ள இயலவில்லை.

(xxx) இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் ஆபரேஷன் தியேட்டர்களை பழுது பார்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ப. பொன்னு ரங்கம், மா. மணிமாறன், ஆ. நடராசன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர்.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவ மனையில் உள்ள ஆபரேஷன் தியேட்டர்கள் (Operation Theatres) மூடப்பட்டுள்ளதால். ஆபரேஷன் செய்யப்பட வேண்டிய நோயாளிகள் பெரும்பாலோர் வெளியே அனுப்படும் அவல நிலை இருப்பதால் சிகிச்சை பெறவரும் நோயாளிகள் படும் இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனை 'பி' அறுவை சிகிச்சைகூடத்தில் ரூ. 50,000/-ம் செலவில் நிழல்படாத இரண்டு புதியவிளக்குகள் நிறுவ இருப்பதால் 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் தேதியிலிருந்து மூடப்பட்டது. அறுவை சிகிச்சை அளிப்போர் அக்கூடத்தின் கூரை விளிம்புகளிலிருந்து நீர் ஒழுக்கம் ஏற்படுவதாலும், அடிக்கடி காரை உதிர்வதாலும் அறுவைக் கூடம் பாதிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளனர். அறுவைகூடத்திற்கு நீண்ட நாட்களாகவே கட்டிட பராமரிப்புத் தேவைப்படுவதால் அறுவை சிகிச்சை அளிப்போர் கூட்டத்தில் அவ்வறுவைக்கூடத்தை பழுதுபார்க்கவும் பழைய விளக்குகளை மாற்றி புதிய விளக்குகள் பொருத்துவதும் சேர்ந்தாற்போல் செய்ய முடிவு செய்து 1985 ஏப்ரல் மாதம் 8 ஆம் தேதி மூடுவது என முடிவுசெய்யப்பட்டது.

அவ்வாறு மூடுவது என முடிவு செய்யும் தருணத்தில் பழுது பார்க்கவும் பராமரிப்பு பணிக்காகவும் ஆகும் விரிவான கணக்கு பற்றி பொதுப்பணித்துறை (கட்டிடம்) யுடன் ஆலோசித்து அவர்களிடம் கூரைகளுக்கும், சுவர்களுக்கும், வண்ணப்பூச்சு பூசுவதற்கும் இதர பணிகளுக்கும் எழுத்துமூலம் கொடுக்கப்பட்டது. அறுவை சிகிச்சை கூடத்தில், 1985 மே மாத இறுதியில் இரண்டு விளக்குகளும் பொருத்தப்பட்டன. பழுதடைந்திருந்த உத்திரங்கள் ஜூன் மாதம் முதல் வாரத்தில் பழுது பார்க்கப்பட்டவுடன் வண்ணப்பூச்சும் செய்யப்பட்டு விரைவில் முடிக்கப்பட்டுவிடும்.

இவ்வறுவைக்கூடம் மூடப்படும் தறுவாயில், இங்கு நடக்க வேண்டிய அறுவை சிகிச்சைப் பணிகள் பழைய பகுதியிலுள்ள அறுவை சிகிச்சைக் கூடங்களுக்கு பிரித்தனுப்பப்பட்டு நோயாளிகளுக்கான சிகிச்சைப்பணிகள் தடைபடாதவாறு பார்த்துக்கொள்ளப்பட்டது. அவசர சிகிச்சைகள் அம்மருத்துவ மனையிலுள்ள இரண்டு அவசர சிகிச்சைக் கூடங்களிலேயே செய்யப்பட்டன. இதனால் அம்மருத்துவமனையின் அவசர அறுவை சிகிச்சைகளும் இதர சிகிச்சைகளும் தடையின்றி செயல்பட்டு வருகின்றது.

(xxxi) தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ள உபகரணங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் எஸ். இராசாராமன், துரை கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துமனையில் சிறுநீரகப் பிரிவில் "ஹிமோ டயலிஸிஸ்" மற்றும் "பெரிண்டோனியல் டயலிஸிஸ்" போன்றவற்றிற்குத் தேவையான உபகரணங்கள் அரசால் வழங்கப்பட்டும் கடந்த ஆறு மாதங்களாக நடைமுறை உபயோகத்திற்குப் பயன்படுத்தாமல் இருப்பதால் அந்த மருத்துவமனைக்கு வரும் ஏழை நோயாளிகள் படும் அவதி குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

மே 1983-ல் டையலைசர் கருவி தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு வாங்க அரசு ஒப்பளிப்பு வழங்கியது. ஹிமோ டையலைசர் கருவி மார்ச் 84—ல் வாங்கப்பட்டு விட்டது. மேற்படி கருவி கீழ்க்கண்ட காரணங்களினால் இன்னும் பயன் படுத்தப்படவில்லை.

1. தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தண்ணீர் ஹிமோடையலைசிஸ் கருவி உபயோகப்படுத்த ஏற்றதாக இல்லை. தண்ணீரில் உள்ள குறையைப் போக்குவதற்கு ஏற்ற ஒரு கருவியை (Dejoniser) வாங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

2. டையலைசிஸ் சாதனம் இயக்கிட 15-20 பி.எஸ் அழுத்தமுள்ள தண்ணீர் தேவைப்படுவதால் ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டுவதற்குண்டான வரைபடம் மற்றும் மதிப்பீடு, பொதுப் பணித்துறையிலிருந்து தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வருக்குத் தற்சமயம் கிடைக்கப் பெற்றுள்ளது. அவை மருத்துவக்கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு வந்தவுடன் ஒப்பளிப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

நோயாளிகள் பெரிடோனியல் டயாலிசிஸ் முறை மூலமாக வாரத்திற்கு ஒரு நோயாளி வீதம் சிகிச்சை அளிக்கப்படுகிறார்கள். எனவே பெரிடோனியல் டயாலிசிஸ் முறை மூலமாக சிகிச்சை அளிக்கப்படவில்லை என்பது சரியல்ல.

## (xxxii) உசிலம்பட்டி பேரூராட்சி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை வசதி

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''உசிலம்பட்டி பேரூராட்சி மருத்துவமனையில் மிக அதிகமான படுக்கை வசதிகள் கொண்டதாக இருந்தும், அறுவை சிகிச்சை அறை (ஆபரேஷன் தியேட்டர்) இல்லாத காரணத்தால் கர்ப்பிணிப் பெண்களுக்குக் கூட அறுவை சிகிச்சை மூலம் அவசரச் சிகிச்சை அளிக்க முடியாத நிலை'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அரசு மருத்துவமனை தற்சமயம் 95 படுக்கைகளுடன் செயல்பட்டு வருகிறது. இம் மருத்துவமனையில் கீழ்க்கண்ட சிறப்பு பிரிவுகள் தற்சமயம் உள்ளன.

1. குழந்தைகள் சிகிச்சை பிரிவு
2. கண் சிகிச்சை பிரிவு
3. பல்சிகிச்சை பிரிவு
4. சித்த வைத்தியப் பிரிவு
5. நுண்கதிர் கருவி
6. ஆய்வுக்கூடம்

2. மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் அவசரஅறுவை சிகிச்சைகள் ஒரு சிறிய அறையில் செய்யப்பட்டு வருகின்றன. 1984 ஆம் ஆண்டு 58 பெரிய அறுவை சிகிச்சையும், 84 சிறிய அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டன. உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் எல்லா வசதிகளும் கொண்ட அறுவை சிகிச்சை அரங்கு கட்டுவது பற்றி பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் தக்க தருணத்தில் எடுக்கப்படும். இங்கு தினம் சராசரி 78 உள் புறநோயாளிகளும், 603 வெளிப்புற நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றார்கள்.

3. இவ்வியக்கத்தின் கீழுள்ள அரசு மருத்துவமனை மற்றும் மருந்தகங்களிலும் உயிரைப்பாதுகாக்கக்கூடிய மருந்துகள் மற்றும் தேவையான மருந்துகள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. தேவையான மற்றும் அவசர மருந்துகள் வாங்குவதற்கான நிதி ஒதுக்குவதில் தடங்கல் ஏற்படாது ஒவ்வொரு மருத்துவ அலுவலர்க்கும் தேவையான மற்றும் வேகமாக இயங்கும் மருந்துகள் தேவையான அளவிற்கு வாங்கி இருப்பில் வைக்க அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.



4. உயிரைப் பாதுகாக்கும் மற்றும் தேவையான மருந்துகள் பட்டியலில் உள்ள 800 இனங்களுக்கும் மேற்பட்ட மருந்துகள் இங்குள்ளன. இம்மருத்துவநிலையத்தில் பணிபுரியும் பணியாளர் விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| மருத்துவ அலுவலர்கள் | 12 |
| செவிலியப்பணியாளர்கள் | [illegible]0 |
| அமைச்சுப்பணியாளர்கள் | 4 |
| தொழில்நுட்ப மற்றும் மருத்துவ சார்பற்ற பணியாளர்கள் | [illegible]2 |
| மற்றவர்கள் | 22 |

## (xxxiii) திருச்சி தலைமை மருத்துவமனையில் வெறிநாய்க்கடி தடுப்பு ஊசிமருந்து இருப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. சோலைராசு இருக்கையில் இல்லாததால் அவருக்குப் பதிலாக திரு. மா. சின்னராசு அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருச்சியிலுள்ள தலைமை மருத்துவமனையில் சமீபகாலமாக வெறிநாய்க்கடிக்கான தடுப்பு ஊசி மருந்து இல்லாததால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள கவலைகுறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி.ஹண்டே; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

திருச்சியிலுள்ள தலைமை மருத்துவமனை, மருத்துவப்பணி மற்றும் குடும்பநலத்துறை இயக்குநரின் கீழ் உள்ளது. திருச்சிராப்பள்ளி தலைமை மருத்துவமனையில் இன்றைய தேதியில் 2,000 சி.சி. வெறிநாய்க்கடி தடுப்பு ஊசி மருந்து இருப்பில் உள்ளதாக திருச்சிராப்பள்ளி நகராட்சி நல அலுவலர் தெரிவித்துள்ளார். திருச்சிராப்பள்ளி நகரில் 1-4-84 முதல் 31-3-1985 வரை 1,909 அலைந்து திரியும் நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. 1-4-85 முதல் 30-6-85 வரை 482 அலைந்து திரியும் நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப் பட்டன.

## (xxxiv) பவானியாற்றில் விஸ்கோஸ் ஆலை கழிவுநீா கலப்பதால் ஏற்பட்டுள்ள நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் வி.கே. சின்னசாமி, ச. பாலகிருஷ்ணன், கு. அ. செங்கோட்டையன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பவானி ஆற்றில் விஸ்கோஸ் ஆலையின் கழிவுநீர் கலப்பதால் அவ்வாற்று நீரை அருந்தும் மக்கள் பலவிதமான நோய்களுக்கு ஆளாகின்ற நிலை குறித்த ''அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருவாளர்கள் சௌத் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட், தொழிற்சாலை கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிறுமுகையில் பவானி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. தொழிற்சாலைக்கு தேவையான நீர் பவானி ஆற்றிலிருந்து பெறப்படுகிறது. அத் தொழிற்சாலை கீழ்க்கண்ட பொருட்களை உற்பத்தி செய்கின்றது:

(1) ரேயான் நூல் இழை (Rayon yarn) — 300 மெட்ரிக் டன்/ ஒரு மாதத்திற்கு
(2) ஸ்டேபில் நூல் இழை (Staple fibre) — 600 மெட்ரிக் டன்/ ஒரு மாதத்திற்கு
(3) மரக்கூழ் (Wood pulp) — 3000 மெட்ரிக்டன்/ ஒரு மாதத்திற்கு
(4) பாலிநோஸிக் நூலிழை (Polynosic fibre) — 200 மெட்ரிக் டன்/ ஒரு மாதத்திற்கு
(5) சோடியம் சல்பேட் — 240 மெட்ரிக் டன்/ ஒரு மாதத்திற்கு

இடைநிலை உற்பத்திப் பொருட்கள்

(6) கிளாபர் உப்பு (Glauber's salt) — 60 மெட்ரிக் டன்/ ஒரு மாதத்திற்கு

இத் தொழிற்சாலைக்கு, நாளொன்றுக்கு ஏறக்குறைய 57 மில்லியன் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. இத்தொழிற் சாலை நாளொன்றுக்கு 55 மில்லியன் லிட்டர் கழிவுநீரை வெளி யேற்றுகிறது. இக்கழிவு நீரைச் சுத்திகரிக்க ரூ. 2 கோடி செலவில்





சுத்திகரிப்பு நிலையத்தைத் இத்தொழிற்சாலை அமைத்துள்ளது. தொழிற்சாலையின் கழிவுநீர் கீழ்க்கண்ட சுத்திகரிப்பு செய்யப் படுகிறது,

(1) தடுப்பான்கள் (Screen chamber Automatic)
(2) சமநிலைப்படுத்தும் தொட்டிகள் 2 (கலக்கும் அமைப் புடன்)
(3) படியவைக்கும் தொட்டி 2 (clarifloccula!ors)
(4) காற்றேற்றும் தொட்டி (Areated Lagoon)
(5) கசடு திடப்படுத்தும் அமைப்பு (sludge Thickener)
(6) வடிகட்டி (Vaccum)

இவ்வாறு சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவுநீர் பவானி ஆற்றில் வெளியேற்றப்படுகிறது.

இத்தொழிற்சாலைக்கு 1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26 ஆம் பிரிவின்படி தொழிற் சாலையின் நீரை வெளியேற்ற அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அனுமதி பெறப்பட்டபின்னர் இத்தொழிற்சாலை கழிவுநீர் சுத்தி கரிப்பு நிலையத்தினை மேம்படுத்தியும் செய்முறையின் மாற்றத் தின் மூலமாகவும், கழிவுநீரின் உயிர் ரசாயன உயிரகத் தேவையின் அளவினை, தன்மையை லிட்டருக்கு 100 மி.கி. என்ற அளவில் இருந்து வாரியம் நிர்ணயித்துள்ள லிட்டருக்கு 20-30 மில்லிகிராம் என்ற அளவிற்கு குறைத்துள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இத்தொழிற்சாலையைக் கண்காணித்து வருகிறது.

## (xxxv) வடஆற்காடு மாவட்ட தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரினால் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மா.கதிர்வேலு, டாக்டர் ந. மாசிலாமணி ஜே. ராஜபாபு, எஸ். பி, மணவாளன், ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. மா. கதிர்வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, ''வடாற்காடு மாவட்டத்திலுள்ள தோல் தொழிற்சாலை களிலிருந்து வெளிவரும் கழிவு நீரால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் ஏற்படும் விவசாயப் பயிர் பாதிப்பு, குடிநீர் பாதிப்பு மற்றும் சுற்றுப்புற சுகாதார சீர்கேடு ஆகியவைகளால் அப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

[1985 ஜூலை 19

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

வடஆற்காடு மாவட்டத்தில் சுமார் 350 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் உள்ளன. இவைகளிலிருந்து வரும் கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யாமல் வெளியிடப்பட்டால் நீரின் தன்மை பாதிக்கப்படும். 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின், 25/26-வது பிரிவின்படி 339 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் வாரியத்திடம் அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளன. வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளுக்கேற்ப குறிப்பிட்ட காலத்திற்குள் சுத்திகரிப்பு செய்து கழிவு நீரை வெளியிடவேண்டும் என்ற நிபந்தனையுடன் 220 தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. மீதமுள்ள தொழிற்சாலைகளின் விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன.

ஆம்பூரிலுள்ள 14 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணியைத் துவங்கியுள்ளன. 60 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பொதுவான சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஆம்பூர் சுத்திகரிப்பு சேவை கூட்டுறவு சங்கத்தினை நிறுவியுள்ளன. இவைகளிலிருந்து வெளியாகும் கழிவு நீரைச் சுத்திகரிக்கும் திட்ட அறிக்கையைத் தயாரிக்கும் பணி சென்னையிலுள்ள திருவாளர்கள் ரிச்சர்ட்சன் அண்டு குருடாஸ் (1972) லிமிடெட் நிறுவனத்திடம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் ரூபாய் 4.31 கோடி முதல் ரூபாய் 4.47 கோடி செலவில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க திட்டம் கொடுத்துள்ளது.

ராணிப்பேட்டையில் உள்ள 73 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பொதுக்கழிவு நீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ராணிப்பேட்டை சுத்திகரிப்பு சேவை கூட்டுறவு சங்கத்தினை நிறுவியுள்ளனர்.

பேரணாம்பட்டில் 48 தோல் தொழிற்சாலைகள் பேரணாம்பட்டு தோல் சுத்திகரிப்பு சேவை கூட்டுறவு சங்கத்தினை நிறுவியுள்ளன. வாணியம்பாடியில் உள்ள 65 தோல் தொழிற்சாலைகள் பொதுநிறுவனம் அமைத்து தமிழ்நாடு தோல் வளர்ச்சி கழகத்துடன் இணைந்து பொதுக்கழிவு நீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26-வது பிரிவின்படி தொழிற்சாலைகள் கழிவுநீரை வெளியிட அனுமதிகோரி 31-5-84-க்குள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் விண்ணப்பிக்க வேண்டும். வாரியம் 28-8-84-ல் நடைபெற்ற தனது 9-வது கூட்டத்தில் அவ்வாறு



விண்ணப்பிக்காத வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள 30 தோல் தொழிற்சாலைகள் மீது வழக்கு தொடர முடிவு செய்தது. அவற்றில் 23 தொழிற்சாலைகள் மீது வழக்கு தொடரப்பட்டு, அவை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. சுத்திகரிப்பு நிலையம் அமைக்க 31-5-85 வரை கொடுக்கப்பட்டிருந்த காலக்கெடு தற்போது 31-7-85 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. தோல் பதனிடும் தொழிற்சாலைகள், சுத்திகரிப்பு நிலையங்கள் விரைவில் அமைக்குமாறு வற்புறுத்தப்பட்டு வருகின்றன. இது குறித்து வாரியம் கண்காணித்து வருகிறது.

## XXXVI கரூர் சாயப்பட்டறைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரினால் பாதிப்பு.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, "திருச்சி மாவட்டம், கரூரில் உள்ள எண்ணற்ற சாயப்பட்டறைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் அமராவதி ஆற்றில் கலந்து குடிநீர் கெட்டுப் போவதால் மக்களுக்கு ஏற்படும் இன்னல்கள்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

கரூரில் ஏறக்குறைய 102 வெளுப்பு மற்றும் சாயத் தொழிற்சாலைகள் உள்ளன. கரூரில் அமராவதியாற்றின் வலக்கரையிலும், இடக்கரையிலும் அமைந்துள்ள சிறு அளவிலான வெளுப்பு மற்றும் சாயத் தொழிற்சாலைகளில், நூலையும் துணியையும் வெளுப்பதற்காக வெளுப்புத் திரவம் (Bleach liquor) பயன்படுத்தப்படுகின்றது. தயாரிப்பு முறையானது, பாவிடுதல், சாயமிடுதல் மற்றும் வெளுத்தல் ஆகியவை கொண்டதாகும். இத்தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற கழிவுநீரானது அன்றாடக் கழிவு நீருடன் வடிகாலில் அல்லது நிலத்தில் அல்லது நீர்நிலைகளில் கலக்கும் வாய்க்காலில் விடப்படுகின்றது. தொழிற்சாலைக் கழிவுநீரானது செறிவான நிறத்தையும் மிதக்கும் திடப்பொருள், கரைந்த திடப்பொருள், குளோரின் இரசாயன உயிரகத்தேவை, உயிர் இரசாயன உயிரகத்தேவை ஆகியவைகளைக் கொண்டுள்ளது. சுத்திகரிக்கப்படாத தொழிற்சாலைக் கழிவுநீர் நிலைகளிலோ நிலத்திலோ விடப்படும்போது, நீர்நிலை/நிலத்தடிநீர் மாசுறக் காரணமாகலாம். கழிவுநீர்/தொழிற்சாலைக் கழிவுநீர் வெளிவிடுவதற்கு முன்னர், அவற்றை வெளியிடுவதற்காக 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்

பாடு) சட்டத்தின் 26-வது பிரிவின்கீழ் வாரியத்தின் இசைவைப் பெறவேண்டும். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பத்தாவது கூட்டத்தில், 31-5-84-க்கு முன்பு வாரியத்தின் இசைவைப்பெற விண்ணப்பிக்காத காரணத்தால் ஊரிலுள்ள 64 தொழிற்சாலைகளுக்கெதிராக வழக்கு தொடுப்பதென முடிவெடுக்கப்பட்டுள்ளது. இசைவு வழங்கும்போது குறித்த காலத்திற்குள், வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட வரைமுறைக்கேற்ப தொழிற்சாலைக் கழிவுநீரைச் சுத்திகரிக்க சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவுமாறு அத்தொழிற்சாலைகள் கேட்டுக்கொள்ளப்படும். மேற்படி சட்டப்பிரிவு 26-ஐக் கடைப்பிடிக்க தவறுபவருக்கு ஆறு மாதங்களுக்கு குறைவில்லாத, ஆனால் ஆறாண்டுக் கால அளவிற்கு நீடிக்கும் சிறை தண்டனையும் அபராதமும் வழங்க வழிவகையுள்ளது. இவ்வாரியம் இப்பொருள் குறித்துக் கண்காணித்து வருகின்றது.

## XXXVII பெரியகுளத்திலுள்ள இலவம் பஞ்சு தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுப்பஞ்சினால் பொதுச் சுகாதாரம் பாதிப்பு.

டாக்டர் த. முகமது சலீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பெரியகுளம் நகரிலுள்ள இலவம் பஞ்சு அரைக்கும் தொழிற்சாலையின் கழிவுப் பஞ்சு ஊரில் பரவி மக்களுக்கு நோய் உண்டாகும் நிலை'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

பெரியகுளம் நகர எல்லைக்குள் தென்கரையில் பெரியகுளம் தேனி சாலையில் சுமார் 6 இலவம் பஞ்சு அரைக்கும் கீழ்க்கண்ட தொழிற்சாலைகள் அமைந்துள்ளன:—

திருவாளர் கே. ஏ. சுப்பையா தொழிற்சாலை.

திருவாளர் கே. ஏ. இரத்தினம் தொழிற்சாலை.

திருவாளர் கே. ஏ. மாரியப்பன் தொழிற்சாலை.

திருவாளர் பி. பி. சீனிவாசப்பன் செட்டியார் தொழிற்சாலை.

திருவாளர் பாலாஜி இலவம் பஞ்சு தொழிற்சாலை.

திருவாளர் பி. கே. பழனிசாமி இலவம் பஞ்சு தொழிற்சாலை.



இந்த தொழிற்சாலைகள் ஒவ்வொன்றும் நாளொன்றுக்கு சுமார் 300 கிலோ கிராம் இலவம் பஞ்சை உற்பத்தி செய்கின்றன. இவைகள் மார்ச் முதல் மே வரையிலும் அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலும் ஆகிய 6 மாதங்கள் மட்டுமே இயங்குகின்றன. இத்தொழிற்சாலைகள் சுமார் 40 வருடங்களாக இயங்கி வருகின்றன. இந்த தொழிற்சாலைகளுக்கு எதிரே ஒரு தனியார் நர்சிங்ஹோமும் பின்புறம் கரும்பு சாகுபடி நிலங்களும் அமைந்து உள்ளன.

2. இலவம் பஞ்சு காய்கள் தேனி மற்றும் கேரள மாநிலத்திலிருந்து பெறப்படுகின்றன. பஞ்சை சுற்றியுள்ள தோல் நீக்கப்படுகிறது. ஒரு இயந்திர சாதனத்தில் பஞ்சு தனியாகவும் விதைகள் மற்றும் தேவையில்லாப் பொருட்கள் தனியாகவும் பிரிக்கப்படுகின்றன. பிரிக்கப்பட்ட பஞ்சு இயந்திரத்தை விட்டு வெளிவரும்போது பஞ்சு தூசிகள் வெளிப்படுகின்றன. இந்தப் பஞ்சு தூசியினை கட்டுப்படுத்த தொழிற்சாலைகள் சன்னல் மற்றும் திறந்த வெளிகளுக்கு கம்பி வலைகள் பொருத்தியுள்ளன. மேற்படி தொழிற்சாலைகள் 17-7-1985 அன்று பார்வையிடப்பட்டன. இந்தப்பகுதியில் உள்ள மக்களை விசாரித்ததில் தூசி பஞ்சு தொழிற்சாலைக்கு வெளியே பறப்பது தெரிய வந்தது. மேலும் இந்த தூசிப்பஞ்சினால் மக்களுக்கு ஒருவித நோயும் வரவில்லை என்பதும் தெரிய வந்தது. இதனை நகராட்சி சுகாதார அதிகாரியும் உறுதிப்படுத்தியுள்ளார்,

3. எனினும் மேற்படி தொழிற்சாலைகள், தங்களது தொழிற்சாலைகளை காற்று மாசு கட்டுப்பாடு பகுதியில் இயக்க 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 21-வது பிரிவின்படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனுமதிபெறவேண்டும். இந்த தொழிற்சாலைகள் அனுமதி பெற வாரியத்திற்கு இன்னும் விண்ணப்பிக்கவில்லை. தொழிற்சாலைகள் வாரியத்தின் அனுமதிபெற விண்ணப்பிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளன. மேற்படி தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கும்போது, தொழிற்சாலைகள் தங்களது தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் மிதக்கும் தூசியின் அளவை வாரியம் நிர்ணயித்துள்ள அளவிற்கு ஒரு குறிப்பிட்ட கால கெடுக்குள், கட்டுப்படுத்தி வெளியேற்றவேண்டும் என்று அறிவுறுத்தும் வாரியம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

## XXXVIII. தொட்டியம் தொகுதியிலுள்ள நீலியாம்பட்டி கிராமத்தில் ஏரி கட்டுதல்.

திரு. ஆர். பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தொட்டியம் தொகுதியிலுள்ள நீலியாம்பட்டி கிராமத்திற்கு மேற்புறம் தலைமலை அடிவாரத்தில் 1981–1982 ஆம் ஆண்டில் வறட்சி வேலைகள் திட்டத்தின்கீழ் சுமார் 200 ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சலாம் என்று திட்டமிட்டு இதுநாள்வரையில் அவ்வேலை பூர்த்தியடையாத காரணத்தால்

அப்பகுதி விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தொட்டியம் தொகுதியிலுள்ள நீலியாம்பட்டி கிராமத்தில் ஒரு ஏரி கட்டும் பணிக்கு ரூ. 3.13 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு 1981-82-ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 84 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். இவ்வேலை முடிக்கப்பட்டு, தண்ணீர் தேக்கப்பட்டு நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

மேலும் ஏரிக்கு வரும் வரத்து நீரின் அளவு எதிர்பார்த்ததை விட அதிகமாக வருவதால், ஏரியின் முழு நீர் மட்ட அளவை உயர்த்த உத்தேசித்து பரிசீலனையில் உள்ளது. உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்.

### XXXIX. பவானிசாகர் அணையிலிருந்து கீழ் பவானி கால்வாய் மூலம் பாசனத்திற்கு நீர் விடுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. அ. செங்கோட்டையன் வி. கே. சின்னசாமி, ச. பாலகிருஷ்ணன் ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பவானிசாகர் அணையிலிருந்து கீழ் பவானி கால்வாயில் ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் நெல்லுக்குத் தண்ணீர் விட அப்பகுதி மக்கள் விடுத்துள்ள கோரிக்கை'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

கீழ்பவானி கால்வாயில் முதல்முறைப் பாசனத்திற்கு வழக்கமாக தண்ணீர் விடும் தேதி ஆகஸ்டு 15ஆம் தேதி ஆகும். நீர்த்தேக்கத்தில் நீரின் மட்டம் 900 அடி அல்லது அதற்கு மேற்பட்டிருந்தால் தண்ணீர் முன்னதாகவே ஆகஸ்டு முதல் தேதியே அளிக்கலாம். முதல் முறைப் பாசனத்தில் பயிர் கட்டுப்பாடு கிடையாது.



15-7-1985 அன்று பவானிசாகர் நீர்த்தேக்கத்தில் நீரின் மட்டம், 877.80 அடி, நீரின் அளவு 8,194 மி.கன அடி. காவிரி டெல்டா பாசனத்திற்காகத் தேக்கப்பட்ட தண்ணீரின் அளவு 3,458 மி.கன அடி. பவானி பழைய ஆயக்கட்டு நிலங்களுக்காகத் தேக்கப்பட்ட நீரின் அளவு 313 மி.கன அடியாகும். ஆக மொத்தம்3,771 மி.கன அடியாகும். புதிய பாசனத்திற்காகவுள்ள மிகுதியான நீரின் அளவு 4,423 மி.கன அடியாகும். கீழ்பவானி கால்வாயை முதல்முறைப் பாசனத்திற்கு திறப்பதற்கு முன் இந் நீர்த்தேக்கத்தில் இனிவரும் நீர் வரத்தை கவனிக்க வேண்டும். ஆகையால், ஜூலை கடைசி வாரத்தில் இருக்கும் நிலையை ஆராய்ந்து, கீழ்பவானி கால்வாயை திறப்பது பற்றி ஒரு முடிவெடுக்கப்படும்.

(பிற்பகல் 1-30)

### 7. அறிவிப்புகள்.

#### (ஆ.) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுத் தேர்தலுக்குப் பின் அமைந்த எட்டாவது சட்டமன்றப் பேரவை 25-2-85 ஆம் நாள் கூடியது. அன்றைய தினம் மாண்புமிகு பேரவை தற்காலிகத் தலைவர் முன்பாக 8-வது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

27-2-1985 ஆம் நாள் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பெற்று அவர்கள் பாராட்டப் பெற்ற நிகழ்ச்சி நடைபெற்றது.

மேதகு ஆளுநர் அவர்கள் 8-3-85 ஆம் நாளன்று இரு அவை உறுப்பினர்களும் கலந்துகொண்ட கூட்டுக் கூட்டத்தில் உரை யாற்றினார்கள்.

| | |
|---|---|
| 8-வது சட்டமன்றப் பேரவையின் முதற் கூட்டம் தொடங்கியதிலிருந்து அதாவது 25-2-85 முதல் இன்றுவரை பேரவை கூடிய மொத்த நாட்கள் | 59 நாட்கள் |
| மாலையிலும் பேரவை கூடியுள்ள நாட்கள் | 4 நாட்கள் |
| அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம். | 284 மணி 54 நிமிடங்கள்' |
| ஆளுநர் உரைமீது விவாதம் நடைபெற்ற நாட்கள் | 6 நாட்கள் |
| பங்கு கொண்ட உறுப்பினர்கள் | 78 |

**நீதிஅலுவல்கள்:**

| | |
|---|---|
| 1985–86 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் பேரவையில் அளிக்கப்பெற்ற நாள் .. | 26-3-85 |
| வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள் .. | 7 |
| பங்குகொண்ட உறுப்பினர்கள் .. | 74 |
| மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள் .. | 29 |
| கொடுக்கப் பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் .. | 1,527 |
| அவைமுன் வைக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் .. | 1,440 |
| விவாதித்து நிறைவேற்றப் பெற்ற மானியக் கோரிக்கைகள் .. | 59 |
| உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் .. | 328 |

**வினாக்கள்—விடைகள்:**

| | |
|---|---|
| குறுகிய கால வினாக்கள் .. | 7 |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 790 |
| உடுக்குறியிடாத வினாக்கள் .. | 125 |
| துணை வினாக்கள் .. | 2,515 |

இக்கூட்டத் தொடரில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் துணை வினாக்கள் கேட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, திரு. வை. பெ. சா. துரைசாமி 144 துணை வினாக்களும், திரு. இரா. தாமரைக்கனி 142 துணை வினாக்களும், அதிகமாகக் கேட்டிருக்கிறார்கள்.

**கவன ஈர்ப்புகள்:**

| | |
|---|---|
| அனுமதிக்கப் பெற்றவை .. | 240 (161 பொருள்பற்றி) |
| அவையிற் எடுத்துக் கொள்ளப் பெற்றவை .. | 199 (130 பொருள்பற்றி) |

**ஒத்திவைப்புத் தீர்மானங்கள்:**

| | |
|---|---|
| பேரவையில் அனுமதி மறுக்கப் பெற்றவை .. | 73 (11 பொருள்பற்றி) |



**உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள்:**

| | |
|---|---|
| அறிவிப்பு வரப்பெற்றவை .. | 12 |
| இசைவு மறுக்கப் பெற்றவை .. | 9 |
| உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெற்றவை .. | 3 |
| உரிமைக் குழுவின் பரிந்துரையை யொட்டி எடுக்கப் பெற்ற நடவடிக்கை .. | 1 |

**ஆசிரியர் சட்ட முன்வடிவுகள்:**

| | |
|---|---|
| ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பெற்றவை .. | 48 |
| நிறைவேற்றப் பெற்றவை .. | 47 |
| நிலுவையில் உள்ளவை .. | 1 |

**தீர்மானங்கள்:**

| | |
|---|---|
| (அ) அரசினர் தனித் தீர்மானங்கள் வரப் பெற்றவை .. | 6 |
| நிறைவேற்றப் பெற்றவை .. | 6 |
| நிலுவையில் உள்ளவை .. | — |
| (ஆ) தனியார் தீர்மானங்கள் வரப் பெற்றவை .. | 8 |
| அனுமதிக்கப் பெற்றவை .. | 8 |

**சட்டமன்றப் பேரவைக் குழுக்கள்:**

| | 25-2-85 முதல் 19-7-85 வரை | |
|---|---|---|
| | கூடிய நாட்கள் | அளித்துள்ள அறிக்கைகள் |
| மதிப்பீட்டுக் குழு | 7 | .. |
| பொதுக் கணக்குக் குழு | 10 | 10 |
| பொது நிறுவனங்கள் குழு | 14 | 14 |
| உரிமைக் குழு | 3 | .. |
| அவைக் குழு | 5 | .. |
| அரசு உறுதிமொழிக் குழு | 5 | .. |
| அலுவல் ஆய்வுக் குழு | 9 | .. |
| பேரவை விதிகள் குழு | .. | 1 |
| சட்ட விதிகள் ஆய்வுக்குழு | 4 | .. |

**காமன்வெல்த் பாராளுமன்றக் குழு (தமிழ்நாடு கிளை)**

| | |
|---|---|
| கூட்டம் நடைபெற்ற நாட்கள் (ஏனைய நிகழ்ச்சிகள் உள்பட) | 5 |

**பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்:—**

| | |
|---|---|
| (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும். | 169 |
| (ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள், ஏனைய தாள்கள். | 203 |

**பார்வையாளர்கள்:—**

| | |
|---|---|
| மாடத்தில் அனுமதிக்கப் பெற்ற ஆண்கள். | 32,834 |
| பெண்கள் | 2,695 |
| தலைவர் மாடத்தில் அனுமதிக்கப் பெற்றவர்கள். | 16,969 |
| பேரவை நிகழ்ச்சிகளைக் காண வருகை தந்தோர் மொத்த எண்ணிக்கை | 52,500 |

**நூலகம்:**

| | |
|---|---|
| சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர். | 1262 |
| வழங்கப் பெற்ற நூல்கள் | 964 |

**உறுப்பினர்கள் வருகை:**

| | |
|---|---|
| எல்லா நாட்களிலும் வருகை தந்த உறுப்பினர்கள் | 12 |

**நடவடிக்கைக் குறிப்புகள்:**

| | |
|---|---|
| தட்டச்சு செய்யப் பெற்ற மொத்த பக்கங்கள். | 7,760 |

பேரவை நிகழ்ச்சிகளை நல்ல முறையில் நடத்தச் செல்ல ஒத்துழைப்புத் தந்த மாண்புமிகு அமைச்சர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையை நடத்திச் செல்வதில் உதவியாக இருந்த மாற்றுத் தலைவர்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. செ. செம்மலை, திரு. மா. சின்னராசு, திரு. வே. இரா. ஜெயராமன், திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர், மற்றும் திரு. மு. இராமநாதன் ஆகியோருக்கும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கும் என் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். பேரவை நிகழ்ச்சிகளை நல்ல முறையில் நடத்திச் செல்ல ஒத்துழைப்புத் தந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்துக் கட்சிகளின் கொறடாக்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அரசுத் துறைகள், மற்றும் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் செய்தியாளர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதவியிலிருந்து அண்மையில் ஓய்வுபெற்ற பேரவைச் செயலாளர் திரு. கி. மு. அழகர்சாமி அவர்களும். தற்போது செயலாளராக உள்ள திரு. சி. கு. இராமசாமி அவர்களும் என்னுடன் மிகவும் ஒத்துழைத்தனர். அவர்களுக்கும், சட்ட மன்றப் பேரவை அலுவலர்கள் அனைவருக்கும் பேரவை மூலம் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லோருக்கும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா கட்சித் தலைவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களைப் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 10. அரசினர் தீர்மானம்.

### பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"பேரவை விதி 25 (1)-ன் படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இக்கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் பிற்பகல் 1.35 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெற்றது.

## 11. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

273. தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டம் மற்றும் வளர்ச்சி நிதி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 18-3-1985 ஆம் நாளிட்ட 272 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

274. தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் அதிகார வரம்பிலிருந்து குடிநீர்மை யற்ற மதுச் சத்தினை (Methonal) நீக்குவது மற்றும் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வீரியம் குறைந்த சாராயம், குடிநீர்மையயற்றி மதுச் சத்து மற்றும்

136428

மெருகு எண்ணெய்ப் (French polish) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையில் 4-9-1984 ஆம் நாளிட்ட 1182 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை தமிழ்நாடு 1637 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

275. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்–சமய அறக்கட்டளைகள் துறையின் 26-3-1985 ஆம் நாளிட்ட 284 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]

276. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பணியாளரமைப்பு- நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 22-4-1985 ஆம் நாளிட்ட 426 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]

277. மதுரை மாவட்டம் மயிலாடும்பாறைக்கு ஓர் ஊராட்சி வளர்ச்சிப் பகுதி அமைப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 23-5-1981 ஆம் நாளிட்ட 401 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

278. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான ஏழாம ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது (தமிழ், ஆங்கிலம்).

## ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

202. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 1960-66 முதல் 1965-61 ஆம் ஆண்டு வரையிலான ஆண்டுக் கணக்குகள் குறித்து பொது நிறுவனங்கள் குழு (980-82) அளித்த பதின்மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

203. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் செயல்முறை குறித்து பொது நிறுவனங்கள் குழு (1980-81) அளித்த மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் பதினான்காவது அறிக்கை (தமிழ்).

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandrian Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Madras.